பாரதி

1963

மாநாட்டு மலர்

தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை-2

கேடயங்கள் பெறும் தமிழ் அறிஞர்கள்

திரு. பாபநாசம் சிவன்



திரு. தாவூத்ஷா

கேடயங்கள் பதக்கங்கள் வழங்கிச் சிறப்பித்த
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களுக்கு
எங்கள் உளங்கனிந்த நன்றி.

பதக்கங்கள் பெறும் பிற மொழி அறிஞர்கள்



திரு. கே. எம். பாலசுப்பிரமணியம்

திரு. பு. தி. நரசிம்மாச்சார்

பாரதி
மாநாட்டு மலர்

✱

தமிழ் எழுத்தாளர்
பதினோராவது மாநாடு

1963, திசம்பர், 21, 22.

✱

விலை ரூ. 1/-

✱

தமிழ் எழுத்தாளர் சங்கம்,

இளம்பிறைச் சங்கக் கட்டிடம்,

மவுன்டு ரோடு, சென்னை - 2.

தமிழ் எழுத்தாளர் பதினோராவது மாநாடு

—[✵]—

வரவேற்புக் குழு

தலைவர் :

டாக்டர். சு. சங்கரராசு

உறுப்பினர் :

சங்கச் செயற்குழு உறுப்பினர் அனைவரும்,

திரு. சி. பாலசுப்பிரமணியம்
திரு. க. அறிவழகன்
திருமதி. ஜயா அருணாசலம்
திருமதி. கோமகள்

ஆகியோரும்.

உட் குழுக்கள்

மலர்க் குழு

அமைப்பாளர் :

திரு. ஊ. ஜயராமன்

உறுப்பினர் :

திரு. சி. திருநாவுக்கரசு
,, கோமதி சுவாமிநாதன்
,, மா. இளஞ்செழியன்
,, முகவை. இராஜமாணிக்கம்
,, கா. வேழவேந்தன்
,, நா. ஜகந்நாதன்
,, மா. சு. சம்பந்தன்
,, நா. பாண்டுரங்கன்.

விளம்பரக் குழு

அமைப்பாளர் :

திரு. கே. ஆர். கலியாணராமன் (மகரம்)

உறுப்பினர் :

திரு. அழ. வள்ளியப்பா
,, சிறுவை. மோகனசுந்தரன்
,, அப்துல் வகாப்
,, இளம்பாரி
,, ஸ்ரீபால்
,, இராம. இராமநாதன்
,, அன்புப் பழம்நீ
,, இராம. பழ. அருணாசலம்.

—✵—

தமிழ் எழுத்தாளர் சங்கம்

1963 - ஆம் ஆண்டின்

செயற்குழு

தலைவர் :

திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி

துணைத்தலைவர்கள் :

திரு. அழ. வள்ளியப்பா
,, எம். அப்துல் வகாப்
,, சோமலெ
திருமதி. கமலா விருத்தாசலம்

பொதுச்செயலாளர் :

திரு. பா. பாலசுப்பிரமணியன்

துணைச்செயலாளர்கள் :

திரு. அ. செ. செல்லப்பன் (இளம்பாரி)
,, திருநாவுக்கரசு

பொருளாளர் :

திரு. ஊ. ஜயராமன்.

குழு உறுப்பினர்கள் :

திரு. டி. எஸ். ஸ்ரீபால்
,, சி. ஆர். பழனியாண்டி (அன்புப் பழம்நீ)
,, நா. ஜகந்நாதன்
,, கா. வேழவேந்தன்
,, கே. ஆர். கலியாணராமன் (மகரம்)
,, ஏ. பி. ஜனார்த்தனம்
,, சிறுவை. மோகனசுந்தரன்

திரு. க. பழனியப்பன்
,, மா. சு. சம்பந்தன்
,, மா. இளஞ்செழியன்
,, முகவை. இராஜமாணிக்கம்
,, கோமதி சுவாமிநாதன்
திருமதி. கலைச்செல்வி
திரு. அ. கி. பரந்தாமனார் (மதுரை)
,, எம். ஆர். ஜம்புநாதன் (பம்பாய்).

பொருளடக்கம்

—:✱:—

			பக்கம்
1.	வரவேற்புரை—டாக்டர் சு. சங்கரராசு	...	
2.	தலைமையுரை—மயிலை. சீனி. வேங்கடசாமி	...	
3.	கதை வளர்ந்த கதை—டாக்டர் மு. வ.	...	9
4.	எழுத்தாளன் பரம்பரை—சிவசக்தி	...	13
5.	இறைமாட்சி—டாக்டர் அ. சிதம்பரநாதன்	...	14
6.	பதிப்புத் தொழில்—மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை	...	17
7.	இலக்கியம் படைத்த பெண்கள்—ஸரோஜா ராமமூர்த்தி	...	22
8.	இலக்கியத் தேன்?—கவிஞர் கம்பதாசன்	...	24
9.	விஞ்ஞானப் பத்திரிகைகள்—பெ. நா. அப்புஸ்வாமி	...	25
10.	நேயநகர் நோக்கி—சாலை. இளந்திரையன்	...	30
11.	இந்தி நாவலின் வளர்ச்சி—ரா. வீழிநாதன்	...	33
12.	மானுட வெற்றி—தமிழழகன்	...	39
13.	தமிழகத்தின் கல்வி மொழி—தெ. பொ. மீ.	...	40
14.	கண்ணன் பிறந்த மாட்சி—மயிலை. சீனி.	...	45
15.	சமஸ்கிருதமும் தமிழும்—பெ. திருஞானசம்பந்தன்	...	47
16.	உரைநடைத் தமிழ்—கனகசவுந்தரி இளந்திரையன்	...	51
17.	தமிழின் சொல்வளம்—கா. அப்பாத்துரை	...	57
18.	நீங்கள் வாழ்வீர்!—நா. இராசகோபாலன்	...	60
19.	பாலர் கலைக்களஞ்சியம்—அழ. வள்ளியப்பா	...	61
20.	மொழிகள் பல-கருத்து ஒன்றே—சல்லா இராதாகிருஷ்ண சர்மா	...	65
21.	குஞ்சன் நம்பியார்-நகைச்சுவைக்கு ஒரு கவிஞர்—ஜி. ஸ்ரீதரன்	...	68
22.	பாலர் கதைகள்—பூவண்ணன்	...	73
23.	தமிழ் நூல்கள்-ஒரு மதிப்பீடு—நா. ஜகந்நாதன்	...	75
24.	இன்றைய தமிழ்க் கவிதைச் சோலை—கா. வேழவேந்தன்	...	78
25.	சிறுகதை இலக்கியம்—நா. பார்த்தசாரதி	...	81
26.	கன்னடக் கவிஞர் பு. தி. நரசிம்மாச்சார்—பா. பாலசுப்பிரமணியன்	...	85
27.	அல்லாஜ் பா. தாவூத்ஷா—மகனீ	...	88
28.	தமிழ்ப் பண்பாட்டின் பரப்பு—டாக்டர் ஜீன் பீலியோசா	...	91
29.	மகாராஷ்டிரத்தில் தமிழர்—சோமலெ	...	94
30.	க. மு. (கே. எம்.) பாலசுப்பிரமணியம்—வல்லை. பாலசுப்பிரமணியம்	...	97
31.	பாபநாசம் சிவன்—சங்கீத பூஷணம் எஸ். இராமநாதன்	...	99
32.	கல்கி பற்றிய நினைவுகள்—ராஜ்	...	102

எழுத்துலகு படைக்கும் விருந்து

1963-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 21, 22-ஆம் நாட்களில் சென்னை, பூங்கா நகர் மெமோரியல் மண்டபத்தில் நடக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கப் பதினோராவது மாநாட்டை யொட்டிப் "பாரதி" இதழின் இச்சிறப்பு மலர் வெளிவருகிறது. 21—12—'63 சனிக்கிழமை மாலை மாநாட்டைத் தமிழகத்தின் தலைமை யமைச்சரான மதிப்புக்குரிய எம். பக்தவத்சலம் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள். இம்முறை மாநாட்டை நம் சங்கப் பழைய வழக்கப்படி இரண்டு நாட்கள் விமரிசையாக நடத்த விரும்பிச் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவரும், சென்னைப் பல்கலைக்கழக இந்தித் துறை முதல்வரும், சீரிய தமிழ் ஆர்வலருமான டாக்டர் சு. சங்கரராசு அவர்கள். சங்கத்தின் தலைவரும், முதுபெரும் எழுத்தாளரும், மேதக்க வரலாற்று விற்பன்னருமான மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்குகிறார்கள். நெஞ்சம் உருக்கும் தமிழில் செஞ்சொற் பாடல்கள் பல இயற்றித் தமிழ் இயலுக்கும், இசைக்கும் அருந்தொண்டு புரிந்த நறைபழுத்த பாபநாசம் சிவன் அவர்களுக்கும், தித்திக்கும் திருக்குரானைத் தீந்தமிழில் வடித்துத் தந்து தென்னகப் புகழ் எத்திக்கும் பரவ இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தை வளம்பெறச் செய்த ஞானங்கனிந்த அல்ஹாஜ் பா. தாவூத்ஷா அவர்களுக்கும் இதுபோது கேடயங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது. திருவாசகத்தையும் திருக்குறளையும் நேர்த்தியாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், திருவாய்மொழியையும் திருப்பாவையையும் இனிமையாகக் கன்னடத்தில் மொழிபெயர்த்த கவிஞர் பு. தி. நரசிம்மாச்சார் அவர்களுக்கும் பதக்கங்கள் தந்து பாராட்டுத் தெரிவிக்கப்படுகிறது. கேடயங்களையும், பதக்கங்களையும் கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் தியாகசீலர் சா. கணேசன் அவர்கள் வித்தகர்களுக்கு வழங்குகிறார்கள். திரு. கொத்தமங்கலம் சுப்பு, தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான், திரு. அப்துல் சமது, திரு. பீர்முகம்மது, திரு. பி. ஜி. எல். சாமி—ஆகியோர் விருந்தினரைப் போற்றிப் பேசுகிறார்கள். திருமதி. நீலாராமமூர்த்தி குழுவினரின் இசையரங்கு இரவு நடைபெறுகிறது.

22-12-'63 ஞாயிற்றுக் கிழமை காலை எழுத்தாளர் அறிமுகத்துடன் மாநாடு தொடர்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழிப்பிரிவுத் தலைவர் பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களின் தலைமையில் "தமிழில் பிற மொழி இலக்கியங்கள்" என்ற பொருள் குறித்து ஒரு கருத்தரங்கு நிகழ்கிறது. கருத்தரங்கைத் தென்மொழிப் புத்தகப் பொறுப்பகப் பொது மேலாளர் திரு. வி. சுந்தரராஜ நாயுடு அவர்கள் துவக்கி வைக்கிறார்கள். சமஸ்கிருதம், உருது, வங்கம், இந்தி, தெலுங்கு, மலையாளம், பிரஞ்சு, ஆங்கிலம், இரஷ்யன்—ஆகிய 9 மொழிகளில் பழக்கமுள்ள 9 அறிஞர்கள் இதுவரை தமிழில் இவ்வொன்பது மொழிகளி லிருந்தும் பெயர்க்கப்பட்ட இலக்கியங்களைத் திறனாய்வு செய்து மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் எதிர்கால வளத்துக்கு வழிகாட்டுகிறார்கள். பிற்பகல் "கவிஞர் பற்றிக் கவிஞர்" என்ற தலைப்பில் உமறுப் புலவர், கோபாலகிருஷ்ண பாரதியார், இராமலிங்க அடிகள், வேதநாயகம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை—ஆகிய 7 கவிஞர்களைக் குறித்து 7 தற்காலக் கவிஞர்கள் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் தலைமையில் கவியரங்கு ஏறுகிறார்கள். மாலை தமிழ் "இலக்கியம் அன்றும்—இன்றும்" என்ற பொருளில் சங்ககாலம், இடைக்காலம், தற்காலம், வருங்காலம் என்கிற பிரிவுகள் பற்றித் திரு. கா. அப்பாத்துரை, அ. மு. பரமசிவானந்தம், கே. பாலதண்டாயுதம்,

ம. நன்னன், க. அறிவழகன்-ஆகிய வல்லுநர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்கள். இதில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி இலண்டன் பல்கலைக்கழகக் கீழ்த்திசைக் கலைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளரான டாக்டர் ஆர். இ. ஆஷர் அவர்கள் "நான் கண்ட தமிழ்" என்கிற பொருள் குறித்துப் பேசுவதாகும்.

இத்தகைய மேன்மை வாய்ந்த மாநாட்டின் நினைவாகவே இம்மலர் உங்கள் கைகளில் தவழ்கிறது. இதில் வழக்கம்போல் பல எழுத்தாள விற்பன்னர்களும், தமிழ் வித்தகர்களும் வண்ண வண்ணமான கட்டுரைகளை எழுதி நம் நாட்டு முந்திய—இன்றைய இலக்கிய வளர்ச்சியின் நாநாவிதப் போக்குகளைச் சித்திரித்துக் காட்டுகிறார்கள். இவ்வாண்டு மலரின் பக்கங்கள் கூட்டப்பட்டிருப்பதோடு கவிதைகளும் அதிக இடம் பெற்றிருக்கின்றன. வேற்று மொழிகள் பற்றிய கட்டுரைகளும் இதில் பங்குகொண்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். கட்டுரையாசிரியர்களின் கருத்துக்கு அன்னாரே பொறுப்பு என்ற போதிலும், அவர்கள் வழங்கும் இலக்கிய விருந்து நம் அனைவர்க்கும் உரியது அல்லவா? கட்டுரைகளைக் கேட்டவுடன் கனிவோடு கொடுத்துதவிய வல்லுநர்களுக்கும், மலருக்கு விளம்பரம் தந்தருளிய வாணிப நிலையங்களுக்கும், அவற்றை வாங்கிக் கொடுத்த பேரன்பர்களுக்கும், மலரை இத்தனை ஒழுங்காகச் சுருங்கிய காலத்தில் அச்சிட்டுத் தந்த பாரி அச்சகத்தார்க்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றிகள் எப்போதும் உரியன.

நம் சங்கம் இதுவரை பதினோராண்டுகள் மாத்தொண்டு புரிந்து தமிழ் எழுத்தாளர்களையும், தமிழ் எழுத்தையும் உயர்த்தியிருக்கிறது. பன்னிரண்டாம் ஆண்டுக்கு அடியெடுத்து வைக்கும் இச்சீரிய அமைப்பைத் தமிழ்ப் பெருமக்கள் யாவரும் வாழ்த்திக் கைகொடுக்க வேண்டுகிறோம். இனி எழுத்துலகு படைக்கும் விருந்தை நீங்கள் நுகர்வதை யார் தடுக்க முடியும்? வணக்கம்.

இங்ஙனம்,

மலர்க் குழுவினர்.

பழமையில் புதுமை ✳ கைத்தறியில் நவீனம்

K.E.Md. ABOOBACKER

சங்கு

TRADE MARK

கொ.இ.முகம்மது அபுபக்கர்

சங்கு மார்க்கு

REGD. TRADE MARK

✳ வனப்பு மிகு வர்ணச் சோலித் துணிகள் ✳ கண்கவர் கைக்குட்டைகள்

✳ மென்மை மிகு எழில் வேஷ்டிகள் ✳ உழைப்பு நிகர் உன்னத கைலிகள்

உற்பத்தி செய்து விநியோகிப்பவர்கள்:

முகம்மது அபுபக்கர் அண்டு கம்பெனியார்,

95, தம்பு செட்டித் தெரு, சென்னை-1.

84, கீழவெளி வீதி, மதுரை.

மெயின் ரோடு, கொல்லம்.

தமிழ் மொழி வாழ்த்து

—[✳]—

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே. 1

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே. 2

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே. 3

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே. 4

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே. 5

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே. 6

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே. 7

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே. 8

—மாகவி பாரதியார்.

—[✳]—

எங்கள் வெளியீடுகள்

உலக சரித்திரம்—நேருஜி	தமிழாக்கம் : ஓ. வி. அளகேசன்	15	00
சுயசரிதை—நேருஜி	தமிழாக்கம் : ஜெயா அருணாசலம் பி. ஏ.	5	00
நமது தலைவர்கள்	பி. டி. தாண்டன்	3	25
விந்தை மனிதர் நேரு	,,	4	00
எங்கள் நேரு	,,	5	00
விதி என்ன செய்யும்	கிருஷ்ணஹத்தீ ஸிங்	5	00
பாபுவின் கதை	,,	2	50
ரஜபுத்ர ஆதிக்கத்தின் அஸ்தமனம்	ரமேச சந்திர தத்தர்	5	00
மகாராஷ்டிர ஜீவன் உதயம்	,,	5	00
காந்திஜி வாழ்க்கையில் ரசமான சம்பவங்கள்	ஜி. ராமச்சந்திரன்	1	50
நான் கண்ட காந்தி	லூயி பிஷர்	2	50
கட்டபொம்மு	தி. நா. சுப்பிரமணியன்	3	00
ஸ்ரீமத் பகவத் கீதை	க. சந்தானம்	2	00
சாகுந்தலம் மேகதூதன்	,,	3	00
செல்வமும் சுதந்திரமும்	,,	1	00
செங்கோலும் ஜனநாயகமும்	,,	1	00
பொதுமக்களும் பொருளாதாரமும்	,,	1	25
நமது அரசியல்	,,	1	25
சத்தியாக்கிரகமும் அரசியலும்	,,	2	00
தியாகம் முதலிய கதைகள்	,,	3	00
நாடகங்கள்	,,	2	75
நம் நாடு	,,	2	00
ராஜ்யம்	,,	1	25
செல்வம்	,,	1	25
ஆளப்பிறந்தவர்	தமிழாக்கம் : தி. ஜானகிராமன்	1	00
ரைட் சகோதரர்கள்	,, நா. ஜகந்நாதன், எம்.ஏ.	1	00
ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்	,, ஆர். மகாதேவன்	1	00
சார்லஸ் ஸ்டெயின்மெட்ஸ்	,, சிறுவை. மோகனசுந்தரம்	1	00
அட்மிரல் பெர்ட்	,, ,,	1	00
எலினர் ரூஸ்வெல்ட்	,, குண்டூசி கோபால்	1	00
நிக்கோலா டெஸ்லா	,, கே. எஸ். மகாதேவன், பி. எஸ்சி., எம். ஏ.	2	00
லூதர் பர்பாங்க்	,, ஸ்ரீராமுலு, பி. ஏ.	1	00

புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

135, பவழக்காரத் தெரு...சென்னை-1.

தமிழ் எழுத்தாளர் சங்கப் பதினோராவது மாநாடு

1963, திசம்பர், 21, 22

டாக்டர் சு. சங்கரராசு அவர்களின்

வரவேற்புரை

1. தமிழ் அன்பர்களே! எழுத்தாள நண்பர்களே! சங்கத் தலைவர் அவர்களே! மாநாட்டைத் துவக்கி வைக்க எழுந்தருளியிருக்கும் எங்கள் தமிழ் நாட்டுத் தலைமை அமைச்சர் அவர்களே! அனைவருக்கும் உளங்கனிந்த வணக்கங்கள். தமிழ் எழுத்தாளர் சங்கப் பதினொன்றாவது மாநாட்டு வரவேற்புக் குழுவின் சார்பில் உங்கள் அனைவரையும் வருக, வருக என்று வரவேற்கிறேன். வாழ்க, வாழ்க நம் இன்பத் தமிழ்; வளர்க, வளர்க நம் தமிழ் உள்ளம்; வெல்க, வெல்க நம் தமிழ் மக்கள்; பொலிக, பொலிக நம் பாரத நாடு; ஒளிர்க, ஒளிர்க நம் வையகம்.

2. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பது நமது மரபு. ''யாதானும் நாடாமால் ஊராமால்'' என்கிறது குறள். இப்பரந்த மனப்பாங்கினையுடைய நமது பண்பாட்டுக் கோயில்தான் தமிழ் இலக்கியம். அதில் பொதிந்து கிடக்கும் எண்ணங்களும், எழுத்துக்களும் நம் இருகண்கள் போன்றவையாகும். இச்சிறந்த அறக் கோயிலை உடைய நமது கலைக்கோயிலின் காவலராகத் திகழ்கிறார்கள் தமிழ் எழுத்தாளர்கள். இவர்களது நலத்தில்தான் பெரும்பாலும் அடங்கியுள்ளது நமது நலம். ஆகவே வாருங்கள் பார்ப்போம் இவர்களது நிலைமையை; காண்போம் இவர்களது எண்ணங்களையும் எழுத்துக்களையும்; சிந்திப்போம் அவைகளில் உள்ள மெய்ப்பொருளை; சரி என்றால், ஒத்துக் கொள்வோம்; தவறு என்றால், அவர்களுக்கு வழி காட்டுவோம்.

3. இலக்கியம் இரண்டு வகைப்படும். ஒன்று இயற்கலை இலக்கியம், மற்றொன்று பொருள் வகை இலக்கியம். இயற்கலை இலக்கியத்தில் சிறப்பாகக் கற்பனையின் அடிப்படையில் ஆக்கப்பட்ட செய்யுள், பாட்டு, சிறுகதை, புதினம், நாடகம், நாட்டுப் பாடல்கள், கட்டுரைகள் முதலிய எல்லாக் கலையோவியங்களும் இடம்பெறும். பொருள் வகை இலக்கியமாவது அறிவியலைப் பற்றிய எழுத்துரைகள் அனைத்துமாம். இதயத்தால் சிறப்படைவது இயற்கலை இலக்கியம்; அறிவால் சிறப்படைவது பொருள் வகை இலக்கியம். இரண்டிலும் ஓரளவு இரண்டும் கலந்திருக்கக்கூடும். சங்ககாலம், இடைக்காலம் என்று நாம் சொல்லும்பொழுது, நாம் சிறப்பாக இயற்கலை இலக்கியத்தையே கருதுகிறோம். ஆனால் தற்கால இலக்கியத்தில் இவ்விரண்டு வகை இலக்கியங்களும் சிறந்தோங்குவதைக் காண்கிறோம். எதிர்காலத்தில் நமக்கு இரண்டும் இன்றியமையாதவை. ஆகவே இதயத்தின் உணர்ச்சிகளையும், அறிவின் நுணுக்கங்களையும் எழுத்தால் ஆள்கின்ற எல்லாத் தமிழ் எழுத்தாளர்களையும், அவர்களுக்கு வாழ்வு தரவிருக்கும் எல்லாத் தமிழர்களையும் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

4. சமத்துவம், பொதுவுடமை என்ற பல்வேறு சிறந்த கொள்கைகளை இவ்வுலகில் இன்னும் நாம் முழுவதுமாகக் காண இயலவில்லை. ஆனால் எழுத்துலகில் நுழைந்துவிட்டால், அவைகளை எளிதில் பெற்றுவிடலாம். எழுத்துலகில் எழுத்தாளன் எதை வேண்டுமானாலும் தன்னால் இயன்றவரை எண்ணிஎண்ணி எழுதலாம். எழுத்துலகில் அரசனும், ஆண்டியும் சமம்; மண்ணும் விண்ணும் சமம்; மரமும் புல்லும்

சமம்; மலேயும் கல்லும் சமம்; அமிழ்தும் நஞ்சும் சமம். இவன் எதை வேண்டுமாளு லும் தன் கருவியாகக் கொள்ளலாம். அவைகளுக்கு உருவு கொடுக்கும் சீரிய முறையினுல்தான் உயர்வு பெறுகிருன் எழுத் தாளன். அரசனைப் பற்றிப் பாடியதினுல் ஓர் எழுத்தாளன் சிறந்தவனுகி விடுவ தில்லை. ஆண்டியைப் பற்றிப் பாடுவதினுல் சிறியவனுகிவிடுவதில்லை. எழுத்தோவியத் தின் அடிப்படையில் அமைந்திருக்கும் எண்ணங்களின் அமைப்பு முறையிலும், அவை களின் தரத்திலும்தான் எழுத்தாளனது சிறப்பு நிலவுகிறது. இத்தகைய பரந்த எழுத்துலகில், சுதந்திர எழுத்துலகில் ஈடுபட்டிருக்கும் தமிழ் எழுத்தாளர்களையும், அவர்கள் எழுச்சிகளையும், உள்ளத்துணர்ச் சிகளையும் கண்டு களிக்கலாம்; கேட்டு மகிழ லாம். அனைவரும் வாருங்கள், வாருங்கள்.

5. நூற்ருண்டுக்கு நூற்ருண்டு நம் பரந்த உலகம் சுருங்கிக்கொண்டே செல் கிறது. அதுபோலவே காலமும் விரைவில் கழிந்துகொண்டே போகிறது. மணிக் கணக்காக அமர்ந்திருந்து மாக்கதைகளைத் தீட்டித்தர எழுத்தாளர்களுக்கும் நேர மில்லை; அதைப் படிப்பவர்களுக்கும் நேர மில்லை. எடுத்த ஓர் எழுத்தோவியத்தை இருந்த இருப்பிலேயே படித்து முடிக்க விரும்புகிருர்கள் பலர். இதனுல் தான் சிறுகதைகளின் மதிப்பு மிகுதியாகிக் கொண்டே செல்கிறது. சிறு கவிதைகளின் நிலையும் அதுவே. ஆகவே, எழுத்தோவி யங்கள் சிறியவையாகவும் இருத்தல் வேண்டும்; சிறப்பாகவும் அமைதல் வேண்டும். இம்முயற்சியில் ஆங்கிலம் மிக வும் முன்னேறிவிட்டது. அதில் ஒரு மிகச் சிறிய, ஆனல் மிகச் சிறந்த செய்யுள் பின் வருமாறு இசைந்துள்ளது:

"I!..............................
Why?....................."

அதாவது, "நான்!......ஏன்?" இரண்டே சொற்கள். செய்யுள் முடிந்துவிட்டது. இனி படித்தவனுடைய வேலை அதனைப் புரிந்து கொள்வது. நான் ஏன் பிறந் தேன், எங்கு செல்கிறேன், எங்கு செல்ல வேண்டும், எப்படிச் செல்ல வேண்டும் என்றெல்லாம் சிந்திக்க தூண்டிவிட்டான் எழுத்தாளன். இத்தகைய எழுத்தோவியங் களைத் தமிழிலும் தாருங்கள், எழுத்துலகில் முன்னேறுங்கள்.

6. எழுத்தில் மட்டும் முன்னேறினுல் போதுமா? போதாது. பேச்சிலும் முன் னேற வேண்டும். பேச்சுதான் எழுத் தாகிய கோயிலுக்கு அடித்தளமாக அமைந் திருப்பது. பேச்சுத் தடுமாறினுல், காலம் செல்லச் செல்ல எழுத்தும் தடுமாறும். பேசும் மனிதனுக்கு உயிருக்கு அடுத்தது பேச்சுதான். ஆகவே முதலில் பேச்சைப் பேணுங்கள் — எழுத்தை என்றென்றும் பேணவேண்டும் என்ற எண்ணமிருந்தால். ஒலிவடிவத்திற்குத் தானே வரிவடிவம் கொடுக்கப்பட்டுள்ளது — இலக்கியத்திற்கு இலக்கணம் என்பதுபோல. பேசுகின்ற பேச்சு தூய்மையடைந்தால், எழுதுகின்ற எழுத்து தானுகவே தூய்மை பெறும். ஆகவே எழுத்தாளருக்கு எண்ணமும், பேச்சும், எழுத்தும் சிறந்தோங்க வேண் டும். இம்மூன்றினையும் சிறப்பிக்க வாருங் கள், அனைவரும் வாருங்கள்.

7. தமிழை வளர்ப்பவர்கள் தமிழ் எழுத்தாளர்கள். தமிழ் எழுத்தாளரைக் காப்பவர்கள் தமிழ் எழுத்தாளர் சங்கத் தார். தமிழ் எழுத்தாளர் எச்சார்புடைய கலைஞராயிருந்தாலும் சரி, தமிழ் எழுத் தாளர் சங்கத்தார் எச்சார்புமற்றவர்—பல் கலைக்கழகங்களின் பல துறைகளில் பயி லும் அனைவரும் மாணவர் வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பதுபோல. சங்கத்தவ ரனைவரும் சங்கத்தினுள் ஒரே இனத்தவ ராவர் — பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் எல்லா வகுப்பைச் சேர்ந்த மாணவ - மாணவிகளும் ஒரே இனத்தார் என்று கருதப்படுவதைப் போல. சங்கத் திற்குள் நுழைந்ததும் யாவரும் ஒரே இனத்தவராகி விடுகிருர்கள். இச்சிறந்த இனத்துள் இறங்கிப் பார்த்தால், இவர் களுடைய பரந்த மனப்பான்மையும் தமி ழுக்காக உண்மையுடன் பாடுபடுகின்ற வாய்மையும் நன்கு புலனுகும்; தூயஉள்ளம் படைத்தோரது மனமும் மகிழும். இவர் களின் செயற்கரிய செயல்களைக் கண்டு களிப்போம், அனைவரும் வாருங்கள்.

8. 'தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என நம் தமிழ் எழுத்தாள நண்பர்,

தமிழின்பால் மிக்க காதல் கொண்ட ஓர் அன்பர் கனவு கண்டார் அல்லவா? அக் கனவைக் கண்கொளாக் காட்சியாகக் கண்டேன், பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இலண்டன் மாநகரில் உள்ள பல்கலைக் கழகத்தில் திருமதி. விட்லே (Mrs. Whitley) என்ற பேராசிரியை எனக்குத் தமிழோசைகளின் நுட்பங்களை நாமே வியக்கும் வண்ணம் நல்ல பல எடுத்துக் காட்டுகளுடன் ஒலிப்பதிவேடுகள் பல இட்டு விளக்கிக் கற்பித்தபோது. ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் டி. பர்ரோ (Prof T. Burrow), கேம் பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் டபிள்யூ. எஸ். எலன் (Prof W. S. Allen) என்ற பேரறிஞர்களும் தமிழின் ஓசை நயங் களையும், சொற் சிறப்புக்களையும் எனக்கு எடுத்துச் சொல்ல, நான் அவைகளைக் கேட்டுக்கேட்டு உள்ளத்தில் பேருவகை கொண்டேன். பாரிஸ் நகரத்தில் பேராசிரி யர் பியர்ரே மெய்லி (Prof. Pierre Meilli) தம் இல்லத்திலும், கல்லூரியிலும் தமிழோ சையை எடுத்துரைத்த விந்தையை நான் என்னென்று கூறுவேன்! இதுபோலவே ஒல்லாந்து, ஜெர்மனி, செக்கோஸ்லோ வேகியா, இரஷ்யாவில் மட்டுமல்ல; அமெரிக்க நாடுகளிலும் தமிழோசை மேலும் மேலும் பரவி வருவதைக் கேட்டு, நாம் நம் புலவன் பாரதியின் கனவு நன வாகி வருவதை நினைந்து இன்பமுறலாம் அல்லவா? பக்கத்தில் இருக்கும் இலங்கை, மலாயா முதலிய நாடுகளில் தமிழோசை பல்லாண்டுகளாகப் பரவியிருப்பது அனை வரும் அறிந்ததே.

9. இந்திய நாட்டு மொழிகளுள் தமிழுக்குத் தனிச் சிறப்புக்கள் பலப்பல உள்ளன. அவைகளுள் ஒன்று தமிழ் இந்திய நாட்டு மொழியாக மட்டும் இல் லாமல் குறைந்தது இரண்டு பிற நாடு களின் மொழியாகவும் இருந்து வருவதா கும். அவ்விரண்டு நாடுகள் இலங்கையும், மலாயாவுமாகும். இவ்விரண்டு நாடுகளி லும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமிழைத் தாய்மொழியாக உடையவர்கள். இச்சிறப்பு வேறு எந்த இந்திய மொழிக் கும் கிடையாது. தமிழ் எழுத்தாளர்கள் மட்டும்தான் பிற நாட்டவரோடும் பேச்சு மொழி உறவுடையவர்கள். நமது சங்கத் தில் அனைத்திந்தியாவிலும் மட்டுமல்ல; கடல்கடந்து நிலவும் பிற நாடுகளிலுங் கூட உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்குப் பொறுப்பு மிகமிக அதிகம். இதை நன்கு உணர்ந்து நம் சங்கத்தவர்கள் நடந்து வருவதைக் கண்டு நான் அவர்களை என் மனத்துக்குள்ளேயே வாழ்த்தி யிருக் கிறேன்; வணங்கியுமிருக்கிறேன். இவர் களை வாழ்த்த, இவர்களுக்கு மேலும் மேலும் இயன்ற ஊக்கத்தை அளிக்க, எல்லோரும் வாருங்கள்.

10. "கருத்துத் தெளிவும் கற்பனைத் திறனும்
பொருந்திய சிறப்பின் அருந்தமிழ்ப் புலவிர்!
நும்மருந் தொண்டுகள் நுந்தா தொளிர்க!

*   *   *

தாய்மொழி போற்றாத் தாழ்மனப் பான்மை
மாயா துள்ள மாசது துடைக்க
ஒல்லும் வகையால் ஓர்ந்தே
நல்லது புரிமின் நலமுற நாடே"

என்கிறார் கவிஞர் டாக்டர் மு. வரதராச னார். இந்த மாசைத் துடைக்க வாருங்கள், அனைவரும் ஒன்று சேருங்கள்.

11. பெருமக்களே! எங்கள் அழைப் பின் பேரில் வந்திருக்கும் உங்கள் அனை வருக்கும் மற்றுமொரு முறை வருக, வருக என்று நல்வரவு கூறுகிறேன். நீங்கள் எல்லோரும் தமிழ் எழுத்தாளர் சங்கத் திற்கு ஆசியையும், உங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் தந்தருளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

"ஒன்றாய் நிற்போம்,
நன்றாய் வாழ்வோம்".

1963, திசம்பர் 21, 22ஆம் நாட்களில்

சென்னை, மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற 11-ஆவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டில்

ஆராய்ச்சியறிஞர் மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் நிகழ்த்திய

தலைமையுரை

மதிப்புக்குரிய அமைச்சர் பெருமான் அவர்களே! வரவேற்புக் குழுத் தலைவர் அவர்களே! பாராட்டுப் பெறுகிற பேரறிஞர்களே! எழுத்தாளர் நண்பர்களே! அறிவும் ஆற்றலும் மிக்க பெரியோர்களே! தாய்மார்களே! அனைவருக்கும் அன்பு கலந்த வணக்கம்.

நூற்றுக்கு மேற்பட்ட வெவ்வேறு தாய்மொழிகள் பேசப்படுகிற நமது பாரத நாட்டிலே இலக்கிய வளமுடைய மிகப் பழமையான மொழிகள் இரண்டே இரண்டுதான் உள்ளன. அவ்விரண்டில் ஒன்று தன்னேரிலாத தமிழ்; மற்றொன்று வடமொழி எனப்படும் சமஸ்கிருதம். ஏனைய இந்திய மொழிகள் பிற்காலத்தவை; பழைய இலக்கிய வளம் உள்ளனவும் அல்ல. இந்த உண்மையை நான் புதிதாக இட்டுக் கட்டிச் சொல்லவில்லை. மொழிகளின் வரலாறுகளை ஆராய்ந்து பார்த்த உலகப் பேரறிஞர்கள் கூறும் உண்மை இது. எனவே, தமிழ் மொழி மிகப் பழமையானதும், சிறந்த இலக்கிய வளம் உடையதும், தனக்கெனத் தனிப் பண்பாடுடையதும் ஆன உயர்தனிச் செம்மொழி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இப்படிச் சொல்வதனாலே பழம் பெருமை பேசிக்கொண்டே காலத்தைக் கழிக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து அன்று. பழைய இலக்கியங்களைப் பெற்றிருப்பதனால் மட்டுமே தமிழ்ச் சமுதாயம் முன்னேறிவிட முடியாது. உலகச் சமுதாயத்தோடு தமிழர் இயைந்து வாழ வேண்டுமானால், மேன்மேலும் உயர்ந்து கொண்டே போகவேண்டுமானால், புதுப் புது இலக்கியங்களையும் காலத்துக்கேற்ற புத்தம் புதிய நூல்களையும் தமிழிலே படைத்துக்கொண்டே யிருக்க வேண்டும். பழைய இலக்கியங்களைப் போற்றிப் படிப்பதோடு அமையாமல், புதிய புதிய இலக்கியங்களையும் படித்தால்தான் மக்கள் சமூகம் அறிவு வளம்பெற்று மேன்மேலும் உயர்வடைய முடியும்.

சிலர், பழைய இலக்கியங்களை மட்டும் பாராட்டிப் படித்துக்கொண்டு புதிய இலக்கியங்களைப் படிக்காமலே இருந்து வருகிறார்கள். வேறு சிலர் புதிய இலக்கியங்களை மட்டும் பாராட்டிப் படித்துக்கொண்டு பழைய இலக்கியங்களைக் கண்ணெடுத்தும் பாராமல் இருந்து வருகிறார்கள். இந்த இருவகை நிலையும் மாறவேண்டும். 'பழைய இலக்கியங்களில் என்ன இருக்கிறது?' என்று வாய் கூசாமல் பேசுகிறவர்களும் இக்காலத்தில் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் பண்டைய இலக்கியங்களைப் படித்துப் புரிந்துகொள்ள முடியாதவர்கள்; பழைய இலக்கியங்களின் இனிமையைச் சுவைக்க முடியாதவர்கள். புதுமை இலக்கியங்கள், பிற்காலத்தில் பழமை இலக்கியங்களாகி விடுகின்றன அல்லவா? மனித சமூகத்தின் எதிர்கால வாழ்க்கை அவர்களுடைய இறந்தகால வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. பாட்டன் பாட்டிமார்க்கும், பேரன் பேத்திமார்க்கும் ஆழ்ந்த அன்பும் பற்றும் இருப்பதுபோலவே இலக்கிய உலகத்திலும் சென்றகால இலக்கியத்துக்கும், எதிர்கால இலக்கியத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை மறத்தல் ஆகாது. நல்ல இலக்கியங்களில் பழமை என்பதும் இல்லை, புதுமை

என்பதும் இல்லை. அவை அன்றும் இன்றும் என்றும் புதுமையாகவே இருக்கின்றன. திருக்குறள், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலான எத்தனையோ பழைய இலக்கியங்களில் புதுமைகள் இருந்துகொண்டே யிருக்கின்றன. பழைய இலக்கியங்களிலே சுவையில்லையா? அழகு இல்லையா? இன்பம் இல்லையா? சிற்பக் கலைகளையும் ஓவியக் கலைகளையும் இசைக் கலைகளையும், அவை பழமையுள்ளவை என்பது காரணமாக, அறிஞர்கள் அவற்றை ஒதுக்கிவிடுகிறார்களா? இல்லையே! அதுபோலவே பழைய இலக்கியச் செல்வங்களையும் போற்ற வேண்டும். அவற்றில் உள்ள கலையின்பத்தையும் நுகர வேண்டும்.

எழுத்தாளர்களில் சிலர் — ஒருசிலர் தான்—'பேசுவதுபோல எழுதவேண்டும்' என்று கூறுகிறார்கள். பேசுவதுபோல எழுதவேண்டும் என்பது நாடக நூல்களுக்குப் பொருந்தும். அந்தந்தப் பாத்திரங்கள் பேசுவதுபோல எழுதுவதுதான் நாடக நூல்களுக்குச் சிறப்பைத் தரும். ஆனால், நாடகநூல் அல்லாத ஏனைய நூல்களைப் பேசுவதுபோல எழுதவேண்டும் என்றால் அது எவ்வாறு இயலும்? பேச்சுக்கள் பல வகை. அக்கிரகாரத்துப் பிராமணர் பேச்சு, சேரிகளில் வாழும் ஆதித்திராவிடர் பேச்சு, குப்பங்களில் வாழும் மீனவர் பேச்சு, காட்டில் வாழும் குறவர் பேச்சு என்று இன்னும் பலவிதமான பேச்சுக்கள் உண்டு. அல்லாமலும் நாடுகள், மாவட்டங்களிலும் பேச்சுக்கள் வேறுபடுகின்றன. மரபு அறியாமல் பேசுகிற பேச்சுக்களும் உண்டு. கனவு கண்டேன் என்பதைக் 'கனவு பார்த்தேன்' என்றும், துணி தோய், துணியைக் கசக்கு என்பதைத் 'துணியைக் கழுவு' என்றும், கதவைத் திற என்பதைக் 'கதவை அவிழ்த்து விடு' என்றும், 'அவன்கி கொடு', 'நான்கி சொல்லு' என்றும் பேசுகிறவர்களும் உண்டு. இவையெல்லாம் பேச்சுத் தமிழ் தானே. இப்படியெல்லாம் பேசுவதுபோல எழுதினால் இலக்கியம் என்னவாகும்? பேசுவதுபோல எழுதுவது என்பது புதிதாகத் தோன்றி வளர்ந்துகொண்டிருக்கிற புத்தம் புதிய பாஷைகளுக்குப் பொருந்துமே யல்லாமல், வளர்ச்சிபெற்ற இலக்கிய வளமுடைய பாஷைகளுக்குச் சிறிதும் பொருந்தாது. இலக்கிய வளமும், இலக்கண அமைதியும், தனக்கென ஒரு மரபும் அமைந்துள்ள பாஷைகளுக்கு அது சிறிதும் பொருந்தாது. இக்காலத்தில் தமிழுக்கென்று ஒரு தனிநடை இருந்துவருகிறது. திரிசொல் இல்லாமலும், கொச்சைச்சொல் இல்லாமலும் நல்ல இயற்றமிழ் நடை இன்று உருவடைந்திருக்கிறது. இந்த நடை, பல்வேறு மரபாகப் பேசுகிற எல்லோருக்கும் தெரியும்படி பொதுவாக அமைந்திருக்கிறது. உதாரணம் வேண்டுமானால், திரு. வி. க. அவர்களின் எழுத்து நடையைப் பாருங்கள்.

தமிழில் குவிந்துகிடக்கிற பழைய இலக்கியங்களைப் போற்ற வேண்டிய கடமை ஒருபுறமிருக்க, அதே சமயத்தில் புதிய புதிய இலக்கியங்களையும் உண்டாக்கிக் கொடுக்கவேண்டிய கடமையும் எழுத்தாளர்களுக்கு உண்டு. மக்களுக்குத் தேவையான, அவசியமான புத்தம் புதிய நல்ல இலக்கியங்கள் தோன்றவேண்டும். தமிழ் எழுத்தாளர்கள் (நூலாசிரியர்கள்) இந்தப் பணியைச் செய்துகொண்டு வருகிறார்கள். உயர்ந்த எண்ணங்களையும் நல்ல சிந்தனைகளையும் மேன்மையான பண்பாடுகளையும் வளர்க்கக்கூடிய, நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குறிக்கோளாகக் கொண்டுள்ள நூல்களை எழுத்தாளர்கள் எழுதிக்கொண்டு வருகிறார்கள்.

பாரதநாடு சுதந்தரம் பெற்ற பிறகு பாரதநாட்டுப் பல மொழிகளிலும் குறிப்பாக வங்காளி, இந்தி, மராத்தி, குஜராத்தி மொழிகளில், பற்பல துறைகளிலும் புதிய புதிய நூல் வேகமாக வெளிவந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். முக்கியமாக நவீனங்களும், சிறுகதை நூல்களும், கவிதைகளும், காவியங்களும் புதுமை புதுமையாக வெளிவந்து கொண்டுள்ளன. விஞ்ஞான நூல்களும், கலைத்துறை நூல்களும், தொழில்துறை நூல்களும் வெளிவருகின்றன. இவையெல்லாம், பாரத நாட்டிலே புதிய உணர்ச்சியும் வேகமும் ஏற்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்கின்றன. தமிழ் நாட்டிலும் அத்தகைய ஆர்வங் காணப்பட்டாலும், ஏனைய மொழிகளில் காணப்படுகிற அத்துணை வேகமும்

விறுவிறுப்பும் இங்கு இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

நவீனங்களும் சிறுகதைகளும் செய்யுள்களும் தமிழ் மொழியில் கணிசமான அளவு வெளிவந்துள்ளன. சிறுவர் இலக்கியங்களும் வளர்ந்து வருகிறது. ஆனால், நாடக நூல்கள் போதுமான அளவு தமிழில் வெளிவரவில்லை. பாரதநாட்டு ஏனைய மொழிகளிலும் மேல்நாட்டு மொழிகளிலும் நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற நல்ல நாடக நூல்கள் வளர்ச்சியடைந்திருப்பது போல, தமிழ் மொழியில் இன்னும் வளர்ச்சியடையவில்லை. திரு. பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் நாடக நூல்கள் இந்தக் குறையை ஒருவாறு நீக்குகின்றன என்றாலும், புதிய நல்ல நாடக நூல்கள் இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தத் துறையில் தமிழ் எழுத்தாளர்கள் கருத்தைச் செலுத்த வேண்டும்.

ஓரங்க நாடக நூல்களும் தமிழில் இப்போது தலைகாட்டுகின்றன. வானொலி நிகழ்ச்சிகளில் ஓரங்க நாடகங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறபடியால் இத்துறையில் பல புதிய நூல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம். சரித்திர நாவல்கள், சரித்திரக் கதைகளுங்கூட தமிழில் வெளிவந்துள்ளன. அவற்றின் தரம் இன்னும் உயர வேண்டும். சரித்திர நிகழ்ச்சியை நன்கறியாதவர்கள் தவருன செய்திகளையும் சரித்திரம் என்று கருதிக்கொண்டு சரித்திர நவீனங்களையும் கதைகளையும் எழுதுகிருர்கள். சரித்திர நாவல்கள் சரித்திர ஆதாரங்களைக் கொண்டு அந்தந்தக் காலத்து நடையுடை பாவனைகளை அமைத்து எழுதப்படவேண்டும். இந்தத் துறையிலும் தரமான நூல்கள் வெளிவர வேண்டும்.

வாழ்க்கை வரலாறுகளும் தமிழில் குறைவுதான். மற்றப் பாரத மொழிகளில் 'ஆத்ம கதா' என்னும் பெயரில் வாழ்க்கை வரலாறுகள் பல வெளிவந்துகொண்டிருக்கின்றன. தமிழ் எழுத்தாளர்கள் இத்துறையிலும் நூல்கள் இயற்றவேண்டும்.

அங்கத நூல்கள் தமிழிலும் மற்ற இந்திய மொழிகளிலும் இல்லையென்றே சொல்லவேண்டும். சமுதாயத்திலும் ஆட்சித் துறையிலும் காணப்படுகிற குறைபாடுகளையும் குற்றங்களையும் மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ, மனம் புண்படாத முறையில், அங்கத நூல்களை எழுதுவது நாட்டுக்கு நல்ல தொண்டு செய்வதாகும். அரசாங்கத்தாரே, தீய பழக்கங்களை ஒழிக்க முற்பட்டிருக்கிற இந்தக் காலத்தில் இத்தகைய நூல்களை எழுதுவது அரசாங்கத்தாருக்குத் துணை புரிவதாகும். அங்கதம் என்பது அபவாதங்களையும், அவமானப்படுத்துவதையும் கருத்தாகக் கொண்டது அல்ல. குற்றங் குறைபாடுகளைச் செம்மையான நல்ல முறையில் எடுத்துக்காட்டி (நாவல்களையும், சிறுகதைகளையும்) எழுதுவதாகும். அங்கதக் கவிதைகளையும் எழுதலாம். அங்கத நூல்கள் எழுதுவது நாட்டு மக்களுக்குப் புரியும் நல்ல தொண்டாகும்.

கலைக்களஞ்சியம் என்னும் சிறந்த நூலை (அதில் சில குறைபாடுகள் இருந்த போதிலும்) தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் மத்திய—மாநில அரசாங்கத்தாரின் உதவி பெற்று எட்டுத்தொகுதிகளாகத்தொகுத்து வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியையும் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேம். கலைக்களஞ்சிய அலுவலகம் நிரந்தரமான அமைப்பாக இருந்து இது போன்ற பணியைப் புரிய வேண்டும் என்பது எமது விருப்பம். 'சிறுவர் கலைக்களஞ்சியம்' ஒன்றையும் அவர்களே வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேம்.

இந்திய சாகித்திய அக்காடமி என்னும் நிலையம், பதினைந்து இந்திய மொழிகளில் வெளிவருகிற சிறந்த நூல்களுக்கு ஆண்டு தோறும் 5000ரூபா பரிசு வழங்கிப் பாரத நாட்டு எழுத்தாளர்களை ஊக்கப்படுத்திவருவது பற்றி நம்முடைய மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேம். பரிசு பெறத்தகுந்த நல்ல நூல்கள் தமிழில் வெளிவந்துங்கூட, சில சமயங்களில் அவை அக்காடமியார் பார்வையில் படாமலும் பரிசு வழங்கப்படாமலும் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேம். இந்தக் குறையை அக்காடமியின் மீது நாம் சுமத்த விரும்பவில்லை. தமிழ் நாட்டில் உள்ள அது சம்பந்தப்பட்ட

வர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

அரசாங்கத்தார் நாடெங்கும் நூல் நிலையங்களை அமைத்திருப்பது மட்டும் அல்லாமல் அந்நூல் நிலையங்களில் நல்ல உபயோகமுள்ள நூல்களை வாங்கி வைக்கப் பொருள் உதவியும் செய்து வருகிறார்கள். இந்த நல்ல காரியத்துக்காக அரசாங்கத்தாருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூல் நிலையங்களில் பெரும்பாலான வற்றில் காணப்படுகிற குறைபாட்டையும் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். நல்ல முதல்தரமான நூல்கள் இந்நூல் நிலையங்களில் இடம் பெற வேண்டியிருக்க, அதற்கு மாறாக இரண்டாந்தர மூன்றாந்தர நூல்களே அதிகமாக இடம் பெற்றுள்ளன. இதனால், நூல்நிலையங்கள் எந்த நோக்கத்தோடு நிறுவப்பட்டனவோ அந்த நல்ல நோக்கம் வீணாகிப் போகிறது. நூல் நிலையங்களுக்குப் புத்தகங்களை வாங்குவது பற்றியும் புகார்கள் கூறப்படுவது 'பகிரங்க இரகசியம்.' இந்தக் குறைபாடுகளை அரசாங்கத்தார் உடனடியாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பாரதநாடு பல பாஷைகள் பேசப்படுகிற பெரிய நாடு. இப்பாஷைகளில் பதினான்கு மொழிகளை அரசாங்கத்தார் அங்கீகரித்திருக்கிறார்கள். மாகாணங்களும் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மொழி வேறுபாட்டினாலே நாட்டின் முன்னேற்றம் வேகமாகச் செல்லாமல் தடைப்படுகிறது. பாரத நாட்டின் ஒருமைப்பாட்டைப் பற்றியும், ஒற்றுமையைப் பற்றியும் அரசாங்கத்தாரும் அடிக்கடி பேசி வருகிறார்கள். சுதந்தரம் பெற்ற பாரதநாட்டிலே ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டையும் வளர்ப்பதற்கு அதிக வாய்ப்புப் பெற்றவர்கள் எழுத்தாளர்கள்தான். பதினான்கு பாஷை எழுத்தாளர்களும் ஒன்று கூடி ஒருவருக்கொருவர் கலந்து பழகிப் பேசி ஒருவரை யொருவர் நன்கு தெரிந்து கொண்டு நூல் எழுதி நாட்டுக்கு நன்மை புரிய வேண்டும். மத்திய அரசாங்கத்தார், அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டைக் கூட்டி, பாரதநாட்டின் வெவ்வேறு மொழி எழுத்தாளர்களையும் ஒருமித்துச் சேர்ந்து பழக வாய்ப்பளித்துள்ளார்கள். இது எழுத்தாளர்களுக்கு மிகுந்த நன்மையைச் செய்து வருகிறது. இந்த அகில இந்திய எழுத்தாளர் மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடுகிறது. இதனை ஆண்டுக்கு ஒரு முறை கூடும்படி அமைக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறோம். முதலில் எழுத்தாளர்களுக்குள்ளே ஒருமைப்பாடும்,ஒற்றுமையும் ஏற்பட வேண்டும். இதற்குக் குறைந்தது ஒரு ஆண்டுக்கு ஒரு முறையாவது அகில இந்திய எழுத்தாளர் மாநாடு கூடவேண்டும்.

நாட்டில் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் உண்டாக்கக் கூடிய நூல்களை எழுத வேண்டுமானால், பாரத நாட்டுப் பல மொழி எழுத்தாளர்களும் பாரத நாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டும். கிணற்றுத் தவளைகளைப் போல எழுத்தாளர்கள் இருந்தால் நாட்டின் வளப்பம் அவர்களுக்கு எப்படித் தெரியும்? எழுத்தாளர்கள் பாரத நாட்டைச் சுற்றிப் பார்த்து நாட்டின் நிலைமையையும் இயல்பையும் அறிந்து கொள்ள அரசாங்கத்தார் அவர்களுக்குப் பிரயாணச் செலவில் சலுகை காட்ட வேண்டும். வெளிநாடுகளிலே எழுத்தாளர்களுக்கு அந்தந்த நாட்டு அரசாங்கத்தார் இந்த உதவியைச் செய்து வருகிறார்கள். நமது பாரத நாட்டு அரசாங்கத்தாரும் பாரத நாட்டு எழுத்தாளர்களுக்குப் பிரயாணச் சலுகை உதவியைச் செய்துதர வேண்டும். பாடகர்கள், நாடகக் குழுவினர்களுக்கு இந்த வசதிகள் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டு வருகின்றன. நூல்களை எழுதும் எழுத்தாளர்களுக்கும் இந்த வசதிகளைச் செய்து கொடுக்குமாறு மத்திய-மாநில அரசாட்சியாளரைக் கேட்டுக்கொள்கிறோம். அன்றியும், பாரத நாட்டு எழுத்தாளர்கள் குறைந்த செலவில் தங்குவதற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் தங்கும் இடங்களை அமைத்துக் கொடுத்து, எழுத்தாளர்களுக்கு உதவி புரியுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நம் எழுத்தாளர் சங்கம் ஏற்பட்டு இப்போது பதினோராண்டுகள் ஆகின்றன. பாரதநாட்டின் பல பாகங்களில் இருக்கும் எழுத்தாளர்கள் நமது சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்து வருகிறார்கள். எழுத்தா

ளர்களின் நலத்தைப் பாதுகாத்து எழுத்தாளர் சமூகத்தை உயரச் செய்வதே நமது சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். நமது சங்கம் எந்த அரசியல் கட்சிச் சார்புடையதும் அல்ல. தனிப்பட்ட முறையில் எழுத்தாளர்கள் எந்தக் கட்சியை யாவது சார்ந்திருக்கலாம். ஆனால், நமது சங்கத்தைப் பொறுத்த வரையில், அரசியல், மதம், சாதி, இனம் முதலிய எந்தச் சார்பும் இல்லை என்பதை வற்புறுத்திக் கூறுகிறோம்.

தமிழ் நாட்டில் இலக்கியத் துறையில் தொண்டாற்றிய சிறந்த தமிழறிஞர்களுக்கும், தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் பெயர்த்துத் தொண்டாற்றிய அறிஞர்களுக்கும் நமது சங்கம் கேடயங்களும் பதக்கங்களும் வழங்கிப் பாராட்டி வருகிறது. இது வரையில் அவ்விதப் பெரியார்கள் முப்பதுபேரைப் பாராட்டியுள்ளது. அதுபோலவே இன்று நான்கு அறிஞர்களைப் பாராட்ட இங்குக் கூடியுள்ளோம்.

பொருளாதார முட்டுப் பாட்டினால் துன்புறுகிற எழுத்தாளர் அங்கத்தினர்களுக்கு நமது சங்கம் மிகச் சிறு அளவு உதவி செய்து வருகிறது. அதற்கென்று மிகச் சிறு நிதியே இருப்பதனால், இது வரையில் ரூபா 3000 வரையில் சிறு சிறு தொகையாகச் சில எழுத்தாளர் அன்பர்களுக்கு உதவியுள்ளோம். சிறு தொகையாக இருந்த போதிலும், காலத்தினால் செய்த அது அவர்களுக்குப் பேருதவியாகவே இருந்திருக்கிறது. இந்த நிதியை அதிகமாக்கி மேன்மேலும் தகுந்த அன்பர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது சங்கத்தின் ஆசை. இதற்காகக் காசுள்ளவர் காசுகொடுத்தும், நிதியுள்ளவர் நிதி கொடுத்தும் உதவி புரியுமாறு நன்மனம் உள்ளவர்களை வேண்டிக் கொள்கிறோம்.

நமது சங்கத்தின் 'பாரதி' வெளியீடு இந்த ஆண்டில், பொருள் முட்டுப்பாட்டுக் காரணமாக வெளிவர வில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால், 'பாரதி' ஆண்டு மலர் சிறந்த முறையில் வெளி வந்துள்ளது. அடுத்த ஆண்டில் 'பாரதி' வெளியீடு தொடர்ந்து நடக்கு மென்று நம்புகிறோம்.

பதினோராண்டாகியும் நமது சங்கத்துக்கு ஒரு கட்டிடம் இன்னும் அமையவில்லை. நமது சங்கத்துக்கு ஒரு கட்டிடம் அமைந்தால், அதில் சங்கமும் புத்தகசாலையும் இருக்க வசதி ஏற்படுவதோடு, வெளியூர் அங்கத்தினர்கள் வந்து தங்குவதற்கும் உதவியாக இருக்கும். இந்தத் துறையிலும் முயற்சி செய்ய வேண்டியது சங்கத்தின் கடமையாகும்.

கடைசியாக ஒரு வேண்டு கோள். எழுத்தாளர் நண்பர்களே! நூலாசிரியர்களே! நமக்கு ஆற்றலையும் பலத்தையும் தரக்கூடியது நமது சங்கம். நமது சங்கத்தின் வளர்ச்சி எழுத்தாளரின் வளர்ச்சியாகும். ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இருந்தால் நாம் மேன்மை யடையலாம். எழுத்தாளர்கள் அனைவரையும் நமது சங்கத்தில் அங்கத்தினரராகச் சேரும்படி கேட்டுக் கொள்கிறேன். கதைகள், கவிதைகள், நவீனங்கள் முதலிய எந்த வகையான நூல்களையும் எழுதியவர்கள் நமது சங்கத்தில் அங்கத்தினராகச் சேரத் தகுதியுள்ளவர்கள். ஆகவே, எழுத்தாளர்களே, நூலாசிரியர்களே! சேர வாருங்கள்!

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு"

என்னும் பாரதியின் திருவாக்கு வழிகாட்டுவதாக. வாழ்க எழுத்தாளர்! வாழ்க எழுத்தாளர் சங்கம்! வளர்க நல்ல இலக்கியங்கள்!

கதை வளர்ந்த கதை

[டாக்டர் மு. வரதராசன்]

காலப் போக்கில் வாழ்க்கை பல மாறுதல்களை அடைகிறது. வாழ்க்கையின் கலைக் கனவாகத் தோன்றுவதே இலக்கியம். ஆகவே இலக்கியத்திலும் அவ்வப்போது புது வடிவங்கள் தோன்றுவது இயல்பாகும்.

நரிக்குறவர்கள் கூட்டமாகக் கூடிப் பாடியும் ஆடியும் மகிழ்கிறார்கள். அத்தகைய ஆட்டத்திற்கு இயைந்து பிறக்கும் பாடலே அவர்களின் இலக்கியம். மனித இனம் பேசக் கற்றுக்கொண்டு பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இத்தகைய பொருளுடைய பாட்டுக்களைப் பாடி மகிழ்ந்திருக்க வேண்டும். நாட்டுப் பாடல்கள் இவ்வாறே தோன்றி வளர்ந்தன என்பர். அந்தப் பாடல்கள் ஒரு பெரிய கதையைச் சூழ்ந்து பல கதைகளும் நிகழ்ச்சிகளும் தொடர்ந்து அமைந்து விடுமாயின், பிற்காலத்துப் பெரும்புலவர் ஒருவர் அந்தக் கதைகளுக்கும் பாட்டுக்களுக்கும் நிலையான எழுத்து வடிவம் தந்து 'காவியம்' என்ற இலக்கியமாக வாழ்விப்பார்.

இவ்வாறு அல்லாமல், தனியே இருந்து ஒருவர் தம் இன்பத்தையோ துன்பத்தையோ உணர்ந்து மகிழ்வதும் கலங்குவதும் உண்டு. அவ்வாறு தனித்த நிலையில் உள்ளத்திலிருந்து எழும் உணர்ச்சியைப் பண்படுத்த இசையின் துணையை நாடுவதும் உண்டு. ஓர் இசைக் கருவியைக் கையில் வைத்துக்கொண்டு, அதன் இசையைத் தம் உள்ளத்து உணர்ச்சிக்கு ஏற்ப இயைத்துக்கொண்டு பாடிய பாட்டும் இலக்கியம் ஆயிற்று. அதன் வளர்ச்சியையே பழங்காலத்துத் தன்னுணர்ச்சிப் பாட்டுக்களில் (lyrics) காண்கிறோம். அந்தப் பாட்டுக்களுக்குக் கதையின் துணை தேவையில்லை. ஒரு சிறு நிகழ்ச்சியும், ஓர் ஆழ்ந்த உணர்ச்சியுமே அதற்குப் போதும்.

ஆனால், காவியத்திற்குப் பெரிய கதைக்கரு ஒன்றும், சிறிய கதைக் கிளைகள் பலவும் தேவை. எல்லா நாட்டிலும் பழங்காலத்தில் அவ்வாறு கதைகள் இலக்கியமாக்கிப் போற்றப்பட்டு வந்தன.

ஆகவே, இலக்கியத்துள் செம்பாதி கதைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருத்தல் காணலாம்.

அந்தக் கதைகளைப் பாட்டு வடிவில் ஒருவர் பாட, அவரைச் சூழ்ந்திருந்து பலர் கேட்டு மகிழ்தல் உண்டு. பழங்காலத்தில் நாட்டுப் பாடல் வடிவாக இருந்த கதைகள் அவ்வாறு பயன்பட்டன என்பர். இன்றும் வில்லுப் பாட்டு முதலியன, அத்தகைய பயன் தருதல் உண்டு. அவ்வகைக் கதைகளில் பாட்டைக் கேட்டுக் கற்பனையால் நிகழ்ச்சிகளை உணர வேண்டும். ஆனால், கண்ணாலேயே கதை நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்புக்காக நாடகம் பயன்பட்டது. அந்தக் கதைகளையே சிலர் நாடகமாக நடிக்க, எதிரே அமர்ந்து அவற்றைப் பார்க்கும்போது, எளிதில் உணர்ந்து பயன்பெற முடிகிறது. கண் செவி இருபுலன்களாலும் கதைகளை உணர முடிகிறது. ஆகவே, காவிய வளர்ச்சியை அடுத்து நாடகக் கலை வளர்ச்சியும் ஏற்பட்டாயிற்று.

கதைகள் இவ்வாறு இருவகையில் பயனளித்ததோடு அல்லாமல், தனியே ஒருவர் ஏட்டுச் சுவடியைப் பிரித்துப் படித்துக் கதையை உணர்ந்து மகிழ்தலும் உண்டு.

இம்மூவகையிலும் சில இடர்ப்பாடுகள் இருந்தன. காவியம் படிப்பதுபோல் ஒருவர் படிக்கப் பலர் கேட்கும் நிலை எளிதில் அமைவதில்லை. படிப்பவர் ஒருவரும், கேட்பவர் பலரும் சேர்ந்து அமையும் நேரம் வரையில் காத்திருத்தல் வேண்டும். அடிக்கடி அவ்வாறு அமைதலும் அரிதே. நாடகம் நடத்துதலோ அதனினும் அருமைப்பாடு உடையது ஆகும். நாடக

அரங்கு, நடிகர், நடிப்புப் பயிற்சி, திரை முதலியன, நாடகம் காணும் மாந்தர், பெரும்பொருட் செலவு முதலியன, அதை அருமை உடையதாக ஆக்குகின்றன. மூன்றாவதாக உள்ள தனியே கதைநூல் படிக்கும் நிலையோ என்றால், ஏட்டுச் சுவடிகள் ஊர்க்கு ஒன்று இரண்டாக இருந்த நிலையில், விரும்பிய நேரத்தில் விரும்பும் ஒருவர்க்குக் கதைச்சுவடி எட்டுவது அரிதாகும். ஆகவே, பலரும் பயன்பெற முடியாத இடர்பாடு இருந்தது.

இந்த மூன்று வகை இடர்ப்பாடுகளையும் எளிதில் தீர்க்க உதவியது அச்சுப்பொறி. ஒரு கதைநூலையோ, நாடகத்தையோ, காவியத்தையோ ஆயிரக் கணக்கில் அச்சிட்டுப் பலர்க்கும் கிடைக்குமாறு செய்ய உதவியது அச்சுப்பொறி. ஆகவே, காவியத்தைக் கற்கவல்ல கல்வி உடையவர்கள், பிறரைக் கூட்டி இடர்ப்படாமல், தனியே இருந்து கற்றுப் பயன்பெற முடிந்தது. நாடகத்தை நடித்துக் காண்பதற்காக மேடையும் நடிகரும் திரை முதலியனவும் தேடி அல்லல்படாமல், நாடகநூலை ஒரு மூலையில் இருந்து படித்து மனக்கண்ணில் — மன - அரங்கில் — நாடகத்தைக் கண்டு மகிழ முடிந்தது. கதைநூலை ஒவ்வொருவரும் பெற்றுத் தனியே படித்துப் பயன்பெற முடிந்தது.

ஆனால், காவியத்தைக் கற்று மகிழும் அளவுக்குக் கல்வி பெற்றோர் மிகச் சிலரே; அதனால் அத்துறையில் அச்சுப்பொறியால் பெரும் பயன் விளையவில்லை. நாடகநூலைப் படித்தவுடன் மன-அரங்கில் நாடகத்தைக் காண்பதற்குப் பயிற்சியும் முயற்சியும் வேண்டும். அதற்கு இயைந்து முயல்வோர் சிலரே. அதனால் நடிக்கும் நாடகங்களோடு படிக்கும் நாடகங்களும் வளர்ந்தபோதிலும், பெரும்பாலோர் பயன்பெற முடியவில்லை. ஆனால், உரைநடையில் அமைந்த கதைநூல்களைத் தனியே படித்து எளிதில் பயன்பெற முடிந்தமையால், அச்சுப்பொறி இந்த ஒரு துறையில் மிகப் பெரிய மாறுதலை செய்துவிட்டது. காவியம் ஒன்று ஏற்படுவதற்கு ஏற்ப, நாடகம் பத்து ஏற்பட்டன என்றால், கதைகள் ஆயிரம் ஏற்பட்டுப் பரவின எனலாம்.

அச்சுப்பொறி பரவிய அதே காலத்தில் மற்ற யந்திரங்களும் ஒவ்வொன்றாக ஏற்பட்டு, மனித உழைப்பைக் குறைத்து ஓய்வைப் பெருக்கின. கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தப் புதுத் துறைகள் தேவையாக இருந்தன. அந்த நிலையில் செய்தித்தாள்கள், திங்களிதழ்கள் முதலியன வந்துவிட்டன. மக்கள் பலர்க்கும் கல்வி எட்டுவதாயிற்று. ஆகவே பெற்ற எழுத்தறிவையும் கிடைத்த ஓய்வையும் பலரும் எளிதில் பயன்படுத்துவதற்குக் காவியத்தைவிட, நாடகத்தைவிட, கதைநூல்களே பெரிதும் உதவியாக அமைந்தன.

தேவைக்கு ஏற்பவே ஆக்கம் பெருகும். இலக்கியத் துறையிலும் அது உண்மை ஆயிற்று. காவியத்தைவிட, நாடகத்தைவிட, கதைநூல்களைத் தேடும் ஆர்வம் பெருகியது. தேவையை உணர்ந்து, எழுதவல்லவர்கள், கதைநூல்களை எழுதிக் குவித்தனர். இன்றைய சிறந்த எழுத்தாளர் சிலர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிறந்திருந்தால், கதைகள் எழுதாமல் காவியங்கள் எழுதியிருப்பர். திருத்தக்க தேவரும் கம்பரும் அன்று பிறக்காமல் இன்று பிறந்திருந்தால், உரைநடையில் பல கதைகள் எழுதியிருப்பர். காலத்திற்கு ஏற்ப இலக்கியத்தின் வடிவம் மாறுதலால், அந்தத் தேவைக்கு ஏற்ப, புலவர்கள் புது நூல்கள் எழுதுவர். இது எல்லா மொழிகளிலும் இலக்கிய வளர்ச்சியை ஆராய்வோர் உடன்பட்ட உண்மையாகும்.

கதை தழுவிய இலக்கியம், கதை தழுவா இலக்கியம் என்ற பாகுபாடு முன்னர்க் கண்டோம். கதை தழுவா இலக்கியத்தில், தன்னுணர்ச்சிப் பாட்டு, கட்டுரை முதலியன வளர்ந்ததுபோல், கதை தழுவிய இலக்கியத்துள் காவியம் நாடகம் நாவல் சிறுகதை ஆகியவை வளர்ந்தன. ஆயினும் காவியமும் நாடகமும் வளர்வதை விடப் பன்மடங்கு வேகமாக நாவலே வளர்ந்து வருகின்றது. இது ஒரு நாட்டுக்கோ ஒரு மொழிக்கோ உரிய சிறப்பியல்பாக இராமல், எல்லா நாட்டிலும் எல்லா மொழியிலும் உள்ள பொதுவியல்பாக உள்ளது.

காவியமும் நாடகமும் படைப்பதற்கும் அருமைப்பாடு உள்ளவை; பயன்படுத்துவதற்கும் அருமைப்பாடு உள்ளவை. கதைநூல் படிப்பதற்கும் எளியது; பயன்படுத்துவதற்கும் எளியது. கதைநூல்கள் இக்காலத்தில் வேகமாக வளர்ந்துவரக் காரணம் இந்த எளிமையிலேயே உள்ளது. வாய்ப்பு இல்லாமையால் நிறைந்த கல்வி பெருதவர்களும், ஓய்வு இல்லாமையால் போதிய நேரம் கிடைக்காதவர்களும், பெருமுயற்சி இன்றி எளிதில் படித்து முடிக்கக்கூடிய வகையில் அமைவது கதைநூல். பல வேலைகளுக்கு இடையே, பல கவலைகளுக்கு இடையே, உழைத்த உழைப்பின் களைப்பையும் நேர்ந்த இடர்களின் கவலையையும் மறந்து எளிதில் கற்பனை யின்பத்தை—கலையின்பத்தைப் பெறுவதற்கு உதவியாக இருப்பது கதைநூலே.

இந்தக் கதைநூலின் வளர்ச்சியைக் கண்டு, தொடக்கத்தில் வருந்தியவர்கள் உண்டு; காவியம் எழுதுவோரும் நாடகம் எழுதுவோரும் அவற்றைக் கைவிட்டுக் கதைநூல் எழுதத் தொடங்கின், இலக்கியத்தின் எதிர்காலம் என்ன ஆகுமோ என ஏங்கியவர்கள் உண்டு. புகைவண்டி செல்வாக்குப் பெறுவதைக் கண்டு, மாட்டு வண்டிகளும் குதிரை வண்டிகளும் என்ன ஆகுமோ என்று கவலைப்பட்ட முன்னேரின் மனநிலையே அவர்களுக்கு அமைந்தது. காலப்போக்கில் வளரும் வளர்ச்சியைத் தடுக்க எண்ணுவதால் பயனில்லை; மாறுதல் இல்லையேல் முன்னேற்றமில்லை. ஆகவே மாறுதலைத் தடுக்க முயல்வோர் தோல்வியே காண்பர்; காலச்சக்கரம் வலிமையானது என்று உணர்ந்து அடங்குவர்.

இன்றைய நிலை என்ன? இலக்கிய ஆராய்ச்சியாளர் முன்வந்து நடுநிலையோடும் பொறுமையோடும் ஆய்ந்து உண்மையை விளக்குகின்றனர். நல்ல நாவல் என்பது இக்காலத்தில் உரைநடையில் அமையும் காவியமே அன்றி வேறன்று என்கின்றனர். ஆகவே காவியத்தின் இடத்தையே நாவல் பெறுவதாயிற்று. நாடகம் நடிக்கவேண்டும் என்று விரும்புவோர், ஏற்ற நாவலையே தேர்ந்தெடுத்து உரையாடல் அமைத்து நடிக்கின்றனர். ஆகவே, நாடகத்தின் இடத்தையும் நாவல் பெறுவதாயிற்று. (திரைப்படங்கள் பல நாவல்கள் கொண்டே அமைகின்றன என்பதும் இங்குக் கருதத்தக்கதாகும்). நாவல் என்பது சட்டைப்பை நாடகம் (A novel is a pocket - theatre) என்று ஓர் ஆராய்ச்சியாளர் கூறும் கூற்றிலும் இவ்வுண்மை புலனுகின்றது. நாவல் கல்விக்கு உரியதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பல்கலைக் கழகங்களில் பாடநூலாக அமைக்கப்படுகின்றது. ஆராய்ச்சிக்குரிய பொருளாகவும் ஏற்கப்பட்டுப் பல வகையாலும் ஆராய்ந்து ஆய்வு நூல்கள் எழுதப்படும் நிலைமையும் அடைந்துள்ளது.

ஆயினும் ஒரு குறை உண்டு; விழிப்பாக இருந்து காக்கத் தக்கது ஒன்று உண்டு. அது என்ன? ஓரளவு பயிற்சியும் புலமையும் உடையவரே காவியம் எழுத முடியும் இலக்கண வரையறையும் செய்யுளமைப்பும் உடையது ஆகையால், காவியத்தை ஒருசிலரே எழுத முன்வர முடியும். அவர்கள் வழுவுவதற்கு இடமில்லாத வகையில் முன்னரே பெற்றுள்ள பயிற்சியும் புலமையும் அவர்களைக் காக்க வல்லதாகும். நாடகம் எழுதவேண்டுமாயின், அவர்களுக்கும் ஓரளவு பயிற்சி வேண்டும்; நாடகமேடையில் நடித்தோ, நடிக்கக் கற்பித்தோ திறமைவளர்ந்திருக்க வேண்டும்; நாடகம் காண்போரின் மனநிலையையும் சுவை வகையையும் நுண்ணிதின் உணர்ந்து அவற்றிற்கு ஏற்ப எழுதும் ஆற்றல் வேண்டும். இவற்றை உடையவர் மிகச் சிலரே; அவர்களும் பலவகையாலும் கட்டுப்படுதலால், எளிதில் வழுவுவதற்கு இடமில்லை. ஆனுல், நாவல் எழுதுவோர்க்கு யாதொரு கட்டுப்பாடும் முன்வந்து நிற்பதில்லை. எவ்வகைப் பயிற்சியும் கலைத்திறனும் இல்லாதவரும் கதை எழுத முன்வர முடியும். படிப்பதற்கு எளிதாக உள்ளது போலவே, படைப்பதற்கும் கட்டுப்பாடு அற்றதாய் எளியதாய் இருத்தலால், எவரும் முன்வந்து படைக்கக்கூடியதாக உள்ளது. ஆதலால் வழுவுக்கு இடம் உள்ளது; தவருன வகையில் கதைகள் எழுதவும் பரப்பவும் இடம் உள்ளது.

அது பற்றித் தயங்க வேண்டியதும் இல்லை; அஞ்ச வேண்டியதும் இல்லை.

வருவன வருக என்று வாய்ப்புத் தருதல் வேண்டும்; வந்தபின் தக்கன தகாதன என்று பகுத்துணர்ந்து, தகுதியுடையவற்றை மட்டும் போற்றி மற்றவற்றை விலக்கும் திறன்வேண்டும். இந்தத் திறன் ஒருசிலர்க்கு மட்டும் இருந்தால் போதாது. கதைநூல்களைப் படிக்கவல்ல எல்லார்க்கும் இந்தத் திறன் இருக்கவேண்டும். அதாவது, பொதுவாக எல்லார்க்கும் இந்தச் சீர்தூக்கும் திறன் வேண்டும். மக்கள் எல்லார்க்கும் கல்விநிலை உயர்ந்தால்தான், இந்நிலையை எதிர்பார்த்தல் இயலும். நெய்யை உண்போர் அனைவரும் நல்லது தீயது என்று சுவையையும் மணத்தையும் ஆராய்ந்து நல்லது கொண்டு அல்லது தள்ள வல்லவராக உள்ளனர். அதனால் நெய் விற்பனைத் துறையில் தீமை குறைந்து வருகின்றது அன்றோ? அதுபோலவே, கதை படிக்க விரும்புவோர் அனைவரும் சீர்தூக்கும் திறன் பெற்றவர்களாக ஆகிவிட்டால், இந்தக் குறைதீரும். நல்ல சரக்கு மட்டுமே விலையாகும் என்று கதைத் துறையில் விளங்கிவிட்டால், தகாத கதைகளை எழுத எவரும் முன்வர மாட்டார்கள். ஆகவே, இலக்கிய ஆய்வுத் திறன் முழுதும் வளராவிட்டாலும், ஓரளவாவது கதை பற்றிய சுவைத் திறன் பொதுக் கல்வியில் இடம்பெற்று, கற்றவர் எல்லாரும் விழிப்புள்ளவர்களாகும் நிலைமை ஏற்படல் வேண்டும். அதுவே, காவியத்தின் இடத்தையும் நாடகத்தின் இடத்தையும் பெற்றுவிட்ட நாவலுக்கு இலக்கியத்தில் நல்லதோர் இடம் தரும் வழியாகும்.

—]☀[—

எமது இலக்கண நூல்கள்

தமிழ் மொழியைச் சுலபமாக இலக்கணப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் யாவர்க்கும் துணைபுரியும் சுவையான நூல்கள். "கலாநிலையம்" இதழில் காலஞ்சென்ற மேதை சேஷாசலம் ஐயருடன் இணையாசிரியராக இருந்த அறிஞர் திரு. கே. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் எழுதியவை :

இலக்கண விளக்கம்:

1. எழுத்தியல் ரூ. 2 00
2. சொல்லியல் ரூ. 2 50
3. புணரியல் ரூ. 3 50
4. பொருளியல் ரூ. 4 50
5. யாப்பியல் ரூ 6 50
6. அணியியல் ரூ. 6 00

[இவ் ஆறு நூல்களும் சேர்ந்த தொகுதி விலை ரூ. 25 00]

த. பெ. எண் : 423 போன் : 84989

ஸ்டார் பிரசுரம்

66, பெரிய தெரு,

திருவல்லிக்கேணி : : சென்னை-5.

மலிவு விலையில்

நூலகங்களுக்கும்,

பள்ளிகளுக்கும்

புத்தகங்கள்

வெளியிட்டு

விற்பனை செய்பவர்கள்:

☀

கலைமகள் புக்ஸ்

125, பிராட்வே, : : சென்னை-1.

எழுத்தாளன் பரம்பரை

[சிவசக்தி]

க. அன்பினை, அறிவினை, ஆண்மையை—அருள்,
அகிம்சை, அடக்கம் இவற்றினை—ஊட்டி
இன்பத் தெள்ளமுதத்தை மக்களின்—மலர்
இதயத்தில் வாரி இறைப்பவன்!

உ. காவியம், நாடகம், கட்டுரை—யாவும்
கலையெழில் ததும்பு முறையிலே—இயற்றி
ஆவியினும் மேலாம் ஒழுக்கத்தை—அதில்
அறிவுறுத்தி வழி காட்டுவோன்!

ங. மடமையை எட்டி உதைப்பவன்;—உயர்
மாதர் மகிமை வளர்ப்பவன்;—அவர்
உடமை, உரிமைகள் பேணுவான்;—அதை
ஊருக்கு உரைத்து உழைப்பவன்!

ச. வேகம் பொருந்திய நடையிலே—நல்ல
வீரவுரை செறி காந்தத்தால்,—ஒரு
பாகம் என்றின்றி முழுமையும்—மனம்
பக்குவப் படுத்தி ஈர்ப்பவன்!

ரு. அஞ்சாமை என்னும் கவசத்தைத்—தன்
ஆகத்தில், உள்ளத்தில், பேனாவில்—ஏற்றிப்
பஞ்சணைச் செல்வர், புல்லுருவிகள்—பொய்ப்
பகட்டுகளைப் பறை சாற்றுவோன்!

சா. ஏழைகள், தாழ்த்தப் பட்டோர்களும்—குழவி,
ஏந்திழையார் என்னும் இவர்கட்குக்—கெட்ட
கோழைகள் தீங்குகள் இழைத்திடின்—உள்ளம்
குமுறிக் கொதித்துத் துடிப்பவன்!

எ. அடிமைத் தனம் அசைக்கலாக்—கொடிய
ஆலகால அரவின் பிடியிலே—சிக்கி
மடிவுறும் மக்களை விடுவித்து—அமுத
மாட்சி சுதந்திரம் வழங்குவோன்!

அ. அனைவரும் வாழவே வாழுவோன்;—“ஊண்,
ஆடை, இல்லம் இவையாவர்க்கும்—பொது;
அனைவரும் அன்பினால் வாழ்க!” என—உலகை
அமரர் உலகமாய் ஆக்குவோன்!

கூ. தாயினைப் போற்றுவோன்; தாயினும்—மிக்க
தாய்மொழி போற்றுவோன்;—அதனினும்
ஆயவணக்கத் திற்குரிய தன்—உயிர்
அன்னை பூமியினை வணங்குவோன்!

க0. இலட்சியம், இலட்சியம், இலட்சியம்!—என்று
எப்பொழுதும் ஓர் இணையிலாப்—பெரும்
இலட்சியப் பாதையைக் காட்டிடும்—அவன்
எழுத்தையும் உலகையும் ஆளுவோன்!

இறை மாட்சி

[டாக்டர் அ. சிதம்பரநாதன்]

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப் படும்" என்றார் திருவள்ளுவர். அரசன் ஆண்டாலும், அரசி ஆண்டாலும், இருபேரும் சேர்ந்து ஆண்டாலும் அவ்வாட்சி அரசாட்சி எனவே படும். அவரிடம் "இறைமை" உண்டு. அரசன் ஒருவன் இல்லாமல் குடிமக்களுள் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி நடத்தினால் அவ்வாட்சியை அரசன் ஆட்சி என்று கூறாமல் குடியாட்சி என்று கூறுவது மரபானாலும், முடியாட்சி இல்லாத நாட்டில்கூட அரசு நிர்வாகச் செயல்களை அரசாட்சி என்று கூறுவதே மரபாகிவிட்டது. அரசு என்ற சொல் அரசனை அல்லது அரசியை இவ்விடத்திற் குறியாமல் தலைவர் ஒருவரையே குறிக்கத் தலைப்படுவதாயிற்று. எனவே, தலைமை என்னும் பொருளுடைய இறைமை என்னும் சொல் அரசாட்சியையும், இறை என்னும் சொல் மன்னனை அல்லது தலைவனையும் குறிப்பன ஆகிவிட்டன. இறைவனின் மாட்சி அல்லது இறைவியின் மாட்சி "இறைமாட்சி" எனப்படும்.

பிறப்புரிமை காரணமாக அல்லாமல், மக்களால் நேர்முகமாகவோ, வளைமுகமாகவோஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரது ஆட்சி அரசாட்சி எனவேபடும். ஆட்சி மேற்கொள்வதென்பது அரசனுக்காயினும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனுக்காயினும் ஆளவேண்டுமென்ற ஆசையால் இருக்கக்கூடாதென்பது விரும்பத்தக்கது. பிறரைத் தம் அடிமைகளாக வைத்திருப்பதற்காக ஒருவர் ஆட்சி தமக்குக் கிடைத்ததாகக் கருதுதல் கூடாது. மக்கள் நலத்திற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்குப் பதிலாகச் சிலர் ஆட்சியை நடத்துகிறார்கள் என்பது இக்கால நம் நாட்டு நடைமுறைச் செய்தி.

அரசாட்சி செய்வோருக்கு அஞ்சாமையும், ஈகையும், அறிவும், ஊக்கமும் குறையாமலிருக்க வேண்டுமென்றார் திருவள்ளுவர். கல்வி யுடையவராயும், துணிவுடையவராயும், விழிப்புடையவராயும் அரசாள்பவர் இருக்க வேண்டுமென்றார். மக்கள் தத்தங் குறைகளை வந்து தெரிவித்துக் கொள்வதற்குரிய வாய்ப்புக்களையும், வசதிகளையும் ஆள்வோர் தருதல் வேண்டுமென்றும், வெடுவெடுத்த சொல்லும், கடுகடுத்த முகமும் உடையராக ஆள்வோர் இருத்தல் ஆகாது என்றும் அவர் விரும்பினார். வறிய மக்களுக்கு ஈத்தளிக்க வல்லவர்களாகவும், இன்சொல் இயம்புகிறவர்களாகவும் அரசாள்வோர் இருத்தல் வேண்டுமென்றார். மக்களிடமிருந்து வரிவசூல் செய்யும் பொழுது, அவர்கள் எந்த அளவிற்கு வரிகளைச் சுமையாகக் கருதாமல் கொடுத்தல் இயலும் என்பதைக் கண்டறிந்து அரசாள்வோர் வரிவிதிக்க வேண்டுமென்பது திருவள்ளுவர் கருத்து. வருமானத்தில் ஒரு பங்கு அரசாள்வோர் கொள்வதற்கு மாறாக, வருமானம் முழுதையும் பறித்துக் கொள்ள முற்படுவது, யானை நெல்லைக் கவளங் கவளமாகக் கொள்ளுவதற்கு மாறாக வயலிற் புகுந்து வயல் முழுவதையும் மிதித்து அழித்து விடுதலை ஒக்கும் என்று கூறிய தமிழ்ப் புலவரும் உண்டு. மக்கள் அல்லற்பட்டு, அவதியுற்று வரிப்பளு தாங்க முடியாமல் கண்ணீர்விட்டு அழக்கூடிய அளவிற்குக் கடுமை மேற்கொள்ளப்பட்டால், அதுவே ஆட்சியைச் சீர்குலைப்பதற்குரிய படையாகிவிடும் என்றார் திருவள்ளுவர். அரசாள்வோர் நேர்முகமாக வரிவிதித்து வசூலிப்பதற்கு மாறாக, மக்கள்மீது மறைமுக வரிகள் சுமத்தினால் பேரிடர் உண்டாகும் என்றார். ஆட்சிப் பீடத்திலுள்ளவர்கள் நன்கொடைகள் என்ற பெயரில் மக்களிடமிருந்து பணம் பறித்தலை அவர் விரும்பவில்லை. கொடாதுவிட்டால் என்ன ஆகுமோ என

அஞ்சிக் குடிமக்கள் நன்கொடை தர ஒப்புக் கொள்வது பொருந்தாது என்பது அவர் கருத்து. இதனை, அச்சுறுத்தி வழிமருங்கே பணம் பறிப்பது போன்றது என்றார். கையில் வேலினையோ, வாளினையோ வைத்துக்கொண்டு "இடு" என்று கெஞ்சுவதுபோல் ஒருவர் கையை நீட்டினாலும், "கொடாதுபோனால் அழிவாய்; ஆதலினால் கொடுத்துத் தப்பிப் போ" என்று கூறுவதற்கொப்பாகும் ஆட்சிப் பீடத்திலுள்ளவர்கள் இரப்பது எனக் கூறினார். முறையாகப் பெறாது, வற்புறுத்திப் பெறுவோரின் ஆட்சியின்கீழ் மக்கள் பொருட் செல்வத்தைப் பெற்றிருப்பதுகூடக் கொடியது என்றார். கையிற் காசு இல்லாதார் வருந்துவதைக் காட்டிலும், பொன்னும் மணியுமுடையவர்கள் வருந்தவேண்டிய நிலை ஏற்பட்டால், அஃது "இன்மையின் இன்னாது உடைமை" என்ற திருக்குறட் பகுதிக்கு இலக்கியமாகும்.

அரசாள்வோர் நல்ல திட்டங்களிட்டுப் பொருளைப் பெருக்க வேண்டிய அளவிற்குப் பெருக்கிப் பெருச்சாளிகளுக்கு இடந்தராமல், சேமித்துப் பாதுகாக்கும் பொருள்களிலிருந்து இன்னதற்கிவ்வளவு என்று பங்கிட்டுத் தப்பின்றிச் செலவுசெய்ய ஏற்பாடுகள் வகுக்க வேண்டும் என விரும்பிய திருவள்ளுவர்,

> "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு"

எனக் கூறினார்.

அரசாட்சி செய்வோர் தங்கீழ் வேலை பார்க்கும் பெரிய அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது எச்சரிக்கையாகவே இருக்கவேண்டுமென்று திருவள்ளுவர் வற்புறுத்தியுள்ளார். ஒரு வேலைக்கு ஒருவர் மிக்க தகுதி வாய்ந்தவர் என்ற காரணத்தினால் அல்லாமல், அவர் மெத்தவும் ஒருவருக்கு வேண்டியவர் என்ற காரணத்தால் தேர்ந்தெடுக்கப்படின், அது காரணமாக ஏற்படும் விளைவுகள் பொல்லாதனவாகும் எனக் கருதிய திருவள்ளுவர்,

> "காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
> பேதமை எல்லாந் தரும்"

என்றார். பெரிய அலுவல் - மேலாளராக உள்ளவர்கள் கூறும் யோசனைகளைக் கேட்டு ஆளவேண்டிய பொறுப்பு இக்கால ஆள்வோருக்கு உண்டு. அவர்கள் இடித்துச் சுட்டிக்காட்டினால், அதற்காக அவர்களை வெகுளாது அவர்கள் கூறுவனவற்றை ஆய்ந்து முடிவுசெய்து அவர்களிடம் தோழமை காட்டுதல் வேண்டும். திருவள்ளுவர் இதனை, "இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே கெடுக்குந் தகைமையவர்" என்ற இடத்தில் அழகுபடக் கூறினார். அரசாட்சியில் இருப்போர் தயைதாட்சணியம் இல்லாமல் எல்லோர்க்கும் ஒத்தவாறு நியாயம் வழங்கவேண்டுமென்பது திருவள்ளுவரால் எதிர்பார்க்கப் படுவது. யார்மாட்டுங் கண்ணோடாது இறைமை செலுத்தப்பட வேண்டுமென்று அவர் கூறியவிடத்தில், தமராயின் நன்மை செய்து, பிறராயின் கோல்கோடுதல் ஒவ்வாது என்றார் என்பது அறியப்படும். கண்ணோட்டம் என்று திருவள்ளுவராற் கூறப்படுவதுதான் இந்தக் காலத்தில் தாட்சணியம் எனப் பேசப்படுகிறது. கண்ணோட்டம் கண்ணிற்கு அழகு என்றும், கண்ணோட்டம் இல்லாத கண்கள் புண்கள் என்றும் திருவள்ளுவர் சொல்லினாராயினும், அக்கண்ணோட்டம் அளவோடிருக்க வேண்டுமென்பதுதான் அவர் கருதியது. கண்ணோட்டம் வேண்டும் என வற்புறுத்திப் பத்துப் பாக்கள் இயற்றிய திருவள்ளுவர், யார்மாட்டும் கண்ணோடாது இறைமை புரிய வேண்டுமெனச் செங்கோன்மை என்னும் அதிகாரத்திற் கூறியிருப்பது முரண்போலத் தோன்றும். ஆயினும் இது முரணாகாது. ஒருவர் செய்யுங் கண்ணோட்டச் செயலினால், பிறருக்குத் தீமை ஏற்படாதவாறு பாதுகாத்துக்கொள்ளக் கூடுமேயானால், அக்கண்ணோட்டமும் நல்லது என்பதுதான் திருவள்ளுவரின் முடிந்த முடிபு. காரியம் கெட்டுப்போகாமல், தயவோ தாட்சணியமோ காட்ட நேர்ந்தால், அதற்காக ஒருவர் வருந்த வேண்டியதில்லை என்பதே கருத்து.

அரசாள்வோர் எதிர்க்கட்சியினர் இடித்துக் கூறும் உரைகளைக் கேட்டுப் பயன்பெறுதற்குச் சித்தமாக இருக்க வேண்டுமெனத் திருவள்ளுவர் எதிர்பார்க்கின்றார். காதுகள் கைத்துப்போகும்படி கடிய சொற்களை எதிர்க்கட்சினர் கூறினாலும், அச்சொற்களினூடே நல்ல கருத்து

இருக்குமாயின் அக்கடுஞ் சொற்களையும் தாங்கிக்கொள்ளும் பண்பு அரசாள்வோர்க்கு இருக்க வேண்டுமென்று திருவள்ளுவர் விரும்பினார் என்பது,

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு" [வேந்தன்

என்ற குறளினால் ஊகிக்கப்படும். தம் கட்சியிலுள்ள அனைவரையுங் கலந்து கொண்டு செயல்களாற்ற வேண்டுமென்று ஆள்வோரைத் திருவள்ளுவர் எதிர்பார்த்தார் என்பது,

"இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்
சீறிற் சிறுகுந் திரு" [தாற்றிச்

என்ற திருக்குறளினால் தெளிவாகும்.

அரசாள்வோர் பிழைசெய்பவர்களைத் தண்டித்தல் வேண்டுமென்றால், அவரவர் செய்த குற்றத்திற்கு ஏற்பத் தண்டனை எது என்று சட்டத்தோடு நாடி அறிந்து, மீண்டும் அத்தகைய குற்றத்தை அவரவர் செய்யலாகாது என்று தடுக்கும் வகையில் மாத்திரம் தண்டனை கொடுக்கப்பட வேண்டுமெனத் திருவள்ளுவர் விரும்பினார். இது,

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து"

என்ற குறளினால் விளங்கும். குற்றம் செய்தோரைத் திருத்தி மீண்டும் சமுதாயத்தில் தக்க உறுப்பினர்களாக வாழ வகைசெய்வதுதான் அரசாட்சியின் நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால் செய்த குற்றம் கொலைக்குற்றம் போன்று கொடியதாக இருப்பின், அக்குற்றஞ் செய்வோரைத் தூக்கிலிட்டுத் தண்டித்தல் அரசாள்வோர் கடமை யென்பதை வள்ளுவர் வகுத்துள்ளார். "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்" என்ற குறட்பாவால் இது விளங்கும். செய்த குற்றம் சிறிதாகவும், கொடுக்கப்படும் தண்டனை பெரிதாகவும் இருத்தல் கூடாது. இதனைத்தான் திருவள்ளுவர் "கையிகந்த தண்டம்" என்றார். குற்றம் செய்ய விழையும் மக்களைத் தடுப்பதற்காகக் கொடுந்தண்டனைகள் சட்டத்திற் பெரியனவாக அமைக்கப்பட்டிருக்கலாம். ஒரு குற்றத்திற்கு ஏழாண்டுகள் கடுங்காவல் தரலாம் என்றாலும், அது சில வேளைகளில் உச்சவரம்பாகவே அமைக்கப்பட்டிருக்கும். உயர்ந்த பேரெல்லையாக அமைக்கப்பட்டிருக்கிற தண்டனையை முழுதும் நடுவர்கள் வழங்கிவிட வேண்டுமென்பது கருத்தன்று. கடுந்தண்டனைகளைச் சட்டமாக விதித்துள்ள ஆட்சியில், மக்களை நல்வழியில் திருப்புதற்கு வேண்டிய வகையில் தண்டனையின் அளவு பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டுமெனத் திருவள்ளுவர் அக்காலத்திலேயே எதிர்பார்த்தார் என்பது "கடிதோச்சி மெல்ல எறிக" என அவர் கூறியமையால் நன்கு விளங்கும்.

எனவே, அரசாட்சி செய்வோரின் மாட்சி எவ்வாறு அமையவேண்டு மென்பது திருக்குறள் துணையால் இங்கு ஒருவாறு எடுத்து விளக்கப்பட்டிருக்கிறது.

பதிப்புத் தொழில்

[மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை]

தமிழில் உள்ள இலக்கிய - இலக்கணங்கள் அனைத்தும் பண்டைக் காலத்தில் பனையோலையில் எழுத்தாணியால் எழுதப்பட்டன. நூலாசிரியர் ஒருவர் எழுதிய ஏட்டைப் படிக்க விழைந்த பிறர், அதை அந்நூலாசிரியரிடம் வேண்டிப் பெற்று, ஏடெழுதுவாரிடம் கொடுத்துப் படி எழுதிக்கொண்டு, பழைய ஏட்டை நூலாசிரியரிடம் சேர்த்துவிடுவர். இவ்வாறு படியெடுக்கப்பட்ட ஏட்டைப் பார்த்து மற்றும் பலர் படி செய்துகொள்வர். ஏடெழுதுபவர் படி செய்யும்பொழுது பற்பல பிழைகள் ஏட்டில் ஏறிவிடுவது தடுக்க இயலாத செயலாயிற்று. அச்சிட்ட நூலை அச்சுக் கோப்பவர் அச்சுக்கோக்கும்போது பக்கந் தோறும் பல தவறான எழுத்துகளைக் கோத்துவிடுவதும் இந்நாளிற் காண்கிறோமன்றோ? ஏடு படி செய்வார் செய்யும் பிழைகளைக் குறிப்பதே, 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்,' என்னும் பழமொழி.

ஏட்டின் வரலாறு இவ்வாறமைவதால், ஏட்டையே நம்பி நூல்களைப் பதிக்க வேண்டுவதால் ஏற்படும் இன்னலை அறியலாம். பதிப்பாசிரியர் பன்னூற் பயிற்சி உடையவராகவும், மொழித்திறம் வல்லாராகவும் இருப்பின், பல பிழைகள் அவருக்குப் புலனாதல் ஒருதலை. ஆயினும், அவரும் எல்லாப் பிழைகளையும் ஆய்ந்து அறிந்து களைந்து பதிப்பித்தல் அரிது.

'அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு'

என்பது பொய்யாமொழி அன்றோ?

எனவே, ஆன்றமைந்த அறிஞருள்ளும் ஒருவர்க்குப் புலனாகாத பிழை மற்றொருவர்க்குப் புலனாதல் இயலும். அங்ஙனம் புலனாகுங்கால், புலனான பிழைகளைத் தக்க ஆதாரங்களைக் கொண்டு நிறுவி, அறிஞர்கள் அவ்வப்போது அவற்றை வெளியிடுவது வாயிலாக நூற் பதிப்புத் தொண்டில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்குப் பெரிதும் உதவி செய்யலாம். நூல்களை ஆராயும்போது காய்தலும் உவத்தலும் அகற்றி ஆராயவேண்டுவதும் இன்றியமையாதது. அறிஞர் ஒருவர் தம் ஆராய்ச்சியால் தாம் உண்மையென்று கண்டதை எடுத்துக் காட்டுவாராயின், அவ்வுண்மையை மற்றவர் நன்கு சிந்தித்து, அது பொருந்துவது அன்றெனத் தோன்றின், தம் கருத்துக்கு அரண்செய்யும் தக்க ஆதாரங்களை எடுத்துக்காட்டித் தெருட்டுதல் இன்றியமையாதது.

ஒரு பிழை நூலிற் புகுந்து நெடுங்காலம் ஆட்சிசெலுத்தி வருதலும் உண்டு. பழைமை கருதி அப்பிழையைப் பின்னும் ஆட்சி செலுத்தவிடுவது இலக்கண வரம்புடைய ஒரு மொழியின் கட்டுக்கோப்பின் கடைக்கால் அல்லது அடிப்படையை நாளடைவில் ஆட்டங்காணச் செய்வதாகும்.

ஒருவர் இயற்றிய நூலைப் பதிப்பிக்க முயல்பவர், அந்நூலாசிரியர்க்கு ஓதலான நூல்களாயிருந்தவற்றை அவர் எடுத்தாளும் சொற்றொடர்களாலும் உவமைகளாலும் கருத்துகளாலும் ஆய்ந்து உணர்தல் இன்றியமையாதது. 'முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும் பொன்னேபோலப் போற்றுவது' அறிஞர் வழக்காதலின், அவர் ஓதி உணர்ந்த நூல்களில் உள்ள சொற்களை அவர் பொன்னே போலப் போற்றி எடுத்தாள்வராதலின், ஏடெழுதுபவரால் நூலிற் பிழைபட எழுதப்பட்ட சொற்களின் உண்மை வடிவைக் கண்டறிய இம்முறை பெரிதும் பயன்படும்.

ஏட்டுச் சுவடியைப் படித்தறியும் பழக்கம் இந்நாளில் அடியோடு மறைந்து வருகிறது எனக் கூறலாம். பழைய நூல்களைப் பதிப்பிக்க விழைபவர் ஏடு படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுவதுடன், ஏட்டெழுத்தில் ஒன்றோடொன்று மாறும் எழுத்துகளையும் கூர்ந்தறிதல் வேண்டும்.

யகரமும் பகரமும் மாறுடுவது புலனுகாமை யால் 'யவமத்திமம்' என்னும் தோரை யிடைச் செய்யுளின் பெயர் யாப்பருங்கல விருத்தியில் 'பவமத்திமம்' என்று பதிப்பிக் கப்பட்டுப் பல்கலைக் கழகத் தமிழகராதி யிலும் இடம் பெற்றுவிட்டதைக் காண் கிரும்.

பதிப்பாசிரியர்களுக்கு இலக்கண நூல் களில் ஆழ்ந்த பயிற்சியமைய வேண்டுவது இன்றியமையாதது. தமிழ் மொழி இலக் கண வரம்புடைய மொழியாதலின், அவ் விலக்கண நுட்பங்களை அறிந்தார்க்கன்றிப் பிறர்க்குச் செய்யுள்களில் அமையும் விகா ரங்களும், சந்திகளும், எழுத்து அசை சீர் தளை அடி தொடை உள்ளிட்டவை செய்யு ளுக்கு உறுப்பாகும் நுட்பமும் விளங்கத் தோன்றுவதில்லை. இவற்றை யறியாதார் செய்யுளைப் படித்தறியும் வகையறியாமை யால் கெடுத்த பாட்டுகளும் உண்டு. இதனுலேயே, 'படித்தவன் பாட்டைக் கெடுத்தான்,' என்னும் பழமொழி வழங் குவதாயிற்று.

இக்கருத்துகளை விளக்கச் சில எடுத் துக் காட்டுகளை அறிவது பொருத்தமாம் எனக் கருதுகிறேன்.

'உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க
[வேண்டா;
உடன்பிறந்தே கொல்லும் வியாதி;—
[உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்;
ஆமருந்து போல்வாரும் உண்டு'

என்பது மூதுரையில் 20-ஆம் செய்யுள். இவ்வெண்பா இரு விகற்ப நேரிசை வெண்பா. இதில் முன்னிரண்டடிகளும், இரண்டாமடியில் உள்ள தனிச்சொல்லும் ஒரெதுகையும், பின்னிரண்டடிகளும் ஒரெ துகையும் பெற்றன. முன்னிரண்டடி களும் குறில் (உ) மோனையும், பின்னிரண் டடிகளும் நெடில் (மா, ஆ) மோனையும் பெற்றன. 'அம்மருந்து' எனற்பாலது தூக்கிற் சுட்டு நீண்டு, 'ஆமருந்து' என நின்றது. 'அவ்வயின்'—'ஆவயின்' என வும், 'அவ்விரண்டு'—'ஆயிரண்டு' என வும், 'அவ்விடை'—'ஆயிடை' எனவும் பாட்டில் சுட்டு நீண்டமைக்கு எடுத்துக் காட்டுகளாம். இதனையறியாத ஏடெழுதி னூர் எவரோ 'அம்மருந்து' எனத் திருத்தி எழுதினுர் போலும்!

'கல்லாத மாந்தர்க்குக் கற்றறிந்தார்
[சொற்கூற்றம்;
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்;—மெல்லிய
நெல்லுக்குத் தானீன்ற காய்கூற்றம்;
[கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்'

என்பது மற்ருெரு பாடல். இது ஒரு விகற்பத்தால் வந்த நேரிசை வெண்பா. இப்பாட்டின் மூன்றும் அடியின் முதற்சீர் 'நெல்லுக்கு' என்பது 'வாழைக்கு' எனத் திருத்தப்பட்டுள்ளது. 'நெல்' லுக்குக் 'காய்' என்னும் சொல் பொருந்தாதென்று கருதியவர் அப்பாடத்தை மாற்றியிருக்கலா மெனத் தோற்றுகிறது.

'காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே'

என்பது புறம். 184-ஆம் பாட்டின் முதலடி.

'நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்
கொண்ட கருவளிக்கும் கொள்கைபோல்'

என்னும் நல்வழிப் பாட்டுள் 'கதலி' என் பது வாழையைக் குறிப்பதால், மூதுரை யிலும் 'வாழைக்கு' என இருப்பதே பொருத்தம் எனத் திருத்தியவர் கருதி யிருக்கலாம். இப்பாட்டில் உள்ள 'வேய்' என்னும் சொல் 'வேய்நெல்' என்னும் நெல்வகையைக் குறிப்பது இங்குக் கருதத் தக்கது. திருவிளையாடற் புராணத்தில் திருநெல்வேலி, 'வேய்வனம்' என வழங் கப்படுதலும், கல்வெட்டில் (T. A. S. III, 32) குடிகள் செலுத்தும் நெல்வரி 'வேய் நெல்லு' என வழங்கப்படுதலும் 'வேய்' என்பது நெல்லின் வகையைக் குறிப்பதை உணர்த்தும்.

'சொல்அருந் சூல்,பசும்
பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து
ஈன்று மேல் அலார்
செல்வமே போல்தலை
நிறுவித் தேர்ந்த நூற்
கல்விசேர் மாந்தரின்
இறைஞ்சிக் காய்த்தவே'

என்பது சீவகசிந்தாமணி, நாமகள் இலம் பகம், 24-ஆம் செய்யுள். 'நெல்லானவை, கருத்தங்கி ஈன்று, குடிப்பிறவாதார் செல் வமே போல் தலையை நேரே நிறுத்தி, கல்விசேர் மாந்தரைப்போல மிகவும் வளைந்து விளைந்தன என்க' என்பது நச்சினூர்க்கினியர் உரை. இதிற் சொல் என்பது நெல்லைக் குறிக்கும். இச்செய்யு

ளில் உள்ள 'ஈன்று, காய்த்த' என்னும் சொற்கள், 'நெல்லுக்குத் தான் ஈன்ற காய்கூற்றம்' என்னும் மூதுரைப் பாட்டடியில் பெயரெச்சமாகவும் பெயராகவும் நின்று உண்மைப் பொருள் உணர்த்துவதை அறியலாம். 'காய்த்த நெல்லின் கழனி யூரன்' என்னும் ஐங்குறு நூற்றின் 4-ஆம் செய்யுளடியும் இங்கு நினைவுகூரத் தக்கது. முதிராத நெல்லைக் 'கருக்காய்' என்று வழங்கும் வழக்காறும், நென்மணி 'காய்' என வழங்கப்பட்டமையை உணர்த்துவதைக் காணலாம்.

இவ்வளவு துன்பப்படாமல் மேலே காட்டிய இரு பாக்களை மூன்று விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா எனக் கொண்டு அமையலாம் எனக் கருதின், நூல் முற்றும் நேரிசை வெண்பாக்களாற் பாடிய புலவர் இவ்விரு பாக்களை மட்டும் இன்னிசை வெண்பாக்களாக அமைக்கக் காரணமில்லை.

கம்பநாடர் இராமாயணம், பாலகாண்டத்தில், நகரப் படலத்தில் அகழியை வருணிக்கையில்,

'அன்னமா மதிலுக் காழிமால் வரையை
அலைகடல் சூழ்ந்தென அகழி
பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப்
புன்கவி யெனத்தெளி வின்றிக்
கன்னிய ரல்குந் தடமென யார்க்கும்
கடப்பருங் காப்பின தாகி
நன்னெறி விலக்கும் பொறியென எறியும்
கராத்தது நவிலலுற் றதுநாம்'

எனப் பாடுகிறார். இச்செய்யுளில் 'கன்னிய ரல்குந் தடம்' என்னுந் தொடர்'ந்த' என்னும் எழுத்துகள் 'ற்ற' என்னும் எழுத்துகளாக ஏடெழுதுபவருக்குத் தோன்றியதால் 'அல்குந்தடத்தை' அல்குற்றடமாக்கி விட்டார் அவர். 'அல்கும் தடம்' தங்குமிடம். கன்னிய ரல்குந் தடம்—கன்னியர் தங்கியிருக்கும் கன்னியா மாடம். அல்குற்றடம்—பெண்குறி. இம் மாற்றம் கவிஞரின் பெருந்தன்மையையே மாற்றிவிட்டதே! அல்குதல்—தங்குதல் (அகநானூறு, 20). இஃது எழுத்து மாற்றத்தால் விளைந்த இழிவு.

'மண்ணினும் நல்லள் மலர்மகள்
கலைமகள் கலையூர்
பெண்ணினும் நல்லள் பெரும்புகழ்ச்
சனகியோ நல்லள்
கண்ணினும் நல்லன் கற்றவர்
கற்றிலா தவரும்
உண்ணினும் நீரினும் உயிரினும்
அவனையே உவப்பார்'

இச்செய்யுள், அயோத்தியா காண்டம், மந்திரப் படலம், 42-ஆம் செய்யுள். இதன் நான்காம் அடியின் முதற்சீர் 'உண்ணு' எனத் தேமாச்சீராய்ப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய அடிகளின் முதற் சீர்கள் கூவிளச்சீர்களாய் அமைந்துள்ளன. ஆதலின், இச்சீர் 'உண்ணினும்' என்றிருத்தலே பொருத்தம். 'உண்ணினும்' என்பதற்கு 'உணவிலும்' என்பது பொருள். உண்...உணவு. இது முதனிலைத் தொழிற்பெயர் ஆகு பெயராய் உணவை உணர்த்தியது. 'உண்விழைவார்க் கில்லை உயிரோம்பல்' என்னும் அறநெறிச்சாரம், 115-ஆம் செய்யுளடியில் இச்சொல் இப்பொருளது ஆதலைக் காணலாம்.

'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும்
வெற்றி லையுமெல்லாம் கண்ணன்'

என்னும் திருவாய்மொழிப் பாசுரத்தை (6 : 7 : 1) அடியொட்டிக் கம்பநாடர் இப்பாட்டின் நான்காம் அடியைப் பாடினர் என்பது தெளிவு.

'மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை
மனத்தை யொத்தார்:
வேதியர் வசிட்ட னொத்தார்; வேறுள
மகளி ரெல்லாம்
சீதையை யொத்தார்; அன்னாள் திருவினை
யொத்தாள்; அவ்வூர்ச்
சாதுவ மாந்த ரெல்லாம் தயரதன்
றன்னை யொத்தார்'

என்பது அயோத்தியா காண்டம், கைகேசி சூழ்வினைப் படலம், 66-ஆம் செய்யுள். இதில் நான்காம் அடியிலுள்ள 'சாதுவ மாந்தர்' என்பது ஏடெழுதுவோரால் 'சாதுகை மாந்தர்' எனப் பிழைபட எழுதப்பட்டது. 'சாதுவ மாந்தர்' என்பது ஐம்புலன் அடக்கிய நல்லவரைக் குறிப்பது.

'நிறம்பேர்மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தொழா மாந்தர்—
இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்கள் என்றான்
நமனுந்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு.'

என்பது இயற்பா—நான்முகன் திருவந்தாதி, 68-ஆம் பாசுரம். 'சாதுவர்' என்

னும் சொல்லையே கம்பநாடர், 'சாதுவ மாந்தர்' என விரித்தமைத்தார்.

> 'நறுநீல நெய்தலும் கொட்டியுந் தீண்டிப்
> பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
> யறநாட்டுப் பெண்டிர் அடி.'

இது தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தால் வந்த சிந்தியல் வெண்பா. இதில் 'அறநாடு' என்றது, பாரியின் கொடையாற் சிறப்புற்ற நாட்டை. இதில் மூன்றுமடியின் முதற்சீரில் உயிர் ஏறி நின்ற யகர உடம்படுமெய் ஏடெழுதுவோரால் பகரமாகக் கருதப்பட்டுப் பிழைபட எழுதப்பட்டது. 'அறநாட்டுப் பெண்டிர் அடி' என்பதிலுள்ள மோனை அமைதி இங்குக் கருதத்தக்கது.

> 'அளபெடை தனியிரண் டல்வழி ஐயெள
> உளவாம் ஒன்றரை; தனியுமை யாகும்'

என்பது அவிநயச் சூத்திரம். இதன் பொருள், 'அளபெழும் பொழுதும் தனித்து வரும்போதும் அல்லாத இடத்தில் (ஒரு சொல்லில் அமைந்து வரும்போது) ஐகாரமும் ஔகாரமும் ஒன்றரை மாத்திரை யுள்ளனவாகும். ஐகாரம் (ஒன்றரை மாத்திரை உளதாதலேயன்றி) ஒரு மாத்திரை உளதாதலுமாம்' என்பது. ஔகாரம் சொல்லின் இடையிலும் கடையிலும் வாராதாகலின் ஒரு மாத்திரை உளதாதல் இல்லை. ஐகாரம் சொல்லின் இடையிலும் கடையிலும் அமைந்து வரும் போது ஒரு மாத்திரை பெறும் என்பதை விளக்குவது இந்நூற்பா. இந்நூற்பாவில் 'தனி' என்பது 'ஒன்று' என்னும் பொருள் தருவது. இதில், 'தனியுமை யாகும்' என்பது 'தனிமையு மாகும்' என எழுத்து மாறுடியதால் பொருளுஞ் சிதைவுறக் காணலாம்.

> 'முதனிலை இடைகடை மூன்றிடத் தொருசொ
> லதனொடு குறுகும் ஐகார எழுத்தே'

எனவும்,

> 'மொழிமுதல் இடைகடை எனமூன் றிடத்தும்
> அழியா தைகா ரங்குறு கும்மே'

எனவும் வந்துள்ள மேற்கோட் சூத்திரங்களும் இக்கருத்தை வற்புறுத்தி நிற்றல் ஈண்டுக் கருதத்தக்கது.

> 'அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
> மறுவறு பத்தினி போல்வயி னீரே'

இக்குறட்டாழிசையில் 'வயினீர்' என்பது 'வயிற்றையுடையீர்' என்னும் பொருளது. வயின்—வயிறு. இச்சொற்பொருளை யறியாதார் 'வையினீரே' எனப் பாடத்தை மாற்றிப் பதிப்பித்தனர்.

> 'ஏகிர் நாய்கீர் என்செய்து மென்றீர்—ஒருசாரார்;'

என்பது ஒரு வெளிவிருத்தத்தின் ஈற்றடி. இதில் 'நாய்கீர்' என்பது விளியேற்ற 'நாய்கர்' என்னும் பெயர். நாய்கர்—வணிகர். இச்சொல் 'நாகீர்' எனப் பதிப்பிக்கப்பட்டது.

இவ்வாறு நூல்கள் பிழை மலிந்து உருத்திரிந்து வருவதைத் தடுத்து, நன்கு ஆய்ந்து நூல்களை வெளியிடுதற்கு அறிஞர் குழு அமைவது இன்றியமையாததாகும். இதில் மொழிநலம் கருதும் அரசினரும் கருத்துச் செலுத்துதல் பொருத்தமாமெனக் கருதுகிறேன்.

With compliments from :

THE MILAN ART PRINTERY

COMMERCIAL PRINTERS AND BOOK BINDERS

60, DR. ATMARAM MERCHANT ROAD,

BOMBAY-2.

With Best Compliments from :

JANAK PRINTERS

QUALITY PRINTERS & BOOK BINDERS

LEDGER PRINTING A SPECIALITY

60, CATHEDRAL STREET,

BHULESWAR :: :: BOMBAY-2.

இலக்கியம் படைத்த பெண்கள்

[ஸரோஜா ராமமூர்த்தி]

சங்க காலத்திலிருந்து இன்றுவரை இலக்கியம் படைத்த பெண்களைப் பற்றி எழுதப் புகுந்தால், அது நீண்ட கட்டுரையாக முடியக்கூடும். அத்துடன் அதற்கென ஆராய்ச்சித் திறன் படைத்த பல அறிஞர்கள் இருக்கிறார்கள். இலக்கியம் படைத்த—படைக்கின்ற பெண்கள் வரிசையில் நானும் சேர்ந்திருப்பதால், கட்டுரையைச் சுருக்கமாகவே முடித்துவிட முயலுகின்றேன்.

ஔவையார் தொடங்கி காக்கை பாடினியார் நச்செள்ளையார், ஆதிமந்தி, ஆண்டாள் முதலிய கவிஞர் பெருமகளிர் படைத்த கவிதைகள் காலத்தால் அழியாமலும், போற்றிப் புகழப்படும் பேற்றைப் பெற்றும் உள்ளன. 'அறம் செய விரும்பு' என்று முதல் வகுப்பில் ஆர்வத்துடன் கவிதையைப் பயிலும் வாய்ப்பினை ஔவை மூதாட்டி அன்றோ நமக்கு வழங்கியிருக்கிறாள் ?

நம் நாட்டில் வேதகாலத்திலிருந்து பெண்கள் தருக்கம், வியாகரணம், பரதம், சங்கீதம், இலக்கியம் முதலிய கலைகளில் சிறந்தவர்களாக விளங்கி வந்திருக்கின்றனர். ஆண்பெண் என்கிற பேதமின்றி இருபாலரும் ஒரே ஆசிரியரிடம் கல்வி பயின்று, அதைச் சிறந்த முறையில் பயன்படுத்தவும் செய்திருக்கிறார்கள். ஆதி சங்கரருடன் வாதில் வென்ற சரஸவாணியைப் பற்றி அறியாதவர் இருக்கமுடியாது. அவர் இலக்கியம் படைக்கவில்லையாயினும், கணவர் படைத்த பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். கணவரின் இலக்கிய வாழ்வில் பெரும் பங்குகொண்டு அவருடைய வெற்றிதோல்விக்குத் தம்முடைய திறமையாலும் சிறப்பை ஈந்தவர்.

வடநாட்டில் வங்கத்தில் பிறந்த கவிக்குயில் சரோஜினி தேவியின் புகழ் அகில உலகமெங்கும் பரவி நம் நாட்டின் சிறப்பை உலகுக்கு எடுத்துக் காட்டியது. அவரின் தீஞ்சுவைக் கவிதையின் இன்பத்தில் காந்தியடிகள் தம் மனத்தைப் பறிகொடுத்து அவரைக் கவிக்குயில் என்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார். இன்னும் நான் படிக்காத எத்தனையோ சகோதரிகள் வடநாட்டில் சிறந்த இலக்கியங்களைப் படைத்திருப்பதாக அங்கிருக்கும் மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர்கள் கூறுகிறார்கள்.

செந்தமிழ் நாட்டில் திருமகளின் அவதாரமெனப் போற்றப்படும் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாகத் தோன்றிய ஆண்டாளையும், அவளின் தெய்வ மணமும், இயற்கை மணமும், பக்தி மணமும் கமழும் திருப்பாவையின் சுவையையும் அறியாத தமிழர் உண்டா? மார்கழி மாதத்துப் பனியும், அப்பனியினூடே சில்லென்று ஆன்மாவுக்கு இதமளிக்கும் திருப்பாவைப் பாடல்களின் ஒலியும் காலங் காலமாகத் தெவிட்டாத ஒன்றல்லவா ? சிறுமியாக இருந்து அரங்கனைத் துதித்துப் பாடி, அவனுள் உறைந்துவிட்ட இத்தெய்வ மகள் படைத்த இலக்கியத்தின் நயம் பரதத்தின் சலங்கையிலும், இசையின் ரூபத்திலும் கொஞ்சி விளையாடிக்கொண்டிருக்கிறது.

மேலைநாடுகளில் இலக்கியம் படைத்த பெண்கள் பலர் பெயரும் புகழும் பெற்றுச் சிறந்து விளங்கினர். பதினெட்டாம் நூற்றாண்டின் இடையில் தோன்றிய (கி. பி. 1775) ஜேன் ஆஸ்டினின் வரம்புக்கு உட்பட்ட சமூக நாவல்கள் இலக்கிய நயமும், பொருட் செறிவும் பெற்றவை. அதன் பின்னர் பிராண்டே சகோதரிகள் மூவர் படைத்த இலக்கியம் மிகவும் முக்கியமானது. கற்பனைத் திறனும், மேதையும் அவர்களிடம் வரப்பிரசாதமாக அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. அமெரிக்க இலக்கிய ஆசிரியைகளுக்குள் ஸ்டோ மிகவும் பிரபலமானவர். இவரின் முழுப் பெயர் ஹாரியட் எலிசபெத் பீச்சர் ஸ்டோ என்பதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய இவர் கென்டகி என்னும்

இர்ராஜ்ஜியத்தில் பல வருடங்கள் வசித்து வந்தார். அது நீக்கிரோக்களை அடிமைப் படுத்திய மாகாணமாக இருந்து வந்தது. அங்கு அவர் பார்த்த கொடுமைகளை விஸ்தரித்து எழுதிய நாவலே "Uncle Tom's Cabin" என்பதாகும் (1851—52). இந்த நவீனத்தின் குரலால் அங்கு மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இப்புத்தகம் நாடகமாக்கப்பட்டும், இருபது பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் இருக்கின்றது. நோபல் பரிசு பெற்ற ஆசிரியைகளுக்குள் கிரேஸியா டெலடாவின் "அன்னை" உலகப் புகழ்பெற்றது. அன்னை, மகன் இருவரின் மனப்பாங்குகள் வெவ்வேறு துறையில் வாழ்க்கைப் பாதையில் செயற்படுவதை மிகவும் திறமையாகச் சித்திரிக்கும் நூல் அது.

அகாதா கிருஸ்டி இன்று அகில உலக மார்க்கெட்டில் துப்பறியும் நவீனங்களைத் துருவிப் படிக்கும் அளவுக்கு ஆவலை அத்துறையில் தூண்டியவர். இன்றைய மாணவ மாணவிகளை வெகுவாகக் கவர்ந்தவர். இவரின் நடையைப் பின்பற்றித் தமிழில் எத்தனையோ துப்பறியும் நவீனங்கள் தோன்றியிருக்கின்றன. இது நிற்க.

நம் நாட்டில் இடையிலே வீட்டுக்குள் பூட்டி வைக்கப்பட்டிருந்த பெண்களில் கொஞ்சம் படித்தவர்கள் இலக்கியம் படித்துத்தான் வந்தார்கள். கணவருக்குத் தெரியாமல், மாமியாருக்குத் தெரியாமல் அவர்கள் நவீனங்கள் படித்த காலம் ஒன்று இருந்தது. பின்னர் பாரதியின் பெண் விடுதலை முழக்கம் திசையெங்கும் எதிரொலிக்க ஆரம்பித்ததும், பெண்கள் பெருவாரியாகக் கல்வி பயின்று இன்று இலக்கியம் படைக்கும் அளவுக்கு அறிவும், திறனும், ஆற்றலும் பெற்று விளங்குகிறார்கள். தமிழ் நாட்டில் கடந்த இருபத்தைந்து வருடங்களில் இலக்கியம் படைத்த—படைத்துக் கொண்டிருக்கும் பெண்கள் அநேகர் இருக்கிறார்கள். திருமதி. கோதைநாயகி அம்மாளின் நவீனங்கள் பெண்கள் இலக்கியம் படிக்க வேண்டும் என்று மேன்மேலும் தூண்டுவதற்குத் துணையாக நின்றவை. 'ஜகன் மோகினி' சஞ்சிகை வருவதை எத்துணைப் பெண்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்திருக்கிறார்கள்? பின்னர் குமுதினியும், குகப்பிரியையும் படைத்த இலக்கியங்கள் முன்சொன்னதிலிருந்து மாறுபட்டு விளங்கின. 'லக்ஷ்மி'யின் நாவல்கள் தமிழ் நாட்டில் ஒரு புதிய ஆவலையும், பாணியையும் தோற்றுவித்தன. திருமதிகள். அநுத்தமா, இராஜம் கிருஷ்ணன், வசுமதி ராமஸ்வாமி இத்துறையில் சிறப்பாகப் பரிசுகளும் பெற்றுப் பணிபுரிந்திருக்கிறார்கள். சமீபகாலப் பத்து வருடங்களில் இலக்கியம் படைப்பதில் நான், நீ என்று ஆண்களுடன் பெண்களும் சரிநிகர் சமானமாகப் போட்டியிட்டு அதில் வெற்றியும் பெற்று வருகின்றனர். இவர்களில் குறிப்பிடக் கூடியவர்கள் திருமதிகள். கிருஷ்ணா, ஆர். சூடாமணி, கோமதி சுப்பிரமணியம், மற்றும் பல சகோதரிகளாவர்.

இலக்கியம் படைக்கக் கலைமகளின் அருளும், உள்ளத்தின் எழுச்சியும் அவசியம். இலக்கியம் படைக்கும் பெண்கள் காலத்தால் அழியாத ஒன்றை, சமூகத்தை உயர்த்தும் ஒன்றை, பிறந்த நாட்டை ஏற்றங் கொள்ளச் செய்யும் ஒன்றைப் படைக்கும் கடமையைச் சார்ந்தவர்கள். இலக்கியம் படைப்பவர்கள் இராஜபாட்டையில்மட்டும் அன்னநடை போட முடியாது; முட்கள் செறிந்த பாதைகளிலும் அவர்கள் உலவித்தான் ஆகவேண்டும். பாதை எதுவாக இருந்தாலும், பாரதத்தின் பண்புக்குக் குறைவில்லாமல் இருத்தலே அவர்கள் இலக்கியம் என்கிற மாபெருஞ் சக்திக்குச் செய்யும் சிறந்த பூசனை ஆகும்.

இலக்கியத் தேன்?

[கவிஞர் கம்பதாசன்]

✳

[1]

இயற்கையே சிந்தனை வில்லெடுத்தாள்
இயல்மொழி அம்பினை எய்திட்டாள்;
உயர்வுறும் காலத் துள இலக்கை
ஒண்குறி வைத்துயிர் ஊக்கினள்;
அயர்ந்துள மண்ணில் அழகின்மலர்
ஆனந்த மாகிய கண்விழிப்பு;
செயலிலே உண்மை திதித்திடவே
ஜீவியம் வண்டுண் இலக்கியத்தேன்!

[2]

தந்திட வந்த தமிழ்க்கனியை,
தாவிப் பிடிக்கும் தலையெழுத்தின்
மந்திரச் சக்தியின் கூட்டங்களே!
மரிப்பில் விளைவிடும் மின்மழைகாள்!
வந்தொலி செய்யும் வரிகடலின்
வண்ண மதியின் பிறையலைகாள்!
சிந்திடும் முத்தம் திகழ்வானில்
சிரித்திடும் நாளின் செழுஞ்சுடரே!

[3]

சுடர்த்தேன் துளிகளின் தூற்றலிலே
சுதந்திரப் புட்கள் எனப்பறப்போம்!
இடர்கொள் இருளின் வலையினிலே
ஏங்கிடும் மீன்கொண் டெழுத்தமைப்போம்,
தொடரும் மரணம், பிறப்பிரண்டில்
தோன்றிடும் இந்த மகாநாடு,
அடரும் வனத்தும் நடந்துவரும்
அகத்தியக் குன்றதன் தேனருவி!

[4]

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
தேன்வந்து பாயுது காதினிலே"
என்றவன், பாரதி கொஞ்சிடவே,
இன்பக் கலைக்கண் இளநிலவில்,
தென்றலில் தாமரைத் தெப்பமிட்டு,
சிறியதன் பீலி எழுத்திறகால்
ஒன்பது சுவையின் மனக்கடலில்
உலகம் புகழ உலாவருவோம்!

✳

விஞ்ஞானப் பத்திரிகைகள்

பெ. நா. அப்புஸ்வாமி

இக்காலத்தை அணுயுகம், உட்கரு யுகம், விண்வெளி யுகம் என்றெல்லாம் வழங்குகிறார்கள். விஞ்ஞானத் துறையில் புதிய புதிய சாதனைகள் ஏற்பட ஏற்பட, புதுப்புதுப் பெயர்களும் தோன்றி வருகின்றன. உண்மையில், இதை 'விஞ்ஞான யுகம்' என்ற ஒரு பெயரால் சுட்டிவிட்டால், மற்றவை அனைத்தும் அதனுள் அடங்கி விடும்.

இப்போது உலகத்திலுள்ள நாடுகளைக் கவனித்தால், அரசியல், பொருளாதாரம் என்னும் இருபெருந் துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கும் நாடுகள் விஞ்ஞானத் துறையிலும் முன்னிற்கக் காண்கிறோம். முன் இரண்டு துறைகளுக்கும் மூன்றாவது துறையே காரணம் என்பது இப்போது ரஷியா பெற்றிருக்கும் வியக்கத்தக்க நிலையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆகவே, நமது நாடும் இத்துறைகளில் முன்னேற வேண்டுமானால், என்றென்றும் கைநீட்டி இரப்பதையே—ஏற்பதையே—நமது கொள்கையாகக் கொள்ளாமல் இருக்க வேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு—அதாவது, விஞ்ஞானத் துறையில் முன்னேறுவது. பல சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் நமது நாட்டில் தோன்றியாக வேண்டும் ; ஓரிருவர் இருந்தால் போதாது. இதற்கு வழி என்ன ?

பிறநாடுகளைப் பார்த்தால், அவர்கள் என்ன முயற்சிகளை, ஏன், எவ்வாறு மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும். விஞ்ஞான அறிவு மிகவேண்டுமானால், அது பரந்த ஆதாரத்தின் மேல்தான் நிற்க முடியும். ஊசி முனையில் அகலக் கட்டம் கட்ட முடியாது. எகிப்து நாட்டுப் பிரமிடுகளைப்போல், அடி அகன்று பரந்திருக்க வேண்டும். அமெரிக்க நாட்டு முகில் மாடங்களைப்போல், அஸ்திவாரம் ஆழ இடப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு பகுதியும் கருத்தோடு, அறிவோடு, உண்மையோடு, நன்கு அமைத்துப் பாதுகாக்கப்பட்டு வரவேண்டும். அவரை விதைத்தால் துவரை முளைக்காது. காதற் கதைகளையும், கற்பனைக் கதைகளையும் படித்தால் விஞ்ஞானம் வளராது. விஞ்ஞானம் வளராவிட்டால், அறிவு வளராது; நாடு முன்னேறாது. இது உண்மை.

ஆகவே, விஞ்ஞானத்தை வளர்க்கப் பிறநாடுகளில் செய்திருப்பதுபோல் நாமும் செய்யவேண்டும். இதைப் பற்றி இந்த ஆண்டு 'தினமணி—தீபாவளி மலரில்' சற்றே விரிவாக எழுதியிருக்கிறேன். ஆதலால், அதை இங்கு விளக்க வேண்டியதில்லை. அயல் நாடுகளில் குழந்தைப் பருவம் முதலே விளையாட்டுச் சாமான்கள், படப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், கதை போல் எழுதப்பட்ட அறிவியல் புத்தகங்கள், தாங்களே கையாளக்கூடிய விஞ்ஞானக் கருவிகள், அவரவர்களுடைய தரத்திற்கு ஏற்றபடி எழுதப்பட்ட விஞ்ஞானப் பத்திரிகைகள், அவர்களுக்கு என்று பேரறிஞர்களால் நிகழ்த்தப்படும் விரிவுரைகள், ரேடியோ, டெலிவிஷன் முதலியவற்றின் மூலமாக விஞ்ஞான அறிவைப் பெருக்கி வருகிறார்கள். பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிலும் இவ்வாறே. முதியவர்களுக்கும் இவ்வாறே. இவற்றுளெல்லாம் அங்கு ஒரு முக்கியமான இடம் பெற்றிருப்பவை விஞ்ஞானப் பத்திரிகைகள். அவையே விஞ்ஞான அறிவை மக்கள் உணருமாறு பலகாலுமோ—நாள்தோறுமோ — வெளியிட்டு, அறிவியல் அறிவை அடிபரந்திருக்கச் செய்கின்றன.

அயல் நாடுகளில் கையாளப்பட்டு வரும் முறைகளைப் பார்த்தால், நமக்கு ஓரளவு பொறுமையாகவே இருக்கிறது. அதற்கு எதிரிடையாக நம் நாட்டைப் பார்க்கும்போது, ஓரளவு வருத்தமும், ஓரளவு கோபமும்கூட வருகின்றன. அங்கெல்லாம் விஞ்ஞானப் பத்திரிகைகள் பல உள்ளன ; படிப்போரும் பலராகக் காணப்

படுகிறார்கள். இவ்விஷயத்தை விவரமாகச் சொல்ல இங்கு இடமும் வாய்ப்பும் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்னால் கணக்கெடுத்தபோது, வைத்தியத் துறையிலும் எஞ்ஜினியரிங் துறையிலும் மட்டிலுமாக, மூவாயிரம் பத்திரிகைகளுக்குமேல் இருந்தன. பொது விஞ்ஞானப் பத்திரிகைகளின் தொகை இன்னும் மிக அதிகம். அதுவுமன்றி, ஒவ்வொரு தினசரிப் பத்திரிகையிலும் நாள்தோறுமோ, வாரம் மும்முறையோ, இருமுறையோ விஞ்ஞானச் செய்திகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், விஞ்ஞானிகளின் வாழ்க்கை விவரங்கள் ஆகியவை சுவையாக வெளியிடப்படுகின்றன; விரும்பிப் படிக்கப்படுகின்றன. இங்கு ஒன்று நினைவில் இருக்க வேண்டும்—சுவை என்பது பழக்கத்தால் உண்டாவது. பாகற்காயைக் கசப்பு என்று வெறுப்பவர்களும், வெங்காயத்தை நாற்றம் என்று தள்ளுபவர்களும் உண்டு; அவற்றை விரும்பி உண்பவர்களும் உண்டு.

ரஷியாவில் பெரும்பான்மைப் பத்திரிகைகளிலும் நாள்தோறும் விஞ்ஞானச் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. சினிமாச் செய்திகளும், திடுக்கிடச் செய்யும் கோர நிகழ்ச்சிகளும் அவற்றில் இடம் பெறலாகாது என்பது ஒரு கட்டுப்பாடு. ஆதலால், மக்கள் விஞ்ஞான அறிவைப் பெறவும், அதைப் பற்றி எண்ணவும், பேசவும் வாய்ப்புகள் நிறையக் கிடைக்கின்றன. அவர்கள் செயலில் வானுலகில் ஏறிவிட்டார்கள்; கூண்டோடு சந்திரனை அடைய முயன்று வருகிறார்கள். நாமோ இன்னும் கற்பனையிலேயே அவ்வாறு செய்கிறோம்; அல்லது பழங்கற்பனைகளை மெய் என்று நம்பி, கூறி, அகமகிழ்கிறோம். நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம்.

நம் நாட்டிலும் நாம் அறிவியல் அறிவைப் பெறவேண்டும்; மக்களின் நன்னிலைக்கும் நலத்துக்கும் அது மிகவும் முக்கிய ஓர் அடிப்படை என்று எண்ணிய மக்கள்—சிற்றளவில் எனினும்—ஒன்றரை நூற்றுண்டுக் காலமாக முயற்சிகளை நடத்தி வந்திருக்கிறார்கள். முதன் முதலில் தமிழில் வெளிவந்த பத்திரிகைகளில் விஞ்ஞானச் செய்திகளும் சிறுகச் சிறுகக் கூறப்பட்டு வந்தன. அப்போது படிக்கத் தெரிந்தவர்கள் இப்பொழுதைவிட இன்னும் குறைவு. புதிய விஷயங்களும் ஏற்பதற்குரிய மனப்பான்மை பலருக்கு இல்லை. ஆதலால் அப்பத்திரிகைகளெல்லாம் தளர்ந்தே நடைபெற்று வந்தன. 1831ல் நிறுவப்பட்ட தமிழ்ப் பத்திரிகை, 1855ல் தொடங்கப்பட்ட தினவர்த்தமானி, 1874ல் தொடங்கப்பட்ட ஜனவிநோதினி (இதன் உயர்வு கருதி, இது பின்னர் கா. நமச்சிவாய முதலியாரால் மீண்டும் அச்சடித்து வெளியிடப்பட்டது), 1892ல் தொடங்கப்பட்ட விவேக சிந்தாமணி போன்ற பத்திரிகைகள் ஓரளவு விஞ்ஞான விஷயங்களையும் வெளியிட்டு வந்தன. 1881 வாக்கில் தொடங்கிய சுதேசமித்திரன் பத்திரிகையும், பின்னர் வெளிவந்த சில பத்திரிகைகளும் அவ்வப்போது விஞ்ஞானச் செய்திகளை வெளியிட்டு வந்தன. அந்தப் பத்திரிகைகளிலும், ஆனந்த போதினி, ஆனந்த விகடன், பாரததேவி, பாரதமணி, குழந்தைக் கல்வி, தினமணி, ஈழகேசரி, கிருகமணி, கிராம ஊழியன், ஹநுமான், கலைமகள், குமரி மலர், லோகோபகாரி, பஞ்சாமிர்தம், பிரசண்ட விகடன், ராஷ்ட்ரவாணி, சக்தி, செந்தமிழ், தமிழர் நேசன், தமிழ்க் கடல், தமிழ் நேசன், தமிழ்ப் பொழில், தமிழ் உலகு, வித்யா விஹாரிணி, வாணி விலாஸினி, விவேக போதினி, செந்தமிழ்ச் செல்வி, தியாகபூமி, வீர கேசரி, குமுதம், கல்கி, கண்ணன், கலைக்கதிர், அணுக்கதிர், மாலா, தமிழ் நாடு, இந்தியா, நந்தி, அஜந்தா, தாய்நாடு, நாடோடி, அமுத சுரபி, பொள்ளாச்சிவாசி, (டில்லி)சுடர், சௌபாக்கியம், சிறுவர், கல்வி, விஞ்ஞானி, சிந்தனை, சக்தி, ரவி, நவசக்தி, கிராம நலம் முதலிய பல பத்திரிகைகளிலும் அறிவியல் கட்டுரைகள், பாடல்கள், கதைகள் முதலியவை வெளிவந்துள்ளன. இவற்றுள் அநேகமாக எல்லாவற்றிலும் நானும் கட்டுரை முதலியவற்றை எழுதியிருக்கிறேன். ஆயினும் இவற்றையெல்லாம் விஞ்ஞானப் பத்திரிகைகள் என்று சிறப்பாகக் கூறுவதற்கு இல்லை. சற்று முன்காலத்தில் விஞ்ஞான விஷயங்களைப் பற்றி எழுதுபவர்கள் இல்லை; அவற்றை வெளியிடுபவர்களும் இல்லை; படிப்பவர்களும் இல்லை என்றே சொல்லலாம்.

விஞ்ஞானப் பத்திரிகை என்று குறிப்பிடக்கூடிய முதல் பத்திரிகை தமிழர் நேசன்

என்பது. 1917ம் ஆண்டில் நிறுவப்பட்ட 'தமிழர் கல்விச் சங்கத்தின்' பத்திரிகையாக, முதலில் இரண்டு மாதத்துக்கு ஒரு முறையாகவும், பின்னர் மாதப் பத்திரிகையாகவும் அது வெளிவந்தது. தமிழ் மக்களுக்குத் தமிழ் மொழியின் மூலமாக நவீன விஞ்ஞான விஷயங்களை அறிவிப்பதையே அது முக்கிய நோக்கமாகக் கொண்டது. அதன் துணைக் காரியதரிசியாகவும், பின்னர்க் காரியதரிசியாகவும் (செயலாளருக்கு அக் காலத்தில் வழங்கிய பெயர் அது தான்), துணையாசிரியராகவும், பின்னர் ஆசிரியர்களில் ஒருவராகவும் நான் பணி புரிந்து வந்தேன். பத்துப் பன்னிரண்டு ஆண்டுபோல் அது வாழ்ந்து பின்னர், பொது மக்களின் ஆதரவின்மையால், நின்றுபோயிற்று.

பின்னர்த் தொடங்கிய கலைமகளை ஒரு விஞ்ஞானப் பத்திரிகை என்று கூறமுடியா விட்டாலுங் கூட, அது பலவகையான அறிவை ஊட்டுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. அப்போது அதில் மாதந்தோறும், சாதாரணமாக, மூன்று விஞ்ஞானக் கட்டுரைகள் சிறந்த ஆசிரியர்களால் எழுதப்பட்டு வந்தன. அந்த நிலையில் கலைமகளுக்குப் பொதுமக்கள் அவ்வளவு ஆதரவளிக்கவில்லை. ஆகவே, அது விஞ்ஞானப் பகுதியை அநேகமாக முற்றுமே கைவிட்டதில் வியப்பில்லை.

இலங்கையில் 1953ம் ஆண்டில் நவம்பர் மாத வாக்கில் தொடங்கப்பட்ட விஞ்ஞானி என்னும் பத்திரிகையும் பெயருக்கேற்ப, முற்றும் விஞ்ஞான விஷயங்களை வெளியிடும் நோக்கமே கொண்டது. ஆயினும், தமிழர் நேசனில் போலவே இதிலும் பிற விஷயங்களும் சற்றே விரவியிருந்தன. விஞ்ஞானத்தின் கசப்பை அந்தக் கலப்பாலும் மாற்ற முடியவில்லை. அது ஓர் ஆண்டுக் காலமே வாழ்ந்தது. பிறகு நின்றுபோயிற்று.

இப்பொழுது மிகவும் முக்கியமான விஞ்ஞானப் பத்திரிகை என்று குறிப்பிடத் தகுவது கோயம்புத்தூரிலிருந்து வெளிவரும் கலைக்கதிர். விஞ்ஞானத்தின் முக்கியத் தன்மையை அறிந்த பலர் இதைப் பதினைந்து ஆண்டுக் காலமாக, மனந்தளராது நடத்தி வருகிறார்கள். இவர்களுடைய ஆர்வம் பாராட்டத்தக்கது. இவர்களும் ஓரளவு பிற விஷயங்களையும் கலந்தே தங்களுடைய பத்திரிகையை நடத்தி வருகிறார்கள். சில பத்திரிகைகள் தங்களுடைய முக்கிய நோக்கத்தைக் கை விட்டதுபோல் இவர்கள் கைவிடவில்லை. இவர்கள் நமது நாட்டுக்குச் செய்யும் பணி மிகப் பெரிது என்றே நான் மனமார எண்ணுகிறேன்.

அண்மையில் சென்னையி லிருந்து முற்ற முழு விஞ்ஞானப் பத்திரிகையாக அணுக்கதிர் என்னும் பத்திரிகை வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் முயற்சியும் வெற்றி பெறுவதற்குரியது. இவ்விரண்டு பத்திரிகைகளும் இப்போது நடந்து வருவதைப் பார்த்தால், தமிழ் மக்கள் சற்றே கண்விழித்து விட்டார்களோ என்று தோன்றுகிறது.

அண்மையில் ஆங்கிலத்தில் வெளி வரும் ஜூனியர் ஸையன்டிஸ்ட் என்னும் பத்திரிகையும் நல்ல தொண்டு புரிந்து வரத் தொடங்கியிருக்கிறது.

பழங் கதைகள் பேசிப் பயனில்லை; புதுக் கதைகள் பேசியும் பயனில்லை. மற்ற நாடுகள் — நாம் உன்னத நிலையை அடைந்திருந்த காலத்தில் எங்கேயோ இருளடைந்து கிடந்த நாடுகள்—இப்பொழுது வானத்தில் விளங்குகின்றன. விஞ்ஞான தேவதையை நோக்கி அந்நாட்டினர் செய்த அருந்தவம்—உண்மையாகவே பட்டினி கிடந்தும், குளிரில் வாடியும், நாற்றங்களுக்கு உள்ளாகியும், கதிர் வீச்சு முதலிய கொடிய இன்னல்களைப் பொருட்படுத்தாமலும், சிற்சில வேளைகளில் தங்களுடைய உயிரையே அர்ப்பணம் செய்தும், அறிவுத் தெய்வத்தின் அருள் கிடைக்கவேண்டும் என்று வேண்டி மன்றுடிய அருந்தவம்—அவர்களில் பலருக்கு நல்ல வரங்களை அளித்திருக்கிறது. 'ஏற்பது இகழ்ச்சி' என்று மனப்பாடம் செய்து, கிளிப்பிள்ளைகளைப்போல் பேசி வரும் நம் நாட்டினர் அனைவரும் விஞ்ஞானத்தில் கருத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் சொல்வதால் அருங்கலைகளையோ, ஒழுக்க நன்னெறிகளையோ, தெய்வப் பற்றையோ, மனவமைதியையோ, புறக்

கணிக்க வேண்டும் என்று நான் கூறுவதாக நினைக்கலாகாது.

விஞ்ஞானத்தில் ஒரு குறுகுறுப்பு ஏற்பட வேண்டும். பிற நாட்டினர் என்னவெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதையாவது முதற் படியில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பண்டைப் பெருமை மிக்கவர்கள் நாம். ஆதலால், இப்போது நாமும் அவர்களுக்கு ஈடாகவேனும்—அவர்களை விஞ்சாவிட்டாலுங் கூட—இத்துறையில் வெற்றிபெற வேண்டும் என்று ஊக்கங் கொண்டு முயலவேண்டும். நமது விஞ்ஞானிகளை—மற்றப் பெரியார்களுக்கு ஒப்பவேனும்—பாராட்ட வேண்டும். அவர்களுக்கு உயரிய மதிப்பு அளிக்கவேண்டும். விஞ்ஞான விஷயங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி விளக்க வேண்டும். அவ்வாறு விளக்குவதற்கு நல்ல முறையில்—பிற நாடுகளில் போல்—சிறந்த ஏற்பாடுகளை நிறையச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்து வருபவர்களைப் போற்றி, ஆதரித்து, ஊக்கமளித்து வரவேண்டும். பிற நாடுகளில் இவ்வாறு செய்து வருபவர்களுக்குப் பெரும் பரிசுகளை — 'கலிங்கா பரிசு' என்பது அவற்றுள் ஒன்று—வழங்குகிறார்கள். ஒருவகையில் அவர்கள் எழுதி வருவதைப் படிப்பதே அவர்களுக்குச் செய்யக்கூடிய கைம்மாறு என்று சொல்லத் தோன்றுகிறது. அயல் நாடுகளில் சிறந்த விஞ்ஞான நூல்களை மேன்மேலும் இயற்றி வருகிறார்கள். அவற்றை நமது பத்திரிகைகள் மொழிபெயர்த்துப் பகுதி பகுதியாக வெளியிடுவது அந்த அறிவைப் பரப்புவதற்கான ஓர் எளிய வழி. அறிஞர்கள் எழுதிய விஞ்ஞானக் கட்டுரைகள் முதலியவை தமிழ்ப் பத்திரிகைகளில் இடம் பெற வேண்டும்.

விஞ்ஞானத் துறையில் (நாடு முன்னேறுவதற்கான . சிறந்த நெறியில்) மக்கள் இன்னும் ஆர்வங் கொள்ளவில்லை. அறிவுப் பசியே அவர்களுக்கு இல்லாது போய்விட்டது. அவர்களுடைய பசியைக் கிளர்ந்தெழச் செய்ய வேண்டும். அப்படி எழுப்பிய பசிக்கு ஏற்ற நல்லுணவை அளிக்க வேண்டும். சோற்றுப் பசி மட்டும் பசியன்று. சோறில்லாது மக்கள் வாடுவதுபோல், அறிவுணவு இல்லாமலும் மக்கள் வாடுகிறார்கள்—ஆனால் அதை உணரக்கூட இல்லை. கள்ளானது அறிவை மயக்குவதுபோல் அறியாமையும் அறிவை மயக்கும். கள்ளரக்கனை விரட்ட அரும்பாடுபடுவதுபோல் அறியாமை - அரக்கனையும் விரட்டப் பாடுபடவேண்டும்.

இதற்குப் பத்திரிகைகள்—முக்கியமாகப் பிராந்திய மொழிப் பத்திரிகைகள்—செய்யக்கூடிய, செய்ய வேண்டிய—துணை பெரிது. அதை உணர்ந்து அவர்கள் உதவினால், மக்களின் மனம் அறிவு என்னும் நல்லுரம் ஊட்டப்பெற்றுச் சிறக்கும். அறிவுடை மக்களால் நடத்தப்பெறும் ஜனநாயகமே—அறிவுடை மக்கள் அறிவு கொண்டு சீர்தூக்கி ஆராய்ந்து, சிந்தித்து, நடத்தும் குடியாட்சியே—நமது நாட்டுக்கும், அதன் மூலமாக உலகுக்கும் நற்பயன் அளிக்கும். ஆதலால், அனைவரும் அறிவு பெறுமாறு, பத்திரிகைகள் பலவும் தத்தம் பணியைச் செய்து, நமது நாட்டை உயர்த்துவனவாக.

the new plato 66

at the old price

Rs. 4/-

The Plato-66 is now better than before with new features.
★ A new reflector clip for lasting spring action.
★ Reinforced nib-end for additional strength and service.

Plato remains your trusted pen by keeping in step with modern advances.



a mhatre product

PLATO

Sole distributors

BEST FOUNTAIN PEN DEPOT,

P. B. NO. 2421, BOMBAY 2.

Shilpi M. P. 64

நேயநகர் நோக்கி...

[சாலை இளந்திரையன்]

✹

ஆன்ம நேய ஒருமை எனும்பெயர்
அற்புதத் திரு மாநகர் சென்றிட
நான்தொடர்ந்து விரைந்து நடக்கிறேன்;
நண்ணு வேனென நம்பி நடக்கிறேன்;

✹

செல்லு மவ்வழி யோகொடுங் காடுகாண்;
நின்று நின்று தயங்கிப் பலருடன்
மல்லுக் கட்டி மயங்கி விழுகிறேன்;—
மற்றும் நெஞ்சு நடத்த நடக்கிறேன்.

✹

ஊரின் மீதுள பற்றெனும் முட்களென்
உள்ளங் கால்களைக் குத்திக் கிழிக்கவும்,
யாரின் மீதெதற் கோவரும் பாசமாம்
ஈரச் சேறெனை வீழ்த்தச் சறுக்கிடும்.

✹

நாட்டுப் பற்றெனும் வெங்கனல் வீசிடும்;
நம்மவர் பிறரென்று பிரித்திடக்
காட்டுத் தீயெனப் பொங்கும் மதவெறி,—
கண்கள் மூடிக் குமைந்து நடக்கிறேன்...

✹

அன்னை தந்த மொழிமிசை உள்ளதாம்
ஆசை என்னும் பெரும்புலி வந்தெனைச்
சின்ன பின்னமா தாக்கத் துடித்திடும்;—
சிந்தை அஞ்சி நடுங்கிக் குலைந்திடும்!

✹

பற்று வென்று பறந்து நடக்கையில்
பற்ப லப்பல மெத்தப் பலப்பலர்,
"குற்ற மாமிது: தாய்மொழிப் பற்றிலாய்,
கொல்லு வோம்!" என வந்து குவிகிறார்.

✹

'அய்ய னே,எது பற்'றெனக் கேட்கிறேன்:
ஆரவார வெடிச்சிரிப் போடவர்,
"பொய்யி ருக்கினும் மெய்ம்மையி ருக்கினும்
போற்றிக் கூறுன தன்னை மொழியினை;

தூற்று மற்றவர் சொல்லு மொழிகளே ;
சொன்ன பற்றிது, தாய்மொழிப் பற்றிதே !
மாற்றி வேறு விளக்கம் விரிப்பையேல்
வையத் தேஇடம் இல்லை உனக்கினி !''

என்று காதில் இரைந்து குதிக்கிறார் ;
இங்கி வர்க்கென் உளத்தின் பரப்பினை
நின்று சொல்லி விளக்கி விரிக்குமுன்,
தேசப் பற்றினர் வந்து குழுமினார் :

'' நாடு தாண்டி மனத்தை விடுகிறாய் ;
நானி லத்தினர் அத்தனை பேர்களும்
கூடு வீரெனக் கொள்கை விரிக்கிறாய் !—
கொஞ்சத் தில்லிது வந்திடக் கூடுமோ ?

'' வீட்டுக் குள்ளிலை ஒற்றுமை ; ஊர்களின்
வீதிக் குள்ளிலை ஒற்றுமை ; ஒவ்வொரு
நாட்டுக் குள்ளிலை ஒற்றுமை ! இங்கிலை
நாம னைவர் அறிந்ததே யல்லவோ ?

'' வீட்டை விட்டு வெளியில் குதித்துநீ
வீதி தாண்டிஇந் நாடு கடந்துபோய்
கூட்டு கின்றனை, ஞால மனத்தையும் ;—
கூடுமோ ?—இது வீண்வெறுங் கற்பனை !

'' கூடும் லட்சியம் கொண்டு நடப்பதே,
கொள்கை வீரர்க் கழகு தருவதாம்...
வாடு மங்நிலை யேவரும், கைவரா
வான லட்சியம் தன்னை விரும்பினால் !...''

என்றிவ் வாறு பலப்பல செப்பினார் ;
எங்க ளோடு திரும்பென்றும் வேண்டினார்.
நின்று பேசிப் பொழுதைக் கழித்திட
நெஞ்ச மில்லை ; நடக்க முனைகிறேன்...

வந்து வந்தென் வழியை மறிக்கிறார் ;—
வாயில் வந்த படிஎனை வைகிறார் !
நொந்து கண்கள் கலங்கி விழிக்கிறார் ;—
தூரப் போய்விழி வீசி வெறுக்கிறார் !

என்வெ றுத்தனர் ? என்னிடம் கோபமோ ?—
இல்லை, என்னிடத் தன்பினில் செய்தனர் !
நான்பி டித்த தடத்தைக் குழியென
நம்பி என்னைத் தடுக்க முயன்றனர்...

மக்கள் காதலைத் தட்டி விழுத்திட
வந்து மூண்டிடும் 'பெற்றவர் போலவே,
மிக்க அன்பினில் வந்து மறித்தனர் ;—
வேறு தீமை நினைத்திலர் கொஞ்சமும் !

☀

ஒன்றை நன்றென் றுணர்ந்து பழகினோர்
உண்மை யாயதன் வேறுயர்வு ஒன்றெழின்,
நன்றென் றங்கு நயந்து மகிழ்வரோ ?—
நாட்கள் செல்லும் பழக்கம் தவிரவே !

☀

பிய்த்து வைத்தல் பெரிதெனும் போக்கிலே
மீப்பெ ரும்பல ஆண்டு பழகினோர்,
கய்த்து நின்றனர், ஞால ஒருமையைக்
காண முந்துமென் கால்கடை காணவே...

☀

அன்ப ரேநடை ஆற்றல் மிகுந்தவர்
ஆறு காதம் நடக்கப், பிறர்சிலர்
துன்பப் பட்டொரு காதம் நடக்கிறார் ;—
சொல்லு வீரிதில் யாவர் சிறந்தவர் ?

☀

தூய நல்லொளி கொண்ட விழியினோர்
தூரம் பார்க்க, விழிஒளி குன்றினோர்
ஆய அத்தனை தூரம் அறிகிலார் ;—
அன்ப ரேயிதில் யார்விழி நல்லதோ ?

☀

நெஞ்ச மும்மிது போலவே யல்லவோ ?
நேய மென்னும் உணர்வு கொண்டோங்கிய
நெஞ்சம் பற்பல தேய மளாவியே
நின்று யார்க்கும் அருள்நிழல் நல்கிடும் ;

☀

கூம்பிப் போன மனத்தினர் தம்மொழி,
சொந்தத் தேயம், உறவினர் என்னுமத்
தாம்பு தன்னிலே கட்டுண் டடங்கியே
தன்ன லத்திற் கிடந்து நெளிகுவார் !

☀

'ஆன்ம நேய நகரை யடைந்துநான்
அங்கி ருந்துமை நோக்க விழைகிறேன்;
தேன்ம ணக்குமச் சிந்தனைச் சோலையைத்
தேடு வீரெ'னச் செப்பி நடக்கிறேன்...

☀

என்றன் மானிடர்க் காக எனதுளம்
ஏங்கி ஏங்கித் திரும்பித் தவிக்குது ;
நின்று கைகொடுத் தேந்தி அழைத்தவும்
தெம்பு போதவோ இல்லை ;— நடக்கிறேன்......

இந்தி நாவலின் வளர்ச்சி

[ரா. வீழிநாதன்]

உலகம் பலவிதம். அதில் வாழும் மக்கள் பலப்பல விதம். அவர்களது கதையோ பலவிதம். பலப்பலவிதம். உலகம் தோன்றிய காலத்திலிருந்தே கதையும் தோன்றியுள்ளது. உலகம் எத்தனை பழைமையானதோ, அத்தனை பழைமையானது கதை. ஆனால் அதைச் சொல்லும் முறைதான் காலத்துக்கு ஏற்ப மாறி வந்துள்ளது. தற்காலத்துச் சிறுகதைகளும், நவீனங்களும் மேலை நாடு ஏற்றுமதி செய்த பொருள். நாம் இறக்குமதி செய்து கொண்ட பொருள். நாம் அதை விதை நெல்லெனப் பயன்படுத்திக்கொண்டு, உரமேற்றிச் சீரிய முறையிலே வளர்த்து வந்திருக்கிறோம்; பெருக்கி வந்திருக்கிறோம்.

நவீனங்கள் பலதரப்பட்டவை. இயற்றப்படும் முறைகளும் பல் வேறானவை. நாளுக்கு நாள் பல்வேறு உத்திகள் தோன்றி நாவல் இலக்கியத்தை வளம் பெறச் செய்து வருகின்றன.

இலக்கியம் என்பது காலக் கண்ணாடி; சமூகத்தைப் பிரதிபலித்துக் காட்டும் மாயக் கண்ணாடி என்று சொல்வார்கள். மக்களின் மனத்தை ஈர்த்த மந்திர—தந்திர சால வித்தைகள் கொண்ட நவீனங்கள், அற்புத சாகசச் செயல்கள் நிறைந்த நவீனங்கள், சமூகத்தின் குறை - நிறைகளை எடுத்துக்காட்டும் நவீனங்கள், மனிதனின் சிறப்பியல்புகளை எடுத்தியம்பும் நவீனங்கள், மனக்கிளர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டும் நவீனங்கள், வரலாற்றுப் பெருமைகளை வடிக்கும் நவீனங்கள் என்று இப்படியாகப் பலதுறை நவீனங்கள் நம் நாட்டிலும் உருவாகியுள்ளன.

இந்த நாவற்கலை நம் நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே இறக்குமதியான பொருள். செப்பும் மொழி பல உடைய நம் பாரத அன்னையின் எந்த மொழி இதனை முதன் முதலில் தனதாக்கிக்கொண்டது என்று கேட்டால், வங்க மொழியைத்தான் சொல்ல வேண்டும். அதையொட்டி இந்தி மொழியிலும் நாவல் இலக்கியம் உருப்பெறலாயிற்று. திரு. வேதநாயகம் பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' முதல் நவீனம் என்று நம் தமிழ் மொழியில் கருதப்படுவது போல, சிலர் இந்தி மொழியிலே இன்ஷா அல்லா கான் எழுதிய 'இராணி கேதகீகீ கஹானி' என்னும் கதையைச் சிலர் முதல் நவீனமாகக் கூறுகின்றனர். அதை ஒரு பெருங் கதையாகக் கொள்ளலாமே யொழிய உண்மையில் லாலா ஸ்ரீனிவாஸ தாஸ் எழுதிய 'பரீக்ஷா குரு' என்னும் நவீனத்தைத்தான் முதல் நவீனமாகக் கொள்ள வேண்டும். பிரதாப முதலியார் சரித்திரத்தைப் போலவே 'பரீக்ஷா குரு' என்னும் இந்த நவீனத்திலும் தில்லி வாழ் சேட்ஜி ஒருவரின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் இதன் ஆசிரியர்.

இதை யொட்டினாற் போல டாகுர் ஜக் மோகன் சிங் என்பவர் 'சியாமா ஸ்வப்ன' என்னும் நவீனத்தைச் சிருஷ்டித்தார். இது காதலை நிலைக்களனாகக் கொண்ட நவீனம். கிராமச் சூழ்நிலையை நேர்த்தியாகச் சித்திரிப்பது.

வாசிப்பவர்கள் வியப்புத் தாளாமல் வாயில் விரல் வைக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு அம்பிகா தத்த வியாஸ் என்பவர் 'ஆச்சரிய விருத்தாந்த்' என்னும் நவீனத்தை இயற்றினார். பாலகிருஷ்ண பட் என்பவர் 'ஸௌ அஜான் ஏக் ஸுஜான்,' 'நூதன பிரும்மசாரி' என்ற நவீனங்களை வியப்புப் பொருளாக மட்டும் ஆக்காமல் பாத்திரப் பண்புகளும் கொண்டதாகச் சமைக்க முயன்றிருக்கிறார்.

இக்காலத்தில் பல வங்க மொழி நவீனங்கள் இந்தியிலே மொழி பெயர்க்கப் பட்டு இந்தியிலே சொந்த நவீனங்கள் இயற்றும் ஆர்வத்தை ஊட்ட முயன்றன.

ஏராளமான வாசகர்களைப் பெற்ற நவீனங்கள் இந்தியிலே 'சந்திர காந்தா,' 'சந்திர காந்தா சந்ததி' என்பவையாகும். இவற்றை எழுதியவர் தேவகி நந்தன் கத்ரி என்பவர் ஆவார். மந்திர சால மாய வித்தைகள் நிறைந்த இந்த நவீனங்களைப் படித்து இன்புற எத்தனையோ பேர் இந்தி மொழி கற்றனர் என்னும் பெருமை இவற்றுக்கு உண்டு.

அற்புத சாகசங்களுக்கு இருக்கும் பெரு மதிப்பைக் கண்டு கோபால்ராம் கஹ்மரி போன்றவர்கள் ஏராளமான துப்பறியும் நவீனங்களும், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த நாவல்களும் எழுதிக் குவித்தனர். கோபால்ராம் கஹ்மரி 'ஜாஸூஸ்' (துப்பறிபவன்) என்னும் பெயரில் ஒரு பத்திரிகையேகூட நடத்தினர்.

வங்காளி நவீனங்களின் வளப்பத்தைக் கண்ணுற்று கிஷோரிலால் கோஸ்வாமி என்பவர் அம்முறையைப் பின்பற்றிப் பல நவீனங்கள் இயற்றினர். அயோத்யா சிங் உபாத்தியாய் 'டேட் ஹிந்தீகா டாட்', 'அத்கிலாபூல்' என்னும் நவீனங்கள் இயற்றினர். இந்தி நாவல் வளர்ச்சியின் முதல் கட்டத்திலே மேலே குறிப்பிட்டவர்களைத் தவிர லஜ்ஜாராம் மேத்தா, விரஜநந்தன் சஹாய் ஆகியவர்களும் சிறப்பான பணி புரிந்திருக்கின்றனர்.

இரண்டாவது கட்டத்தில்தான் இந்தி நவீனம் வெகுவாக வளர்ச்சி பெற்றது. இதுவரை படித்துச் சுவைப்பதற்கே பிரயோசனப்பட்ட நவீனங்கள், மாயா சால வித்தைகளும் ஆவலைத் தூண்டிவிடும் அற்புதச் செயல்களும் நிறைந்த நவீனங்கள் ஒரு திருப்பம் பெற்றன. சமூக வாழ்க்கையோடு ஒட்டிச் சமூக வாழ்க்கையின் குறை நிறைகளைக் கண்டு அதைச் செப்பனிடவும் பயன்படக்கூடும் என்பதை அவை எடுத்துக் காட்டின. இம்முயற்சிக்கு வழிகாட்டியாக விளங்கியவர் திரு. பிரேம்சந்த் ஆவார். இவருடைய பல நவீனங்கள் தமிழ் வாசகர்களுக்கு நன்கு பரிச்சயமானவையே. 'வரதட்சிணைக் கொடுமை மனித சமூகத்தை எப்படியெல்லாம் ஆட்டிவைக்கிறது? மனம் இல்லாத மணம் எத்தகைய விபரீதத்தில் கொண்டு விடுகிறது?' என்பதையெல்லாம் தமது 'சேவா சதனம்' என்னும் நவீனத்திலே மிகச் சுவைபடச் சித்திரிக்கிறார். 'பிரேமாச்ரம்' என்னும் நவீனத்திலே நாட்டுக்கே முதுகெலும்பாக விளங்கும் குடியானவர்களின் இழிநிலை, ஜமீன்தார்களின் கொடுமை, போலீஸாரின் அடக்குமுறை ஆகியவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி நாட்டுக்கு ஒரு 'பிரேமாச்ரம'த்தை நிலைநாட்ட முயன்றுள்ளார். 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்னும் கோஷத்தை அன்றே பிரேம்சந்த் தொடங்கிவிட்டார்.

அதாவது 'ஒன்று, நிலம் இப்புவியைப் படைத்த கடவுளுடையது. அல்லது, ஆண்டவன் ஆணைப் படி அதைப் பயன்படுத்துகிறானே, அந்தக் குடியானவனுடையது. ஜமீன்தார்கள் தங்களை மக்களின் எசமானராகக் கருதாமல் ஊழியராகக் கருத வேண்டும்' என்று கூறுகிறார். ஜமீன்தாரி ஒழிப்புக்கு இவரது இந்த நவீனம் எப்படி ஆக்கமளிப்பதாக அமைந்தது என்பதை எடுத்துச்சொல்லத் தேவையில்லை.

தேச விடுதலைக்காகக் காந்தியடிகள் முழக்கிய சத்தியாக்கிரக சங்க நாதம் இவரை 'ரங்க்பூமி' என்னும் நவீனம் எழுதத் தூண்டியது. நல்லிலக்கியம் சமூகத்தின் அக்காலத்திய நிலையைப் பிரதிபலிப்பதாக அமையவேண்டும் என்பதற்கு இவரது 'கர்மபூமி' என்னும் அரசியல் பின்னணியை ஆதாரமாகக் கொண்ட நவீனத்தைக் கூறலாம். 'கிராமத்துக்குப் போ' என்னும் காந்தியடிகளின் கோஷத்தைச் சித்திரித்துக் குடியானவர்களின் மேம்பாட்டுக்கு அடிகோலிய நவீனம் 'கோதான்' என்னும் பெரிய நவீனமாகும்.

இந்த நவீனங்களிலெல்லாம் பிரசார வாசனை அடிக்கிறது என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆனல், இவரது 'கபன்' என்னும் நவீனம் குடும்பச் சூழ்நிலையைச் சித்திரிக்கும் சிறந்த நாவல். பெண்களின் நகையாசையை மையமாகக் கொண்டு புனையப்பட்ட இந்த நவீனம் பல தரப்பட்ட குணச்சித்திரப் பாத்திரங்களையும், ருசிகரமான சம்பவக் கோப்புகளையும் திரட்டித் தருகிறது. 'நிர்மலா', 'பிரதிக்ஞா' போன்ற மற்ற நாவல்களும் மனத்தைக் கவர்வன. இவரது எழுத்திலே ஒரு

வேகம், நடையிலே ஓர் ஓட்டம், கதையமைப்பிலே ஒரு திறன்—எல்லாமாகச் சேர்ந்து 'உபன்யாஸ் சம்ராட்' அதாவது நாவல் சக்கரவர்த்தி என்னும் பட்டத்துக்குரியவராக இவரைச் செய்துவிட்டன. அன்றும், இன்றும், என்றும் இவர் எழுத்து பிறர் பார்த்துப் பின்பற்றக்கூடியதாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இவரைப்போலவே உயிருள்ள நடையில் உயர்ந்த கருத்துச் செறிவுடன் இரு நவீனங்களை இயற்றியவர் திரு. விச்வநாத் சர்மா என்னும் 'கௌசிக்' அவர்கள். 'மா', 'பிகாரிணி' என்னும் இரு நவீனங்களும் உள்ளத்தைத் தொடும் கதாபாத்திரங்களை உடையன. சம்பாஷணையிலேயே கதையை நடத்திச் செல்லும் முறை, எங்கும் ஆசிரியர் குறுக்கே புகுந்து அபார வருணனையையோ, கற்பனையையோ புரிந்து கலந்து கொள்ளாமை இவரின் நவீனங்களுக்குள்ள தனிச் சிறப்பு. பேச்சிலேயே கதாபாத்திரங்களின் குணச்சிறப்பு புரிந்துவிடும்; சூழ்நிலை உருவாகிவிடும். படிப்பவர் பக்கத்திலிருந்து அநுபவிப்பதுபோன்ற உணர்ச்சியைப் பெறுவர். 'மா'—அன்னை என்னும் நவீனத்திலே சொந்தத் தாய் தன் ஒரே புதல்வனைத் தத்துக் கொடுத்து விடுகிறாள். செல்வத்தில் புரளும் தத்து எடுத்துக் கொண்டவள் அவனை வளர்க்கிறாள். அவனோ தத்தாரியாகித் திரிகிறான். தனது இன்னொரு சொந்த மகனைக் கொண்டு அவனை நல்வழிக்குக் கொண்டு வருகிறாள். திருந்திய மகன் சொல்லும் சொற்கள் அன்னையின் பெருமையை எப்படிப் படம் பிடித்துக் காட்டுகின்றன, பாருங்கள் :

'அம்மா ! அண்ணனைப்போல் நானும் உன்னுடன் இருக்கும் பேறு பெற்றிருந்தால், இன்று கொஞ்சம் உருப்படியாக இருந்திருப்பேன். இரண்டு-மூன்று கணங்கள் உன் அரவணைப்பிலே இருந்து நான் பெற்ற பேரின்ப மகிழ்ச்சி, இன்னொரு தாயின் மடியில் மணிக் கணக்காகக் கிடந்தும் கிட்டவில்லை. அன்னை - ஆகா ! எத்தனை அன்பான அருஞ்சொல் !' நவீனத்தை முழுக்கப் படிக்கும் பொழுது, நாம் அந்தச் சொல்லின் பெருமையை இன்னும் நன்றாக உணரமுடியும்.

'பிகாரிணி' என்னும் நவீனம் தமிழில் யசோதரா என்ற தலைப்பிலே 'கல்கி' பத்திரிகையில் வெளியாகியுள்ளது. காலத்தின் கோலத்தில் பிச்சைக்காரியான ஒரு பெண், இராம்நாத் என்னும் இளைஞனின் உள்ளங் கவர்கிறாள். ஆனால் சமூகம் அவர்கள் இருவரையும் பிரித்து வைக்கும் பணியே செய்கிறது. இராம் நாத்தின் கோழை நெஞ்சம், ஜஸ்ஸோவின் உறுதியுள்ள மனம் - இவற்றை நேர்த்தியான முறையிலே சித்திரித்திருக்கிறார் ஆசிரியர். இராம் நாத் இன்னொரு பெண்ணை மணந்து கொள்கிறான். அப்பெண்ணுக்கு அலங்காரம் செய்யும் பொறுப்பை அவனுக்கே உள்ளம் ஈந்து விட்ட ஜஸ்ஸோ ஏற்கிறாள். அலங்காரம் செய்யும் பொழுது புது மணப்பெண், 'இன்று நீ என் உயிரை வாங்கிவிட்டாயே' என்று அன்புடன் கடிந்துகொள்கிறாள். அதற்கு ஜஸ்ஸோ அளிக்கும் பதில் நம் உள்ளத்தை உலுக்குகிறது. என்ன ஆழமான கருத்து ! அழுத்தமான சொல் ! 'பதிலுக்குத்தான் நான் என் உயிரையே உன்னிடம் ஒப்படைத்திருக்கிறேனே !' இந்தக் கட்டத்தைப் படிக்கும்பொழுது, கண்ணில் நீர் வராமற்போகாது.

ஜயசங்கர் பிரஸாத் இந்தியில் சிறந்த கவிஞர் ; புகழ்பெற்ற நாடகாசிரியர். கற்பனைச் செறிவும், வரலாற்று அறிவும்நன்கு அமையப் பெற்றவர். 'கங்கால்,' 'தித்லீ' என்று இரு சமூக நவீனங்கள் இயற்றியுள்ளார். சமூகத்திலே புரையோடியிருக்கும் சில தீய பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கருத்துக்களை அப்பட்டமாகச் சித்திரித்திருக்கிறார்; அதோடு பாரதீய தாம்பத்திய வாழ்க்கையின் பெருமையையும் அழகுபடச் சமைத்திருக்கிறார்.

இவரைக் காட்டிலும் ஒரு படி மேலே போய்விட்டார் பேசன் சர்மா உக்ர என்னும் ஆசிரியர். கசப்பிலே இனிமை தடவிச் சமூகத்தின் தீய கோணங்களைச் சித்திரித்துப் படிப்பவர்களைப் பரவசப்படுத்திக் கடைசியில் தீமையைக் கண்டிக்கத்தான் செய்கிறார். எனினும் மக்கள் மனத்திலே சுவை மிகுந்த அந்தப் பகுதி மட்டுமே நிலைத்து நிற்குமோவென ஐயம் தோன்றுகிறது. 'தில்லீகா தலால்', 'புதுவாகீ பேடீ', 'தோஜக்கீ ஆக்', 'சந்த் ஹஸீனோங்கே கதூத்' முதலியவை இவருடைய நவீனங்களில் சில. இவர் சொல்லாட்சி

மிக்கவர்; நயம் மிகுந்த நடையிலே எழுதுபவர். வருணனைத் திறன் மிக்கவர். 'தோஜக்கீ ஆக்'கிலிருந்து ஓர் உதாரணத்தைப் பாருங்கள்:

'எனக்கு ஒரு மனைவி இருந்தாள். ரோஜாவைப்போல் சிவந்தவள். முத்தைப்போல் நீர்மை கொண்டவள். கோகினூரைப்போல் விலை மதிப்பற்றவள். நன்மையைப்போல் நல்லவள். சந்திரனைப்போல் எளியவள். பிள்ளைப் பிராயத்துச் சிரிப்பைப்போல் கபடமறியாதவள். உயிரைப்போல் பிரியமானவள்.'

'எனக்கு ஒரு குழந்தை இருந்தது. நிலவைப்போல் நிறம் கொண்டது. புதுச் சந்திரனைப்போல் பிரியமானது. யுவதியின் கன்னங்களைப் போல் மென்மையானது. அன்பைப்போல் எழிலுடையது. முத்தத்தைப்போல் இனிமையானது. நம்பிக்கையைப்போல் கவர்ச்சிகரமானது. மட்டற்ற மகிழ்ச்சியைப்போல் இன்பம் தருவது.'

'எனக்கு ஓர் அன்னை இருந்தாள். மசூதியைப்போல் கிழடு. மாம்பழத்தைப் போல் பழுத்தவள். தயைபோல் தாராள குணமுள்ளவள். பிரார்த்தனையைப்போல் உதவுபவள். இயற்கையைப்போல் கருணை மிக்கவள். கடவுளைப்போல் அன்பானவள். புனித குரானைப்போல் தூய்மையானவள்.'

உக்ரவை ஒட்டி ரிஷபசரண் ஜைன் போன்றவர்கள் பல நவீனங்கள் இயற்றியிருக்கிறார்கள்.

கவி பிரஸாதைப் போலவே சூரிய காந்த திரிபாடி நிராலா என்னும் கவிஞர் 'அலகா', 'அப்ஸரா', 'குல்லீபாட்'போன்ற நவீனங்கள் இயற்றிப் பணியாற்றியிருக்கிறார்.

பிரேம்சந்தின் நவீனங்களிலே தனிப்பட்ட மனிதன் கதாநாயகனாக வந்தாலும், அவனைச் சார்ந்த ஒரு வகுப்பே கதாபாத்திரமாக இயங்குவதைக் காண்போம். ஜைனேந்திர குமாரின் நவீனங்களிலே பாத்திரங்களைக் காட்டிலும் அவர்களது மனப்போக்கே முக்கியத்துவம் வாய்ந்தது. குறைந்த கதாபாத்திரங்களைக் கொண்டு நிறைந்த மனத் தத்துவத்தைத் தரும் ஆசிரியர் திரு. ஜைனேந்திரர் என்று சொன்னாலும் பொருந்தும். 'ஸுநீதா', 'பரக்', 'தியாக்பத்ர', 'தபோ பூமி', 'கல்யாணி' ஆகிய இவருடைய நவீனங்கள் பிரசித்தமானவை. இவரது கதையின் கட்டுக்கோப்பைக் கவனித்துக் கற்பனை செய்துகொள்ளும் பொறுப்பு பல இடங்களில் வாசகர்களைச் சேர்ந்துவிடும். எனவே, இவரைப் படித்தவர்களுக்குரிய எழுத்தாளர் என்றுதான் குறிப்பிடவேண்டும்.

இவரைப்போலவே, உள்ளத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு நவீனங்கள் இயற்றியவர்களிலே இலாசந்திர ஜோஷி, அக்ஞேய் போன்றவர்களையும் குறிப்பிடலாம். இலாசந்திர ஜோஷியின் 'கிருணமயி', 'ஸந்யாஸீ', 'பர்த்தே கீ ராணீ' போன்றவை பிரசித்தமானவை. அக்ஞேயரின் 'சேகர் ஏக் ஜ்வனீ' சுய சரிதை உருவத்தில் எழுதப்பட்ட ஒரு நாவல்.

இந்தியிலே சரித்திர நவீனங்களுக்கு விருந்தாவன்லால் வர்மாவைத்தான் குறிப்பிட வேண்டும். இவர் எழுதிய 'கட்குண்டார்' என்னும் வரலாற்று நவீனம் காதல் ரசம் நிறைந்த நல்லதொரு புதினமாகும். 'விராடாகீ பத்மினி','மிருக நயனி', 'ஜான்ஸீ கீ ராணீ' இவருடைய மற்ற சரித்திர நவீனங்கள். 'கோத்வால் கீ கராமாத்' போன்ற சமூக நவீனங்களையும் இவர் இயற்றியிருக்கிறார்.

சரித்திரப் பகைப்புலத்திலே பகவதி சரண் வர்மா எழுதிய 'சித்திரலேகா' என்னும் நவீனம் ஒரு பிரச்சினை நாவல். பாவம் என்றால் என்ன? என்று தொடங்கி அதை ஆராயும் முயற்சியிலே ஓர் அற்புதமான நவீனமாகச் சமைத்துவிட்டார் ஆசிரியர் அதனை. 'தீன்வர்ஷ', 'டேடேமேடே ராஸ்தே', 'பூலே பிஸ்ரே சித்ர' என்பன இவரின் சமூக நாவல்கள். 'அப்னே கிலௌனே' என்னும் பெயரில் ஒரு நகைச்சுவை நவீனமும் எழுதியிருக்கிறார் இவர்.

நகைச்சுவை நவீனங்கள் இயற்றுவதில் அன்னபூரணானந்த், ஜீ. பி. வாஸ்தவ் போன்றவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். உயர்ந்த ரக நகைச்சுவை நவீனங்கள் இனிதான் உருவாக வேண்டும்.

ஆசார்ய சதுர்ஸேன் சாஸ்திரி பல சமூக, சரித்திர நவீனங்கள் எழுதி நாவல்

வளர்ச்சியிலே பெரும்பங்கு கொண்டவர். 'ஹிருதய் கீ ப்யாஸ்', 'ஹிருதய் கீ பரக்', 'அமர் அபிலாஷா' போன்றவை குறிப் பிடத்தக்கவை.

திரு. ஸியாராம் சரண் குப்தா எழுதிய 'நாரீ' என்னும் நவீனம் 'பெண்' என்ற தலைப்பில் தமிழில்கூட வெளியாகியுள்ளது. 'கோத்', 'அந்திம்', 'ஆகாங்ஷா' என்பவை இவரின் மற்ற நவீனங்கள்.

அரசியல் கொள்கைகளைச் சிறிதே புகுத்தி எழுதப்பட்டிருக்கும் 'தாதா காம ரேட்', 'தேசத் துரோகி' போன்ற நவீனங் கள் யஷ்பால் என்பவர் எழுதியவை. இவர் 'திவ்யா' போன்ற வேறு பல நவீனங்களும் இயற்றியிருக்கிறார்.

பெண்களின் மனத்தைப் பெண்கள் புரிந்துகொள்வதுபோல் பிறரால் புரிந்து கொள்ள முடியாது. இவ் வுண்மையை நிரூபிக்கும் வகையில் திருமதி. உஷாதேவி மித்ராவின் 'வசன்கா மோல்', 'பியா', 'ஜீவன் கீ முஸ்க்யான்' என்னும் நவீனங் கள் அமைந்துள்ளன.

உபேந்திரநாத் அஷ்க் எழுதிய 'கிர்தீ தீவாரேன்', பகவதி பிரஸாத் வாஜபேயி எழுதிய 'தோ பஹனேன்,' இராமேச்வர் சுக்ல என்னும் 'அஞ்சல்' எழுதிய 'சட்தீ தூப்', நரோத்தம் பிரஸாத் நாகர் எழுதிய 'தின்கே தாரே', சர்வதானந்த் வர்மா எழுதிய 'நரமேத்', ஓங்கார் சரத் எழுதிய 'அந்திம் பேலா', நாதா-ரிஷ்தா', 'கூன் கராபீ', தர்மவீர் பாரதி எழுதிய 'குனு ஹோங்கே தேவதா' ஆகியவை—ஏன்— இன்னும் பலப்பல எழுத்தாளர்களுடைய சிறந்த நவீனங்கள் குறிப்பிடப்பட வேண் டியவை ஆகும்.

குறிப்பிட்ட பிரதேசங்களைத் தங்கள் கதைகளின் நிலைக்களனாகக் கொண்டு திரு. முனீச்வரநாத் ரேணு, கைலேஷ் மடியானி போன்றவர்கள் சிறந்த பிரதேசவாரி நவீனங்களைப் படைத்திருக்கிறார்கள்.

இந்தி நாவல் இலக்கிய வளர்ச்சி யிலே இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுங்கூட ஈடுபட்டிருக்கி றார்கள்.

அம்ருதலால் நாகர், அனந்த் கோபால் ஷேவ்டே, இரமேஷ் செளத்ரி போன்றவர் கள் குஜராத்தி, மராத்தி, தெலுங்கு ஆகிய மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்ட வர்கள். சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு அம்ருத்லால் நாகர் எழுதியுள்ள 'ஸுஹாக் கே நூபுரு'ம், சிப்பாய்க் கலகத் தைப் பின்னணியாகக் கொண்ட 'சத்ரஞ்ஜ் கே மோஹரே' என்னும் நவீனமும் குறிப் பிடப்பட வேண்டியவை. அனந்த் கோபால் ஷேவ்டே எழுதிய 'ஜ்வாலாமுகீ' என்னும் நவீனம் பல மொழிகளிலும் வெளியாக இருக்கிறது. திரு. இரமேஷ் செளத்ரியின் சில நவீனங்கள் வட-இந்திய இலக்கியப் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன என்றால், அதிகம் சொல்வானேன்!

தமிழிலிருந்து பேராசிரியர் 'கல்கி' யின் 'கள்வனின் காதலி', 'சோலைமலை இளவரசி,' 'பார்த்திபன் கனவு' முதலிய நவீனங்களும், திரு. சிதம்பர சுப்பிரமணி யன் அவர்களின் 'இதய நாதம்' என்ற நவீனமும் இந்திக்கு ஏற்றுமதியாகி யிருக் கின்றன.

சுருங்கக் கூறுமிடத்து இந்தி இலக்கி யத்தில் நாவல் துறை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என்றுதான் சொல்ல வேண்டும். வெறும் காதல் கதைகளன்றிப் பல்வேறு சோதனைகளும் அங்கு நடை பெற்று வருகின்றன. இதை நல்ல சூசகம் என்று மகிழ்ச்சியோடு குறிப்பிடவே தோன்றுகிறது. 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்னும் பாரதியின் வாக்கைப் பின்பற்றிச் செயற் பட முனைந்திருக்கிறது இந்தி இலக்கியத் தின் நாவல் துறை என்றால், அதில் எவ் வித ஐயமுமில்லை.

THE RITZ GROUP OF HOTELS

Expanding to serve tourism

With the acquisition of two hotels in Mysore, the Ritz Group of Hotels has taken another step forward in creating a chain of excellent hotels throughout India.

Construction of the Ritz Continental Hotel in Calcutta is also to be undertaken shortly. In this way, the Ritz Group gives concrete expression to its dedication to the cause of tourism and to its desire to earn more foreign exchange for the country.

The hotels of the Ritz Group, with their air-conditioned comfort and attractive decor, provide the highest standards of efficient service. The Ritz Group stands to day at the forefront of the hotel industry in India.

*

RITZ HOTEL, BOMBAY

AIRLINES HOTEL, BOMBAY.

RITZ HOTEL, HYDERABAD

RITZ HOTEL, COONOOR

HOTEL METROPOLE, MYSORE

HOTEL KRISHNARAJSAGAR, MYSORE

RITZ CONTINENTAL HOTEL, CALCUTTA

(Under construction)

மானுட வெற்றி!

[தமிழழகன்]

மானுடம் வென்றது;
　　மானுடம் வென்றது;
மங்கலச் சேதியடா!—வெளி
வானிடைச் சென்றோர்
வனிதையும் ஆணுமாய்
வந்தது கியாதியடா!

ஆம்; இயற்கையை
அறிவின் வலிமையால்
அன்னவர் வென்றுவிட்டார்!— இந்தப்
பூமியும் கோள்களும்
புண்ணிய யாத்திரை
போய்வரச் சென்றுவிட்டார்!

சாந்திச் சமூகநற்
சன்னிதி வாயிலில்
சார்ந்ததோர் வெற்றியிது!—எதிர்
நீந்தும் சமத்துவ
நேயரஷ் யாவில்
நிகழ்ந்ததோர் வெற்றியிது!

கொலையும்போர் ஆயுதக்
கொள்கையும் மோதும்
கொடும்வெறி வையகத்தே—எந்தக்
கலையும்விஞ் ஞானமும்
மக்களுக் கேஎன்றோர்,
காணிக்கை யாய்ப்படைத்தே!

நம்பிக்கை இன்று
நமக்குமுன் நின்று
நவயுகம் காட்டுதடா!—ஆம்;
அன்புக்கை எங்கோ
அரவணைத் திந்த
அகிலமும் கூட்டுதடா!

ரத்தமும் யுத்தமும்
ராச்சிய வேட்கையின்
பித்தும் ஒழிவதடா!—இஃதே
புத்தம் புதிய
புகழ்ச்சமு தாயம்
புலர எழுவதடா!

தமிழகத்தின் கல்வி மொழி

[தெ. பொ. மீனாட்சிசுந்தரன்]

கல்வி, மொழிவழியேதான் நிகழக் கூடும். இன்று எந்த மொழியில் கல்வியைக் கற்பிப்பது என்ற கேள்வி எழுகிறது. இது இக்காலத்தில் எழுகின்ற கேள்வி. அந்தந்த நாட்டிலே அந்தந்த நாட்டினர் பேசும் மொழியிலேதான் கல்வி கற்பித்து வந்தார்கள்; வருகின்றார்கள். தமிழ் நாட்டில் பழங் காலத்தில் தமிழில்தான் கற்று வந்தார்கள். வடமொழி முதலியவற்றைக் கற்றவர்களும் உண்டு; அப்போதும் அது துணைமொழியாகவே வளர்ந்தது. அந்தத் துணைமொழியில் பேசியும் எழுதியும் பிற நாட்டவரோடு தொடர்பு கொண்டு வாழ்ந்து வந்தனர் தமிழர். எனவே, தம் நாட்டினரோடு எழுதிப் பேச ஒரு மொழியும், உலகத்தோடு எழுதிப் பேச வேறொரு மொழியும் பயன்படுகின்ற நிலை தோன்றியது. ஆனால், அடிப்படைக் கல்வி நாட்டு மொழியில்தான் அப்பொழுது நிகழ்ந்து வந்தது. உயர்நிலைக் கல்வியிலே புகுவோராய் ஒருசில அரிய கருத்துக்களைக் கூறும் நூல்களைக் கற்போர் உலகம் முழுவதும் சிறிய அளவிலேயே அந்தக் காலத்தில் இருந்தமையால், ஒவ்வொரு நாட்டு மொழியில் தனித்தனியே எழுதாமல் பல நாட்டிற்கும் பொதுவான மொழியில் அவற்றை எழுதுவதில் ஓர் எளிமை இருந்தது. மேனாட்டில் இலத்தீன்போலக் கீழ் நாட்டில் வடமொழி உலகப் பொதுமொழி ஆயிற்று. அதனால் அறிவுத் துறைகள் பெரும்பான்மையும் அந்தந்த நாட்டின் மொழிகளில் ஒரு சிறிதளவே யன்றிப் பெரிய அளவில் பரவவில்லை. இந்த நிலையில் கல்வி மொழி இரண்டாக உயர்நிலையில் அமையக் காண்கிறோம். நாட்டு மொழிக் கல்வி, உலக மொழிக் கல்வி என்ற பாகுபாடு தோன்றுகிறது.

ஒவ்வொரு நாடும் உரிமை பெற்று அந்தந்த நாட்டின் பண்பாட்டில் ஊக்கங் காட்டித் தேசியத்தை வளர்த்துவந்த பொழுது, எல்லாக் கருத்துக்களையும் நாட்டு மொழியிலேயே கற்றும் கற்பித்தும் வருகின்ற முயற்சி பெருகியது. இலத்தீன் மொழிக் கல்வி குறைய, ஆங்கிலம் முதலிய மொழிகளில் கல்வி உயர்ந்ததை மேலை நாடுகளில் காண்கிறோம். ஆனால், ஆங்கிலேயர்போல ஒருசில மொழி பேசுவோர் உலகத்தின் பெரும் பகுதியில் அரசியலாலும், வாணிகத்தாலும் உயர்ந்தோங்கினர். அதன் காரணமாக அவர்கள் மொழி உலகத்தின் பல பகுதிகளில் ஆட்சி மொழி ஆயிற்று. பலரும் அந்த ஆட்சி காரணமாக அவற்றை அறிய முயன்றனர். ஸ்பானிஷ், பிரஞ்சு, ஆங்கிலம் போன்றவை ஆட்சி மொழியாக மட்டுமல்லாமல் உலக மொழியாகவும் வளர்ந்துள்ளன. பெரும்பான்மையோர் ஒரு வகையாக அறிந்த மொழியாக அவை விளங்குகின்றன. எனவே இவை இலத்தீனும் வடமொழியும் போல உலக மொழியாகவும் உயர்ந்து ஓங்கியுள்ளன. இதனால் அவை பல நாட்டில் ஒரு துணைமொழியாகக் கற்கப்பெற்று வருகின்றன.

இங்கே மற்றொரு வளர்ச்சியும் காண்கிறோம். மேனாட்டு மொழிகள் மேனாட்டில் எழுந்த, வளர்ந்த காலத்தின் பயனாக விளைந்த வளர்ச்சி இது. விஞ்ஞானத்தை விளக்குகிற மொழியாக அவை அமைந்துவிட்டன. முதலில் விஞ்ஞானத்தை வளர்த்த மேனாட்டவர்கள் இலத்தீனில் எழுதுவதை விட்டுத் தம் தாய்மொழியில் எழுதத் தொடங்கியதால், இந்த நிலை ஏற்பட்டது. தாய் மொழியில் எழுதிய நூல்களும் பல்லாயிரக் கணக்கில் செலவாயின. ஆனால் அந்த நூல்களைப்போல ஒவ்வொரு நாட்டு மொழியில் எழுதப்படும் நூல்களும் பல்லாயிரக் கணக்கில் செலவாகும் என்பதற்கு இல்லை. எனவே அந்த அளவில் அத்தகைய நூல்கள் பிற மொழியில் வருவது அருமை. அவ்வுலக மொழிகளில் பல கோடி மக்கள் படிக்க இருப்பதால், அந்தத் தேவைக்கு ஏற்ப நூல்களும் எழுதப் பெற்

றுக் கடைக்கு வந்து மலிகின்றன. அத்தகைய தேவை பிற மொழிகளில் எழுவதற்கு இல்லை; அதனால் கடைக்கு வருமாறு அந்தக் கணக்கில் எழுதுவாரும் இல்லை.

அன்றியும் நூல்களே அல்லாமல் நாள்தோறும் புத்தம் புதியனவாகத் தோன்றுகிற பல அறிவு வளர்ச்சிக் கருத்துக்களும் அவ்வப்போது கட்டுரைகளாக ஆராய்ச்சி இதழ்களில் உலக மொழிகளில் வெளிவருகின்றன. எந்த நாடும் முற்போக்கில் இருக்கவேண்டுமானால், இவற்றைக் கற்றுத்தான் தீரவேண்டும். உலகத்தில் முன்னேறியுள்ள ஆங்கில மொழி பேசுகின்றவர்களுங்கூட பிரஞ்சு, ருசியன், ஜெர்மன் என்ற மொழிகளில் வரும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அறிவதற்காக அம்மொழிகளில் சிலவற்றைக் கற்றே முன்னேறுகிறார்கள். இந்த மொழிகளில் வரும் கட்டுரைகளை உலகினர் வேண்டுவதால், அவற்றை மொழிபெயர்க்கும் நிலையங்களும் பெருவாரியாக எழுந்துள்ளன. ஆனால் இவை அந்த மூன்று நான்கு மொழிகளில்தான் மொழி பெயர்க்கக் கூடும்.

அன்றியும், இந்த மொழிகள் உலகத்தின் பல இடங்களில் ஆட்சி செலுத்தி வந்தமையின், பல நாட்டு மொழிகளில் உள்ள சிறந்த நூல்களின் மொழிபெயர்ப்புகள் அங்கே எளிதில் கிடைக்கின்றன. எனவே, எந்த நூலையும் அந்த மொழிகளில் ஒருவன் படித்து முன்னேறலாம். இந்த வகையாலெல்லாம் பார்க்கும்பொழுது, ஆங்கிலம் உலக மொழிகள் அனைத்தினும் சிறந்துள்ளது. பிரான்சு, ருசியா முதலிய நாடுகளில்கூட ஆங்கில மொழி துணைமொழியாகவே உள்ளது. ஆலந்து, டென்மார்க்கு போன்ற சிறிய நாடுகள் கட்டாயமாக இத்துணைமொழியைக் கற்றுவருகின்றன. தங்களுடைய மொழியிலேயே எல்லா நூல்களையும், எல்லாக் கருத்துக்களையும் கற்பதற்கு அம்மேல்நாடுகளுக்கும் வாய்ப்பு இல்லை.

இதே நிலையில்தான் கீழை நாட்டில் உள்ள நாடுகளெல்லாம் உள்ளன. எனவே, தம்முடைய நாட்டு மொழியில் கல்வி கற்பதோடு ஆராய்ச்சித் திறன் பெருக உயர்நிலைக்கல்வி கற்றுவருவதற்கு ஆங்கிலத்தையே துணைமொழியாகக் கற்க வேண்டியிருக்கிறது. தமிழிலேயே இத்தகைய நூல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வரும் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழனுடைய ஆராய்ச்சி உலகம் போற்றும் திறன் படைத்தவையாகப்பெருவாரியாக வரும்போது, பிறர் இவ்வாராய்ச்சிக் கட்டுரைகளை நேர்முகமாகக் கற்கும் காலம் வரலாம். அப்பொழுதுங்கூட ஆங்கிலம் இந்தப் போக்கில் இந்த வழியில் நாம் முனைவதற்கு முன்னரே முன்னேறியிருப்பதால், அதனையும் முன்தாண்டித் தமிழ் பெருவாரியான நூல்களையும், கட்டுரைகளையும் எழுதுவதில் முன்னேறுவது எளிது அன்று. முயன்றால் முடியாதது இல்லை என்பது உண்மையே. ஆனால் அதுவரை ஆங்கிலம் நமக்குத் துணைமொழியாகவே அமைதல் வேண்டும். அதுவரை ஆராய்ச்சி உலகில் அது ஆராய்ச்சிக் கல்வி மொழியாகவே இருத்தல் வேண்டும். நாம் தமிழ் நாட்டில் கண்டுபிடிக்கின்ற உண்மைகள் குண்டு சட்டியில் குதிரை ஓட்டுவதாக இல்லாமல் உலக அரங்கில் இடம்பெற வேண்டுமானால், அந்த மொழியில்தான் எழுதி நம் நாட்டின் புகழையும், பெருமையையும், நம்மவரின் ஆராய்ச்சித் திறனையும் விளக்கிவருதல் வேண்டும். ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் அமைய வேண்டுவதன் இன்றியமையாமையைத் தமிழ்ப் பெருமை நாடுவார் மறத்தலாகாது. பிரஞ்சு, ஜெர்மன், ஜப்பான் முதலிய மொழிகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுகின்றவர்கள் முடிவில் ஆங்கிலத்தில் தம் கட்டுரைகளைச் சுருக்கி விளக்கிவருதல் ஒரு மரபு ஆகிவிட்டது. எனவே, ஆராய்ச்சி செய்வோருக்கு ஆங்கிலம் எந்நாளும் பயன்படும்போலவே தோன்றுகிறது. ஆராய்ச்சி உலகில் தமிழில் முடிவுகளை ஆராய்ந்தாலும், அவற்றை நாமும் மற்றவர்களைப்போல ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்தால்தான் நம்முடைய பெருமை உலகிற்கு விளங்கும். ஆக ஆராய்ச்சி மொழியாக ஆங்கிலம் அமையும். ஆனால் அங்குங்கூட அது துணைமொழியாகவே விளங்கும். இந்த நிலை எந்த நாட்டிலும் உண்டு. எனவே இது ஒரு குறை அன்று.

ஆனல் இது காரணமாக நாட்டு மொழிக் கல்வி முதன்மொழிக் கல்வியாக அமையவேண்டியதில்லை என்றும், ஆங்கில மொழிக் கல்வியே முதன்மொழிக் கல்வியாக அமையவேண்டும் என்றும் ஒருசிலர் கருதுகின்ருர்கள். இதன் விளைவு என்ன என்பதை இவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை. மொழி என்பது ஒரு கருவி என்பதை ஒத்துக்கொள்ளலாம். மொழியை மொழியாகக் கற்கின்ற நிலையை மறந்துவிட்டு அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்ற நிலையை ஆராயவேண்டும். ஒருவனுக்குக் குழந்தையிலிருந்தே விளங்குகிற முறையில் மொழிச்சிக்கல் இல்லாமல் கற்பிப்பது எளிது. அவனுக்கும் அவ்வாறு கற்பது எளிது. எனவே அவ்வாறு எளிதாகக் கற்கக்கூடியவற்றை வேற்று மொழியில் கற்பிப்பதனல் மொழிச்சிக்கலில் மாட்டிக்கொண்டு பொருளை மறந்துவிடுகிற நிலையே ஏற்படும். ''மொழியா சிறப்பு? கருத்தே சிறப்பு'' என்கின்றனர். ஆம். கருத்தே சிறப்பானல், ஒருவனுக்கு எளிதில் வருவதில் ஏன் கற்பித்தல் கூடாது? அறியாத மொழியில் வெளியிடத் தட்டுத்தடுமாறும்போது, அந்த மொழியில் எழுத உள்ளவற்றை உருப்போட்டுத் தொடங்குவானே யன்றிக் கருத்துக்களைத் தானக எண்ணி வளர்க்கின்ற நிலை ஒருவனுக்கு ஏற்படாது. குருட்டுப் பாடம் வேண்டுமா? அல்லது அறிவாராய்ச்சி வேண்டுமா? என்பதே கேள்வி.

இங்கே கல்லூரியிலும் தமிழைக் கல்வி மொழியாக அமைத்துக் கோவைக் கல்லூரி முதலியவற்றில் சோதனை செய்துவருவதை எண்ணிப் பார்க்க வேண்டும். வரலாற்று நூலைத் தமிழிலேயே படித்தபோது, அதைப் பற்றி ஆசிரியர்கள் சொல்லிக்கொடுப்பதற்கு ஒன்றும் இல்லாமற் போய்விட்டது. ஆனல் அதற்கு முன்னல் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுத்தபொழுது, ஆசிரியர்கள் குறிப்புக்கள் தரவேண்டி யிருந்தது. அதனையே மாணவர்களும் உருப்போட்டு வந்தனர். முதல் நூலுக்கு அவர்கள் போனதே கிடையாது. உருப்போடும் நிலையிலேயே இருந்ததனல், கருத்துக்களை ஆராய்ந்தறியும் வாய்ப்பே இல்லை. ஆனல், தமிழில் கற்கும்போது இந்தச் சிக்கல் இல்லாததால், அவர்கள் முதல் நூல்களை ஆராயவும், பலவகைச் சான்றுகளை ஆராயவும், கருத்தரங்குகள் அமைக்கவும் பெரிதும் முயன்றனர். அப்போது ஆங்கிலத்தில் உள்ள ஆராய்ச்சி நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தாமாகவே கற்க முந்துவதைக் காணலாம். எனவே துணை மொழியாக ஆங்கிலத்தைக் கற்பதாலே இவ்வாறு செய்வது அவர்களுக்கு அருமையாகவில்லை. ஆங்கில அறிவும் இதன் பயனக ஆழ்ந்து அகன்று ஓங்கத் தலைப்பட்டது. தாம் கண்ட கருத்துக்களை உலகம் அறிய எழுதவேண்டும் என்ற அவாவினலேயே ஆங்கிலத்தில் எழுதவேண்டும் என்று துடிதுடித்தார்கள். இது எதிர்பாராதவகையில் துணைமொழிக் கல்வியைச் சீர்படுத்தி உயர்த்துகிறது. ஆராய்ச்சிக் குழுவினர் இதனைக் கண்டார்கள். ஆங்கிலத்தில் கற்றவர்களைவிடத் தமிழில் கற்றவர்கள் ஆங்கில மொழித் தேர்வில் பெருவெற்றி அடைந்தார்கள். இதன் பயனக நாட்டு மொழிக் கல்வியும், உலக மொழிக் கல்வியும் ஒன்ருகி இயைந்துவிடுகின்றன. எனவே, ஆராய்ச்சிக் கல்வி தொடங்குவதற்குமுன்பு எல்லாம் நாட்டு மொழிவழிக் கல்வியே உண்மைக் கல்வி வளர்ச்சியாம் என்பது தெரிகிறது. இந்த வகையால் தான் துணைமொழிக் கல்வியும் சீர்பெற்று நல்ல பயனை அளிக்கும் என்றும் விளங்குகிறது. இதுதான் இயல்பு.

ஆனல், நம் நாட்டைப் பொறுத்தவரையில் மற்ருெரு சிக்கலும் உண்டு. அனைத்திந்திய மொழி என ஒன்று வேண்டாமா? அப்படி இந்திய மொழிகளில் வளரத்தக்கது எது? பெரும்பான்மையோர் அறிந்துகொள்ளக்கூடிய மொழி இந்தி என்கின்றனர். அதனல் அதனையே அனைத்திந்திய மொழியாகக் கொள்ள வேண்டும் என்பது ஒரு சாரார் கொள்கை. ஆனல், இந்தி மொழி தென்னட்டில் திராவிட மொழி பேசுகிறவர்களுக்கு வேற்று மொழியே ஆம். அந்த அளவுக்கு அது ஆங்கிலம் போன்றதேயாம். வரலாற்றின் காரணமாக ஆங்கிலம் இந்தியா முழுவதும் பரவியுள்ளது. ஆனல், ஆங்கிலம் இந்திய நாட்டு மொழி அல்ல என்று சிலர் அதனை எதிர்க்கின்ருர்கள். நம் நாட்டில்தங்கி நம்மவரே ஆகிவிட்ட ஆங்கிலோ—இந்தியரது

தாய்மொழியாக அது விளங்குவதனை மறந்துவிடக்கூடாது. ஆங்கிலம், ஆங்கிலேயர்கள் மொழி என்று ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்டபோது எதிர்த்ததில் பொருள் உண்டு. இன்று அந்த நிலை ஆங்கிலத்திற்கு இல்லை; அது ஆட்சிமொழி அன்று; ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய இடங்களிலும் பேச்சு மொழியாக இருக்கின்ற ஆங்கிலம் ஓர் உலக மொழியும் ஆகும். எனவே, நாட்டு மொழிக்கு வேருக வேறெரு துணைமொழியைக் கற்க வேண்டுமேயானுல், நாம் இதுவரையில் துணைமொழியாகக் கற்றுவந்த ஆங்கிலமே அதற்குத் தகுதியுடையதாகலாம். எனவே, இந்தியை அனைத்திந்திய மொழியாக ஆக்குவதைவிட இந்திய ஒருமைப்பாட்டுக்காகத் தென்னிந்தியர் ஒரு வடநாட்டு மொழியையும், வடநாட்டினர் ஒரு திராவிட மொழியையும் கற்பது அறிவுடையதாகலாம். ஆனுல், அப்போதும் அப்படிக் கற்கும் மொழி கல்வி மொழியாக ஆகமுடியாது. கல்விமொழியாகத் தாய்மொழியோ, வட்டார மொழியோதான் அமையக் கூடும். மற்றென்று துணைமொழியாகவே பின்வரும் தகுதி பெறலாம்.

ஆனுல் ஆங்கிலத்தை அடியோடு என்றும் விட்டுவிட முடியாது என்பதை முன்னரே கண்டோம். அதனை விட்டால், உலகத்திலிருந்தே நம்மைவெட்டியெடுத்து இருள் உலகில் வீசியெறிவது போலாம். ஆங்கில மொழியின் நிலையை இந்தியோ, வேறு மொழியோ அடைய முடியாது. எனவே இங்கு ஒன்றை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இதுவரையில் நாம்பழகி வந்த கல்வித்துறையில் நம் நாட்டு மொழிகள் உதவலாம். அந்த வகையில் பார்க்கும்பொழுது, மிகப் பழைய இலக்கியச் செல்வம் பெற்ற தமிழ்மொழி தனிப்பெருஞ் சிறப்பு உடையது. அது வழக்கிழந்து ஒழியாமல் இன்றும் பேச்சு மொழியாக உயிர்த் துடிப்போடு விளங்குகிறது. எனவே, பழமைக்குப் பழமையும், புதுமைக்குப் புதுமையும் பெற்றது அது. ஆனுல் இன்று வளர்ந்து வருகிற அறிவுத் துறைகளிலும், ஆராய்ச்சித் துறைகளிலும், விஞ்ஞானத் துறைகளிலும் அத்தனிச் செம்மொழி சிறந்து விளங்குகிறது என்று கூறுவதற்கு இல்லை. அது அந்த மொழியின் குறையும் அன்று. அது காலப்போக்கின் கோளாறு; அடிமை வாழ்வில் சிக்கிக் கிடந்தபோது முன்னேறுமல் தடைப்பட்டுக் கிடந்தது. பழந்துறையில் அல்லாமல் புதுத்துறையில் நமக்கு உதவக்கூடியது ஆங்கிலமேயாம். துணைமொழியாக எந்த மொழியையும் கற்கலாம். ஆனுல் வளர்ச்சியில் பிற்பட்டு விட்ட குறையைத் தீர்த்து நிறைவாக்குவதற்கு ஆங்கில மொழியே கூட்டு மொழியாதல் வேண்டும். ஆகவே துணைமொழி வேறு; இவ்வாறு உதவக் கூடிய கூட்டு மொழி வேறு என்பதை நாம் உணர்தல் வேண்டும். இந்திய நாட்டில் இந்தி உட்பட வேறு எந்த மொழியும் இத்தகைய கூட்டு மொழியாதற்கு இடமில்லை. எனவே, கல்வி மொழி ஆராய்ச்சி எல்லைக்கு வருகின்றவரையில், வட்டார மொழியோ தாய்மொழியோதான் இருத்தல் கூடும்; இருத்தல் வேண்டும். உயர்நிலைப் பள்ளியில் புகுகின்ற அவாவுடைய மாணவர்கள் ஆங்கிலத்தைக் கூட்டு மொழியாகக் கற்க வேண்டும். எல்லோரும் அந்த நிலையை அடையவேண்டும் என்று நாம் விரும்புவதால், அந்த மொழியை எல்லோரும் இரண்டாம் மொழியாகக் கற்க வேண்டும், மூன்றும் மொழியாக இந்திய ஒருமைப்பாட்டிற்குகாக வேருேர் இந்திய நாட்டு மொழியைக் கற்பது வேண்டத்தக்கது ஆகலாம். இங்கேதான் வடநாட்டார் தென்னுட்டார்மொழியையும், தென்னுட்டார் வடநாட்டார் மொழியையும் துணைமொழியாகக் கற்பது பயனுடையது.

இம்மொழிகளை இளமையிலேயே கற்பதால் கற்கும் சுமையும், இடர்ப்பாடும் குறையும் என்று மனநூல் அறிஞர்களும், பிறரும் கண்டறிந்து கூறுகின்றுர்கள். மொழிகளைப் பழமைபோல் கற்பிக்காமல் இன்றைய மொழியியல் விஞ்ஞான முறைப்படி கற்பித்தால் கற்பது எளிமையாகும்.

எனவே, அடிப்படைக் கல்வி மொழி, துணைமொழி, கூட்டு மொழி என்ற பாகுபாட்டை மனத்தில் வைத்துக்கொண்டு ஆராய்ந்தால், தாய்மொழியே கல்வி மொழியாதல் கூடும் என்பது விளங்கும். துணைமொழியும், கூட்டு மொழியும் இந்த அடிப்படையின் உதவியினுலேயே அறிந்து வழங்கும் நிலையை அடையக்கூடும். எனவே தமிழ் நாட்டில் தமிழே கல்வி மொழியாதற்கு ஏற்றது.

தமிழ் எழுத்தாளர்கட்கும்
'பாரதி'க்கும்
எம் இதயங் கனிந்த
வாழ்த்துக்கள்

*

டி. அன்ராஜ் & கோ.

ஜுவல்லர்ஸ்,

16, வடக்கு மாடவீதி, மயிலை, சென்னை-4.

தொலைபேசி எண் : 71546.

அணுக்கதிர்

(விஞ்ஞான-கலை-இலக்கிய மாத இதழ்)

பத்திரிகை உலகில் ஒரு புதுமை! பாமரரும், சிறுவரும் சுவைத்துப் படிக்கத்தக்க வகையில் மிகச் சிறந்த விஞ்ஞான-இலக்கியக் கட்டுரைகள், விஞ்ஞானக் கதைகள், சிறுவர் பகுதி முதலியன தாங்கி உலாவந்து கொண்டிருக்கிறது.

ஆசிரியர் :

பா. பாலசுப்பிரமணியன்

பி. எஸ்சி., எம். ஏ., எம். லிட்.

தனி இதழ்: 50 காசு : : ஆண்டுச் சந்தா : ரூ. 6.

பொங்கற் புது நாளில் பொங்கல் மலர் தலைசிறந்த முறையில் வெளிவர இருக்கிறது. தனி மலர் விலை ரூ. 1.

விவரங்கட்கு :

'அணுக்கதிர்' * சென்னை-14.

கண்ணன் பிறந்த மாட்சி!

[மயிலை. சீனி. வேங்கடசாமி]

[மயிலை. சீனியுங்கூடக் கவிதை இயற்றுகிறாரா என்று வியப்படையாதீர்கள். எனக்குக் கவிபாடத் தெரியாது. இந்தச் செய்யுள் என்னுடைய சொந்தச் சரக்கு அல்ல. ஒரு மலையாள நூலைப் படித்துக்கொண்டிருந்தபோது, அதில் இதன் மூலச் செய்யுளைப் படித்துப் பெரிதும் விம்மிதமுற்றேன். அதனைத் தமிழில் தழுவித் தமிழ் மக்களுக்குத் தர எண்ணினேன். அதன் விளைவுதான் இந்தச் செய்யுள். இரயிம்மன் தம்பி (கி.பி. 1783—1856) அவர்கள் மலையாள மொழியில் பாடிய ஓமனத் திங்கள் கிடாவோ என்னும் தொடக்கத்தையுடைய செய்யுளின் தழுவலே இது. தலைப்புமட்டும் என்னுடையது.]

ஓமனத் திங்கள் பிறையோ—நல்ல
கோமளத் தாமரைப் பூவோ? 1

பூவில் நிறைந்த நறவோ—பொங்கும்
முழுமதித் தண்ணொளி நிலவோ? 2

புதிய பவழக் கொடியோ—பசுங்
கிளிகள் கொஞ்சும் மொழியோ? 3

சாய்ந்தாடி இயங்கும் மயிலோ—வாய்
ஓயாமல் இசைக்குங் குயிலோ? 4

துள்ளும் இளமான் பிடியோ—தளிர்
கொள்ளும் இளம்பூக் கொடியோ? 5

ஈஸ்வரன் தந்த நிதியோ—பர
மேஸ்வரி யேந்துங் கிளியோ? 6

பாரிஜா தத்தின் தளிரோ—யான்
பண்ணிய புண்ணியப் பயனோ? 7

விலையிலா நன்மணி வைக்கும்—வெகு
வியப்புள்ள தங்கநற் செப்போ? 8

கண்ணுக் கினியதோ ரமுதோ—செறி
காரிருள் நீக்குநல் விளக்கோ? 9

கீர்த்திக் கொடிக்கொரு வித்தோ—என்றும்
கேடு உறாதநன் முத்தோ? 10

ஆசை இருளைக் களைந்து—மன்
மாசு அகற்றும் விளக்கோ ? 11

தெளிந்து கொண்டநற் பொருளோ—மிகத்
தெள்ளிய வீணையின் ஒலியோ ? 12

இன்பத்தில் படர்ந்தமா வல்லி—அன்புக்
கொம்பிலே பூத்தபூ வல்லி ? 13

பிச்சக நறுமலர்ச் செண்டோ—நாவில்
இச்சை சுரக்குங் கற்கண்டோ ? 14

கஸ்தூரி வீசும் மணமோ—நல்ல
ஸத்துகட் குள்ள குணமோ ? 15

பூமணம் ஏந்திய காற்றோ—நல்ல
பொன்னுக் குரியநன் மாற்றோ ? 16

காய்ச்சிச் சுண்டிய பாலோ—மணம்
கமழுந் தண்பனி நீரோ ? 17

நன்மை விளையும் நிலமோ—அற
நலங்கள் வளரும் மனையோ ? 18

தாகந் தீர்க்கும் நன்னீரோ—வழித்
தணலைப் போக்கும் தண்ணிழலோ ? 19

வாடாத மல்லிகைப் பூவோ—நாளும்
வற்றாமல் ஓங்கும் வளமோ ? 20

கண்ணுக் கினியநன் மணியோ—என்
கைவந்த சிந்தா மணியோ ? 21

நீரொழுக் கருநல் லாறோ—கண்ணன்
நிகரற்ற மணிவண்ணச் சீரோ ? 22

லக்ஷ்மி பகவதி தேவி—திரு
நெற்றிமேல் இட்டநற் பொட்டோ ? 23

குழந்தை கண்ணன் பிறந்தான்—அவன்
இப்படி வடிவங்கள் கொண்டான் ? 24

பத்ம நாபன்தன் அருளோ—நல்ல
பாக்கியத் தால்வரும் பொருளோ ? 25

சமஸ்கிருதமும் தமிழும்

[பெ. திருஞானசம்பந்தன்]

உலக மொழிகளுள் பலவகை உண்டு. சில தொன்மை வாய்ந்தவை. சில இலக்கண அமைதி பெற்றவை. சில இலக்கிய வளம் நிரம்பியவை. சில சிறிது காலம் நின்று மறைந்தவை. சில வரிவடிவங்கூட அற்றவை. அவற்றுள் இலக்கண அமைதியும், இலக்கிய வளமும், வரிவடிவமும் பெற்றுத் திகழ்பவை ஒருசிலவே. அவற்றுள்ளும் சமஸ்கிருதமும், தமிழும் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவை. இவை பல நூற்றுண்டுகளாகப் பெருகித் தழைத்து மலர்ந்து கனிந்து பலன் தந்து வருபவை. இவை இரண்டுமே உயர்தனிச் செம்மொழிகள். ஆகவேதான் போலும் நம் முன்னோர்கள் இவற்றைக் குறிப்பிடும் போது,

'முத்தமிழு நான்மறையு
மானான் கண்டாய்' எனவும்,
"வடமொழியைப் பாணினிக்கு
வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை
யுலகமெலாந் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார்
கொல்லேற்றுப் பாகர்......"

எனவும் கூறியுள்ளனர்.

ஆயினும் இவை முதற்கண் வெவ்வேறு இனத்தையும், இயல்பையும், நெறியையும் கொண்டவையாக இருந்தன என்பதை மொழியியலார் தெளிவாக உணர்த்தியுள்ளனர். எனினும் இவ்விரு மொழிகளையும் பயின்ற மக்கள் பல நூற்றுண்டுகள் பரந்த நம் பாரதநாட்டில் ஒப்புரவுடன் வாழ்ந்து வந்ததின் விளைவாக, ஒன்றதன் இயல்புகளும் மரபுகளும் மற்றதில் வெவ்வேறு காலங்களிலும் வெவ்வேறு அளவிலும் இடம்பெற்றிருக்கின்றன. இத்தகைய உறவை மொழியைப் பற்றியதாகவும், இலக்கியத்தைப் பற்றியதாகவும் பாகுபடுத்திக் காண்பது பொருந்தும்.

மொழி

சமஸ்கிருதம் வேதகாலம் (சுமார் கி. மு. 1500) தொடங்கி ஆரிய அறிஞர்களால் மட்டுமே இலக்கியம், சாத்திரம், தத்துவம், அரசியல் இத்தகைய கருத்துக்களை விளங்கிக்கொள்ளவும் பிறருக்கு விளக்கவும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதே காலத்தில் பொதுமக்களால் அதையொட்டிய பிராகிருதம் எனப்படும் பேச்சு மொழி தொடர்ந்து பயிலப்பட்டு வந்தது. ஏட்டு மொழிக்கும் பேச்சு மொழிக்கும் உள்ள இடைவெளி கொஞ்சங் கொஞ்சமாக விரியவே, சமஸ்கிருதத்தில் அதுவரை இருந்துவந்த மாற்றம், கிறிஸ்தவ முதல் நூற்றுண்டு தொடங்கி அறவே நின்றது. வேதகாலந் தொடங்கி ஆரியராலும், அவர்களோடு வடநாட்டிலே தொடர்பு கொண்ட ஆஸ்திரியர், திராவிடர் முதலிய பழங்குடி மக்களாலும் பிராகிருத மொழியில் மிகுந்த மாற்றம் ஏற்பட்டது. அப்படி மாற்றமடைந்த மொழிகளின் வழிவந்தவை தாம், சமஸ்கிருதத்தோடு தொடர்பு கொண்ட இன்றைய குஜராத்தி, வங்காளி போன்ற மொழிகள். திராவிட மொழியோ எனில் பண்டிதராலும் பாமரராலும் பயிலப்பட்டு வந்தபோதிலும், அன்றுமுதல் இன்றுவரை மிகுந்த வேறுபாடின்றி அனைவரிடையேயும் வழங்கும் மொழியாக இருந்துவருவது அதன் சிறப்பியல்பாகும்.

சமஸ்கிருத மொழியானது கிரேக்கம், இலத்தீன், ஜெர்மானியம் போன்ற இந்தோ - ஐரோப்பிய மொழியினத்தைச் சார்ந்த தென்பதும், தமிழ் மொழி கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் ஆகிய திராவிட மொழியினத்தைச் சார்ந்ததென்பதும் மொழியாராய்ச்சியாளர் ஐயந்திரிபிற்கிடமின்றி ஏற்றுக்கொண்டுள்ள ஒரு முடிபு. சமஸ்கிருதத்தினின்றும் வேறுபட்ட புணர்ச்சி இலக்கணங்களும், சொல் வகைகளும், உயர்திணை அஃறிணைப் பாகுபாடுகளும், ஐம்பால் விகுதிகளும், அகம் புறம்

என்னும் பொருட் பிரிவுகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணங்களும் தமிழில் சிறப்பாகக் காணப்படுவதால், இவ்விரு மொழிகளும் வேறுபட்ட இனத்தைச் சார்ந்தவை என்பதை எளிதில் உணரலாம்.

மொழிகளைப் பகுத்தறிவதற்குச் சொற்களைக் காட்டிலும் இலக்கண முறைமையே சிறந்த அடிப்படை. ஓர் எடுத்துக்காட்டு. 'இம்மாலை மணம் பொருந்திய மலர்களால் தொடுக்கப்பட்டது' என்ற கருத்தைக் கூறும் சொற்றொடர் சமஸ்கிருதத்தில், 'சுகந்தை: புஷ்பை: க்ரதிதா இயம் மாலா' என்பதாகும். இதன் நேர் பொருள்: 'மணமுடையவைகளால் மலர்களால் தொடுக்கப்பட்டவள்; இவள் மாலை'(பெண்பாற் சொல்) என்று அமையும். சமஸ்கிருதத்தில் வேற்றுமையையும், எண்ணையும் ஒரே விகுதி உணர்த்தும்; பெயர்ச்சொல்லை ஒட்டியே பெயரெச்சமும் எண்பால் ஆகியவற்றின் விகுதிகளை ஏற்கும். தமிழ் இலக்கணத்தின் வேறான இயல்பினை ஈண்டு கூறத் தேவையில்லை.

இத்தகைய மாறுபட்ட இலக்கண அமைதிகளைக் கொண்ட இருபெரு மொழிகளைப்பேசிய மக்கள் ஒன்றிவாழ்ந்த காலத்தில் ஒன்று மற்றொன்றுடன் கொண்டும் கொடுத்தும்தான் வாழ்ந்திருக்கவேண்டும். மக்களினங்கள் எப்படியோ அப்படியே மொழியினங்களும் ஒன்று சேரும்போது, கலப்பு ஏற்படுவது இயல்பு. ஆங்கிலமொழி இதற்குச் சான்று. சமஸ்கிருதத்தின் சொல்லும் பொருளும் மரபும்கூடத் திராவிட மொழிகளிடையே பல்வேறு நிலைகளில் பரவியிருத்தலை எல்லோரும் அறிவர். சமஸ்கிருதமும், அதைச் சார்ந்த மொழிகளும் ஓரளவுக்குத் திராவிட மொழிக் கூட்டுறவால் பயன்பெற்றுள்ளன என்பதைப் பலர் அறியமாட்டார். இவ்வுண்மையை டாக்டர் கிரையர்சன், டாக்டர் சுநீதிகுமார் சாட்டர்ஜி, பேராசிரியர் பர்ரோ ஆகியோர் ஆய்ந்து தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

இருக்கு வேதத்திலும், தொல்காப்பியத்திலுமே மற்ற மொழியின் உறவு ஏற்பட்டுவிட்டதைக் காண்கிறோம். இந்த உறவு வடநாட்டில் வேதங்கள் இயற்றப்பட்ட காலத்திலேயே அங்கு வாழ்ந்த ஆஸ்திரிய, திராவிட மக்களின் கூட்டுறவினால் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது. பிற மொழிகளினின்றும் சமஸ்கிருதம் பெற்றுள்ள ஒருசில சொற்களைக் காண்போம். 'தாம்பூலம்,' 'லாங்கல' (நாஞ்சில் என்னும் சொல்லோடு தொடர்புடையது), 'கதளீ'—ஆகியவை ஆஸ்திரிய மொழியினின்றும் பெறப்பட்டவை. அனல (அனல்), கானன (கான்), கால (கார்), சந்தன(சாந்து), பண்டித (பண்டு) போன்றவை திராவிட மொழியினின்றும் பெறப்பட்டவை. சமஸ்கிருதத்திலுள்ள டகர வரிசை ஒலிகள் திராவிடரின் கூட்டுறவால் ஏற்பட்டவை என்பது டாக்டர் பத கிருஷ்ண கோஷ் போன்றோரின் கருத்து. சமஸ்கிருதத்தில் எந்தக் கருத்து ஒரே சொல்லில் கூறப்படுகிறதோ, அது இந்தி போன்ற மொழிகளில் இரண்டு அல்லது மேற்பட்ட சொற்களைக் கொண்ட ஒரு தொடரால் கூறப்படுவதுண்டு. இதுவும் திராவிட மொழியின் இயல்பை ஒட்டி அமைந்ததே. எடுத்துக்காட்டாக 'சோதனம்' என்ற ஒரே சமஸ்கிருதச் சொல் 'தூய்மை செய்தல்' என்று தமிழிலும், அதையொட்டி 'சுத்தகர்னா' என்று இந்தியிலும் வழங்குவதைக் காண்க.

இலக்கியம்

ஒவ்வொரு மொழிக்கும் தனிச் சிறப்பைத் தரும் சில இலக்கிய வகைகள் உண்டு. சமஸ்கிருதத்திற்குச் சிறப்பாக நியாயம், மீமாம்சை முதலான சாத்திரங்களும், சாங்கியம், வேதாந்தம் போன்ற தத்துவ நெறிகளும், காவிய நாடக வகைகளும் உள்ளன. அதுபோல் தமிழ் மொழிக்குச் சிறப்பாக பக்திப் பனுவல்களும், பொருள், இடம், காலம், தொழில், பாட்டு, அளவு இவற்றை முறையே அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப் பட்ட புறநானூறு, களவழி நாற்பது, கார்நாற்பது, ஐந்திணை, கலித்தொகை, குறுந்தொகை முதலான தொகை நூல்களும் இருக்கின்றன. இத்தகைய சிறப்பியல்புகள் இருப்பினும், இருமொழிகளும் ஒரு சேரப் பயிலப்பட்ட காரணத்தாலும் கலாசாரக் கூட்டுறவினாலும், ஒன்றிலுள்ள நூன்மரபுகள் மற்றொன்றில் இடம் பெறுவது இயல்பே யன்றோ? ஆயினும், ஒப்புமைப் பகுதிகள் காணப்படும் இடத்தி

லெல்லாம் ஒன்று மற்ருென்றினின்றும் கடன்பட்டது என்று கருதி ஏற்றத்தாழ்வு கற்பித்தல் பொருந்தாது. பல்வேறு மக்கள் பல்வேறு நாடுகளில், பல்வேறு மொழி களில் ஒரே கருத்தை ஒரே முறையில் கூறியிருக்கலாம். ஷேக்ஸ்பியரும், காளி தாசனும், வள்ளுவரும் ஒரே கருத்தைக் கூறியிருக்கின்றனர் என்பதனுலேயே ஒரு வர் மற்றவரிடமிருந்து அக்கருத்தைப் பெற்ருர் என்று துணிதல் எங்ஙனம் ?

தமிழ் இலக்கியத்தை இயல், இசை, நாடகம் என்று பிரித்திருக்கிருர்கள். சமஸ் கிருதத்தில் காவியத்தை 'ச்ரவ்யம்' கேட் கத்தக்கது என்றும், 'த்ருச்யம்' காணத் தக்கது என்றும் பிரித்திருக்கிருர்கள். மீண்டும் முன்னேயதைச் செய்யுள் (பத்யம்), உரைநடை (கத்யம்), உரை இடையிட்ட செய்யுள் (சம்பூ) என்றும் பகுத்திருக் கிருர்கள். நாடகத்தில் பத்து வகைகள் பரதசாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான நாடகங்கள் சமஸ் கிருத மொழியில் இருக்க, தமிழிலே நாடக அமைப்புடன் கூடிய பண்டை நூல் ஒன்று கூடக் காணப்படாதது வியப்பேயன்ருே ? எனினும் தமிழின் முப்பெரும் பிரிவுகளில் நாடகம் ஒன்றெனக் கருதப்படுவதாலும், பண்டைத் திராவிட நாகரிகத்தின் உறை விடமாகக் கருதப்படும் மொகஞ்சதரோவில் நாட்டிய மங்கையின் உருவம் காணப்படுவ தாலும், பாணினிக்கு (கி. மு. 600) முற் பட்ட காலத்தில் நாடகத்தைப் பற் றிய குறிப்பு சமஸ்கிருத இலக்கியத்தில் காணப்படாததாலும், பிராகிருதமொழிகள் பெருவாரியாக நாடகங்களில் பயிலப்படுவ தாலும், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் இசை,கூத்து, மெய்ப் பாடு ஆகியவை பற்றிய நுண்ணிய கருத் துக்கள் கூறப்படுவதாலும், நாட்டிய சாஸ்திரத்தை ஆக்கிய பரதர் திராவிடப் பிரிவினரைச் சேர்ந்தவராக நம்பப்படுவ தாலும், திராவிடர்களுடன் ஏற்பட்ட தொடர்பினுல் சமஸ்கிருத நாடகம் தோன்றியிருக்கக் கூடுமென சம்ஸ்கிருதப் பேராசிரியரான இந்துசேகர் என்பார் கருதுகிருர்.

சிலப்பதிகாரத்தின் பிரிவுகள் காண்டம் எனவும், சீவகசிந்தாமணியின் பிரிவு கள் இலம்பகம் எனவும், யசோதர காவியத்தின் பிரிவுகள் சருக்கம் எனவும் பெயரிடப்பட்டிருப்பது வடநூன் மரபை ஒட்டியதெனக் கொள்ளலாம். பெருங் காப்பியத்தின் கூறுகள் சிலவற்றை மட்டும் பெற்றது சிறுகாப்பியம். அதைக் 'கண்ட' (சிறு) காவியம் என அழைப்பர். ஆங்கிலத் தில் 'லிரிக்ஸ்' என்று சொல்லப்படு வனவும், சமஸ்கிருதத்தில் உள்ள தூது காவியங்களும், தோத்திரங்களும், தமிழில் உள்ள தூது, உலா, பரணி, பிள்ளைத் தமிழ் போன்ற பிரபந்தங்களும் இவ் வகையைச் சார்ந்தவை. ஆயினும் தமிழில் காணப்படுவது போல் அத்தனை விரிந்த முறையில் செவ்விய இலக்கணத்துடன் கூடிய சிறுபிரபந்த வகைகள் சமஸ்கிருதத் தில் மிகுதியாக இல்லை.

தமிழில் காணப்படும் தண்டியலங் காரம் சமஸ்கிருதத்தில் தண்டி என்ற காஞ்சி மாநகர்க் கவிஞரால் எழுதப்பட்ட அலங்கார நூலைத் தழுவியதாகக் கருதப் படுகிறது. எடுத்துக்காட்டாகக் காவிய நடையை வைதர்ப்பீ, கௌட - என அவ் வாசிரியர் கூறியது போலவே தமிழ்த் தண்டியலங்கார ஆசிரியரும் தமிழ் நடையைக் குறிக்க அதே பெயர்களை வழங்கியிருக்கிருர்.

வடமொழி இலக்கணத்தில் மொழி இலக்கணம் மட்டுமே கூறப்படுகிறது, தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப் பியத்திலோ பொருளும் பேசப்படுகிறது. இது அதன் தனிச் சிறப்பு. எனினும் பிற் காலத்தில் வீரசோழியத்தில் சமஸ்கிருத் இலக்கணத்தை யொட்டி சந்திப் படலம், கிரயாபதப் படலம், தத்திதப் படலம் என் பவை போன்ற சமஸ்கிருதக் குறியீட்டுச் சொற்கள் பயன் படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிருேம்.

தமிழ்க் கல்வெட்டுகளிலும், தத்துவ சாத்திரங்களிலும் சமஸ்கிருதச் சொற்கள் ஆங்காங்கு கையாளப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். வடநூல் தருக்கமுறையைப் பின்பற்றிப் பிற்காலத்தில் தமிழில் எழுந்த உரைகளும் அவைகளைப்போலவே எழுதப் பட்டிருப்பதை யாழ்ப்பாணத்துச் சபாபதி நாவலர் போன்ருரின் உரைநடையில் பார்க்கிருேம். வைணவப் பிரபந்தங்களில்

கையாளப்படும் மணிப்பிரவாள நடையில் இருமொழிச் சொற்களும் சரிநிகர் சமானமாக இருப்பதை வைணவர்களின் உபய வேதாந்தக் கொள்கைக்கு ஏற்றதாகக் கொள்ளலாம்.

தமிழ் நாட்டு நல்லறிஞர்கள் பலர் சமஸ்கிருதத்திலேயே பல நூல்களை எழுதியிருக்கின்றனர். நாடு முழுதும் உள்ள அறிஞர்களிடையே தம் கருத்துக்களைப் பரப்ப எண்ணிய தமிழ் நாடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த அறிஞர்களும், தத்துவஞானிகளும் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த சமஸ்கிருதத்தின் வாயிலாக அவற்றை வெளியிட்டனர்.

இதை எண்ணும்போது, வேதகாலந் தொட்டுத் திராவிட மக்களின் வாழ்க்கை முறை, யோக நெறி, உருவ வழிபாடு முதலியவை பற்றிய பல்வேறு கருத்துக்கள் ஆகமங்களிலும், புராணங்களிலும், பிற இலக்கியங்களிலுமாக சமஸ்கிருத வடிவில் உலவி வந்தன என்பதை நாம் ஊகிப்பதில் தவறில்லை. ஆகவே இன்று இந்திய கலாசாரத்தைப் பற்றிக் கூறப்புகும் அறிஞர்கள் சமஸ்கிருதம், தமிழ்—ஆகிய இருமொழி இலக்கியங்களிலும் உரைக்கப்பட்டுள்ள கருத்துக்களை அறிய முற்படுவது இன்றியமையாதது என்பது தெளிவாகும்.

✻

எமது நூல்கள்

ப. ஜீவானந்தம் :

ஜீவாவின் பாடல்கள்	...	2—50
பாரதியைப் பற்றி ஜீவா	...	1—50

எஸ். இராமகிருஷ்ணன் :

தமிழ் இலக்கிய வரலாறு (ஓர் அறிமுகம்)	...	1—75

க. கைலாசபதி :

இரு மகா கவிகள் (தாகூர், பாரதி)	...	1—50

கே. ராமநாதன் :

தாகூரின் கவி உள்ளம்	...	1—75

சாமி சிதம்பரனார் :

புதுக்குறள்	...	2—25

NCBH

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,

நெ. 6/30, மவுண்ட் ரோட், சென்னை - 2.

(சென்னை, ஆர்ட்ஸ் காலேஜ் எதிரில்)

எமது கிளைகள்:—மதுரை ✻ கோவை ✻ திருச்சி.

உரைநடைத் தமிழ்

[கனகசவுந்தரி இளந்திரையன்]

குறிப்பு: இக் கட்டுரையில், சுருக்கம் கருதி, இதுவரை வெளிவந்துள்ள நூல்களில் முக்கியமான சிலவற்றைமட்டும் சுட்டிக்காட்டித், தமிழ் உரைநடையின் வளர்ச்சி வரலாற்றை எடுத்துரைக்க முயன்றுள்ளேன். விடுபாடுகள் இருக்கும்; அதற்கு இடநெருக்கடியே காரணம்.

"கற்றலிற் கேட்டலே நன்று" என்பது வள்ளுவம். முன்பெல்லாம், தாங்களாகவே ஏட்டில் பார்த்துப் படித்தவர்களைவிடப் பிறர் மூலமாகக் கேட்டுப் படித்தவர்களே அதிகம். கேள்விக்கு அதிக முக்கியத்துவம் இருந்ததால் ஏட்டுக்கும் எழுதுகருவிகளுக்கும் உரிய முக்கியத்துவம் அக்காலத்தில் கொடுக்கப்படவில்லை. அதனால், பனையோலை ஏட்டில் இரும்பு எழுத்தாணி கொண்டு எழுதிவந்த சிரமமான முறைக்கு ஏற்ப, ஏடுகள் தொகையைக் குறைக்க வேண்டியதிருந்தது. அதற்கு ஒரே வழி, எழுத்து முறை (இலக்கிய முறை)யைச் சொற்சுருக்கமுள்ள கவிதையாகவே வைத்துக் கொள்வதுதான். அப்படித்தான் நமது முன்னோர் செய்தார்கள். அதனாலேதான் இலக்கியத்தில் உரைநடை மிகுதியாக இடம்பெறவில்லை.

ஆனால் உரையாசிரியர் காலத்திற்கு முன் தமிழில் உரைநடையே இருந்ததில்லை என்று எண்ணிவிடக்கூடாது. 'தகடூர் யாத்திரை'என்னும் நூல் உரையிடையிட்ட செய்யுளாக அமைந்ததென்று அறிகிறோம்; சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இருப்பதை இன்றும் பார்க்கிறோம். அக்கால இலக்கிய ஆசிரியர்கள் பாட்டிலேயே இலக்கியம் செய்தவர்கள். ஆகையால் அவர்களின் உரைநடை முயற்சியில் பாட்டின் சாயல்கள் கலப்பது இயல்பு. சிலப்பதிகாரத்தில் உள்ள உரைநடைப் பகுதி பாட்டுப் போலவே இருந்தாலும், (இன்று எழுத்து வடிவில் கிடைத்துள்ள) தமிழ் உரைநடையின் தொடக்கம் அதுவே என்பதை நாம் மறந்துவிடுதலாகாது. இளங்கோவும் பிறரும் தொடங்கிவைத்த அந்த முயற்சி, பழைய கல்வெட்டுக்கள், இறையனார் களவியல் உரை—இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலியோரின் உரைகள் வழியே தவழ்ந்து சமயப்பணி புரிவதற்காக மேல்நாட்டிலிருந்து இங்கு வந்த பெருமக்களின் கையில் நடந்து, வேதநாயகர் போன்ற புதிய இலக்கிய ஆசிரியர்களால் செப்பஞ் செய்யப்பட்டு, இன்று மேலும் மேலும் திருத்தம் பெற்றுத் திகழ்கிறது.

18ஆம் நூற்றாண்டின் தொடக்க நாட்களில் இங்கு வந்த மேல்நாட்டு அறிஞர்கள், "காதலும், வீரமும், நீதியும் மட்டுமின்றிக் கணக்கும், அகராதியும், வான நூலும், வைத்திய நூலும்கூடச் செய்யுளாக இருக்கின்றனவே!" என்று வியந்தார்கள். இன்றை நிலையோ முற்றிலும் மாறிவிட்டது; காதல், வீரம், நீதிகளைக் கூட உரைநடை பிடித்துக்கொண்டது.

"இன்னும் இன்னும் வளரவேண்டும், நமது தமிழ் உரைநடை" என்பதே நமது குறிக்கோள். ஆனால், அந்தக் குறிக்கோளுக்கே தவறான ஓசையை ஊட்டி, "தமிழ் உரைநடை வளரவே இல்லை!" என்று கூறுவது பிழை. தமிழ் உரைநடையின் வளர்ச்சி வெள்ளிடை மலைபோல் தெரிகிறது. நாம் சிலப்பதிகாரப் பாட்டு உரைநடையையோ, வேதநாயகரின் வடமொழி நிறைந்த உரைநடையையோ வழங்கி வரவில்லை; இடையில் எழுந்த தனித்தமிழ் வாய்க்காலிலும் நமது உரைநடை வளர்ச்சி ஒடுங்கிவிடவில்லை; எளிய தமிழ்—இனிய தமிழ்—நல்ல தமிழாக நமது உரைநடை வளர்ந்துள்ளது. தமிழ் உரைநடைக் கழனி அரைவைத்துப் பொதி

வைத்து நிற்கிறது; எதிர்காலத்தில் கதிர் தள்ளி முதிர்ந்து பெருவிளைவு தரப்போகிறது என்பதில் ஐயமில்லை.

தமிழின் முதலாவது மூல உரைநடை நூல், இராபர்ட்-டி-நொபிலி என்னும் தத்துவ போதக சுவாமிகள் இயற்றிய 'ஏசுநாதர் சரித்திரம்'. இது 17ஆம் நூற்றாண்டில் வெளி வந்தது. அதைத் தொடர்ந்து (சமய எல்லை தாண்டி) எல்லோரும் படிக்கக்கூடிய முதல் தமிழ் உரைநடை நூலாக வெளிவந்தது 'பரமார்த்த குரு கதை'. ஏளன இலக்கிய வகையைச் சேர்ந்த இந்த நூலை வீரமாமுனிவர் என்னும் பெஸ்கி பாதிரியார் 18ஆம் நூற்றாண்டில் எழுதி வெளியிட்டார். சற்றேறக் குறைய இதேகாலத்தில் வாழ்ந்த புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை பேச்சுத் தமிழில் எழுதிவந்த அவருடைய நாட்குறிப்பு, அக்கால வரலாற்றையும் சமுதாயப் போக்குகளையும் விளக்கும் ஓர் அரிய நூலாக அமைந்துள்ளது.

கிறிஸ்தவப் பாதிரிமார் தங்கள் சமய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்ததோடு, தமிழிலேயே கிறிஸ்தவ சமய உண்மைகளையும் ஒழுக்க நெறிகளையும் விளக்கும் நூல்களை எழுதி வெளியிட்டார்கள். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் முயற்சி ஓங்கி, இந்து சமயத்தில் மக்களுக்கு நாட்டம் குறைவதுபோலத் தோன்றியது. இதை உணர்ந்த பல தமிழறிஞர்கள் இந்து சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்ப முனைந்தார்கள். அவர்களிலே முதன்மையானவர் ஆறுமுக நாவலர். இலங்கை யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்த இப் பெருமகனாரையே 'புதிய தமிழ் உரைநடையின் தந்தை' என்று அறிஞருலகம் போற்றுகிறது. இவரது நாநலம் கனிந்த சமயச் சொற்பொழிவுகளாலும், காலத்துக்கேற்ப இவர் ஆக்கித்தந்த உரைநடை நூல்களாலும், மாணவர்களுக்கு வகுப்புவாரியாக இவர் அமைத்த பாடப்புத்தகங்களாலும் தமிழ் உரைநடை செப்பமும் தெளிவும் புதிய வடிவமும் பெற்றது.

நாவலர் அமைத்த தமிழ் உரைநடை வழியை மேலும் செம்மையாக்கிய பெருமை வீராசாமிச் செட்டியார், மயூரம் வேதநாயகம் பிள்ளை என்னும் இருவருக்கும் உரியது. மரபுத்தொடர்களும் பழமொழிகளும் கலந்த இனிய சுவை நிரம்பிய தமிழ் நடையை இவ்விருவருமே முதன்முதலில் தமிழுக்கு வழங்கினார்கள். வீராசாமிச் செட்டியாரின் 'விநோதரச மஞ்சரி' உண்மையில் விநோதரச மஞ்சரியே. சுவை பொதுளும் பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பான இந்த நூல் இன்றும் படித்து மகிழத்தக்க பாங்கில் அமைந்துள்ளது. 'விநோதரச மஞ்சரி'வெளிவந்த 1876-ஆம் ஆண்டிலேயே தமிழில் முதல் நாவலாகிய 'பிரதாப முதலியார் சரித்திரமும்' வெளிவந்தது. இந்த நூலை, இதன் ஆசிரியர் (வேதநாயகம் பிள்ளை) கொண்டிருந்த அளவிலாத தமிழ் ஆர்வத்தின் வெளிப்பாடு என்று சொல்ல வேண்டும். தமிழில் உரைநடை இலக்கியங்கள் தோன்ற வேண்டியதன் அவசியத்தை இந்நாவலின் முன்னுரையில் தெளிவாக வற்புறுத்தியும் இவர் திருப்தியடையவில்லை; நாவலின் ஒரு பாத்திரமே, "... ஐரோப்பிய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்குமானால், அந்தத் தேசங்கள் நாகரிகமும் நற்பாங்கும் அடைந்திருக்குமா? அப்படியே நம்முடைய சுயபாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்கிற வரையில், இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாதென்பது நிச்சயம்" என்று பேசுகிறது! இந்த ஆர்வத்தின் சின்னமாகவும் தமிழ் உரைநடை இலக்கியத்தின் முதல் வெற்றியாகவும் நின்று துலங்குகிறது, பிரதாப முதலியார் சரித்திரம்.

வீராசாமி செட்டியாரும், வேதநாயகம் பிள்ளையும் ஏற்றிவைத்த உரைநடை இலக்கிய விளக்கு மேலும்மேலும் சுடரோங்கி நின்று எரிகிறது. தத்துவ நிழல் படிந்த கமலாம்பாள் சரித்திரமும், சீர்திருத்தக் குரல் எழுந்து ஒலிக்கும் பத்மாவதி சரித்திரமும், சரித்திர மணம் ஊடாடும் வீரசிங்கன் கதையும், ஆரணியார், வடுவூரார், இரங்கராஜு போன்றவர்களின் துப்பறியும் கதைகளுமாக நாவல் இலக்கியம் வளர்ந்து பெருகியது; பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கிய பற்பல பத்திரிகைகளின் வளர்ச்சி சிறுகதை இலக்கியத்துக்கு ஊக்கமளித்தது. அறிஞர் வ. வே. சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம் தமிழில்

சிறுகதைத் துறைக்கு வழிகாட்டியாக அமைந்தது. கட்டுரை இலக்கியம், 'ஒன்ருய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடு விட்டுப்' பல்வேறு துறைகளிலும் நன்ருகச் செழித்துவருகிறது. நாளிதழ், வார இதழ் களிலும் எளிய இனிய தமிழின் நறுமணம் கமழ்கிறது.

சங்கிலித் தொடர் போலப் பக்கம் பக்கமாக நீண்டு, எதுகையும் மோனையும் அணிந்து நின்ற உரையாசிரியத் தமிழ், வளர்ந்து மாறிப், படைப்பிலக்கியத்துக் கேற்ற சின்னஞ்சிறு வாக்கியச் சிட்டுத் தமிழாகச் சுறுசுறுப்புற்று நிற்கிறது. இந்தப் பெரிய மாறுதல் சிறுகச் சிறுகவே ஏற்பட்டது. அந்த மாறுதல் வரலாற் றுக்குள் பல நூறு இலக்கிய ஆசிரியர்களின் சாதனை அடங்கியிருக்கின்றது; மாறிமாறி வரும் மக்களின் சுவையுணர்வும் அதற்குத் துணை நின்றிருக்கிறது. மொழிக்கலப்பில் மோகாவேசம் கொண்டு நின்றவர்களைக் 'கடிவாளம்' போட்டு நிறுத்திய மறைமலை யடிகளார்—பரிதிமாற்கலைஞர் தனித்தமிழ் இயக்கத்திற்கும் இன்றைய தமிழ் நடையை உருவாக்கியதில் பெரும் பங்கு உண்டு.

அறிவுரையும் நகைச்சுவையும் பொங்கி வழியும், முதல் மூன்று—நான்கு நாவல் களைத் தொடர்ந்து துப்பறியும் நவீனங்கள் பெருகின. கல்கியின் சமூக நாவல்களும், ஜீவாவின் உயிரோவியம் முதலியனவும் புதிய மாறுதலை ஏற்படுத்தின; சமுதாய எழுச்சியும் பழம் பெருமை வேட்கையும் மிஞ்சி நிற்கவே, பார்த்திபன் கனவும் சிவ காமியின் சபதமும் மலர்ந்தன. பிற மொழி நவீனங்களின் போக்கு தமிழையும் பாதித் தது. 'கள்ளோ காவியமோ ?', 'மலர்விழி' (டாக்டர் மு. வ.) போன்ற கதைகள் வந் தன. கு. இராஜவேலுவின் 'காதல் தூங்கு கிறது', அகிலனின் 'நெஞ்சின் அலைகள்', 'சிநேகிதி', பி. எம். கண்ணனின் 'நாக வல்லி', லக்ஷ்மியின் 'காஞ்சனு', இராஜம் கிருஷ்ணனின் 'பெண்குரல்', அநுத்தமா வின் 'கௌரி', ரகுநாதனின் 'பஞ்சும் பசி யும்', ஜீவாவின் 'தியாகத் தழும்பு' என்று தொடர்ந்து வந்த வரலாற்றில், நா. பார்த்தசாரதியின் 'குறிஞ்சி மலர்', ஜானகி ராமனின் 'மோகமுள்',அகிலனின் 'பாவை விளக்கு' போன்றவை புதிய சுறுசுறுப்பை ஏற்படுத்தின. ஜெகசிற்பியன், வா. வேணு கோபாலன், கோவி. மணிசேகரன், சாண் டில்யன் முதலியோரின் வரலாற்று நாவல் களுக்குத் தமிழ் நாவல்களிடையே தனி இடம் உண்டு. க. நா. சுப்பிரமணியத்தின் 'பொய்த்தேவு', 'ஒரு நாள்', சிதம்பர சுப்பிரமணியத்தின் 'இதய நாதம்',செல்லப் பாவின் 'ஜீவனும்சம்'—ஆகியவை நல்ல தமிழ் நடை பெற்றிருந்தால் மிகச் சிறந்த நாவல்களாக விளங்கும் என்பதில் ஐய மில்லை. சோமுவின் நாவல்கள் தமிழ் நடைக்காகவே படித்து இரசிக்கத் தக்கவை.

வ. வே. சு. ஐயர் இழைத்துப் பார்த்த சிறுகதைச் சிற்றிலைச் சிறுகதைப் பெரு மாளிகையாக்கியவர்களின் முதல்வர் புது மைப் பித்தன். அவருடைய அகல்யை, சாபவிமோசனம், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், கயிற்றரவு போன்ற கதைகள், எந்த இலக்கிய அளவுகோலுக்கும் ஈடு கொடுத்து ஓங்கி நிற்கக்கூடியவை. தனித் தன்மை உள்ள எந்த இலக்கிய ஆசிரிய னுக்கும் தனி ஒரு மொழிநடை உண்டு என்பதற்கு இவருடைய நடை சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இவருக் குச் சற்றேறக்குறைய முக்கால் உயர மாவது வளர்ந்தவர்கள் என்று பி. எஸ். ராமையா, பிச்சமூர்த்தி—ஆகியோரைக் குறிப்பிட வேண்டும். உருக்கமாகக் கதை யை உருவாக்கி, படிப்போர் நெஞ்சில் ஒரு திட்டுமுட்டலையும் விழிவிளிம்பில் ஒரு துளிக் கண்ணீரையும் வரவழைக்கும் ஆற்றல் பெற்றவர் பி. எஸ். ராமையா. அவருடைய நட்சத்திரக் குழந்தைகள், தழும்பு, வீரா சாமி கௌசிக்-சிறந்த எடுத்துக்காட்டுகள். இவர்கள் அதிகம் தொடாத அன்புத் தொடர்புகளைத் தொட்டுத் துலக்கிச் சிறு கதைத்துறையில் புதுமைப் பித்தனுக்குக் கிட்டதட்ட சமமாக நிற்பவர் கு. ப. ராஜ கோபாலன்.

இவர்களோடு இணைந்தும் இவர்களைத் தொடர்ந்தும் வருபவர்களில் தி. ஜ. ர., தி. ஜானகிராமன், விந்தன், ஜெயகாந்தன் முதலியவர்களை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இவர்கள் நால்வரும் நாலு வகை. தி. ஜ. ர. விடம் ஒருவகையான அனுபவ அமைதி; தி. ஜானகிராமனிடம் நசிக்கும் உயர்பண்புகளுக்காகக் கசிந்துரு கும் ஒருவகைச் சோகம்; விந்தனிடம் நீறு

பூத்த நெருப்புப்போல் குமுறலை மூடி மின்னும் நகைச்சுவை; ஜெயகாந்தனிடம் பிறர் கண்டறியாதவற்றைத் துருவித் தேடிக் கண்டு கூறும் ஒரு துறுதுறுப்பு-ஆகியவை உண்டு. இவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட லா. ச. ராமாமிர்தத்தின் பாணி தனி வகை. அவருடைய கதைகள் பல சமயங்களில் சிறு கதைக் குவளையை மீறிப் பொங்கி வழிபவை. கு. ப. ரா.வின் வாரிசு போல விளங்கியவர் ஈழத்து இலங்கையர் கோன். இந்த உணர்ச்சிநிலை வேறுபாடுகளே எதிர்காலத் தமிழ்ச் சிறுகதைகளுக்கு நம்பிக்கை ஒளியாகும். இதே நிலைகளை வெவ்வேறு அளவுகளில் பெற்று வை. சுப்பிரமணியன், ஆர். சூடாமணி, இலங்கை எஸ். பொன்னுத்துரை, கணேசலிங்கன், மகுதூம், ஜேயெம், பி. சி. கணேசன், சுந்தர ராமசாமி, கோமகள், லட்சுமி சுப்பிரமணியம் போன்றோர் வளர்ந்துவருகின்றார்கள்.

பம்மல் சம்பந்த முதலியாரின் லீலாவதி சுலோசனா, சபாபதி, மனோகரா போன்ற நாடகங்களோடு தமிழ் நாடக இலக்கியத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. இவருக்கு முந்திய நாடகப் பெரும்புலவரான சங்கரதாஸ்சுவாமிகளின் பவளக்கொடி, வள்ளித் திருமணம் முதலிய பிரபல நாடகங்களில் உரைநடையை விடப் பாடல்களே அதிகம். திரைப்பட வசனத்தில் மிகு சிறப்புப் பெற்ற இளங்கோவனின் வசனம் பொருள் பொதிந்து விளங்கியது. சுத்தானந்த பாரதியார் பல நாடகங்கள் எழுதியுள்ளார். கு. சா. கிருஷ்ணமூர்த்தியின் அந்தமான் கைதி, நாரண-துரைக்கண்ணனின் உயிரோவியம், சதுரங்கம், நீலகண்டனின் முள்ளில் ரோஜா, தங்கராசுவின் இரத்தக் கண்ணீர், கி. ஆ. பெ. விசுவநாதத்தின் தமிழ்ச் செல்வம், அரு. ராமநாதனின் இராசராச சோழன், எஸ். டி. சுந்தரத்தின் மனிதனும் மிருகமும், சி. என். அண்ணாத்துரையின் வேலைக்காரி, ஓர் இரவு, நீதிதேவன் மயக்கம், பி. எஸ். இராமையாவின் தேரோட்டி மகன், தி. ஜானகிராமனின் நாலுவேலி நிலம் முதலியன சிறந்த தமிழ் நாடகங்கள். சுகி சுப்பிரமணியனின் வானொலி நகைச்சுவைச் சிறு நாடகங்களும், பெ. தூரனின் ஓரங்க நாடகங்களும், என். எஸ். கிருஷ்ணனின் அங்கத நாடகங்களும் எடுத்துப்போற்றத்தக்கவை. நாடகத் தமிழைப் பற்றிப் பம்மல் சம்பந்தனாரும், டி. கே. சண்முகமும் எழுதியுள்ள இரண்டு நூல்கள் எல்லாரும் படிக்க வேண்டியவை.

டாக்டர் சாமிநாத ஐயரின் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார் வரலாறுகளோடு புதிய வாழ்க்கை வரலாற்றுத் துறை தமிழில் தொடங்கியது. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள், நாமக்கல்லாரின் என் கதை, டாக்டர் ஐயரின் என் சரிதம், டாக்டர் இராஜனின் நினைவு அலைகள் முதலியன சிறந்த தன் வரலாற்று நூல்கள். மகாகவி பாரதி (வ. ரா.), பண்டிதமணி (சோமலெ), கட்டபொம்மன், வ. உ. சி. (ம. பொ. சி.), மறைமலையடிகள் வரலாறு (மறை. திருநாவுக்கரசு), திருச்சி விசுவநாதம் (மா. சு. சம்பந்தன்), புதுமைப்பித்தன் வரலாறு (ரகுநாதன்) முதலியன சிறந்த வாழ்க்கை வரலாற்று நூல்கள். திரு. ரா. அ. பத்மநாபன் தயாரித்து வெளியிட்டுள்ள ''சித்திர பாரதி'' புதிய முறையில் அமைந்த வாழ்க்கை வரலாறு. டாக்டர் மு. வ. சுருக்கமாக எழுதியுள்ள காந்தி, தாகூர், பெர்னார்ட்ஷா வரலாறுகளும், அப்துற் றகீம் எழுதியுள்ள 'இஸ்லாமிய திலகங்கள்' என்னும் நூலும் குறிப்பிடத்தக்கவை.

பிரயாண நூல்கள் தமிழில் மிகுதியாக இல்லாவிட்டாலும், வெளிவந்துள்ள சில நூல்கள் தரமானவை. திரு. வி. க. வும் மு. வ. வும் தங்கள் இலங்கைப் பயணம் குறித்து எழுதியுள்ளார்கள். உலகம் சுற்றிய தமிழன் என்று போற்றப்படும் ஏ. கே. செட்டியார் தமது பிரயாண அனுபவங்களை நகைச்சுவை கலந்து அருமையாக எழுதியுள்ளார். பகீரதனின் வட இந்திய யாத்திரை, அ. மு. ப. வின் தமிழன் கண்ட மலேயா, அவினாசிலிங்கத்தின் திருக்கேதார யாத்திரை, சித்பாவனந்த சுவாமிகள் உணர்ச்சி ததும்ப எழுதியுள்ள திருக்கைலாய யாத்திரை, சி. சுப்பிரமணியத்தின் நான் சென்ற சில நாடுகள், சோமலெயின் அமெரிக்காவைப் பார், ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம், பிரயாண இலக்கியம் முதலியனவும் இத்துறையில் சிறந்த நூல்கள்.

அரசியல், வரலாறு, பொருளாதாரம் முதலிய துறைகளில் வெ. சாமிநாத சர்மா, க. சந்தானம், கே. கே. பிள்ளை, சதாசிவப் பண்டாரத்தார், டாக்டர் எம். ஜே. கே. தவராஜ், மு. ஆரோக்கியசாமி, ந.சஞ்சீவி, டாக்டர் பா. நடராஜன், ஜே. எஸ். பொன்னையா முதலியோர் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளார்கள். அறிவியல் துறையில் அண்ணுமலைப் பல்கலைக் கழகம் பல நூல்களை வெளியிட்டுள்ளது. பெ. நா. அப்புசாமி, ந. சுப்புரெட்டியார், கே. எஸ். மகாதேவன், தா. ஏ. சண்முகம் போன்றவர்களும் அத்துறையில் ஈடுபட்டு உழைத்து வருகின்ருர்கள். குழந்தை இலக்கியம், விவசாயம், சிறுதொழில்கள், சிற்பம், சித்திரம் போன்ற நுண்கலைகள் ஆகியவற்றிலும் நல்ல நூல்கள் வெளிவந்துள்ளன. சென்னை அரசாங்கத்தின் தமிழ்ப் புத்தக வெளியீட்டுக் கழகமும் பல சிறந்த நூல்களைப் புதிய துறைகளில் வெளியிட்டுள்ளது.

எல்லா மக்களும் தங்கள் இலக்கியப் பாரம்பரியத்தை அறிந்து கொள்ளும் வகையில் பழைய இலக்கியங்களைப் புதிய நடையில் எழுதியும் பேசியும் பலர் பரப்பி வருகின்ருர்கள். இவர்களில் டாக்டர் மு. வ., அ. ச. ஞானசம்பந்தன், கி. வா. ஜகந்நாதன், டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் இராசமாணிக்கம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

(பழந்தமிழ் இலக்கியச் செல்வத்தைப் பாமர மக்களுக்கு வாரி வழங்கியவர்களின் முதல்வர் காலஞ் சென்ற சேதுப்பிள்ளை அவர்கள்). இலக்கியச் செய்திகளை வானெலியிலும், மேடையிலும் சுவை கனியப் பேசும் ஆற்றல் கைவந்தவர் சோமு. அ. மு. பரமசிவானந்தம் (கவிதையும் வாழ்க்கையும்), மு. வ. (இலக்கிய மரபு, இலக்கிய ஆராய்ச்சி முதலியன), ரகுநாதன் (இலக்கிய விமர்சனம்) அ. ச. ஞானசம்பந்தன் (இலக்கியக் கலை), கா. அப்பாதுரை (இன்பத்துள் இன்பம், வள்ளுவர் நிழல்) முதலியோர் இலக்கிய ஆராய்ச்சியாகவும், இலக்கிய விமரிசனம் பற்றியும் எழுதியுள்ள நூல்களைச் சிறப்பாகச் சொல்ல வேண்டும். க. நா. சுப்பிரமணியம் 'எதற்காக எழுதுகிறேன்?' என்ற தலைப்பில் தொகுத்துள்ள (எழுத்தாளர்களின்) கட்டுரைகளும், 'படித்திருக்கிறீர்களா?' (2 தொகுதிகள்) என்ற நூலில் எழுதியுள்ள அறிமுகக் கட்டுரைகளும் நல்ல முயற்சிகள். அறிமுகக் கட்டுரைகளில் தமிழ் நடை சரளமாக இல்லை என்பதும், அவருடைய நூலைப் பற்றியும் அவரே பாராட்டி எழுதிக்கொள்கிருர் என்பதும் தவிர, வேறு குறை காண முடியாது. பலர் கண்டும் கேட்டுமிராத தமிழ் நூல்கள் பலவற்றைச் சுருக்கமாக அறிமுகஞ் செய்து,' 'படித்திருக்கிறீர்களா?' என்று கேட்கிருர் சுப்பிரமணியம்.

நமது காலத்திலும், நமக்குச் சற்று முன்னும் நடந்த தமிழ்ச் சாதனைகளை விளக்கும் இரண்டு அரிய நூல்கள் அண்மையில் வெளி வந்துள்ளன. ஒன்று சோமலெயின் 'வளரும் தமிழ்'; அடுத்தது சீனி. வேங்கடசாமியின் '19ஆம் நூற்ருண்டில் தமிழ் இலக்கியம்'. இவை நம்மை நமக்குக் காட்டி, நம் அறியாமையை ஓட்டி, நமக்கு ஊக்க மூட்டும் இரண்டு நல்ல நூல்கள்.

இத்தனை நீண்ட பட்டியல் தந்தபிறகு தமிழ் உரைநடையின் எதிர்காலம் பற்றி யாருக்கும் சந்தேகம் இராது. ஆயினும், ''புதுத் தமிழ் எழுத்தாளர்களிலே பலர் இலக்கணப் பிழை நிறைந்த தமிழ் எழுதுகின்ருர்களே!'' என்று சிலர் வேதனைப் படக்கூடும். அவர்களின் வேதனை நீங்கவும், தொல்காப்பியத்தையும் நன்னூலையும் கண்டு புதிய எழுத்தாளர்கள் கொண்ட அச்சம் நீங்கவும், ஒரு வழி பிறந்து விட்டது. ''நல்ல தமிழ் எழுத வேண்டுமா ?'' என்னும் புதிய இலக்கணத்தை அ. கி. பரந்தாமனுர் சுவையாக எழுதியுள்ளார். பல நூற்ருண்டுகளுக்குப் பின், காலத்துக்கு ஏற்பப் புதிய முறையில், உரை நடையில் வெளிவந்துள்ள இப்புத்தகம் நமது புதிய தமிழ் எழுத்தாளர்களுக்கு அருமையானதோர் ஊன்றுகோல்...

இக்கால உரைநடை வளர்ச்சியின் அறிகுறியாகவும், எதிர்கால உரைநடைக்கு நம்பிக்கையாகவும் உள்ள ஒரு சில நூல்களின் பெயர்களை மட்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கட்டுரையை முடிக்

கிறேன்: புதுமைப்பித்தன் வரலாறு (ரகுநாதன்), படித்திருக்கிறீர்களா? — 2 தொகுதிகள் (க. நா. சு.), இலக்கிய மரபு (மு. வ.), அச்சுக்கலை (மா.சு. சம்பந்தன்), தேரோட்டி மகன் (பி. எஸ். ராமையா), ஏட்டில் எழுதாக் கவிதைகள் (நாடோடிப் பாடல் விளக்கம்— செ. அன்னகாமு), வள்ளுவம் (சுப. மாணிக்கம்), 19-ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் (சீனி. வேங்கடசாமி), வளரும் தமிழ் (சோமலெ), நல்ல தமிழ் எழுத வேண்டுமா?...(அ. கி. ப.)........

அண்மையில் வெளிவந்த சிறந்த உரை நடைப் புத்தகங்களில் இவை ஒரு சில. இவைகளை ஒரு முறை படித்தாலே, தமிழ் உரைநடை பல துறைகளிலும் வளர்ந்து செழித்து வரும் சிறப்பு விளங்கும்; தமிழின் எதிர்காலம் ஒளி மிக்கதே என்றும் நம்புவோம்...

———

தமிழ் எழுத்து
வளர
பிரார்த்திக்கின்றோம்

✶

தமிழ்ப் புத்தகாலயம்,
576, பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

ஸ்வஸ்திக்
வேதாரண்யம் புகையிலை

எங்கள் சொந்த தோட்டத்தில் விளைந்த உயர்ந்த ரக
புகையிலையைக் கொண்டு தயார் செய்யப்பட்டவை.

ரிஜிஸ்டர் நெம்பர்
111866

தயாரிப்பு:-
ஸ்வஸ்திக் புகையிலை
தொழிற்சாலை
வேதாரண்யம்.

போன் நெம்பர்: 2

தந்தி, ஸ்வஸ்திக்

எங்கள் ஸ்பெஷல்
தயாரிப்பு
பிளாஸ்டிக்
15 நயாபைசா
பொட்டலங்கள்

சேல்ஸ் டிப்போ:-
559, பூந்தமல்லி
ஹைரோடு
மதராஸ்-3.

போன் நெம்பர்: 34913

தந்தி, "ஸ்வஸ்டெப்போ"

தமிழின் சொல்வளம்

[கா. அப்பாத்துரை]

நாம் அணியும் பவழம் உயிருள்ள பொருளன்று. ஆனால் அது உயிருள்ள கடற்புழுக்களின் உடற்கூடுகள் அல்லது தோடுகளாலானதே! அத்துடன் கடல் நீரில் அமிழ்ந்திருக்கும்போது அது கடலடிப் பாறையுடன் பாறையாக ஒட்டிக் கிடந்தாலும், அது உயிரினம்போலவே வளரும் தன்மையுடையது. ஏனெனில் கடற்புழுவின் உடலே தோடாகவும் தோடே கூடாகவும் கூடே பாறையாகவும் ஆவதால், கடற்புழு இனத்தின் கூட்டின வாழ்வுக்குப் புழுக்கள் நரம்புகளாகவும் தோடுகள் சதையாகவும் கூடுகளும் பவளப் பாறையும் எலும்புக்கூடாகவுமே அமைகின்றன. கடற்புழு இனம் கடற்புழு இனமாக வாழுமளவும் பவளப் பாறையும் உயிர்ப் பாறையாக வாழ்கிறது. அந்தப் புழு வாழ்விலிருந்து அதைப் பிரித்து நீரிலிருந்து முறித்தெடுத்து மெருகிட்டபின், அது நாம் அணியும் அழகிய பவழமணியாகிறது. இதற்கு அழகு உண்டு; ஆனால் உயிரோ, உயிர்ப் பண்பான வளர்ச்சியோ கிடையாது.

மொழி, மொழிப்பண்பு!
இனம், இனப்பண்பு!
நாட்டினம், நாட்டினப் பண்பு!

இம்மூன்றுமே பவழம் போன்றவை. அவற்றுக்குரிய இனத்தின் கூட்டு வாழ்வு, மரபு வாழ்வு ஆகியவற்றுடன் இணைந்திருக்கும் காலம்வரை, இம்மூன்றுக்கும் உயிர்ப் பண்பு உயிர் வளர்ச்சி உயிர்த் துடிப்பு உண்டு. அக்கூட்டு வாழ்வு அவற்றுக்குக் கடல் அலை, கடல் நீர் போன்றது. அம்மரபு வாழ்வு அவற்றுக்குக் கடற்புழு உடலுடன் சேர்ந்த வளர்ச்சி போன்றது. இவ்விரு தொடர்புகளும் அகன்றுபோய் விட்டால், இனம் புதையுண்ட இனங்களில் ஒன்றாகிவிடும். நாட்டினம் அகழ்ந்து காணப்பட்ட சுமேரிய, எகிப்திய நாகரிகங்களைப் போல மாண்ட நாகரிக நாட்டினமாகிவிடும். மொழியும் கிரேக்க, இலத்தீன மொழிகளைப்போல மாண்ட மொழியின் இலக்கியங்களாகவோ அல்லது சமஸ்கிருதம்போல மாண்ட மொழியின் மாண்ட இலக்கியமாகவோ ஆகிவிடும்.

மேலையுலக மக்கள் தங்கள் மொழிகளை வளப்படுத்தப் பயன்படுத்தும் கிரேக்க—இலத்தீனச் சொல் தொகுதிகள் அம்மொழிகளின் உடல்மீது அணியப்பட்ட பவழ உடுப்புக்கள் போன்றவை. அம்மொழிகள் வளரும் வளர்ச்சியில் அந்தச் சொற்கள் பங்கு கொள்ளமாட்டா. மேலை மொழியினங்கள் உயிர்வளம் பெறுந்தோறும், இச்சொற்கள் புது வளர்ச்சியைச் சில பல காலம் தடுத்துப் பின் புறங்கழன்று விடும் சட்டைகளாகவே அமையும் என்பதை மேலைமொழிகளின் இன்றைய வரலாறு எடுத்துக்காட்டும்.

கீழையின மக்களில் பெரும்பாலான மொழியினர் தம் மொழிகளை வளப்படுத்தப் பயன்படுத்தும் சமஸ்கிருதச் சொற்கள் அம்மொழிகள் அணியும் போலிப் பவழச் சட்டைகள் போன்றவை. ஏனெனில் சமஸ்கிருதத்தில் அச்சொற்கள் வழங்கிய காலத்திலேயே, அம்மொழி வழக்கற்ற மொழியாயிருந்தது. வழக்கிறந்த மொழிகளிலிருந்தே வந்து அச்சொற்கள் சமஸ்கிருதத்தில் வழங்கி, அதன் இலக்கிய வழக்கும் ஒழிந்தபின் மற்ற உயிர் மொழிகளில் வந்து இரட்டிப்பு உயிரற்ற சொற்களாக இயங்குகின்றன.

தமிழ் மொழியின் சொல்வளம் சீன மொழியின் சொல்வளத்தை ஒத்து மனித இன நாகரிகத்தின் வேரிலிருந்து வளர்ந்து மனித இன நாகரிகத்தின் வளர்ச்சியுடன் வளர்ந்து, வருங்கால மனித இன நாகரிகத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய உரங்களனைத்தையும் தன்னகத்தே கொண்டது. இவ்வகையில் அது மற்றக் கீழையின மொழிகளையோ அல்லது மேலையுலக மொழி

களையோ போன்றது அன்று. ஒருவகையில் அது சீன மொழியின் வளத்திலிருந்து கூட எவ்வளவோ வேறுபட்டது. ஏனெனில் சீனநாகரிகம் தமிழின நாகரிகத்தைப் போன்றே மனித இன நாகரிகத்தின் அடிவேரிலிருந்து தோன்றிப் பல்லாயிரக்கணக்கான ஆண்டு வளமும் வளர்ச்சியும் உடையதாயினும், சீன மொழியும் அதன் சொல்வளமும் தமிழ் மொழியினையும் அதன் சொல்வளத்தையும் போல மனித இனத்தின் பழமையுடனும் வளர்ச்சி வளத்துடனும் அத்தனை இடையறாத் தொடர்பு கொண்டிருக்கவில்லை. சீனச் சொற்கள் ஒலி-எழுத்துக்களால் எழுதப்பெறாத நிலையில், கருத்துக்கள் தொடர்ந்த அளவுக்குச் சொற்கள் தொடர்ந்து ஓருருவில் நிலவவில்லை. ஒலி-எழுத்துக்களில் இன்று எழுதப்படும் நிலையில், சீன மொழி ஒரு மொழியாய் நிலவவில்லை; நூற்றுக் கணக்கான தொடர்பற்ற மொழிகளாய் உள்ளது. அத்துடன் சீனர் நாகரிகத்தில் உலகின் பிற பகுதிகளைத் தாண்டி மிக முற்பட்ட வளர்ச்சியடைந்தாலும், அந்த வளர்ச்சி மனித இன வளர்ச்சியுடன் ஒத்து வளராமல், அதிலிருந்தும் ஒதுங்கியே வாழ்ந்துள்ளது. மொழியும் இவ்வொதுங்கிய வாழ்வினைக் காட்டுகிறது.

தமிழ் தமிழர்களின் தாய்மொழி மட்டுமன்று; தமிழினத்தின் இனத் தாய்மொழி மட்டுமன்று. அது மனித இன நாகரிகத்தின் ஆழ-அகல-உயரங்களை அலையலையாகப் பதிவுசெய்து காட்டும் ஓர் உயிருள்ள அடிநிலப் பவளப் பாறையாகும். அதன் சொற்களும், அதன் இலக்கிய—இலக்கண வளங்களும் தமிழகத்தின் வரலாற்றை மட்டுமன்றி, தமிழினத்தின் வரலாற்றை மட்டுமன்றி, மனித இனத்தின் பழமையையும், மனித இன நாகரிகம் இந்த இருபதாம் நூற்றாண்டுவரை அடைந்துள்ள வளர்ச்சியையும், இனி வளர இருக்கும் வளர்ச்சிக்குரிய கருவளங்களையும் ஒருங்கே உட்கொண்ட மனித உலகக் கருவூலங்களாகும்.

ஆங்கிலம்போன்ற மேலை மொழிகள் வழக்குச் சொற்கள் ஐயாயிரமும், இலக்கியச் சொற்கள் இன்னும் ஓர் இருபதாயிரமும் உடையன. ஆனால் நாளுக்கு நாள் புதிதாக வந்தும் போயும் திரிந்தும் மாறுபடும் சொற்கள் நூறாயிரத்துக்கு மேற்பட்டவை. கிரேக்க-இலத்தீன மொழியின் சொற்கள் இலக்கியச் சொற்களே இருபதாயிரத்துக்கு மேற்பட்டவை அல்ல. சமஸ்கிருதத்தில் இலக்கியச் சொற்கள் அறுபதினாயிரத்துக்கும், நூறாயிரத்துக்கும் இடைப்பட்டவை. தமிழில் அடிப்படைச் சொற்கள் இருபத்தையாயிரத்துக்குக் குறையாதவை. இலக்கியச் சொற்கள் திரட்டப்பட்டால், அவை இவற்றுடன் இன்னும் ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்டவை. சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ச் சொற்களஞ்சியம் அல்லது லெக்சிக்கன் நூறாயிரத்துக்கு மேற்பட்ட தனிச்சொற்களை உடையது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

தமிழ், பிற மொழிகளில் நாகரிகத்தின் உச்சநிலையில் உள்ளவை என்று இன்று கருதப்படுவன வற்றுடன் சொல்லின் தொகை வளத்தில் ஒப்பானது என்பதை யாவரும் அறிவர். ஆனால் மற்ற மொழிகளில் சொற்கள் பெரும்பாலும் பிற மொழி, சிறப்பாக மாண்ட மொழிச் சொற்கள். தமிழின் சொற்கள் மிகப் பெரும்பாலும் தாய் மொழியின் இன வாழ்வின் அடிவேரிலிருந்தே தோன்றி அத்தாய் இனவாழ்வுடனும், மனித இன வாழ்வுடனும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக ஒன்றி, அவ்வாழ்வுகளின் உயிர்த் துடிப்புக்களைத் தம்முள் அடக்கியவை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே தமிழின் சொல்வளம் இந்தி, வங்காளி போன்ற மொழிகளையோ, ஆங்கிலம் முதலிய மேலையுலக மொழிகளையோகூட ஒத்ததன்று. இவற்றுக்கு மூலத் தாயூற்றுக்களான கிரேக்க - இலத்தீன - சமஸ்கிருதங்களுடனேயே ஒப்பிடத்தக்கது. அம்மொழிகளின் சொற்களைப்போலத் தமிழ்ச் சொற்களும் ஓரினச் சொற்களின் தொகுதியாகும். அதே சமயம் தொகையிலும், வளத்திலும், தற்கால நாகரிகத்துடன் ஒத்த வளர்ச்சியிலும் தமிழ் அம்மாண்ட பெரு மொழிகளைப் பன்மடங்கு விஞ்சியதாகும்.

தமிழின் இப்பெருவளம் இன்று இலைமறை காயாய் இருந்து வருகிறது. விஞ்ஞான வளர்ச்சியில் தமிழ் மேலை-மொழிகளைச் சென்று எட்டிப் பிடிக்க முயன்று வருகிறது. ஆனால் இவ்வகையில் அதன்

நிலே எல்லாக் கீழை-மொழிகளுக்கும் உரிய நிலேயே. சமஸ்கிருத மொழியும் இத்துறையில் மற்றக் கீழைமொழிகளின் நிலேயினே உடையதேயாகும். ஆனல் சமஸ்கிருதச் சொற்களின் உதவியால் சொல்வளம் காண அவாவும் பிறமொழிகளின் நிலேயைப் பார்க்க, தமிழின் நிலே எவ்வளவோ மேம்பட்டது. ஏனெனில் தமிழ் சமஸ்கிருதத்தையும், கிரேக்க-இலத்தீனத்தையும் ஒத்த வளமுடைய மொழி. அத்துடன் மேலே மொழிகள் கிரேக்க - இலத்தீன மொழிச் சொற்களின்றி இயங்க முடியாதவை. எனவே தற்காலிகமாகத் தமிழ் மேலே மொழிகளுக்கு இவ்வொரு வகையில் பிற்பட்டுவிட நேர்ந்துள்ளதாயினும், விரைவில் அவற்றை எட்டிப் பிடித்து, ஒருவேளே அவற்றைத் தாண்டி மேம்படவும் வழி ஏற்படாது என்றில்லே.

மேலேயைரோப்பாவின் நானூருண்டு வளர்ச்சியை ரஷியா நூருண்டுகளுக்குள் பெற்றுவிட்டது. திட்டமிட்ட தேசிய வாழ்வில் தமிழகம் அதை இருபதாண்டுகளுக்குள் பெற்றுவிட முடியும் என்று நம்ப இது இடந்தருகிறது. ஆனல் தமிழர் ஆழ்புல மொழிகளின் அவல-அனுபவங்களேத் தாம் மேற்கொள்ள நினேத்தால், அது தமிழ்த் தேசிய வாழ்வுக்கோ, இந்திய தேசிய வாழ்வுக்கோ நல்லதன்று. சமஸ்கிருத மொழியை இந்தியா பின்பற்றுவதைவிடத் தமிழைப் பின்பற்றுவதே இந்திய தேசிய வாழ்வுக்கு மிகச் சிறந்த வளந்தருவதாக அமையும். தமிழ் எழுத்தாளர் இவ்வகையில் தமிழகத்தின் கண்களேயும் திறந்து, இந்தியாவின் கண்களேயும் திறக்கக் கடமைப்பட்டவராவர்.

—[✺]—

எங்களது சிறந்த வெளியீடுகள்

✳

ஜஸ்டிஸ் டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன்:

இந்தியப் பெரியார்கள்	4—00
கௌதம புத்தர்	2—00
மதத்தில் கிழக்கும் மேற்கும்	அச்சில்

அகில இந்திய காங்கிரஸ் தலேவர் கு. காமராஜ்:

புதிய சமுதாயம்	1—00
நாமார்க்கும் குடியல்லோம்	1—00

மத்திய கனரகத் தொழில் அமைச்சர் சி. சுப்பிரமணியம்:

தமிழால் முடியும்	4—00
சாதனேக்குரிய சிந்தனேகள்	2—50
வளரும் சக்தி	3—00
தேசிய ஒருமைப்பாடு	1—50
காந்தியின் வாழ்க்கையிலே—(வை. சண்முகசுந்தரம்) ...	6—00
உலகம் ஒரு குடும்பம்—(சாலே. இளந்திரையன்) ...	3—00

வள்ளுவர் பண்ணே

137, பிராட்வே, சென்னே - 1.

நீங்கள் வாழ்வீர்!

[நா. இராசகோபாலன்]

கடைத்தெருவில் படையெடுக்கும் செய்தித் தாட்கள்
கருத்திதழ்கள் சிலவற்றின் நிலைகண் டீரோ?
மடைத்தலையில் நிற்கின்ற கொக்கு போன்று
மின்னுகின்ற பணமொன்றே குறியாய்க் கொண்டு
கடைப்பட்ட மொழிநடையில், கருத்துக் கொவ்வாக்
கீழ்ப்பட்ட செய்திகளைத் தருவ(து) ஒன்றோ?
துடைத்தெறியத் தூண்டுகின்ற படங்கள், கண்ணைத்
துன்புறுத்தும் அமைப்புக்கள் இருத்தல் நன்றோ?

அயல்நாட்டார் போல்ஓங்க உன்னு கின்றோம்;
ஆனால்நாம் ஆக்கம்செய் அறிவைத் தேய்க்கும்
செயல்களையே மேற்கொண்டு வாழ்தல் தீதே!
சிறுமையினைப் புறம்போக்கிச், சீர்மை ஏந்தித்
துயில்நீக்கும் நடைமூலம் மக்க ளுக்குத்
தூய்மைதரும் பொருள்களையே தந்து வந்தால்
பயில்கின்றோர் பகுத்தறிவைப் பெற்றார்; இன்றேல்
பண்பாட்டைப் பாழுக்கு விற்றார்; வீழ்ந்தார்.

மொழிவழியில் முள்பரப்பிக் கருத்தாம் ஊற்றில்
படுநாசக் கொடுநஞ்சைக் கலந்தால், மாந்தர்
விழியிழப்பார்; வேட்கையினால் கானல் நீரை
விதியின்றிக் குடிநீராய் நம்பிக் கொள்வார்;
வழிகாட்டும் கடமைஎனும் பேனா கொண்டு
வளர்அறிவு மைதொட்டு மனமாம் ஏட்டில்
எழுதுகின்ற ஆசிரியர் தவறு செய்தால்
என்றைக்கு நன்மைகள் எழுந்து நிற்கும்?

கார்மேகம் இளம்பயிரை அழிக்க லாமா?
கனியிருப்பக் காய்களையே கொடுக்க லாமா?
சீராட்டும் செவிலித்தாய் சிறுவன் உயிரைச்
சிதைக்கின்ற தீயுணவை ஊட்ட லாமா?
ஆர்ந்துள்ள அறிவுமலர், மணத்தைக் கொன்று
அடுக்கடுக்காய்ப் புழுக்கூட்டம் அனுப்பல் உண்டோ?
தேர்ந்திடுவீர்! களைவாழப் பயிர்பி டுங்கும்
செயல்மறப்பீர்! நாடுவாழ்ந்தால் நீங்கள் வாழ்வீர்!

பாலர் கலைக்களஞ்சியம்

[அழ. வள்ளியப்பா]

"அம்மா, அம்மா, அமாவாசை இரவிலேகூடப் பூனைக்குக் கண் தெரிகிறதே, அது எப்படி அம்மா?"

"கடலில் ஓயாமல் அலை அடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், குளத்திலே அலையைக் காணோமே! இதற்குக் காரணம் என்ன அப்பா?"

"ஏனண்ணா, நாய் குட்டி போட்டவுடன் ஒரு குட்டியைத் தின்றுவிடுமாமே! உண்மையா அண்ணா?"

"பொத்தானை அமுக்கியதும், விளக்கு எரிகிறதே! இது எப்படி மாமா?"

இப்படி எத்தனை எத்தனையோ கேள்விகளைச் சிறுவர்கள் நாள்தோறும் கேட்கிறார்கள். விஞ்ஞான வளர்ச்சியால் நவீன சாதனங்கள் பலவற்றை நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தியும், பார்த்தும் வருகின்றோம். அவற்றைக் காணும் சிறுவர் வியப்படைகின்றனர்; வினா எழுப்புகின்றனர். பெற்றோரிடமோ அல்லது ஆசிரியரிடமோ தங்கள் வினாவுக்குரிய விடையைப் பெறத் துடிக்கின்றனர். ஆனால், அவர்களது கேள்விகளுக்கெல்லாம் பதில்கூறத் தெரிந்த பெரியவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? "தெரியவில்லை. தம்பி, யாரையாவது கேட்டுச் சொல்லுகிறேன்" என்று சொல்லக்கூடியவர்கள் கூட ஆயிரத்தில் ஒருவர்தான் இருப்பர்.

அறிவியலைப் பொறுத்தவரை நம் நாட்டில் அநேகமாக எல்லோருமே குழந்தைகளாகத்தான் இருக்கிறோம். சிலர் "குழந்தை எவ்வளவு புத்திசாலித்தனமாகக் கேள்வி கேட்கிறது!" என்பதைக் கூட நினைத்துப் பாராமல், "அதிகப் பிரசங்கி! வாயை மூடு. வீணாகத் தொந்தரவு செய்யாதே" என்று அரட்டி உருட்டித் தங்கள் அறியாமையை மூடி மறைக்கப் பார்க்கிறார்கள்.

அறிவியல் துறையில் மிகவும் முன்னேறியுள்ள மேல் நாடுகளிலே பாலர் கலைக்களஞ்சியத்தின் அவசியத்தை நன்குணர்ந்து, பாலர் கலைக்களஞ்சியங்கள் பலவற்றை வெளியிட்டுள்ளனர் என்றால், பின்தங்கியுள்ள நம் நாட்டில் அத்தகைய தொரு தொகுப்பு எவ்வளவு தூரம் அவசியம் என்பதை விளக்கத் தேவையில்லை. குழந்தைகளிடம் பேரன்பு கொண்ட சிலரும், குழந்தை எழுத்தாளர் சங்கமும் தமிழில் பாலர் கலைக்களஞ்சியம் வெளிவர வேண்டுமென்று பல காலமாகக் கண்டு வந்த கனவு விரைவில் பலிக்கப் போகிறது என்பதை இச்சமயம் மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன். ஆம், தமிழக அரசினர் ஆதரவுடனும், பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் தமிழ் வளர்ச்சிக் கழகம் பாலர் கலைக்களஞ்சியம் வெளியிட முடிவு செய்துள்ளது. இம்முயற்சி குழந்தைக் குலத்திற்கு மட்டுமல்ல; பெற்றோர்க்கும், ஆசிரியருக்கும் பெருந்துணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்திய மொழிகளிலெல்லாம் அச்சு-அமைப்பு முதலியவற்றில் சிறந்து விளங்கும் கலைக்களஞ்சியத்தைப் பெரியவர்களுக்காகத் தமிழிலே தொகுத்தளித்த தமிழ் வளர்ச்சிக் கழகமே இத்தொண்டினையும் மேற்கொள்ள முன்வந்திருப்பதும், கலைக்களஞ்சியத்தின் பிரதம ஆசிரியரா யிருந்து அல்லும் பகலும் அயரா துழைத்து வெற்றி கண்டவரும், பல சிறந்த குழந்தை நூல்களை எழுதிப் புகழ்பெற்றவருமாகிய திரு. தூரன் அவர்களே இதற்கும் பிரதம ஆசிரியராயிருக்க இசைந்துள்ளார் என்பதும் நமக்கெல்லாம் இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது.

சிலர் தாங்கள் அமைச்சரா யிருக்கும் போது சில நற்பணிகளைத் தொடங்குவர். அமைச்சர் பதவியில் இருக்கும்வரை தான் அப்பணிகளைத் தொடர்ந்து கவனித்து

வருவர். பிறகு, மறந்து விடுவர். ஆனால், திரு. அவிநாசிலிங்கம் அவர்கள் கல்வியமைச்சராயிருக்கும்போது தொடங்கிய பணி, பல இன்னல்களுக் கிடையேயும், பொருளாதார நெருக்கடிகளுக் கிடையேயும் இடையறாது நடந்து முழு வெற்றி பெற்றுள்ளது என்றால், இது அவரது தமிழார்வத்தையும் விடா முயற்சியையுமே காட்டுகின்றது. பாலர் கலைக்களஞ்சியத்தை வெளியிடுவதிலும் அவர் காட்டி வருகின்ற அக்கறை இவ்வளவு அவ்வளவு அன்று. அவரது தலைமையின் கீழ் உருவாகும் இக்களஞ்சியம் சிறந்த ஒரு களஞ்சியமாகத் திகழும் என்ற நம்பிக்கை அனைவருக்கும் உண்டு.

ஆங்கிலத்திலே இது வரை பாலர் கலைக்களஞ்சியங்கள் பல வெளி வந்துள்ளன என்பதை நாம் அறிவோம். தெளிந்த நடையிலே, கண்ணைக் கவரும் படங்களுடன் அவை யாவும் விளங்குகின்றன. ஆயினும், அவற்றின் தொகுப்பு முறையிலே சில வேறுபாடுகளைக் காணலாம்.

ஒரு தொகுப்பு அகர வரிசையில் இருக்கும். மற்றொன்று பொருள் வரிசையில் இருக்கும். இன்னொன்று உரையாடல் நிகழ்த்தும் போக்கிலே இருக்கும். ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தொகுதியாகப் பல தொகுதிகள் கொண்ட கலைக்களஞ்சியங்களையும் நாம் காணலாம்.

இவை எல்லாவற்றையும்விடச் சிறந்ததென எனக்குத் தோன்றும் பாலர் கலைக்களஞ்சியம் ஒன்றுண்டு. அதுதான் ஆர்தர் மீ (Arthur Mee)என்னும் ஆங்கிலேயரால் தொகுக்கப்பெற்ற The Children's Encyclopedia என்னும் தொகுப்பாகும். பத்துத் தொகுதிகள் கொண்ட இக்களஞ்சியத்தில் எத்தொகுதியைக் கையில் எடுத்தாலும், கீழே வைக்க மனம் வராது. அகர வரிசையிலோ அல்லது உரையாடல் முறையிலோ இது தொகுக்கப் பெறவில்லை. அகர வரிசையில் ஏன் இதைத் தொகுக்கவில்லை என்பதற்கு ஆர்தர் மீ கூறும் காரணம் இதுதான் :

"The alphabet is for those who know; the Children's Encyclopedia is for those who do not know"

இத்துடன் அவர் வேறொரு காரணத்தையும் கூறியிருக்கிறார். அகர வரிசையில் அமைப்பது ஓய்வில்லாமல் ஓடிக்கொண்டிருப்பவர்களுக்குச் சட்டெனப் புரட்டிப் பார்க்க வசதியாயிருக்கலாம். ஆனால் குழந்தைகளுக்கு அது மிகுந்த வேதனையாயிருக்கும். அவர்கள் விருப்பம்போல் எதை வேண்டுமானாலும் எடுத்துப் படிக்க வேண்டும் என்ற ஆசையுடனே இம்முறையில் தொகுத்துள்ளேன் என்று கூறுகின்றார்.

இக்களஞ்சியத்தின் பத்துத் தொகுதிகளில் எத்தொகுதியை எடுத்தாலும், அதில் பல பகுதிகளைக் காணலாம். கிட்டத்தட்ட 19 பகுதிகள் ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கின்றன. உலக நாடுகளைப் பற்றி ஒரு பகுதி, மிருகங்களைப் பற்றி ஒரு பகுதி, இப்படியே இலக்கியம், கலைகள், உலக அதிசயங்கள், செயற்கரிய செய்தோர், தாவரங்கள், பழக்கமான பொருள்கள், சரித்திரம், பூகோளம் முதலிய ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனிப் பகுதிகள் ஒவ்வொரு தொகுதியிலும் இடம் பெற்றுள்ளன. இவை மட்டுமா? உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதைகள், பாடல்கள், விடுகதைகள், புதிர்கள், செய்துபார் போன்ற வேடிக்கைகள் முதலிய பகுதிகளையும் காணலாம்.

ஒரு தொகுதியில் நாடுகள் என்ற தலைப்பில் ரஷ்யாவைப் பற்றி ஓரிடத்தில் கூறப்பட்டிருக்கும். அதே தொகுதியில் வேறோர் இடத்தில் துருக்கியைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும். மற்றொரு தொகுதியில், ஓரிடத்தில் ஆப்பிரிக்காவைப் பற்றியும், இன்னோரிடத்தில் எகிப்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கும். இப்படியே பத்துத் தொகுதிகளுக்குள் உலக நாடுகள் அனைத்தும் அடங்கி யிருப்பதை அறியலாம்.

இவ்வாறே 'பூனைக் குடும்பம்,' 'பன்றிக் குடும்பம்,' 'நாய்களும் அதன் நண்பர்களும்,' 'கரடிகளும் அவற்றின் ஒன்றுவிட்ட சகோதரர்களும்' என்று விலங்கினத்தைப் பற்றிய செய்திகளெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கதை போலச் சிறுவர் உள்ளம் கவரும் வகையில் யாவுமே கூறப்பட்டுள்ளன.

ஒரே தொகுதியில் பல்வேறு பொருள்களைப் பற்றியும் இருப்பதால், புத்தகத்தைக் கையிலெடுக்கும் ஒரு சிறுவன் தனக்குப் பிடித்தமான ஒரு பகுதியை முதலில் படிக்கத் தொடங்குகிறான். மற்ற விஷயங்களில் அவனுக்கு ஆர்வமில்லாது போனாலும், புத்தகத்தைப் புரட்டும்போது கண்ணிலே தென்படுகிற கவர்ச்சி மிக்க படங்களும், சுவையான தலைப்புக்களும் மேலும் பல பகுதிகளை அவன் படிக்குமாறு தூண்டுகின்றன. இதனால், புதிய புதிய விஷயங்களை அறிந்துகொள்ள அவனுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது.

இத்தொகுதிகளில் காணப்பெறும் படங்களில் பெரும்பாலானவை புகைப்படங்களே. வழவழப்பான தாளில் வண்ணப் படங்கள் இடையிடையே காட்சியளிக்கின்றன. பல தேசங்களின் கொடிகளை அந்தந்தக் கொடிகளில் காணப்பெறும் உண்மையான வண்ணங்களில் காட்டியிருப்பதும், பறவைகள், பூச்சிகள் முதலியவற்றை அவையவற்றிற்குரிய வண்ணங்களிலே தீட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கவை.

பத்தாவது தொகுதியின் இறுதியிலே உலக நாடுகளை 37 வண்ணப் படங்களில் அச்சிட்டுள்ளனர். மேலும் பயனுள்ள பல செய்திகள் இறுதியில் தரப்பட்டுள்ளன. நாடுகளின் பெயர்கள், அவற்றின் பரப்பளவு, மக்கள் தொகை, 400 கண்டுபிடிப்புக்கள், அவற்றைக் கண்டுபிடித்த மேதைகளின் பெயர்கள், அவர்கள் பிறந்த நாடுகள், கண்டு பிடிக்கப்பட்ட தேதிகள், மனிதர்–மிருகங்களின் உடற்கூறு சம்பந்தமான அட்டவணை, பல்வேறு அளவைகள், பத்துத் தொகுதிகளிலும் காணப்பெறும் புகைப்படங்களின் அட்டவணை முதலியன உள்ளன. எல்லாவற்றுக்கும் கடைசியில் பத்துத் தொகுதிகளும் கூறப்பட்டுள்ள பொருள் அட்டவணை இருக்கின்றது. அந்த அட்டவணையில் கொடுக்கப் பெற்றுள்ள பக்க எண்களில் சில தடித்த எண்களாக இருக்கின்றன. சில மெல்லிய எண்களாக இருக்கின்றன. படங்களுடன் கூடியது என்பதைக் குறிக்கிறது மெல்லிய எண். படம் இல்லாமல் வெறும் பொருளைமட்டும் குறிப்பது தடித்த எண்.

மேல் நாடுகளில் தயாரித்து வெளியிட்ட பாலர் கலைக்களஞ்சியங்களில் தலை சிறந்ததெனக் கருதப்படும் ஆர்தர் மீயின் கலைக்களஞ்சியத்தில் காணப்பெறும் நல்லனவற்றை, நாம் தமிழில் தொகுக்கவிருக்கும் பாலர் கலைக்களஞ்சியத்தில், நமது வசதிக்கேற்ப, சூழ்நிலைக் கேற்ப எடுத்துக்கொள்ளலாமே என்ற ஆசையில் தான் இத்துணை விரிவாக அது பற்றி எடுத்துரைத்தேன்.

தமிழில் பாலர் கலைக்களஞ்சியத்தைத் தொகுக்கும்போது, அகர வரிசையில் தொகுப்பதா, பொருள் வரிசையில் தொகுப்பதா என்று முதலில் முடிவுசெய்ய வேண்டியிருக்கும். தாம் ஏன் அகரவரிசையில் தொகுக்கவில்லை என்பதற்கு ஆர்தர் மீ கூறும் காரணங்கள் பொருத்தமாகவே தோன்றுகின்றன. அவைமட்டுமல்ல; ஏற்கெனவே தமிழில் பெரியவர்களுக்காக அகர வரிசையில் கலைக்களஞ்சியம் வெளிவந்துள்ளது. பாலர் கலைக்களஞ்சியத்தையும் அகர வரிசையில் வெளியிட்டால், அதன் சுருக்கிய பதிப்புப் போலவே இது தோன்றக்கூடும். மேலும், அகர வரிசையில் கூறும்போது கதைபோலக் கூறுவதோ, அல்லது தொடர்புடைய பல செய்திகளை இணைத்துக் கூறுவதோ இயலாதுபோகும். இன்னும் ஒரு காரணமும் உண்டு. அகர வரிசையில் தொகுப்பதனால் சேர்க்கவேண்டிய அனைத்தையும் ஒன்று விடாமல் திரட்டிக்கொண்டு, பின்னரே அகர வரிசைப்படுத்தி அச்சு வேலை தொடங்க இயலும். ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தொகுதியாகப் பல தொகுதிகளை வெளியிடுவது அல்லது ஒரே தொகுதியில் பற்பல பொருள்களும் விரவியிருக்கும் வகையில் வெளியிடுவது நலமெனத் தோன்றுகிறது.

அடுத்து படங்களைப் பற்றிய பிரச்சினை. தொகுப்பு முழுமையும் பலவண்ணப் படங்களுடன் வெளியிடுவது என்றால், அதற்குத் தகுந்த ஓவியர்களின் ஒத்துழைப்பும், அச்சக வசதியும், ஏராளமான பொருட் செலவும் ஆகும். பலவண்ணப் படங்கள் கொண்ட, கனத்த அட்டையுடன் கூடிய 16 பக்கப் புத்தகத்தை ஆப்செட் (offset) முறையில் அச்சிட ஒரு பிரதிக்கு 60 காசு ஆகிறது. தாள், அச்சுக்கூலி

இரண்டுக்கும்தான் இத்தொகை! ஓவியர், எழுதியவர் முதலியோருக்குக் கொடுக்க வேண்டியதை இதில் சேர்க்கவில்லை. பெரும்பாலும் இருவண்ணப் படங்களும், இடையிடையே ஆர்ட் தாளில் பலவண்ணப் படங்களும் இடம்பெறச் செய்தால், கவர்ச்சியாகவும் சிக்கனமாகவும் வெளியிட இயலும்.

கலைக்களஞ்சிய அலுவலகத்தில் முழு நேர ஓவியர்கள் சிலர் இருப்பது மிகவும் உதவியாயிருக்கும். அடிக்கடி ஆசிரியருடன் கலந்தாலோசித்துத் தக்க முறையில் பொருத்தமாகப் படங்கள் போடவும், பல வெளிநாட்டுப் புத்தகங்களில் காணப் பெறும் சிறந்த படங்களையும் புகைப்படங்களையும் அடிப்படையாகக் கொண்டு படங்கள் தயாரிக்கவும் உறுதுணையாயிருக்கும். பல பக்கங்கள் எழுதி விளக்கமுடியாத விஷயங்களை ஒரு சித்திரத்தில் எளிதிலே விளக்கக்கூடிய திறமை சிலருக்கு இருப்பதைக் காண்கிறோம். படங்கள் போடுவதற்கு மட்டுமல்ல; வண்ணப் படங்களைப் பொருத்தமான வண்ணங்களில் அச்சிடுவதற்கு ஆலோசனை கூறவும், கலைக்கண்ணுடன் களஞ்சியத்தைத் தயாரிக்கவும் ஓவியர்கள் உடனிருப்பது பெரிதும் உதவியாயிருக்கும்.

எல்லாவற்றையும்விட அவசியம் அச்சகத்தாரின் ஒத்துழைப்பு. இதைப் பிறரிடம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும், சொந்தத்திலே ஓர் அச்சகம் நிறுவுவது மிகவும் நல்லது. வண்ணப் படங்கள் அச்சிடும் நேர்த்தியான ஓர் இயந்திரமும், தேவையான அளவு அச்செழுத்துக்களும் இருந்தால் போதும். 3, 4 தொழிலாளர்களைக் கொண்டு, தேவைக்கேற்ப அச்சியற்றலாம். படங்கள் நிறைய வருமாதலால், பொருத்தமான இடங்களில் படங்களை அமைப்பதற்கு, எழுதிய விஷயங்களைச் சில சந்தர்ப்பங்களில் கூட்டவோ அல்லது குறைக்கவோ நேரிடலாம், பொருத்தமான வண்ணங்களில் படங்களை அச்சிடவும், தேவையான மாற்றங்களை உடனுக்குடன் செய்யவும் சொந்த அச்சகம் நற்றுணை புரியும்.

ஆர்ட் தாளில் அச்சிடுதற்குப் பல வண்ண ஓவியங்கள் நிறையத் தேவையிருக்கும். ஓரிருவரே அந்த ஓவியங்கள் அனைத்தையும் தீட்டுவதைவிட, தமிழகத்தில் உள்ள பல ஓவிய மணிகளின் உதவியைப் பெறுவது சிறப்புடையதாகும். நல்ல ஓவியர்கள் ஒன்று அல்லது இரண்டு படங்களைத் தீட்டி, பாலர் கலைக்களஞ்சியத்திற்கு அன்பளிப்பாக வழங்கலாம். எத்தனையோ தலைமுறைகளுக்கு நின்று நிலவிக் குழந்தைக் குலத்திற்குக் குதூகலம் அளிக்கப் போகும் இக்களஞ்சியத்தில் அவர்களது பெயர்களும், அன்பளிப்பாக அவர்கள் வழங்கிய செய்தியும் குறிக்கப் பெறல் வேண்டும். அன்பளிப்பாக அவர்கள் வழங்க முன்வந்தபோதும், அடக்கச் செலவுக்காக ஏதேனும் ஒரு தொகையை அவர்களுக்குக் கொடுப்பது நல்லது. மகாகவி பாரதியாரின் எண்பத்தோராவது பிறந்த நாள் விழாவில் பல ஓவியர்கள் கைம்மாறு கருதாது தங்கள் கைவண்ணம் காட்டியிருந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக ஒரு வார்த்தை. தமிழில் பாலர் கலைக்களஞ்சியம் வெளியானதும், அதில் காணப்பெறும் படங்களை இந்தியாவிலுள்ள பிற மொழியினரும் பயன்படுத்தி அந்தந்த மொழிக் குழந்தைகளுக்கும் பயன் விளையுமாறு செய்யலாம். விஷயங்களையும் அந்தந்தப் பிரதேசத்திற்கு ஏற்ற வகையில் ஒரு சில மாறுதல்களுடன் வெளியிடலாம். இதனால் செலவும் சிரமமும் குறைவதோடு காலமும் குறையும். இந்தியாவிலுள்ள மொழிகள் அனைத்திலும் இவ்வாறு செய்ய இயலாவிடினும், தென்னகத்திலுள்ள தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளிலாவது வெளியிட வாய்ப்பு ஏற்படும் என்றே நம்புகிறேன்.

மொழிகள் பல – கருத்து ஒன்றே

[சல்லா இராதாகிருஷ்ண சர்மா]

'வேதம் பிரபு சம்மிதம்', 'புராணம் மித்திர சம்மிதம்', 'காவியம் காந்தா சம்மிதம்'—என்று நம் பெரியோர்கள் சொல்லுவது உங்கள் அனைவருக்கும் தெரிந்தே இருக்கலாம். அரசனைப்போல வேதம் கட்டளையிடும்: புராணம் நண்பன்போல நயமாகக் கூறும்; காவியம் காதலியைப் போல அன்புடன் பேசும். கட்டளையிட்டாலும், நயமாகப் பேசினாலும், அன்புடன் கூறினாலும், சொல்லப்படும் கருத்துமட்டும் ஒன்றேதான். அதாவது சொல்லும் முறை வேறாக இருந்தாலும், சொல்லப்படும் கருத்தில் வேறுபாடு இல்லை. உதாரணமாக, "உண்மையைச் சொல்" ('சத்யம் வத') என்று வேதம் கடினமாகக் கட்டளையிட்டால், புராணம் நண்பனைப் போல "உண்மை பேசுவது நலம்" என்று கூறினால், காவியம் "உண்மை பேசலாமல்லவா?" என்று பிரியமாகக் கேட்கிறது. அதற்காக ஒரு கதையையும் எடுத்துக்காட்டாகக் கூறும். உண்மையின் மகத்துவத்தைச் சொல்லுவதற்கு அரிச்சந்திரன் கதையைக் காவியம் கூறுகிறது. வேதமோ அல்லது புராணமோ நேராகச் சொல்லும் ஓர் அரிய கருத்தை மறைமுகமாகச் சொல்லுகிறது காப்பியம். கசப்பான விஷயங்களையும் காவியத்தில் சுவைபடக் கூறமுடியும்.

சாதாரண மக்கள் "பசு" என்று சொன்னால், கவிஞன் அதைக் 'கோமாதா' என்று அழைப்பான்; நஞ்சு நிரம்பிய பாம்பைப் பார்த்து, "நாக கன்னிகை" என்று சொல்லுவான். பசு என்றாலும், கோமாதா என்றாலும், பாம்பு என்றாலும், நாக கன்னிகை என்றாலும் கருத்து என்னவோ ஒன்றேதான். சொல்லும் முறைமட்டும் வேறு.

"கதிரவன் கண்ணிற்குப் படாத பொருளும் கவிஞன் கண்ணிற்குப் படும்" என்று ஒரு தெலுக்குக் கவி கூறியுள்ளார். ஆம். மகாகவியின் கண்ணுக்குப் புலப்படாத பொருளே இருக்காது. அதுமட்டுமல்ல; கடவுள் படைத்த சகுந்தலை மறைந்து எத்தனையோ ஆண்டுகளாயின. ஆனால், காளிதாசன் படைத்த காப்பிய சகுந்தலை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேயிருக்கிறாள். அதாவது ஒரு சாதாரணமான விஷயமும் கவியின் சொல் திறமையால் ஓர் அரிய கருத்தாக மாறுகின்றது. ஒரு தெலுங்குக் கவிஞன் பாடிய இந்தப் பாட்டைக் கேளுங்கள் :

பெருநிதி படைத்த கருமியை விடப்
பெரியமனம் கொண்ட ஏழை நல்லவன்;
ஊற்றுத் தண்ணீர் நல்ல தல்லவா,
எல்லா நதிகளும் சேரும் பெருங்கடலைவிட?

'செல்வம் இருந்தால் ஈகை வேண்டும்', "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்று கூறியுள்ளார் திருவள்ளுவர். ஆகையினாலேதான் அவர் சொல்லுகிறார்:

"அற்றார் அழிபசி தீர்த்தல், அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

செல்வர்கள் பசிதீர்க்கும் வேலையில் ஈடுபடவேண்டும் என்று வள்ளுவர் எவ்வளவோ அழகாகவும், நயமாகவும் உரைக்கிறார். அதாவது கருமியாக இராமல், ஒவ்வொருவனும் தனக்கு ஏற்றவாறு ஈகை புரியவேண்டும். யார் சொன்னாலும் கருத்து இதுதான். குருஜாட வேங்கட அப்பாராவ் என்னும் தெலுங்குக் கவிஞர் என்ன சொல்கிறார் கேளுங்கள் :

"ஈசுரோமனி மனுஷுலு உண்டே
தேச மேகதி பாகுபாடுனோய்
திண்டி கலிகின கண்டே கலதோய்
கண்டே கலிகினவாடே மனிஷோய் !"
அழுதுகொண்டே மனிதன் இருந்தால்
நாடு எவ்வாறு முன்னேறும் ?
உணவு இருந்தால் வலிவு உண்டு;
வலிவு இருப்பவனே மனிதனடா !

பசி தீரவேண்டுமென்றால், நாட்டில் போதிய உணவு வேண்டும். அப்பொழுதுதான் நாடு நன்றாக இருக்கும்; முன்னேற்றப் பாதையில் செல்லமுடியும். உணவின் சிறப்பைப் பற்றி உபநிஷத்துகள் என்ன கூறுகின்றன கேளுங்கள் :

"அன்னேன ஜாதானி ஜீவந்தி;
அன்னம் ந நிந்த்யாத்"

9

எல்லா உயிர்களும் வாழ்வதற்கு அன்னம் (உணவு) எவ்வளவு இன்றியமையாததோ சொல்லவேண்டியதே இல்லை.

ஆகையினால்தான் பாரதியார், "தனி மனிதன் ஒருவனுக்கு உணவில்லையெனின் செகத்தினை அழித்திடுவோம்"—என்று அழுத்தமாகக் கூறினார். ஆம். நாடு என்றால், வெறும் மண்ணல்ல; மனிதர்கள் என்று குருஜாட அப்பாராவ் ஓரிடத்தில் அழகாகக் கூறியுள்ளார்:

"தேசமன்டே மட்டி காதோய்
தேசமன்டே மனுஷு லோய்..."
(நாடென்றால் மண்ணல்ல
நாடென்றால் மனிதர்களடா).

இப்படிப் பார்த்துக்கொண்டே போனால், ஒவ்வொரு மொழியிலும் அரிய கருத்துகள் காணப்படும் என்பதில் ஆச்சரியம் இல்லை. சில கருத்துகள் கொஞ்சம் மாறுபாடாகத் தோன்றினாலும், அடிப்படையான கருத்துகள் அனைத்தும் ஒரேவிதமாகவே இருக்குமென்று ஐயமின்றிக் கூறலாம். வடமொழியானாலும் சரி, தென்மொழியானாலும் சரி, மொழி வேற்றுமை தவிரக் கருத்துகளில் வேற்றுமை அவ்வளவாகப் புலப்படாது. ஆகையினாலேதான் நாம் ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகங்களைப் படித்து மகிழ்கிறோம்; கம்பராமாயணத்தைப் படித்து அளவிலா இன்பம் பெறுகிறோம்; துளஸிதாசர் அருளிய இராமாயணத்தைச் சுவைத்துப் புளகிக்கிறோம்; வேமன்ன பத்தியங்களைப் படித்துப் பயனடைகிறோம்; தியாகையர், கபீர், புரந்தரதாசர் போன்ற பெரியோர்களின் சுவை மிக்க பாடல்களைப் பாடி உவகை பூக்கிறோம். அதாவது அடிப்படையான கருத்துகளில் வேற்றுமை இல்லாததால், நாம் பிற மொழிகளில் உள்ள இலக்கிய பொக்கிஷங்களை நம் சொந்த பொக்கிஷங்களாகச் செய்துகொள்கிறோம்.

மில்டன் தமது Paradise Lost காவியத்தின் ஓரிடத்தில், "The mind is its own place, and in itself can make a Heaven of Hell, a Hell of Heaven." என்று சொல்லியிருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. இந்தக் கருத்தை 'சுமதி சதகம்' என்ற தெலுங்கு நூல் எவ்வளவு அழகாகச் சொல்லுகிறது கேளுங்கள்:

"தன கோபமெ தனசத்ருவு
தன சாந்தமெ தன்குரக்ஷ, தய சுட்டம்பௌ
தன சந்தோஷமெ ச்வர்க்கமு
தன துக்கமெ நரகமந்து, தத்யமு சுமதீ"
தன்கோபமே தன் பகைவன்
தன்பொறுமையே தனக்குப் பாதுகாப்பு
தயை உறவினன்-தன் சந்தோஷமே சுவர்க்கம்
தன் துயரமே நரகம்—இது உண்மை!

தமது மொழியில் எவ்வளவு பற்று இருக்கிறதோ, பிற மொழிகளிலும் அவ்வளவு பற்று உண்டு தெலுங்குக் கவிஞர்களுக்கு. ஆகையால் வடமொழி, தமிழ், மராத்தி, வங்கம், இந்தி, ஆங்கிலம் என்று எத்தனை எத்தனை மொழிகளிலிருந்தோ பல நூல்களை மொழிபெயர்த்துக் கொண்டனர். தமிழிலிருந்து திருக்குறள், கம்பராமாயணம், ஔவை இயற்றிய நூல்கள், ஆழ்வார்கள் அருளிய பிரபந்தங்கள், பெரிய புராணம்—இன்னும் எத்தனையோ நூல்கள் தெலுங்கில் செய்யப்பட்டன; செய்யப்படுகின்றன.

தமிழ்ச் சொற்களைத் தெலுங்குக் கவிஞர்கள் எப்படிக் கையாண்டார்கள் என்பதையும் பாருங்கள்:

"உண்ணமுல ஜகதம்பிக
அண்ணமல விச்வநாது நாராதிம்பன்
மண்ணசயு பொன்னசயு
பெண்ணசயு..............."

இந்தச் செய்யுள் தூர்ஜடி என்னும் கவிஞர் எழுதிய 'காளஹஸ்தீச்வர மாஹாத்மியம்' என்னும் காவியத்தில் இடம்பெற்றுள்ளது.

எந்த மொழியில் எழுதினாலும் கருத்து மட்டும் ஒன்றேதான். செப்பு மொழி பதினெட்டு அல்ல—பதினெட்டாயிரமானாலும்—சிந்தனை ஒன்றுதான். அதிலும் நம் இந்திய மொழிகள் தோற்றத்திற்குப் பல மொழிகளாகவும், வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவையாகவும் இருந்தாலும், அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துகள்—அடிப்படைக் கருத்துகள்—ஒன்றாகவே இருக்கின்றன. "சத்தியம் ஒன்றுதான்; ஆனால் புலவர்கள் அதைப் பலவிதமாகச் சொல்லுகிறார்கள்" என்பது உபநிஷத வாக்கியம். அதுபோலவே, மொழிகள் பல; ஆனால் கருத்து ஒன்றே—என்பதை நாம் உணரவேண்டும். ஆனால் இந்த உண்மையை நன்கு அறிந்துகொள்வதற்கு மொழிபெயர்ப்பு இலக்கியம் நல்ல வகையில் வளரவேண்டும்.

Grams: "PUNCTUAL"

Ebrohim & Co.,

Post Box No. 1504,

2/19, Venkatamaistry Street,

MADRAS-1.

✳

Leading Manufacturers of Paper Bags
&
'ZEBRA' brand Envelopes
TO SUIT
Textilers, Photo Studios,
Provision Stores,
Jewellery Merchants,
Pharmaceuticals and Offices etc.

We also deal with Japan & French Odo Bim Bam movement 'TEISTAR' Wall Clocks.

Phone: 21526

FOR YOUR REQUIREMENTS in PAPER AND BOARDS

✳

Please Contact:

RAJA PAPER MART,

No. 66, MALAIPERUMAL STREET,

MADRAS-1.

Grams: "GAJANANA"

Phone: 21725

✳

FOR ALL KINDS of PAPERS AND BOARDS

✳

Please Contact:

GANESH PAPERS,

PAPER AND BOARDS,

No. 4, Kondi Chetty Street,

P. B. No. 1919,

MADRAS-1.

அனைத்தும் அரிய நூல்கள்!
அனைவரும்
படிக்கவேண்டியவை!
அ. கி. மூர்த்தியின்

வான்வெளி ஆராய்ச்சி	7	50
வான்வெளி வீரர்கள்	1	30
ஏவுகணை நூல்	2	40
இந்தியப் பெருங்கடல்	0	60
அட்லாண்டிக் பெருங்கடல்	0	60
ஆர்க்டிக் பெருங்கடல்	0	60
அண்டார்க்டிக் பெருங்கடல்	0	60
பசிபிக் பெருங்கடல்	0	60

எல்லா விற்பனை நிலையங்களிலும்
கிடைக்கும்.

மற்ற விவரங்கட்கு:

அல்லிப் பதிப்பகம்,

தஞ்சாவூர்.

குஞ்சன் நம்பியார் நகைச்சுவைக்கு ஒரு கவிஞர்

[ஜி. ஸ்ரீதரன்]

கண்ணைப் பறிக்கும் வண்ணப் பொலிவுடன் கூடிய வில்வடிவான கிரீடத்தைத் தலையில் அணிந்து, முகத்தின் முன்பகுதியில் பச்சையும் கன்னங்களில் சிவப்புமான சாயங்கள் பூசி, கைகள் இரண்டிலும் இரண்டு பெரிய விசித்திரமான கடகங்களைப் பூட்டி, கால்களில் சலங்கை "கலீர் கலீர்" என்று ஒலிக்க ஒரு நட்டுவன் கண்களை உருட்டியும், புருவங்களை நெரித்தும், வாயை வக்கரித்தும் நவரசங்களையும் சொரிந்தவண்ணம் சொல்லுக்குச் சொல் நகைச்சுவையால் இரசிகர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்துக் கொண்டு ஏதாவது ஒரு கோவிலின் முன்னால் அமைந்த பந்தலில் நின்று நடனமாடுவது கேரளத்தில் நாம் எங்கும் பார்க்கக்கூடிய ஒரு காட்சி. இதுவே கேரளத்தின் தனிப்பட்ட நடனக்கலைகளில் ஒன்றாகிய துள்ளல் ஆகும். ஆனால் ஒரு மலையாள இலக்கிய மாணவன் இந்தத் துள்ளலைக் கண்டு களிப்பதுடன் திருப்தியடைய முடியாது. அந்தத் துள்ளும் நட்டுவனோடு அவனது சிந்தனை இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தாவிச் சென்றுவிடும். அப்பொழுது வாழ்ந்த ஒப்புயர்வற்ற நகைச்சுவைக் கவிஞராகிய குஞ்சன் நம்பியாரேயே அந்த நடன நிகழ்ச்சி முடியும்வரை அவன் தன் நெஞ்சில் நிறுத்திக் கொண்டிருப்பான். அவரே இந்தத் துள்ளல் நடனத்துக்கு மூலவராவர். நட்டுவனின் ஒவ்வொரு விகடச் சொல்லும், ஒவ்வொரு கண்வெட்டும், அவன் கைகளினால் காட்டும் ஒவ்வொரு சமிக்கையும், ஒவ்வோர் அங்க—அசைவும் நம்பியாரையே அவன் கண் முன்னால் கொண்டுவந்து நிற்கவைக்கும்.

மலையாள இலக்கியத்தில் நகைச்சுவைக்கு மிகத் தொன்மை வாய்ந்த வரலாறு இருப்பதைக் கண்கூடாகக் காணலாம். பிற மொழிகளின் எவ்விதமான தூண்டுதலுமின்றிக் கேரளத்தின் தனிப்பட்ட சூழ்நிலையில் மக்களின் தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகளை ஒட்டியே அது வளர்ச்சியடைந்திருக்கிறது. இலக்கியத்தின் மற்றப் பிரிவுகளை-சிறுகதை, நவீனம், வாழ்க்கை வரலாறு, நாடகம் முதலியவைகளை—மேல்நாட்டு இலக்கியங்கள் மிகுதியும் ஆட்கொண்டிருக்கின்றன. ஆனால் நகைச்சுவைமீது மட்டும் இதுகாறும் பிற இலக்கியங்களின் நிழல்கூடப் படியவில்லை என்று சொன்னால், அது மிகையாகாது. கி. பி. பத்தாவது நூற்றாண்டில் கேரளத்தில் பரவியிருந்த "கூடியாட்டம்" எனும் நாட்டிய — நாடகத்திலிருந்து உருக்கொண்ட நகைச்சுவை பதினெட்டாவது நூற்றாண்டில் பண்பட்ட இலக்கிய வடிவம் பூண்டு குஞ்சன் நம்பியார் எனும் மலையுச்சியில் அமர்ந்து விட்டது. அன்று முதல் இன்றுவரை இலக்கிய உலகம் அந்த மலையுச்சியை அண்ணாந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

குஞ்சன் நம்பியாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய தெளிவான சான்றுகள் மிகச் சொற்பமே. அவர் கொச்சி இராஜ்ஜியத்தைச் சேர்ந்த கிள்ளிக்குறிசி மங்கலத்தில் 'கலக்கத்து' எனும் குடும்பத்தில் 1905-ல் பிறந்ததாக வரலாறு கூறுகிறது. ஆகையால் அவரைக் கலக்கத்து குஞ்சன் நம்பியார் என்றும் அழைப்பதுண்டு. அவரது குருமாருள் உண்ணிரவிக் குறுப்பு, துரோணம் பள்ளி ஆசான் ஆகிய இரண்டு பேர் முக்கியமானவர்கள். தமது சொந்த ஊரிலேயே கல்வி கற்றுக் கவித்திறமையும் எய்தியபின் அவர் திருவாங்கூர், செம்பகச்சேரி — ஆகிய இராஜ்ஜிய மன்னர்களின் அரசவைக் கவியாக வாழ்ந்தார் என்பது தெளிவு. அவரது குடும்ப வாழ்க்கை, நண்பர்கள் போன்ற ஏனைய விஷயங்கள் ஆராய்ச்சியின் சிக்கல்களுக்குள் அடங்கியவையாகும். அக்காலத்தில் கேரளம் பற்பல சிறு பகுதிகளாகப் பிரிந்

திருந்ததால், நம்பியார் மாறிமாறிப் பல அரசர்களை நாடி வாழ்க்கை நடத்தியவர் என்பதுமட்டும் உண்மை. இந்தச் சின்னஞ் சிறு பகுதிகளைப் போரில் வென்று ஒன்ருக இணைத்துத் திருவாங்கூர் எனும் ஒரு பெரிய நாட்டை அமைத்த வீரமார்த் தாண்ட வர்மா, அவருக்குப்பின் அரசு புரிந்த கார்த்திகைத் திருநாள் இராம வர்மா இந்த இரண்டு மன்னர்களிடந்தான் நம்பியார் நீண்ட காலம் வாழ்ந்திருந்தார்.

நதிகளின் உற்பத்தியையும், சான் ருேர்களின் பிறப்பையும் ஆராயத் தேவை யில்லை என்பது ஓர் அரிய கூற்று. நதி களும், சான்ருேர்களும் உலகத்திற்கு என்ன நன்மை செய்கிருர்கள் என்பதே முக்கியம். எனவே நம்பியாரின் வாழ்க் கையைப் பற்றிய ஆராய்ச்சிகளை விட்டு விட்டு அவரது இலக்கியத் தொண்டை இனிக் கவனிப்போம்.

நம்பியாரின் படைப்புகளில் முக்கிய மானவை துள்ளல் காவியங்கள்தாம். இவை துள்ளல்* எனும் முன்கூறியுள்ள நடனத்திற்காக இயற்றப்பட்டவை; பெரும் பாலும் புராணக் கதைகளே. ஆனல் அவர் புராணக் கதைகளை மக்களிடையே பக்தி யைப் பரப்பும் நோக்கத்துடன் கையாள வில்லை. சமூக சீர்திருத்தமே அவரது நோக்கமாகும். நகைச்சுவை எனும் ஆயு தத்தினல் அவர் சமூகத்தைத் தாக்கினர். புராணக் கதைகளைச் சொல்லிச் சமூகத் தைத் தாக்கும் எண்ணமே நகைச்சுவை மிக்கதாகும். நம்பியார் இம்முயற்சியில் முழு வெற்றியும் பெற்றுவிட்டார். புராணங் களைச் சாக்காகக் கொண்டு கேரள மக்க ளின் பலதரப்பட்ட வாழ்க்கையை வேவு பார்ப்பதே அவர் போக்கு எனலாம். இந்திரலோகம், அளகாபுரி, வைகுந்தம், நிடதம் எல்லாமே அவருக்குத் திருவனந்த புரம்தான். அவர் புராணங்களில் வரும் ஏதாவதொரு மன்னன் தனது படைவீரர் களைப் பற்றிக் குறைப்பட்டுக்கொள்கிருன் என்ருல், அது கேரளத்தில் தொன்று தொட்டு இராணுவத் தொண்டு புரிந்து வரும் நாயர் படையினரைத் தாக்குவ தாகவே பொருள்படும்.

கேரள மக்களாகிய நம்பூதிரிகள், நாயர்கள், அம்பலவாசிகள், நசிராணிகள் முதலானவர்கள் இல்லாத ஊர் சுவர்க்கத் திலோ பாதாளத்திலோ ஏது? "கோஷ யாத்திரை" எனும் கதையில் துரியோ தனன் தனது படையினர்மீது குற்றஞ் சாட்டுவதைப் பாருங்கள் :

பட்டிணியெங்நது நம்முடெ பிள்ளேர்க்
கொட்டும்தன்னெ ஸஹிப்பான் மேலா
வெட்டமடுக்கும் முன்பே பஷ்டிகள்
கட்டிச்சாத மெடுத்து புஜிக்கும்.

கொற்றுகழிஞ்ஞொடு நெக்கன் முண்டும்
சுற்றியுடுத்தொரு தொங்நலு தூக்கி
வெற்றிலதிங்ங முழுப்பிச்சுங் கொண்டு
எற்று திரிக்கும் ரசிகன்மாராய்.

ஊணுகழிஞ்ஞு திரிச்சாலவரெக்
காணுகலில்லொரு திக்கில் போலும்
காணுகயில்லெங் நல்ல திரஞ்ஞால்
ஏஷணிகளுடெ வீட்டில் காணும்.

அத்தாழத்தின்இல வைக்கும் போழ்
எத்தாத்தவனுடெ பில கொண்டீடாம்.

(பட்டினி என்பதை நம் பையன்கள் சிறி தும் தாங்கமாட்டார்கள். பொழுது விடியு முன்னே அவர்கள் கட்டிச் சாதத்தை எடுத் துச் சாப்பிட்டுவிடுவார்கள்......சாப்பிட்ட பின் ஒரு நெக்கன் முண்டு—கேரளத்தின் தென் பகுதிகளில் நெய்யப்படும் வேட்டி கட்டித் தொங்கல் போட்ட துண்டு ஒன் றைத் தோளில் போட்டுக்கொண்டு நன் ருக வெற்றிலை மென்றபடி வெளியே கிளம்பி விடுவார்கள்............சாப்பிட்டுக் கிளம்பிவிட்டால், பிறகு அவர்கள் எங்கே தேடினலும் அகப்படமாட்டார்கள். சில சமயம் அகப்படாமலிருப்பதுமில்லை. தேடிப் பார்த்தால், ஏதாவது அழகிகளின் வீட்டில் இருப்பார்கள். அத்தாழத்துக்கு—இரவுச் சாப்பாட்டுக்கு—இலை வைக்கும்பொழுது யாராவது வரவில்லை என்ருல், அவனுடைய கருமாதியை நாம் நடத்திவிடலாம். உயி ருடன் எங்கிருந்தாலும் சரி, சாப்பாட் டுக்குத் தவருமல் வந்துவிடுவான் என்பது பொருள்.)

"கார்த்தவீரிய விஜயம்" எனும் கதை யில் இராவணன் தான் தோற்கடித்த கார்த்த வீரியார்ஜுனனிடம் கப்பம் கேட் கிருன் :—

* துள்ளல் என்ருல் துள்ளுதல் என்றுதான் பொருள். துள்ளல் நடனம் மூன்று வகைப்படும் அவை ஓட்டன் துள்ளல், சீதங்கன் துள்ளல், பறையன் துள்ளல். ஓட்டன் துள்ளல்தான் மற்ற இரண்டையும்விட அதிகமாகப் பரவியுள்ளது.

விளவில் பாதி நமக்கு தரேணம்
முளகு சமஸ்தவும் அர்ப்பிக் கேணம்
தெங்நு கவுங்நுகள் மாவும் பிலாவும்
எங்நு மெனிக்கிஹ கண்டெழு தேணம்.

(விளவு — பயிர். முளகு — மிளகு. சமஸ்தவும்—முழுதும். தெங்நு—தென்னை மரம். கவுங்நு-பாக்குமரம். கண்டெழுத்து--வரிபோடுவதற்காகக் கணக்கெடுப்பது.)

''கலியாண சௌகந்திக''த்தில் அவர் காணும் அளகாபுரியில் :—

காரியக்காரருண்டு மேனேக்கியச்சனுண்டு
ஆரியப்பட்ட ரச்சன்மார் பலருண்டு
கோவிலம்மமாருண்டு அடுக்களக் காருண்டு
நாயன்மாராயுள்ள கம்படிக்காருண்டு.

நளனுடைய படையிலும் முப்பது அல்லது அதற்கு மேற்பட்ட நாயர்கள் இருந்தார்கள். நம்பியார் கவிதையின் இரண்டு முக்கியமான இயல்புகள் நகைச்சுவை (humour), ஊர்மரபு (local colour) எனலாம். நகைச் சுவையை வெறும் நகைப்புக்கு இன்றி அறிவிலிகளுக்கும், பிறரைச் சுரண்டியும் ஏமாற்றியும் பிழைக்கும் கயவர்களுக்கும் நல்ல பாடம் கற்பிப்பதற்கென்றே அவர் பயன்படுத்தியுள்ளார். ''நகைச் சுவையையும், அறிவையும் இணைத்துக் காவிய ரசனை செய்திருப்பதே நம்பியாரின் சிறப்பு'' என்று டாக்டர் எஸ். கே. நாயர் கூறியுள்ளது முற்றிலும் பொருந்துவதாகும். நம்பியாரின் வாழ்நாளில் கேரளத்தின் சமூக வாழ்க்கை சிறிது சீர்குலைந்த நிலைமை அடைந்திருந்தது. பிறருக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டிய அந்தணர்கள் பேராசை பிடித்துக் குலதருமத்தை மறந்து உலக இன்பங்களில் மூழ்கியவர்களாகவும், நாயர்கள் இராணுவ சேவைக்குத் தகுதியில்லாதவர்களாய்ச் சோம்பேறிகளாகவும் வாழ்க்கை நடத்துவதைக் கண்ணுற்ற அவர் முழு மூச்சுடன் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டார். அதன் விளைவுதான் அவரது துள்ளல் காவியங்கள். ஆனால் யாரையும் நேரடியாகத் தாக்காமல் புராணக் கதைகளின் பல்வேறு சூழல்களையும், நிகழ்ச்சிகளையும் கொண்டே அவர் இந்த அரும் பணியைச் செய்திருக்கிறார். நகைச்சுவையில் இவ்வளவு கடுமையான பரிகாசத்தை (ஏளனம்)ப் புகுத்திய கவிஞர் வேறு எங்கேயும் கிடைக்கமாட்டார்கள்.

விருந்து சாப்பாடு எங்கே கிடைக்கிறது என்று மூட்டை முடிச்சுகளுடன் கடுவெயிலில் ஊர் ஊராகத் திரியும் ஓர் அந்தணரின் வழுக்கைத் தலையில் ஒரு பிடி நெல்லைப் போட்டால், அது பொரியாகப் பொரிந்துவிடுமாம். ''சத்தியா சுயம்வரம்'' கதையில் ஓர் அந்தணர் இரண்டு 'வல்லம்' பப்படத்தை (அப்பளத்தை)ப் பொடிசெய்து இரண்டு பெரிய வாழைப்பழத்தைச் சேர்த்துப் பிசைந்து பெரிய கவளங்களாக உருட்டி வாயில் போட்டுப் பாதி விழுங்கியும் பாதி வெளியே சிந்தியும் சாப்பிடுவதைப் பார்க்க அவருக்குச் சகிக்கவில்லை. சீதா சுயம்வரத்தில் கலந்துகொள்ள ஊர்ப் பெண்கள் போகிறார்கள். கச்சை முண்டு (இரட்டை வேட்டி) உடுத்தி, விரல்களில் பித்தளை—ஈய மோதிரங்கள் இட்டு, கண்களில் கரி பூசி (மை அல்ல), தோளில் துண்டைப் போட்டுக்கொண்டு கூட்டமாகக் கிளம்பிவிட்டார்கள். ஊர்வம்பு பேசிக் கொண்டுதான் போகிறார்கள். இதோ ஒரு வம்பு :

'மாக்கோச்சாரின் பெண்ணைக் காக்கர நாயர் காதலித்தானும். அவன் ஓர் ஐயரின் கடையிலிருந்து பத்துப் பணத்துக்கு ஒரு புடவை வாங்கி அந்தப் பெண்ணுக்குப் பரிசளித்துவிட்டுஇராணுவத்தில் சேர்ந்து எங்கேயோ சண்டைக்குப் போய்விட்டானும். பத்தாந் தேதி பணம் கொடுக்க வில்லை என்றால், பத்துக்கு இரண்டரை வட்டி கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை செய்யப் பட்டிருந்தது. பத்தாந் தேதி பொழுது விடிந்ததும், ஐயர் அவன் வீட்டுக்கு வந்து சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கினாராம். ''காக்கரயானவன் எங்கப் போனான்?...பணமில்லாட்டாப் பணயம் தாரும்......'' என்றெல்லாம் கூச்சல் போட்டாராம். ஆளைக்கூடப் பணய (பண்டம்) மாகப் பெற்றுக்கொள்வாராம்.'

''அகலியா மோட்சத்''தில் கௌதம முனிவரின் சாபத்தை வாங்கிக் கொண்டு அகலிகையிடமிருந்து திரும்பிய இந்திரனை மேனகை வந்து விசாரித்த பொழுது தனக்குக் கடுமையான காய்ச்சல் என்று சொல்லி நன்றாகப் போர்த்திக்கொண்டு படுத்துவிட்டானும். அகலிகையின் கதையைச் சொல்லிப் பட்டணத்துப் புராணத்தையே வருணித்து விட்டார் நம்பியார். நளனுக்

குத் தூதுபோன அன்னம் பாதையோரத்தி லுள்ள ஒரு தென்னை மரத்தின்மீது உட்கார்ந்தபொழுது பார்த்த காட்சியை நம்பியார் இவ்வாறு வருணிக்கிறார் :

வேட்டையாடப்போன நாயர் ஒருவன் திரும்பி வந்தபொழுது, அவன் மனைவி கஞ்சிக்கு அரிசியை அடுப்பேற்ற வில்லை. அதை அறிந்த அவன் வந்த கோபத்தில் மனைவியைத் திட்டிக்கொண்டு தன் ஆயுதத்தைக் காட்டில் விட்டெறிந்தான். பானையில் கொதித்துக் கொண்டிருந்த நீரைக் குழந்தைகளின் தலைமீது கொட்டிவிட்டான். கையில் கிடைத்த தடியினால் மனைவியை நன்றாகப் புடைத்தான். வெண்கலப் பாத்திரங்கள் அனைத்தையும் உடைத்து விட்டான். உரலைத் தூக்கிக் கிணற்றில் போட்டான். அம்மிக் கல்லைத் தூக்கிச் சென்று குளத்தில் போட்டுவிட்டான். இப்படி யெல்லாம் செய்தும் கோபம் தணியாமல் அவன் வீட்டைச் சுற்றிச்சுற்றி ஓடத் தொடங்கினான்.

நம்பியாரது விகடத் தன்மையை விளக்க சுவையான பல நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. அவர் அரச சேவை செய்து வாழ்ந்தவர். ஆனால் அரசருக்குக்கூட அஞ்சாதவர். செம்பகச்சேரி அரண்மனையில் அவர் மிகச் சுவையான ஒரு விருந்து உண்டார். அதைப் பற்றி அவர் ஓர் அழகான சுலோகம் சொல்லி அரசரை மகிழ்வித்தார். (பெரிய இலை, தும்பைப் பூபோன்ற சோறு என்றெல்லாம் ஆரம்பிக்கின்றது அந்த சுலோகம்). சில நாட்களுக்குப்பின் அவர் திருவாங்கூர் அரசாங்கத்துக்கு வந்து விருந்துண்ண நேர்ந்தது. (நம்பியார் விருந்துண்ணுவதில் மிகவும் பிரியம் கொண்டவர்). ஆனால் அந்த விருந்து அவ்வளவு சுவையாக இல்லை. அங்கேயும் அதே சுலோகத்தைச் சொல்லி அதே வார்த்தைகளினால் அந்தச் சாப்பாடு மட்டமானது என்பதை நிரூபித்தார். (வார்த்தைகளின் தொடர்பைச் சிறிதளவு மாற்றியமைத்துத் தும்பை இலை போன்ற இலை என்றும், மலர் (பொரி - நெற்பொரி அல்லது சோளப்பொரி) போன்ற சோறு என்றுமெல்லாம் பொருளை அமைத்து விட்டார்). ஒரு தடவை அரசரும், அவைக் கவிஞர்களும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று பாயசம் கசக்கிறது என்றார் அரசர். இதைக் கேட்ட மற்றக் கவிஞர்கள் "ஆமாம், உண்மைதான்" என்று சொல்லி முகத்தைச் சுளுக்கிக்கொண்டு சாப்பிடாமல் இருந்து விட்டார்கள். ஆனால் நம்பியார் மட்டும் சிறிதும் அருவருப்பின்றிச் சாப்பிட்டுக்கொண்டே யிருந்தார். அதைக் கண்ட அரசர், "ஏன் நம்பியார், உமக்கு மட்டும் பாயசம் கசக்கவில்லையா ?" என்று வினவ, "இல்லை அரசே! அடியேனுக்கு இந்தக் கசப்பு மிகவும் பிடித்தமானது" என்று பணிவுடன் விடை யளித்தார். மற்றக் கவிஞர்கள் வெட்கித் தலை குனிந்தார்கள். அரசர் வேண்டுமென்று தான் பாயசம் கசக்கிறது என்று சொல்லிப் புரளி பண்ணினார். கவிஞர்களைச் சோதிக்கவே அவர் அவ்வாறு செய்திருந்தார்.

துள்ளல் காவியங்களைத் தவிரக் கிளிப் பாட்டு, வஞ்சிப் பாட்டு, பான ஹம்சப் பாட்டு, கிருஷ்ணகாத, ஆட்டக்கத (கதைகள்) முதலிய எல்லா இலக்கிய வடிவங்களிலும் அவர் காவியங்கள் இயற்றியிருக்கிறார். ஆனால் அவரது துள்ளல் பாடல்களுக்கு ஏற்பட்ட புகழ் வேறு எதற்கும் கிடைக்கவில்லை. ஒரு சாதாரண மலையாளிக்குக் குஞ்சன் நம்பியார் என்ற பெயரைக் கேட்டதும் துள்ளலின் கண்கவர் ஓவியம் அவனது மனக்கண்ணை ஆட்கொள்வதுடன் தன்னை அறியாமலேயே ஏதோ ஒரு விகடத் தன்மை அவன் உள்ளத்தைக் கிள்ளிவிடும். ஆனால் அவரது நகைச்சுவையின் ஒரு பெரிய பகுதி மொழியைச் சார்ந்தது. சூழ் நிலைகளுக்கும், பாத்திரங்களுக்கும் ஏற்றவாறு அவர் தேர்ந்தெடுக்கும் வார்த்தைகளே சிரிப்பூட்டக்கூடியவை. அஞ்சாமையே அவரது வெற்றியின் ஒரு முக்கியமான இரகசியம். சமஸ்கிருதத்திலும் பெரிய புலமை எய்தியிருந்தும், தூய மலையாளத்தையே—குறிப்பாகப் பாமர மக்களின் மொழியையே தேர்ந்தெடுத்துக் கொண்டது அவரது முற்போக்குத் தன்மையைத் துலக்கிக் காட்டுகிறது. அவருடைய பல பாடல்கள் பொன்மொழிகள்போன்று மக்களிடையே பரவியுள்ளன. "கனகம் மூலம் காமினி மூலம் கலகம் பலவிதம் உலகில் சுலபம்" என்பதை நாள் ஒன்றுக்கு ஒரு முறையாவது

பாடாத பாமரன் எவனும் கேரளத்தில் இருக்க மாட்டான். கலியாண சௌகந்திகப் பூவைக் கொண்டுவரச் சென்ற பீமன் கந்தன மலையின் அடிவாரத்தில் கண்ட வாழைத்தோப்பு, நளசரிதத்தில் வரும் அன்னப் பறவைகள் — இவைகளின் வருணனைகள் சிறந்த சொல்லோவியங்களேயாம். வருணனைக்கு ஏதாவது வாய்ப்புக் கிடைத்தால் வரம்புமீறி வருணிப்பது, கதையின் முக்கியப் பாதையிலிருந்து விலகி ஏதாவது 'சந்து பொந்துக்குள்' புகுந்து வெகு தூரம் பிரயாணம் செய்வது முதலிய குறைகளும் நம்பியாரிடத்தில் இல்லாமலில்லை. ஆனால் அவருடைய காவியச் செல்வர்கள் பண்ணும் குறும்புத்தனங்களும் அவர்களுக்கு அழகையே தருகின்றன.

நம்பியாரின் படைப்புகளைப் படிக்கும் பொழுது, இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் மலையாள மொழி பெற்றிருந்த தூய்மையும், அழகும், இனிமையும் இன்றைக்கு இல்லையே என்ற வருத்தந்தான் ஏற்படுகிறது. இந்தக் காலத்து முற்போக்குக் கவிஞர்கள் 'மக்களுக்காக' 'மக்களின்' மொழியில் கவிபாடுகிறார்கள். ஆனால், இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் நம்பியார் முன்னேறியிருந்த அளவு இன்றைக்கு யாரும் முன்னேறி விடவில்லை என்பதுதான் உண்மை. ஆங்கில இலக்கிய மேதைகளான டிரைடன், போப்பு, டிக்கன்ஸ், தாபர்—ஏன்?—எந்த உலக மேதையும் நகைச்சுவையில் நம்பியாருக்கு நிகராக மாட்டார் என்பதை அவருடைய படைப்புகளைப் படிக்கும் எந்த இலக்கிய ரசிகனும் ஒப்புக்கொள்வான். ஆனால் இப்படி ஒரு முற்போக்குக் கவிஞர் அல்லது மக்கள் கவிஞர் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் கேரளத்தில் வாழ்ந்தார் என்பது இந்தியாவிலும், கேரளத்தின் அண்டை நாடுகளிலும் உள்ள எவருக்கும் தெரியாமலிருப்பது திரம்பவும் வியக்கத்தக்க ஒன்று அல்லவா?

—] * [—

கழகத்தின் 1963-ஆம் ஆண்டு வெளியீடுகள்

இலக்கியம்

கல்லாடம்
பொ. வே. சோமசுந்தரனார் உரை ரூ. 12—00
பெருங்கதை உரையுடன்
மகதகாண்டம் ரூ 6—50
வத்தவ-நரவாண காண்டம் ரூ. 6—75
தனிப்பாடல் திரட்டு ரூ. 6—25

இலக்கணம்

தொல்காப்பியம் சொல்லதிகாரம்
இளம்பூரணம் உரை ரூ. 6—00

உரைநடை

மேற்கோள் விளக்கக் கதை
அகரவரிசை ரூ. 15—00
பெருங்கதை வசனம் ரூ. 14—00

மொழிபெயர்ப்பு

எண்திசையும் சுற்றிவர
எண்பது நாள் ரூ. 6—75
பகட்டுச் சந்தை ரூ. 4—75

விஞ்ஞானம்

இளைஞர் வானொலி ரூ. 1—50
அதிசய மின்னணு ரூ. 2—00

முகவரி :

திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,

98, கீழைத்தேர்த் தெரு, திருநெல்வேலி. 1/140, பிராட்வே, சென்னை-1.

பாலர் கதைகள்

[பூவண்ணன்]

இலக்கியத்தின் ஒரு பிரிவு கதை. கதை ஒரு சக்தி வாய்ந்த பிரிவு. பெரியவர்கள்கூட கவிதையைப் படித்து இரசிப்பதைக் காட்டிலும், கட்டுரைகளைப் படித்து அறிவை வளர்த்துக் கொள்வதைக் காட்டிலும், கதைகளைப் படித்து இன்பம்பெறவே விரும்புகிறார்கள். அதனால்தான் இன்று பெரியவர்களுக்காக வெளிவரும் புத்தகங்களில் சிறுகதைத் தொகுதிகளும், நாவல்களும் அதிகமாக இருக்கின்றன.

பெரியவர்களுக்கே கதைகளிடம் இத்தனை பற்று இருக்குமானால், பாலர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. பாலர்களுக்குப் பாட்டியை மிகவும் பிடிக்கும். ஏன்? பாட்டி தன்னைப் பெற்றவரைப் பெற்றவள் என்ற காரணத்தினாலா? அனுபவமும் அறிவும் மிகுதியாகப் பெற்றுள்ள காரணத்தினாலா? இல்லை. பாட்டி பாலருக்கு வேண்டிய கதைகளைச் சொல்லுவாள். அவர்கள் விரும்புகிற வகையில் சொல்லுவாள். விதவிதமான கதைகள் சொல்லுவாள். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து சொன்னாலும், பாட்டியின் கதைகள் தீர்ந்து போகமாட்டா. அத்தனை கதைகள் அவளுக்குத் தெரியும்.

பாலர்கள் பள்ளிக்குள் நுழைவதற்கு முன்பே, பாடப்புத்தகத்தைத் தொடுவதற்கு முன்பே ஏராளமான கதைகள் கேட்டிருப்பார்கள். கதைகள் அமைக்கும் கற்பனை உலகமும், அந்தக் கற்பனை உலகில் நிகழும் அற்புதச் செயல்களும் பாலர்களைக் கவர்ந்து விடுகின்றன. அதனால் பாலர்கள் கதைகளுடன் பிரிக்கமுடியாதவாறு இணைந்து விடுகிறார்கள்.

பாலர்களுக்காகப் பத்திரிகைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே தோன்றிவிட்டன. பின்னர் அவர்களுக்காகப் பல புத்தகங்கள் வெளிவந்தன. பத்திரிகைகளைப் பதிப்பித்தவர்களும் புத்தகங்களை வெளியிட்டவர்களும் பாலர்கள் மிகவும் விரும்புவது கதைகள் என்ற உண்மையை நன்கு உணர்ந்தே இருந்தார்கள். பத்திரிகைகளில் கதைகள் முதலிடம் பெற்றன. புத்தகங்களில் கதைப் புத்தகங்களின் எண்ணிக்கை உயர்ந்தது.

1950-ஆம் ஆண்டு சென்னையில் முதலாவது குழந்தைப் புத்தகக் காட்சி நடந்தது. அதில் சுமார் முந்நூறு தமிழ்ப் புத்தகங்கள். இடம் பெற்றன. அவைகளில் பெரும்பாலன புத்தகங்கள் கதைப் புத்தகங்கள். அவற்றைக் கண்டபோது, குழந்தைக்களுக்காக அறிவியல் புத்தகங்கள் நிறைய வெளிவர வேண்டும் என்று கூறினர்.

பத்தாண்டுகளுத்குப் பிறகு, அவர்கள் எண்ணம் நிறைவேறியது. பாலருக்கேற்ற அறிவியல் நூல்கள், வாழ்க்கை வரலாறுகள், பாடல் தொகுதிகள் முதலியன வெளிவந்தன. ஓரளவு அதிகமாகவே வெளிவந்தன. இது பாராட்டிற்குரியதுதான்; ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் கதைகளின் கதி என்ன ஆயிற்று என்பதையும் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு பத்திரிகைகளின் எண்ணிக்கை குறைந்து விட்டது. ஏதோ ஒன்றிரண்டு பத்திரிகைகள்தாம் வெளிவருகின்றன. அதனால் பத்திரிகை உலகில் செங்கோல் செலுத்திய கதை செல்வாக்கு இழந்தது. பெரியவர்களுக்கான பத்திரிகைகள் சில, குழந்தைப் பகுதிகள் வெளியிடுகின்றன. அவையும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களையும், உலக விநோதங்களையும் வெளியிடுவதில் காட்டும் ஆர்வத்தைக் கதைகள் வெளியிடுவதில் காட்டுவதில்லை. பதிப்பாளர்கள்? முன்னர் கதைப் புத்தகங்களை அதிகமாக வெளியிட்டவர்கள் அறிவியல் புத்தகங்களை வெளியிட்டனர். கதைப் புத்தகங்களை வெளியிடுவதில் போதிய ஆர்வம் காட்டுவதில்லை. குழந்தை நூல்களுக்குப் பரிசளித்து

வந்த சென்னை அரசினரும், பரிசளித்து வரும் மத்திய அரசினரும் கதைப் புத்தகங்களுக்குப் பரிசளிப்பது அரிதாகவே இருக்கிறது. இதுவரை இரண்டே கதைப் புத்தகங்கள்தாம் பரிசு பெற்றுள்ளன. எனவே பாலர் கதைகள் குறைந்து வருகின்றன. பாலருக்குக் கதை எழுதுவோர் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது.

"கதைகள் வெறும் பொழுதுபோக்கிற்குத்தானே பயன்படுகின்றன. அறிவியல் நூல்கள் பாலர்களின் அறிவை வளர்க்கும். ஆகையால் அறிவியல் நூல்கள்தாம் அதிகம் வேண்டும்" என்றும் அவர்கள் கூறக்கூடும்.

அறிவியல் நூல்கள் பாலருக்குத் தேவைதான். நிறைய எழுத வேண்டும்; நிறைய வெளியிட வேண்டும். ஆனால் பாலர்களுக்கு அறிவியல் நூல்கள் மட்டும் போதுமா? அறிவியல் நூல்கள் அறிவை வளர்க்கும். அறிவு மட்டும் போதுமா? பண்பு வேண்டாமா? பாலர்களிடம் நல்ல பண்புகளை உண்டாக்கப் பழங்காலத்தில் பாட்டிகள் கதைகள்தாம் சொன்னார்கள். பாட்டிகளின் கதைகளுக்குள்ளே மறைந்திருந்த பண்புகள் பாலர்களின் உள்ளங்களில் உறைந்திருந்தன. அவைகள் பலருடைய வாழ்க்கையினையே மாற்றின. காந்தியின் உயர்ந்த பண்புகளுக்கு இளமையில் அவர் படித்த சரவணன் கதை உதவவில்லையா? சிவாஜியை பாரதத்து வீரப்புதல்வனாக மாற்றியவை, அவர் அன்னை ஜீஜீபாய் சொன்ன கதைகள்தாமே?

கதை பாலரைக் கவருவது போல வேறு எதுவும் கவரமுடியாது. அந்த சக்தி வாய்ந்த கதைகள் பாலர்களின் பொழுதுபோக்கிற்காக அல்ல; அவர்களைப் பண்புள்ளவர்களாக்க அவசியம் தேவை. கதைப் புத்தகங்கள் குறைந்துகொண்டே சென்றால், வருங்காலத்துக் குழந்தை இலக்கியம் குறையுடையதாகவே திகழும்.

எனவே பாலர் கதைகள் முன்பு இருந்ததைப்போல உயர்ந்த நிலையை அடைய வேண்டும். பாட்டிகள் சொன்ன கதைகள் முற்றிலும் மறைந்து விடுவதற்குள் அவை அனைத்தையும் புத்தகங்களாக்க வேண்டும். புத்தம் புதிய கதைகளும் எண்ணற்றவை தோன்ற வேண்டும். குழந்தைப் புத்தகங்கள் வெளியிடுவோர் கதைப் புத்தகங்களை ஒதுக்காமல் வெளியிட வேண்டும்.

பாலர்கள் கதைகளை நிறையப் படிக்க வேண்டும் என்று இங்கே சொல்ல வேண்டியதில்லை. பாலர்களின் கதை படிக்கும் ஆர்வம் குறைந்து விடவில்லை; என்றும் குறையாது. அதனால்தான் பாலர்கள் விரும்பும் கதைகள் மூலம் பண்பை வளர்ப்பது அவசியமாகிறது. கதைகள் பண்பை வளர்க்கும்; கற்பனையைத் தூண்டிவிடும். சோர்ந்த உள்ளங்களுக்கும் சுகம் அளிக்கும்.

குழந்தைகளுக்காக எழுதுவோர் கதைகள் புனையும் தொண்டினை நிறுத்தாமல் தொடர்ந்து செய்துவர வேண்டும். பதிப்பாளர்களும் கதை நூல்களை, அறிவியல் நூல்களைவிட அதிகமாக வெளியிடாவிட்டாலும், அந்த அளவாவது வெளியிட வேண்டும். அறிவியல் நூல்களும் கதை நூல்களும் கைகோத்துச் செல்லட்டும்.

பாலர்களின் உள்ளத்தைப் பண்படுத்தும் கதைகள் வெறுங் கதைகள் அல்ல; அவை உயர்ந்த பண்பை விளைவிக்கும் விதைகள்.

தமிழ் நூல்கள் — ஒரு மதிப்பீடு

[நா. ஜகந்நாதன்]

தமிழில் இப்போது ஏராளமான நூல்கள் வெளிவருகின்றன. முன்னர்—ஒரு பத்து ஆண்டுகளுக்கு, அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன்னர் — வெளிவந்த நூல்களைவிட அதிகமான நூல்கள் இப்போது ஆண்டுதோறும் வெளிவருகின்றன. மகிழ்ச்சி தரக்கூடிய, வரவேற்கக் கூடிய புள்ளிவிவரங்கள் நமக்காகக் காத்திருக்கின்றன. வெளிவருகிற நூல்களை ஒரு முறை ஆராய்கிற நேரத்தில், புத்தக அமைப்பில், அச்சிடும் முறையில், அட்டைப் பட அழகில்—எந்த விதத்தில் நோக்கினாலும், சென்ற இருபது ஆண்டுகளை விடச் சிறந்த முன்னேற்றம் பளிச்செனத் தெரிகிறது ; மறுப்பதற்கில்லை.

ஆனால்—

வெளிவருகிற நூல்களை ஆராய்கிற அதே சமயத்தில் நமக்கு ஒரு பயங்கரமான உண்மை தெரிகிறது. அதை யாரும் மறுக்க முடியாது. வெளிவரும் தமிழ் நூல்களில் நூற்றுக்கு ஐம்பது சதவீதம் வெறும் கதைகள் அல்லது நாவல்கள் என்ற பெயரில் உள்ள பொழுதுபோக்கு இலக்கியம். இவைகளில் பெரும்பாலும் காலப்போக்கில் நிற்க முடியாதவை ; காலவெள்ளத்தில் நீந்தி, எதிர்நீச்சல் போட்டு, ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் சுவை குன்றாமல், குறையாமல், நடை மங்காமல் படிக்கக்கூடிய கதைகளும், நாவல்களுமாகத் தேர்ந்தெடுக்கப் படக்கூடிய பெருமை பெறத்தக்கவையாகச் சிலவே எஞ்சி நிற்கும். மீதியுள்ள ஐம்பதில், இருபத்தைந்து சதவீதம் குழந்தைகளுக்காகவும், சிறுவர்களுக்காகவும் வெளிவரும் நூல்களாகும். குழந்தை இலக்கியத்திலும் சென்ற இருபது ஆண்டுகளில் நாம் பாராட்டத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் நிலையான, அறிவியல், விஞ்ஞானவியல் நூல்கள் குழந்தைகளுக்காக வெளிவந்துள்ளவைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். எஞ்சியுள்ள இருபத்தைந்து சதவீதத்தில் தன் வரலாற்று நூல்கள், பிரயாண நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் முதலியவை பத்து சதவீதம் தேறும். விஞ்ஞானம், பொறியியல், பொருளாதாரம், சமூகவியல், உளவியல், தரையியல், புள்ளியியல், வானவியல், புவியியல், தாவரவியல், விலங்கியல், போன்ற பல்வேறு அறிவியல் துறைகளில் வெளிவரும் நூல்கள் நூற்றுக்குப் பத்து சதவீதம் ஆகும். மீதி ஐந்து சதவீதம் எதிலுமே சேராத, சேர்க்க முடியாத, குப்பை இலக்கியமாகும். இதை மலிவுப் பதிப்பு என்றும் கூறுவதுண்டு.

இன்று விஞ்ஞானத் துறையில், ஆங்கிலத்தில், பிரஞ்சு மொழியில், இரஷ்ய மொழியில் வெளிவரும் நூல்களை விவரிக்கவே முடியாது. விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகளிலும் எத்துணை நூல்கள் ? அப்பப்பா ! "வானவெளிப் பயணம்" பற்றிய நூலா ? இதோ, பெரியவர்களுக்குப் பல நூல்கள்! இதோ, சின்னஞ் சிறுர்கள் படிப்பதற்காக நூல், அழகிய விளக்கப் படங்களுடன் ! "ஐன்ஸ்டீன் கண்டுபிடித்தது என்ன, அவர் வரலாறு யாது, அவர் வளர்ந்த சூழ்நிலை எப்படி, இதுபோன்ற நூல்கள் எத்தனை வேண்டும்? பெரியவர்களுக்கு அந்தத் துறையில் மிகநுட்பமான, ஒரு பொருளை மட்டும் விளக்கும் அரிய ஆராய்ச்சி நூல்கள் ! அதே பொருளில், எளிய நடையில் குழந்தைக்காகவும், அந்தத் துறையில் அதிகத் தேர்ச்சி பெருத பொதுமக்களுக்காகவும் எண்ணரிய நூல்கள் வெளிவருகின்றன.

ஆங்கிலத்தில் வெளிவரும் நூல்களை நாம் ஆராயப் புகுந்தால், நம்மைப் பிரமிக்க வைக்கக்கூடிய உண்மைகளை நாம் காணமுடியும். "இந்திய நாட்டு மலர்கள்" என்ற தலைப்பில் ஒரு நூல்! இந்தியாவில் எந்தெந்த மாநிலத்தில் எந்தெந்த மலர்கள் விளைகின்றன, அவை வளரும் சூழ்

நிலை என்ன, இன்ன பிற விவரங்கள் கொண்ட ஆராய்ச்சி நூல்! "கேரள நாட்டுப் பழங்குடி மக்கள்" என்று ஒரு நூல்! அதில் கேரளத்தில் உள்ள பழங்குடிகள் யார் யார் அவர்கள் எந்தெந்த இனத்தைச் சேர்ந்தவர்கள், மலைக்குன்றுகளில் வசிப்பவர்கள் எந்தப் பழங்குடிகள், காடுகளில் வசிப்பவர்கள் எந்தப் பழங்குடிகள், அவர்களின் உணவு வகைகள், உடைகள், பிற மக்களிடம் பழகும் முறை, திருமண முறைகள், தொழில் வகைகள் முதலியவை விளக்கப்பட்டுள்ளன. "எழுத்துக்களைப் பொறிப்பது எப்படி?" என்று ஒரு நூல்! அதில் வீடுகளின் முகப்புகளில் எழுத்துக்களைப் பொறிப்பது எப்படி, எந்தெந்த வீடுகளில் எப்படி எப்படி எழுத்துக்களைச் செதுக்கலாம், சிமெண்டு வீடுகளில் எந்த எழுத்துக்களைப் பொறித்தால் பளிச்செனத் தெரியும், கான்கிரீட்டு வீடுகளில் எப்படிப் பொறிக்க வேண்டும் என்ற விவரங்கள் தரப்பட்டுள்ளன. "இந்தியாவின் பறவைகள்" என்று 34 ரூபாய் விலையுள்ள ஒரு நூல். அதில் இந்தியாவில் உள்ள பறவைகள் யாவை, அவை எந்தெந்த இனம், எந்தெந்த மாநிலத்தில் எத்தகைய பறவைகள் வாழ்கின்றன, அவைகளின் உணவு வகைகள் யாவை முதலியவை விளக்கப் படங்களுடன் தரப்பட்டுள்ளன. "பைபிளின் பூகோளம்"என்ற ஒரு நூலில் பைபிளில் எந்தெந்த ஊர்கள் வருகின்றன, அவை எங்கே உள்ளன, அவைகளின் மக்கள் நிலை என்ன முதலியன விளக்கப் பட்டுள்ளன. ஷேக்ஸ்பியர் காலத்து மக்களின் நிலைமை எவ்வாறு இருந்தது என்பதை அறிந்துகொள்ள வேண்டுமா? நூற்றுக் கணக்கில் நூல்கள் உள்ளன. நெப்போலியனைப் பற்றியும், அவனது படையெழுச்சியைப் பற்றியும், அவனது குணநலன்களைப் பற்றியும் எத்தனை நூல்கள் வேண்டும்? எண்ணிறந்த நூல்கள் உள்ளன! இப்படி எண்ணரிய துறைகளில், வேண்டிய பொருள்களுக்கு இல்லை என்னுமல், வேண்டிய நூல்கள் மேனாட்டு மொழிகளில்—குறிப்பாக ஆங்கிலத்தில்—வெளிவந்துள்ளன; வெளிவருகின்றன. இதுபோல் தமிழில் நூல்கள்..?

ஆயிரம் பக்கம் கொண்ட ஓர் அகராதி அல்லது ஒரு கலைக்களஞ்சியம். அதில் மாக்மிலனைப் பற்றி ஒரு சிறு செய்தியைத் தெரிந்துகொள்ள ஆவல். ஆயிரம் பக்கங்களையும் புரட்டிக் கொண்டிருக்க முடியுமா? மாக்மிலன் பிறப்பு, வளர்ப்பு, பாராளுமன்றத்தில் நுழைதல், பதவி ஏற்றல், குடும்பம் முதலிய தலைப்புகளில் அகராதியின் கடைசிப் பக்கத்தில் குறிப்பகராதி (Index) கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பக்கங்களில் புரட்டிப் பார்த்தால், நமக்கு மாக்மிலனைப் பற்றித் தேவையான விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம். குறிப்பகராதிகள் நூல்களின் கடைசியில் சேர்க்கப்படுவதால், நமக்குத் தேவையான விவரங்களை உடனே தேடி எடுத்துக் கொள்ள முடிகிறது; நேரம் வீணுவது தடுக்கப்படுகிறது. தமிழில் வெளிவரும் அறிவியல் நூல்களிலும், பெரிய தொகுப்பு நூல்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்களிலும் இத்தகைய குறிப்பகராதிகள் பெரும்பாலும் இல்லை என்பதை வருத்தத்தோடு குறிப்பிடத்தான் வேண்டும். இனி வரும் நூல்களில் குறிப்பகராதிகள் சேர்க்கப்பட வேண்டும்.

திருவள்ளுவர் காலம், திருவள்ளுவர் திறன், திருக்குறளின் சிறப்பு என்றெல்லாம் திருக்குறளைப் பற்றிப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. Shakespear Bibliography என்று ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரைப் பற்றி அகராதிகள் பல வெளிவந்துள்ளன. அதேபோல் திருக்குறளைப் பற்றியும், திருவள்ளுவரைப் பற்றியும் வெளிவந்துள்ள நூல்களில் உள்ள முக்கியமான விவரங்களையெல்லாம் ஒரே நூலாகத் தொகுத்து வெளியிட வேண்டும். திருவள்ளுவரின் காலம் எது, அவர் திருக்குறள் எழுதிய சூழ்நிலை என்ன, அவர் வாழ்ந்த காலத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் எப்படி இருந்தது, திருக்குறள் எந்தெந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்றெல்லாம் கூறும் ஒரு திருக்குறள் பேரகராதி வெளியிடவேண்டும். அதேபோல் சிலப்பதிகாரம் பற்றியும், இராமாயணம் பற்றியும், மணிமேகலை பற்றியும், அகநானூறு, புறநானூறு பற்றியும் பேரகராதிகள் வெளிவர வேண்டும். திருக்குறளைப் பற்றி இத்தகைய ஒருநூல் ஒரு வகையாக வெளிவந்துள்ளது பாராட்டத் தக்கது. அதேபோல் பல்வேறு துறைகளி

லிருந்தும் திருக்குறளை ஆராய்கிற நூல் வெளிவருதல் வேண்டும்.

ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு, இரஷ்யன் போன்ற மொழிகளில் வெளிவருகிற அளவிற்கு விஞ்ஞான-அறிவியல் நூல்கள் தமிழில் வெளிவருதல் வேண்டும். இப்போது இத்துறைகளில் வெளிவரும் நூல்களில் பெரும்பாலானவை மொழிபெயர்ப்பு நூல்களே என்பதை நாம் மறைப்பதற்கில்லை. இந்த நிலை மாறிச் சொந்தக் கருத்துக்களை உள்ளடக்கிய, தமிழ் நாட்டுக் கலை, பண்பு, மொழி, நாகரிகம் ஆகியவைகளின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்கக்கூடிய விஞ்ஞான, அறிவியல் முதல் நூல்கள் தமிழில் நிறைய வெளிவருதல் வேண்டும். அந்த நாளே தமிழ் மறுமலர்ச்சியின் பொன்னாள்! அந்த நன்னாள் வெகு விரைவில் வருவதாகுக!

பிரிண்டிங் பேப்பர்கள்
போர்டுகள்
மார்பிள்கள்
மற்றும் உங்களுக்குத் தேவையான பேப்பர் வகைகளுக்கு:

சிவாஜி பேப்பர் ஸ்டோர்ஸ்

13, ஆண்டர்சன் தெரு,
சென்னை-1.

Stockists For:

J. K. PAPER MILLS

Phone: 22557
Grams: "BUSYMAN"

தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கும்,
'பாரதி'க்கும்
எங்கள்
வாழ்த்துக்கள்

சுதேசமித்திரன்

மவுண்டு ரோடு, சென்னை - 2.

இன்றைய தமிழ்க் கவிதைச் சோலை

[கா. வேழவேந்தன்]

'எமக்குத் தொழில் கவிதை' என ஏறுபோல் முழங்கும் கவியுழவர்கள் தமிழ் வயலில் ஏராளம் உண்டு. தமக்குப் பிறகு தம் புகழ் பாடும் பட்டயங்கள், எஞ்சி நிற்கும் கவிதை வரிகளே என்று அவர்கள் முழுக்க முழுக்க நம்பினார்கள்.

பண்படுத்தப்பட்ட தமிழ்க் கவிதைச் சோலையிலே செழித்து வளர்ந்த இலக்கிய மரங்களைக் கணக்கிட்டு எண் கொடுத்து விட முடியாது.

அகமும் கலியும் போன்ற அமுதனைய காதற் பாடல்கள், பத்தும் பரணியும் போன்ற பார் வியக்கும் போர்ப் பாடல்கள், நாலடியும் ஈரடியும் போன்ற நல்வழி அறப் பாடல்கள், சிலம்பும் மணியும் போன்ற செம்மை மிகு காப்பியப் பாடல்கள் கோவையும் உலாக்களும்போன்ற கொஞ்சு தமிழ் நலப் பாடல்கள், சதகமும் பிள்ளைத் தமிழும் போன்ற தரமேறிய எழிற் பாடல்கள், தூதும் அந்தாதியும் போன்ற சுவையூட்டும் தனிப்பாடல்கள் தமிழ்க்கழனியிலே அறுவடை செய்யப்பட்டன. இவற்றிற்குப் பின்னால் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் அந்த வயலிலே நுழைந்தார்கள்.

சுந்தரனாரும் சுப்பிரமணிய பாரதியும் கவிமணியும் நாற்றுவிட, தொடர் சங்கிலி போல் பல்வேறுபட்ட கவியுழவர்கள் புதுமை கொழிக்கும் கருத்துப் பயிர்களை ஊன்றினார்கள்.

எழுத்தை எண்ணி எண்ணிப் பார்த்து இலக்கணத்தை இம்மியும் பிறழவிடாமல், வைத்த புள்ளியையே சுற்றிவந்து கோலமிடுதல்போல் கவிபாடி வந்தவர்களிடமிருந்து நெடுந்தொலைவு விலகிச் சென்று புரட்சி காண முனைந்தனர் பாரதியும், அவருக்குப்பின் வந்த கவிஞர்களும்.

சீர்பிரித்துப் படித்தாலும் செய்யுளின் தெய்வத்தன்மை கெட்டுவிடும் என்ற காலம் போய் எளிமையும் இயல்பும் கவிதைகளிலே மலியத் தொடங்கின.

'யாரை விட்டதுகாண் விதிவசம், எவரை விட்டதுகாண்' என்ற பழங்கொள்கையைத் தூர எறிந்து, படைத்தவனுக்கே கட்டளையிடும் காலக்கட்டத்தைக் கவிஞர்கள் எட்டிப் பிடித்தார்கள்.

முன்னோர் சென்ற சாலிலேயே பின்னோர் போகவேண்டும் என்ற முறையை முறிக்க முனைந்தது புதிய கவிஞர் அணி! எடுத்துக் காட்டாக 'தையல் சொல் கேளேல்' என்றாள் தையல் ஔவை. அதே வழியில் 'சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே' என்று விவேக சிந்தாமணிக் கவிஞர் பாடினார்.

ஆனால் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களோ பெண்மைக்கே முடிசூட்டி உச்சிக்கு உயர்த்தினார்கள்.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்றார் பாரதி.

அதற்கும் ஒரு படி மேலே சென்று கவிமணி, 'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்றார்.

பின்னால் பாடிய பாரதிதாசனோ, 'வண்மை, உயர்வு, மனிதர் நலமெல்லாம் பெண்மையினால் உண்டென்று பேச வந்த பெண்ணழகே' என்று வையத்தின் ஆக்கத்திற்கே பெண்தான் முதன்மையானவள் என்று அடித்துக் கூறினார்.

இப்படிக் காலத்தை மாற்றியமைக்கும் கருத்துக்கள், சமுதாயத்தைச் செப்பனிடப் பயன்படும் சட்டங்கள், எதிர்காலத்தில் நிகழவேண்டிய அற்புதக் கற்பனைகள் ஆகியவை தமிழ்க் கவிதை வரிகளாக உலாவந்தன.

உலகத்தில் அமைதி தழைக்க வேண்டும் என்று போதித்த போதிமரத்துப் பிரானைப் பற்றி 'ஆசிய சோதி' என்ற

அரிய காப்பியம் ஆக்கிக் கொடுத்தார் கவிமணி.

'தலைவிக்குத் தலைகுனிவைத் தேடும் தலைவனும் தலைமகனா?' என்ற கேள்விக் குறியை எழுப்பினார் 'பாஞ்சாலி சபதத்தின்' மூலம் பாரதி!

'நல்ல குடும்பமே பல்கலைக் கழகம்' என்ற தமிழகத் தத்துவத்தைத் தாரணிக்கு உணர்த்த, வெல்லச் செய்யுள் வடித்தார் 'குடும்ப விளக்கு' பாரதிதாசன். அவருடைய 'பாண்டியன் பரிசும்', 'தமிழியக்கமும்' பின்னால் வந்தவர்களுக்கு நாற்றங் கால்களாக அமைந்தன.

இவர்களைப்போல், 'சுவைக்கு ஒரு கனி, நிறத்துக்கு ஒரு மலர்' என்ற வகையில் பல்வேறு துறைகளில் கவிதை நெய்தார்கள் அடுத்த அணியினர்.

'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்று மெத்தவும் நடைமுறைச் சொல்லைப் பயன்படுத்திக் கவிதைகள் வடித்தவர் நாமக்கல் கவிஞர். 'அவனும் அவளும்' அவருடைய புதினம் போன்ற எளிமைக் கவிதை நூல்ஆகும்.

சுத்தானந்த பாரதியும், ச. து. சு. யோகியாரும் 'பாரத மாகாவியங்'களையும், 'தமிழ்க் குமரி'களையும் கொண்டுவந்து மிடுக்குடன் நிறுத்தினார்கள்.

அழகின் சிரிப்பொலியில் விழுந்தெழுந்த வாணிதாசன் 'எழிலோவிய'த்தை யாப்புத் தூரிகையால் வரைந்து காட்டினார்.

கண்ணதாசனின் ' மாங்கனி 'யும், 'பெரும்பயண'மும், 'பாண்டிமா தேவி'யும் அவருடைய சொல்லாட்சியையும், கொள்கைப் பிடிப்பையும் காட்டும் கண்ணாடிகளாக அமைந்தன. சூடும் சுவையும் நிறைந்தவை அவருடைய அரசியல் கவிதைகள் என்றாலும், அவர் கூறிய கருத்துக்களை அவரே மறுக்கும் விந்தைக் காட்சியையும் யாரும் மறப்பதற்கில்லை.

முடியரசனின் கவிதைகளில் இனிமையும், எளிமையும் கொடி போடுகின்றன.

புலவர் குழந்தையின் 'இராவண காவியம்' பொதுமக்களின் விழிகளுக்கப்பால் சென்றுவிட்ட போதிலும், போற்றிப் படித்தோரின் நெஞ்சில் ஒளிர்ந்து கொண்டே உள்ளது.

ஜீவாவின் கவிதைகளில் மேட்டுக் குடி தாழ்ந்த குடியின் ஏற்றத்தாழ்வுகள் கடல் மடைபோல் ஓடிவரும்.

புதுமைப்பித்தனும், பிச்சமூர்த்தியும், சுரபியும், சுப்புவும், கி. வா. ஜ. வும் தம் கருத்துக்களுக்குக் கவிதை யுருவை நேர்த்தியாகக் கொடுக்கிறார்கள்.

'சுரதா'வின் துறையே தனிமையானது. 'தொடாத வாலிபம்' முதல் அவர் தொட்ட கவிதை யெல்லாம் இனக் கவர்ச்சியின் நெடி கொண்டதாக உள்ளன. செழுமையுடன் துள்ளும் உவமைகளை அவர் கவிதைகளில் நுகர முடியும்.

'இளவேனில்' சோமுவும், பெரியசாமித் தூரனும், தமிழழகனும் ஓசைக்கு முதலிடம் தந்து புதுமைக் கவிதைகளைப் படைக்கிறார்கள்.

தமிழண்ணல், மு. அண்ணாமலை, சாமி. பழனியப்பன், நாக. முத்தையா, நாரா. நாச்சியப்பன், தமிழ்ப் பித்தன், இளங்கோவன் ஆகியோர் தென்பாண்டித் தமிழால் தேனனைய கவிதைகளை ஆக்கித் தருகிறார்கள். 'பாரதிதாசன் பரம்பரை' என்று தம்மைச் சொல்லிக் கொள்ளவும் இவர்கள் தயங்குவதில்லை.

மயிலை சிவமுத்துவும், அழ. வள்ளியப்பாவும், தணிகை உலகநாதரும், மா. இராசமாணிக்கனாரும் மழலைச் சிறுவர்களுக்குக் கரும்பனைய கவிதைகளை விருந்தாக்கி வைக்கிறார்கள். இவர்களில் 'குழந்தைக் கவிஞர்' என்ற சிறப்புக்குரியவராக அழ. வள்ளியப்பா திகழ்கிறார்.

கொண்ட கோட்பாட்டின் வழியினிலே தமிழைக் கொலுவேற்றி வைக்கவேண்டுமென்று, கொஞ்சு தமிழ்க் கவிதை பாடுகின்றனர் பொன்னி வளவன், துறையூர் ந. அலி, ந. பாண்டுரங்கன், அரங்கசாமி, கருணானந்தம், ந. இறைவன், கா. மு. உமர், சா. கணேசன், முத்தெழிலன் ஆகியோர்.

கா. அப்பாத்துரையாரும், டாக்டர் மு. வ. வும், டாக்டர் சிதம்பரநாதனும் அவ்வப்போது கவிதைகள் எழுதி நம்மை மலைக்க வைக்கிறார்கள்.

நாணலும், திருலோக சீதாராமும், தே. ப. பெருமாளும், குயிலனும் எடுத்த பொருளைக் கவிதைச் சரத்திலே தொடுப்பதில் தனிப் பாணியைக் கையாளுகின்றனர்.

கல்லூரிக் காலத்திலேயே வெல்லம் நேர் கவிதைகள் தீட்டியவர்களில் வல்லம் வேங்கடபதி, மின்னூர் சீனிவாசன், தமிழோவியன் முதலியோர் இடம் பெறுகிறார்கள்.

காதர்முகைதீனும், பல்லடம் மாணிக்கமும், என். எஸ். சிதம்பரமும், துறைவனும், தா. காசிமும், இளஞ்சேரனும், சாலை. இளந்திரையனும், இரகுநாதனும், பரலி. சு. நெல்லையப்பரும், தமிழ் ஒளியும் எழுதும் கவிதைகள் கூந்தலில் சூடிய ஒற்றை ரோஜாபோல் தனித்து மிளிர்கின்றன.

காந்தி மகானைக் காப்பியத்திலே காட்டிய அசலாம்பிகை அம்மையாருக்குப் பிறகு சௌந்தரம் கைலாசம், ஜ்வாலா ஆகியோர் பெண்களின் பிரதிநிதிகளாகக் கவிதை வயலுக்கு வருகின்றனர்.

நாடக — திரைப்படத் துறைகளில் பாபநாசம் சிவனுக்குப் பிறகு கம்பதாசன், பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம், புத்தனேரி சுப்பிரமணியம், ஷெரீப், கு. மா. பா., மருதகாசி, ஆலங்குடி சோமு, இலட்சுமணன் ஆகியோரின் கவிதைப் பணி வரவேற்கும் முறையில் உள்ளது.

இடம் நோக்கி விடுபட்ட கவிஞர்கள் இன்னும் பல பேர் கவிதைக் கழனியிலே உழவு செய்கிறார்கள்.

மொத்தத்தில் இன்றைய தமிழ்க் கவிதை வயலில் செழித்துள்ள கவிதைப் பொழில், நுழைந்தவரை மயக்கவைக்கும் எழிலோடு உள்ளது. எனினும் இங்கு இல்லாத மரம் இல்லை' என்று கூறிப் போட்டிக்கு அழைக்கும் ஈழத்துப் 'பெரதேனியா' தோட்டம்போல் ஏற்ற மிகு தமிழிடம் விளையாத கவிதைப் பயிர் இல்லை என்று மொழித்துறையில் நாம் அறை கூவல் விடும் நாள் வரத்தான் வேண்டும்.

—]✱[—

Phone: 23430

Grams: "EXQUISITE"

For all Your Requirements of up-to-date Sanitaryware, Bathroom Fixtures, Marble Slabs, Picture Tiles, Marble Chips, White Cement etc.,

✱

Contact:

SWAMY & COMPANY

SANITARY ENGINEERING CONTRACTORS,

318, Thambu Chetty Street,

MADRAS-1.

Enquiries Solicited.

பண்டைப் பேரிலக்கியங்கள் முதல்
இன்றைய விஞ்ஞானத்தின்
புதிய துறைகள் வரையில் சகல
துறைகளிலும் நூல்களை வெளியிட்டுத்
தமிழ்த் தொண்டாற்றிவரும்
நிறுவனம்

குழந்தைகளுக்கான நூல்களை
சீரிய முறையில்
தயாரித்து அளித்து வருபவர்கள்.

✱

மனோன்மணி புத்தக நிலையம்,
138-A, பவளக்காரத் தெரு,
சென்னை-1.

சிறுகதை இலக்கியம்

[நா. பார்த்தசாரதி]

கதை பிறக்கும் கதை:

சிறு கதைகளைப் படிக்க வேண்டுமென்ற ஆர்வமும், சிறுகதைகளை எழுத வேண்டுமென்ற முனைப்பும் ஒத்த அளவில் வளர்ந்து வருகிற காலம் இது! தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தின் நல்ல காலம். இதை நாம் பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ளத் தயங்கவேண்டியதில்லை.

மனித சமுதாயத்தில் சிறுகதைகள் எப்படி உண்டாயின? சிறுகதைகளை எழுதுகிறவர்களும், படிக்கிறவர்களும் எப்படித் தோன்றினர்? ஓயா வாழ்க்கைப் போரில் பிறந்த நாள்தொட்டு ஒழியாது முனைந்து கிடக்கும் மனித இனம் சிறுகதைகளில் இன்பம் காணத் தொடங்கிய காலம் எது?

சுவை நிறைந்த இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டால், சிறுகதையின் கதை ஓரளவு தெளிவாகப் புரிந்துவிடும். வாழ்வின் இன்ப துன்பங்களையும், ஏற்றத் தாழ்வுகளையும், குறைவு நிறைவுகளையும் அதில் இருந்துகொண்டே அதனின்றும் நினைப்பினால் விலகி நின்று கலைநோக்குடன் பார்க்கும் ஆசை முதன்முதலாக மனித இனத்திற்கு என்று ஏற்பட்டதோ அன்றே சிறு கதைகளை உருவாக்கும் ஆசையும், படிக்கும் ஆசையும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

நம்மைப் புகைப்படம் எடுத்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசை, நம்மைப் பிறர் புகழவேண்டும் என்ற ஆசை, (சில சமயங்களில் பிறர் செய்யும் புகழ்ச்சியை நாமே செய்து கொள்ளுதலும் உட்பட) நம்முடைய நிழலைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை—நமக்கு ஏற்படவில்லையா? சிறுகதை இலக்கியம் படைக்கப்பட்டதும் இது போன்றதோர் அவாவின் விளைவுதான் என்று கருதலாம்.

வாழ்க்கையில் மலிந்து கிடக்கும் உயர்வு தாழ்வான குணங்களையும், வியப்பு விந்தை கலந்த நிகழ்ச்சிகளையும், சாதாரண அசாதாரணச் சம்பவங்களையும் கலைக் கண்ணாலே காணும் நளினமான விருப்பம் இந்தத் தலைமுறையில் அளவு கடந்து வளர்ந்திருக்கிறது. வாழ்க்கையே வளர்ந்திருக்கும்போது, கலைகள் மட்டும் வளராமலிருக்க முடியுமா? சிறுகதை, நாடகம், நாவல், திரைப்படம்-ஆகிய பல துறைகளிலிருந்தும் கதைக்கு மதிப்புப் பிறந்ததே இந்தக் கலைக்கண்ணோட்டத்தின் காரணமாகத்தான்.

புதிய சிறுகதை:

பஞ்ச தந்திரக் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், இன்னும் பழைய தலை முறையைச் சேர்ந்த எண்ணற்ற நீதிக் கதைகள்—ஆகியவற்றையும் சிறு கதைகள் என்று கூறலாம். ஆனால், அண்மையில் கால்நூற்றாண்டுக் காலத்திற்குள்ளாகத் தமிழில் புதிய முறையில் வளர்ந்திருக்கும் சிறுகதை இலக்கியத்தை ஈடு இணையற்ற வளர்ச்சி என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். புறநானூற்றிலும், சங்க நூல்களில் மிகுந்திருக்கும் அகத்துறைப் பாடல்களிலும், பிற்காலத்துப் புலவர்கள் தத்தம் அநுபவங்களைக் கூறிப் பாடிய தனிப்பாடல்களிலும், அங்கங்கே சிறுகதையின் சாயல் இருக்கிறது. ஆனால் அவைகளே முழுமையான சிறுகதைகள் ஆகிவிட இயலாது. ஓர் உணர்ச்சியை அல்லது ஒரு நிகழ்ச்சியை உருக்கமாக விவரித்துப் பொருத்தமாகக் காட்டுவதுதான் சிறுகதை என்றால், சங்கப் பாடல்கள் பலவும், பிற்காலத் தனிப்பாடல்கள் பலவும் சிறுகதை அமைப்பு மட்டுமாவது உடையவைதாம்.

இருந்தாலும், இன்று மக்களிடையே பேரும் புகழும் பெற்று நிலவும் உரைநடைச் சிறுகதைகள் ஆங்கில மரபு பற்றிய சார்புடையவை. பழைய காலத்தில் செய்யுள் இலக்கியத்திற்கு எவ்வளவு மதிப்பு இருந்ததோ அவ்வளவு மதிப்பும் தகுதியும்

உரைநடை இலக்கியம் இன்று பெற்றிருக்கிறது. எதையும், எப்படியும், எவ்வளவு தெளிவாக வேண்டுமாயினும் உரைநடையில் சொல்ல முடியும் என்ற நம்பிக்கை எழுதுகிறவர்களுக்கும், படித்துத் தெரிந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை படிக்கிறவர்களுக்கும் ஏற்பட்டுவிட்ட காலம் இது.

ஈழத்திலும், தமிழ் நாட்டு வார, மாத இதழ்களிலும் உரை நடையில் நல்ல கருத்துக்களைக் கொண்ட சிறு கதைகளை அடிக்கடி காண்கிறோம். ஒரு நல்ல சிறு கதையை நன்முக எடுக்கப்பட்ட புகைப் படத்திற்கு ஈடு கூறலாம். குறிப்பிட்ட காட்சியைக் குறிப்பிட்ட விநாடியில் உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டும் புகைப்படக் கருவி போல ஒரு குறித்த நிகழ்ச்சியை ஒரு குறித்த நோக்குடன் விவரித்து முடிப்பது சிறுகதை. ஓவியன் ஓவியத்தில் தன் கை விரும்பிய வண்ணமெல்லாம் புனைந்து பொலிவு காட்டலாம். புகைப்படத்தில் அப்படிச் செய்ய முடியுமா? ஒரு நல்ல சிறுகதை அளவு மீறிய நிகழ்ச்சிகளைப் புனைந்து கதைப்போக்கின் ஒருமைப் பாடு குன்றுமாறு செய்யுமானால், அதை எங்ஙனம் சிறுகதை என்பது? அம்பு பாய்வது போல் நேரே பாய்ந்து சென்று நிகழ்ச்சியின், மையக் கருத்திலே படிக்கும் உள்ளம் பொருந்துமாறு சிறுகதை முடிவு பெறவேண்டும். புதிய சிறுகதையின் மரபும் இதுதான். உலகத்துச் சிறந்த சிறு கதைகளின் வெற்றிக்குக் காரணமும் இது தான்.

மாதம் ஒன்றிற்கு ஏறக்குறைய இருநூறு முந்நூறு சிறு கதைகளுக்குக் குறைவில்லாமல் தமிழ் நாட்டு இதழ்களில் வெளிவருகின்றன. எண்ணிக்கையின் பெருக்கத்தைக் கொண்டு மட்டும் பார்த்தால், இது வளர்ச்சியாகலாம். தமிழ் மரபோடு கூடிய நடை, என்றும் நிலைத்து நிற்கக் கூடிய உண்மை, சிறுகதை அமைப்பிற்கு இயைந்த போக்கு-என்று மூன்று வகையால் சமன் செய்து சீர்தூக்கிப் பார்த்தால் மாதத்திற்குப் பத்துக் கதைகளாவது தேறும்.

தமிழில் சிறுகதை இலக்கியத்திற்கு முதலில் வித்திட்டு வளர்த்த பெருமக்களுக்கு வணக்கம் செலுத்தி விட்டு இன்றைய நிலையைக் காண்போம். உருவாகிக் கொண்டிருக்கின்ற, இனிமேல் உருவாகப் போகும் நல்ல சிறுகதையாசிரியர்களுக்கும் நாம் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு எழுதுகிறவர்களில் இரண்டு வகை. எப்படி எழுதினாலும் சரி; அது படிக்கிறவர்களைத் திருப்தி படுத்துவதாக இருந்தால் மட்டும் போதுமானது என்று எண்ணுகிறவர்கள் ஒரு வகை. முடிந்தால் தரமுள்ள, உரமுள்ள, பண்பாட்டோடு கூடிய சிறுகதைகளை எழுத வேண்டும். இல்லாவிட்டால் எழுதாமலிருப்பதே நல்லது என்றெண்ணும் பொறுப்புள்ள கதாசிரியர்கள் மற்றொரு வகை. இந்த இரண்டு வகையில் முன் வகையைச் சேர்ந்தவர்கள் செல்வம், செல்வாக்கு இரு துறையிலும் உடனடியாக வளர்ச்சி பெற்று வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மக்களை உருவாக்க வேண்டிய எழுத்தாளர்கள், சமூகத்தின் நேர்மையான வளர்ச்சிக்குக் காரணமானவர்களாக இருக்க வேண்டும். குற்றவாளிக்கு விடுதலை பெற வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் மட்டும் சட்டமோ, நீதியோ அவனை மன்னிக்க முடியாது. சட்டத்துக்கும், நீதிக்கும் எவ்வளவு பொறுப்பு உண்டோ அவ்வளவு பொறுப்பு எழுத்தாளர்களுக்கும் உண்டு.

நீங்கள் எழுதும் சிறு கதையால் எத்தனை மக்களைக் கவரலாம் என்று மட்டும் எண்ணிப் பார்த்து மதிப்பிடாதீர்கள். எத்தனை மக்கள் திருந்துவர்? எத்தனை பேருடைய உள்ளத்துக்கு உண்மையைப் புரிய வைக்கலாம்?—என்று இப்படியும் தெரிந்து மதிப்பீடு செய்யுங்கள். அறத்தையும், நேர்மையையும் வற்புறுத்தத் தவறிய எத்துறையும் கலை என்ற பெயரில் நிலைத்ததில்லை. தமிழ் நாட்டின் வாழ்வில் தான் எத்தனை குழப்பங்கள்? இந்தத் துன்பம் நிறைந்த சூழ் நிலையில் பொழுது போக்குவதற்காக மட்டும் எழுதிக்கொண்டிருக்கலாமா? மக்களைச் சிந்திக்கச் செய்யும் சிறுகதைகள் தாம் இன்றைய தேவையாகும்.

எழுத்தாளர் பொறுப்பு:

ஆகவே, தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஒரு வார்த்தை! காரில் ஏறப்போகிற அவசரத்தில் பணப்பையைத் தவற விட்டுவிட்டுக் காருக்குள் ஏறியபின் டிக்கெட்டுக்குப் பணமின்றித் தவிக்கும் பிரயாணியைப்போல் இன்றைய வளர்ச்சியின் வேகத்தில் உங்களுக்கிருக்கும் பொறுப்பைத் தவற விட்டு விடாதீர்கள். பின்னல் வருத்தமடைய நேரிடும்.

ஒவ்வொரு கலைக்கும், அந்தக் கலையை ஏற்றிருக்கும் கலைஞனுக்கும் அதனதன் நிலைக்கேற்ப ஒரு பொறுப்பு உண்டு. அந்தப் பொறுப்பைப் புறக்கணித்தால் நிலைக்க இயலாது. புதுமைப் பித்தனும், கு. ப. ராவும் அடிப்படையிட்டுப் படைத்த தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தை வளப்படுத்தும் தூய முயற்சிகளைச் செய்யுங்கள். தமிழ் மரபும், தமிழ்ப் பண்பும், தமிழ் மக்கள் இனமும் என்றும் எதற்காகவும் பொறுப்பின்மைக்குத் தொடர்ந்து ஆதரவளித்ததில்லை. இதை நீங்கள் நன்றாக நினைவு வைத்துக்கொள்ள வேண்டும். கரையில்லாமல், துறையில்லாமல் தன் போக்கில் ஓடும் ஆறு ஆக்கத்துக்குப் பயன்படுமா? கரைக்கு அடங்கித் துறைக்கு நிறைந்து ஓடுவதுதான் ஆறு. பொறுப்பு என்பது இதுதான். சிறுகதைகளுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் இப்போதிருக்கும் ஆதரவைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இன்றைய நாளில் சமூகத்துக்கு எத்தனையோ உண்மைகளை எளிய முறையில் புரியவைக்கும் பொறுப்பு உங்களுக்கு இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். இதனல் சிறுகதைகளை வெறும் பிரசாரம் செய்யும் கருவிகள் என்று நான் சொல்வதாக நினைக்கக் கூடாது. தெளிவாக ஆராய்ந்தால், குறிக்கோள் இல்லாமல் வெறும் பொழுதைக் கழிப்பதற்கென்று எந்த ஒரு கலையும் உலகில் ஏற்படவில்லை. சிறுகதை இலக்கியம் உண்மையை நிறுவுவதற்காகப் புனைந்து காட்டப்படும் ஒரு பொய். இந்தப் பூட்டுக்கு இந்தச் சாவியைத்தான் பயன்படுத்த வேண்டுமென்பது போல் உண்மையைப் பரப்புவதற்காகத் தான் சிறுகதை என்ற பொய்யைப் பயன்படுத்த வேண்டும். இது உங்கள் பொறுப்பு.

வாசகர் பொறுப்பு:

தமிழ் வாசகர்கள் முன்னைப்போல் இல்லை. உணர்ந்து, தெளிந்து எதையும் எடை போட்டுச் சொல்லும் பொறுப்பு வாசகர்களுக்கும் சிறிது சிறிதாக ஏற்பட்டு வருகிறது. 'தரமுள்ளது இது'—'தரமில்லாதது இது'—என்று பிரித்துப் பார்க்கும் அறிவு தமிழ் வாசகர்களுக்கு முழு அளவில் ஏற்பட்டு விட்டால், கவலை இல்லை. அப்புறம் பொறுப்பு அவர்களுக்கு வந்துவிடும்.

படிக்கிறவர்கள் விழிப்படைந்திருக்கிறார்கள் என்று தெரிந்தாலே, எழுதுகிறவர்களுக்கு அது ஒரு முன்னெச்சரிக்கை மாதிரி. சிறு கதைகளில் என்ன பயனை மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பது எழுதுகிறவர்களுக்குப் புரிந்துவிடும். படிக்கிறவர்கள் எல்லோரும் சிறுகதை எழுதும் ஆற்றல் உள்ளவர்களாக மாறிவிடுவதற்கு முடியாது. சிறுகதைகளை எழுதும் ஆற்றல் கருவிலே வாய்க்கப்பெற்ற திரு. ஆனல், பெறுவதற்கரிய அந்தத் திரு தவறான வழியில் பயன்பட்டு விடாமல் கதாசிரியர்களை நேரிய வழியில் செலுத்திக்கொண்டு போகும் பொறுப்பு உயர்தர வாசகர்களின் கையில் இருக்கிறது.

தமிழ்ச் சிறுகதைகள் உலக இலக்கியத்தில் மிகச் சிறந்த இடத்தைப் பெறப் போகும் காலம் தொலைவில் இல்லை. உண்மையுணரும் திறனுள்ள வாசகர்களே! நிலைத்து நிற்கும் இலக்கியத் தரமுள்ள சிறுகதைகளை எழுத ஆர்வமுள்ள எழுத்தாளர்களே! இந்தப் பொற்காலத்தில் தமிழில் வரும் சிறுகதைகளை, 'இது ஒரு நல்ல சிறுகதை'—என்று பிற மொழியினரும், தாய்மொழி வாசகரும் பாராட்டத்தக்க விதத்தில் உருவாக்குங்கள். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். இதைச் செய்வதில் அவ்வளவாகத் துன்பமில்லையே?

சில சிறந்த சிறுகதைகள் :

இந்தத் தலைமுறையில் எத்தனை முறை படித்தாலும் என் மனத்தில் சிந்தனையும், புதுப்புதுக் கருத்தோட்டமும் தரக்கூடிய சிறுகதைத் தொகுதிகளைத்

தமிழுக்குத் தந்திருக்கிற சில எழுத்தாளர்களை நான் உங்களுக்கு இந்தக் கட்டுரையில் ஓரளவு நினைவூட்ட முடியும். ந. சிதம்பர சுப்பிரமணியத்தின் சூரியகாந்தி, கு. அழகிரிசாமியின் அழகிரிசாமி கதைகள், சிரிக்கவில்லை, தவப்பயன் போன்ற தொகுதிகள், ரகுநாதனின் ரகுநாதன் கதைகள், பி. எஸ். ராமையாவின் பூவும் பொன்னும், புதுமைக் கோயில் போன்ற தொகுதிகள், தி. ஜானகிராமனின் கொட்டு மேளம், சிவப்பு ரிக்ஷா, மௌனியின் அழியாச் சுடர், ல. ச. ரா. வின் பச்சைக் கனவு, ஜனனீ, இதழ்கள், விந்தனின் கூர்மையாக உறைக்கும் கருத்துள்ள பல சிறுகதைகள், சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், அகிலன், வே. கோவிந்தராஜன், எம். வி. வேங்கடராமன், கிருஷ்ணன் நம்பி போன்ற சிந்தனை வளமுள்ள எழுத்தாளர்களின் சிறுகதைகள் — இவைகள் நாளைய சிறுகதை இலக்கியத்திற்கு இலட்சியப் பாதை வகுத்துக் கொடுத்திருப்பவை. அழகிரிசாமியின் 'திரிபுரம்' என்ற மிக நல்ல சிறுகதையையும், ராமையாவின் 'நட்சத்திரக் குழந்தைகள்' என்ற சிறுகதையையும், ஜெயகாந்தன், சுந்தர ராமசாமியின் பல சிறந்த சிறுகதைகளையும் திரும்பத்திரும்பப் படிப்பதில் சுவை காண்கிறேன் நான். இப்படி எத்தனை எத்தனையோ நல்ல சிறுகதைகள் வருங்காலத் தமிழுக்குக் கிடைக்க வேண்டுமென்று நினைத்து நினைத்து அந்த நினைப்பையே தவமாக்குவது என் இரசிக உள்ளத்தின் அநுபவங்களில் ஒன்றாகும். இந்த எழுத்தாளர்களில் சிலருடைய தமிழ்ச் சிறுகதைகளில் சிறந்த பல கதைகள் ஆங்கிலத்திலும், செக்கோஸ்லோவக்கிய மொழியிலும், ருஷ்ய மொழியிலும் மொழிபெயர்ப்பாகிப் புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன என்பதற்காகத் தமிழர்கள் பெருமிதப்படலாம். நம்முடைய தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் புகழ் மிக்க பாரம்பரியம் இன்றுவரை எந்த இடத்தோடும் முடிந்துவிடவில்லை—முடியவும் கூடாது. இனியும் அந்தப் புகழ்ப் பரம்பரை வளர வேண்டுமென்று தான் நாம் ஆசைப்படுவோம். அப்படி வளர்ப்பதற்காக நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் கொண்ட சிறந்த எழுத்தாளர்கள் எத்தனையோ பேர் பிறப்பார்கள். அவர்களும் புகழ் மிக்க பல தலைமுறைகளைப் படைப்பார்கள். தமிழ் அவர்களால் பெருமைப்படும் என்று நினைக்கிற நல்ல நினைப்போடு இந்தக் கட்டுரையை முடிக்கலாம்.



தொலைபேசி எண் : 33612

சௌந்தர் அயர்ன் ஒர்க்ஸ்

உரிமையாளர்: S N. S. நீடின்பன்

தயாரிப்பவை: வாளிகள், குடங்கள், நெல் வேவிப்பு பாய்லர்கள், சாயம் காய்ச்சும் அண்டாக்கள், சிங்கார கேட்டுகள், அலங்கார சன்னல்கள், நீர்த் தொட்டிகள், மடக்கு கேட்டுகள், பிற.

எண். 18, வால்டாக்ஸ் சாலை, சென்னை-3.

கன்னடக் கவிஞர் பு. தி. நரசிம்மாச்சார்

[பா. பாலசுப்பிரமணியன், பி. எஸ். சீனிவாசா]

'குவேம்பு' (கே. வி. புட்டப்பா), பேந்திரே, பு. தி. ந. (P. T. Narasimhachar) ஆகிய முப்பெருங் கவிஞர்களின் படைப்புகளால் தற்கால கன்னடக் கவிதை இலக்கியம் மிகவும் வளம்பெற்றுள்ளது. பொது மக்களிடையே புகழையும், எழுதிய அளவையும் வைத்துப் பார்க்கும்பொழுது 'குவேம்பு' வுக்கும், பேந்திரேவுக்கும் அடுத்த இடத்தைப் பெறுகிறுர் திரு. பு. தி. ந. ஆனுல் எளிமையிலும் தற்கால கன்னடக் கவிஞர் குழாத்தில் அவர் மிக முக்கியமான இடத்தை வகிக்கிருர். கற்பனை வளத்திலும், உணர்ச்சிப் பெருக்கிலும் வருணனைத் திறனிலும், இயற்கை ஈடுபாட்டிலும், அவர் மிகவும் சிறந்து விளங்குகிருர். இவை எல்லாவற்றையும்விட அவருடைய இளகிய கவிதை உள்ளம் இரசிகர்களின் இதயங்களையும் தற்காலக் கவிதை அன்பர்களையும் கொள்ளைகொண்டு விட்டது. ஒரு சிறந்த கவிஞருக்குத் தேவைப்படும் இயற்கையான மதிநுட்பமும், பயிற்சித் திறனும் அவருக்கு இயற்கையாக அமைந்துவிட்டன.

சமஸ்கிருத பண்டிதர்களின் பரம்பரையில் பிறந்த திரு. நரசிம்மாச்சார் நம்முடைய புராதனப் பெருமைகளையும் சிறப்புள்ள நாகரிகத்தையும் இளவயதிலேயே அறிந்துகொண்டார். அவர் தம் இசை நாடகங்களுக்குத் தேர்ந்தெடுத்த கருத்துப் பொருள்களிலிருந்து பண்டைய இலக்கியங்களில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு நன்கு புலனுகும். "சபரி", "கோகுல நிர்கமண" (கோகுலத்திலிருந்து வெளியேறுதல்), "அகல்யா", "ஹரிணுபிசரண" (மானைப் பின்தொடர்தல்) முதலியன அவர் எழுதிய இசை நாடகங்களில் சிலவாகும். சமஸ்கிருதம், கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளின் பழம்பெரும் இலக்கியங்களில் புலமை பெற்றதுடன் ஆங்கில இலக்கியத்திலும், கிரேக்க இலக்கியத்திலும் புலமை பெற்றுள்ளார். "நோவாவின் படகு", "லியர் அரசனின் துன்பங்கள்", ஜூபிடரின் சாபம்" முதலிய பலவற்றைப் பற்றி அவர் குறிப்பிடுவதிலிருந்து அவருடைய அயல் மொழி இலக்கியப் புலமை நன்கு புலனுகும். திரு. மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் கூறியிருப்பது போல திரு. பு. தி. ந. காளிதாசரின் கவித் திறனையும், ஓர்ட்ஸ்வொர்த்தின் கவித் திறனையும் இயைபப் பெற்றுள்ளார்.

திரு. பு. தி. ந. கன்னடக் கவிதையில் பல புதிய கருத்துக்களையும், அமைப்புக்களையும் நுழைத்தார். நாடோடிப் பாவினங்களான 'த்ருபதி', 'சாங்கத்ய' முதலியவற்றிலும், 'மாத்ராவ்ருத்த' என்ற சமஸ்கிருதக் கவிதை முறையிலும், ஆங்கில 'சானெட்டு' களிலும் அவர் சம அளவு வன்மை பெற்றுள்ளார்.

திரு. பு. தி. ந. இருபதுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். ஏழு இசை நாடகங்கள், ஏழு கதைப்பாடல்களின் தொகுப்புகள், மூன்று உரைநடை நூல்கள், ஒரு கட்டுரைத் தொகுப்பு, சமஸ்கிருதம், தமிழ் மொழிகளிலிருந்து மூன்று மொழி பெயர்ப்புகள் முதலியன அவருடைய இலக்கியப் பணியின் சிகரங்களாக விளங்குகின்றன. இசை நாடகங்களைப் பொறுத்தவரை அவருக்கு நிகர் அவரே தான். இந்தியாவின் பக்தி இலக்கியங்களில் உணர்ச்சிப் பெருக்கிலும், இசைச் சிறப்பிலும் தலைசிறந்து விளங்கும் இசைப் பாடல்களில் திரு. பு. தி. ந. வின் 'கோகுல நிர்கமண'வும் ஒன்ருகும். உணர்ச்சிகளின் ஆழமும், எண்ணியதைச் சொல்லவேண்டும் என்ற ஆர்வமும் சிறந்த கவிதையை உருவாக்குகின்றன. இந்தக் கவிஞரின் ஆர்வம் நிறைவேற ஏழு ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. ஏழு ஆண்டுகளுக்கு முன்னுல் அவர் ஒரு பள்ளத்தாக்கில் கேட்ட இடையனின் குழலோசை இந்தத் தலைசிறந்த இசை நாடகத்திற்குத் தூண்டுகோலாக அமைந்துவிட்டது.

திரு. பு.தி. ந.வின் இசையின் மந்திர சக்தியால் அந்த இடையன் கண்ணனுன். அந்தச் சாதாரணப் பள்ளத்தாக்கு பிருந்தாவனமாகிவிட்டது. சொல்வளமும், பொருள் ஆழமும் உணர்ச்சிப் பெருக்கும் நிறைந்த ஒரு கவிஞருக்கு இந்தப் பொறுமைதான் மிக முக்கியமானது. இந்தப் பொறுமையும், சிந்தனை ஆற்றலுமே திரு. நரசிம்மாச்சாரின் வெற்றியின் இரகசியத் திற்குரிய காரணங்களாகும். அவருடைய இசைநாடகங்கள் கருநாடக சங்கீதத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அவர் பயன்படுத்தியிருக்கும் இராகங்களும், பாவினங்களும் அவை சொல்லவந்த கருத்துக்களுக்கேற்ப அமைந்துள்ளன. எனவே அவற்றைக் காணும்பொழுது அவருடைய இதயம் கவித்தன்மைக்கேற்ப இசைத் திறனும் பெற்றிருப்பது நன்கு புலனுகும்.

அவர் தம் கவிதைகளில் அறிமுகப் படுத்தியிருக்கும் பாத்திரங்கள், நிகழ்ச்சிகளிலிருந்து அவருடைய உயர்ந்த இலட்சியங்கள் நன்கு தெளிவாகும். 'கோகுல நிர்கமண'த்தில் காட்சியளிக்கும் கண்ணன் மக்களையும் பசுக்களையும் இன்புறுத்தப் பயன்படுத்திய குழலை எறிந்துவிட்டு, மக்களின் நன்மைக்காக—தீயோரை அழித்து நல்லோரை வாழவைப்பதற்காக — சக்கரத்தை ஏந்துகின்றுன். அவருடைய 'சபரி'யில், ஆண்டவனுக்குத் தொண்டு செய்வதில் மிகவும் ஆர்வமுள்ள ஒரு புனித ஆத்மாவின்பயனுள்ளவாழ்க்கையின் வருணனையைக் காணலாம். அவருடைய 'அகல்யா'வில் ஒரு பெண் தன் தவற்றினுல் இழந்த சுவர்க்கத்தைக் கடவுளின் கருணையினுல் திரும்பப்பெறும் காட்சியைக் காணலாம்.

நல்ல கவிஞர் சிறந்த உரைநடையும் எழுதக்கூடியவராவார். திரு. பு. தி. ந.வின் உரைநடைப் படைப்புகள் இதற்குச் சான்று பகரும். அவருடைய சிறந்த கட்டுரைகள் அடங்கிய "ஈசலு மரதகிளகே" (ஈச்சமரத்தின் கீழே) என்ற தொகுப்பில் காணப்படும் கருத்துக்கள் நம் இதயத்தைத் தொடுவன. அவை கன்னட மொழி இலக்கியத்திலேயே மிகச் சிறந்தனவாக விளங்குகின்றன.

திரு. பு. தி. ந. 1905 ஆம் ஆண்டில் மண்ட்யா மாவட்டத்தில், வைணவர்களின் புனிதத் தலமான மேல் கோட்டையில் பிறந்தார். அவர் மைசூர்ப் பல்கலைக்கழகத்தில் பி. ஏ. பட்டம் வாங்கிய பின்னர் மைசூர் அரசாங்கத்தில் அலுவல் பார்த்து 1962 ல் ஓய்வுபெற்றுர். அவர் "திருவாய்மொழி"யின் சில பகுதிகளைக் கன்னடத்தில் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழி பெயர்ப்பு முதற்கண் மைசூர்ப் பல்கலைக் கழக மலர்களில் வெளியாகிப் பின்னர் நூல் வடிவம் பெற்றுள்ளன. மற்றும் ஆண்டாளின் திருப்பாவையையும் கன்னடத்தில் மொழி பெயர்த்துள்ளார். அது அண்மையில் வெளியிடப்பட இருக்கிறது.

"ஒருவர் துறவியாக இருந்தால்தான் நல்ல காவியங்களை இயற்ற முடியும்" என்பது ஒரு முதுரை. திரு. பு. தி. ந. தன் வாழ்விலும் எழுத்திலும் உண்மையான துறவியாகவே உள்ளார். அவர் எப்பொழுதும் புகழை நாடி ஓடியதில்லை; கவிதையே அவருடைய வாழ்வும் பயனுமாகும். தன்னைச் சுற்றிய சமூகத்தைக் கூர்ந்து பார்த்து வாழ்வின் இலட்சியங்களையும், மதிப்பீடுகளையும் நன்கு உணர்ந்துள்ளார். மனித ஆத்மாவை முன்னேற்றுவதற்காகச் சிறந்த இலட்சியங்களை எடுத்துக் கூறும் கவிஞர்களில் அவர் ஒருவராவர்.

இத்தகைய தலைசிறந்த கன்னடக் கவிஞரின் மொழிபெயர்ப்புப் பணியைப் பாராட்டித் 'தமிழ் எழுத்தாளர் சங்கம்' பதக்கம் அளிக்க முன்வந்திருப்பது சாலப்பொருத்தமாகும். மேலும் பல அரிய தமிழிலக்கியங்களைக் கன்னடத்தில் வடித்துத் தருவதற்கு இது சிறந்த தூண்டுகோலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

SRI GANESHRAM'S 777 BRAND
FOOD PRODUCTS · MADRAS · 1 · S · INDIA

SRI GANESHRAM'S 3-7 BRAND THREE SEVEN
FOOD PRODUCTS · MADRAS · 1 · S · INDIA

SAMBAR & RASAM

(2 Seperate Powders)

READY IN 3 MINUTES ON YOUR TABLE!

Mix the Powder with water & Boil for 3 minutes—It is Ready for use with original

TASTE FLAVOUR AND AROMA

PEPPER-WATER

(Milagu Rasam)

MILAG-TANNI

With and without Garlic in Paste Form
Ready when Mixed with Hot-water for use!

Prepared by:

M/s. R. S. N. IYER & R. S. G. IYER

Proprietors of:

SRI GANESHRAM & CO., MADRAS-1.

---

our CHAKRAM BRAND PICKLES
Prepared to Suit Western Taste.

Phone: 21942

எல்லாவித அச்சு வேலைகட்கும் சிறந்த இடம்

பாரி அச்சகம்

127, பிராட்வே, சென்னை - 1.

நக்கீரர் கழகம்

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

(துவக்கம் 1944)

மேற்படி கல்லூரியில் வித்துவான் புகுநிலை, முதனிலை, நிறைநிலை வகுப்புகள் ஒவ்வொரு நாளும் மாலை **6-15** *மணி முதல்* **7-45** *வரை நடைபெறுகின்றன.*

18 *தமிழ்ப் புலவர்கள் அன்புப் பணி புரிகிறார்கள்.*

இடம்:

ஏ. ஆர். சி. பெண்கள் பள்ளி,
44, பவழக்காரத் தெரு, சென்னை - 1.

இந்த நல்வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்த வேண்டுகிறோம்.

பூ. ச. கந்தசாமி, எம். ஏ.,
—கல்லூரிச் செயலாளர்.

அல்லாஜ் பா. தாவூத்ஷா

[மகனீ]

இன்றைய முஸ்லிம் தமிழ் எழுத்தாளர்களிடம் "நீங்கள் எழுதுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தது எது?" என்று கேட்டால், அவர்களுள் பெரும்பான்மையோர் எவ்விதத் தயக்கமுமின்றிச் சொல்லக்கூடிய பதில் "தாருல் இஸ்லாம்" என்பதுதான். தாருல் இஸ்லாம் என்னும் அரபுச் சொற்றொடருக்கு, "சாந்தி இல்லம்" என்பது பொருள்.

தமிழ் முஸ்லிம்களிடையே "தாருல் இஸ்லாம்" என்பதற்குத் தனியொரு பொருளுண்டு. ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்தில் மட்டுமன்றித் தமிழ் முஸ்லிம்கள் வாழ்ந்த கடல்கடந்த நாடுகளிலுங்கூட நிறைந்து நின்ற ஏடு "தாருல் இஸ்லாம்". மாத - இதழாகப் பிறந்து, வார - இதழாகத் தவழ்ந்து, வார—இருமுறையாக வளர்ந்து, நாளிதழாக உயர்ந்து, பின் மீண்டும் மாத ஏடாக மாறிய தாருல் இஸ்லாம் தனக்கெனத் தனியொரு வழியை மேற்கொண்டு, தமிழ் முஸ்லிம் இல்லங்களிலே மலர்ந்து, அம் மக்களின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தில் மகத்தான திருப்பத்தைச் செய்து முடித்த ஒன்று. வாழ்த்தும், வசவும் அதன் போக்கை மாற்ற முடிந்ததில்லை. 'தாருல் இஸ்லாம்' பத்திரிகையின் காலம், தமிழ் முஸ்லிம்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்று எனத் துணிந்து கூறலாம்.

பிறப்பு :

இவ்வியத்தகு ஏட்டின் ஆசிரியர்தாம் அல்ஹாஜ் பா. தாவூத்ஷா அவர்கள். பொன்னி வளங் கொழிக்கும் தஞ்சை மாவட்டத்தில் கீழ்மாந்தூர் என்னும் குக்கிராமத்திலே நாச்சியார்கோவில் பாப்பு இராவுத்தர் என்ற வணிகரின் மகனாக 1885-ஆம் ஆண்டில் தாவூத்ஷா பிறந்தார்.

படிப்பு :

நாச்சியார் கோவிலில் சிறுவன் தாவூத்ஷாவின் இளமைப் பருவம் கழிந்தது. இங்கே சில காலம் கல்வி பயின்ற பின், 1889-ல் கும்பகோணம் சென்று, இராவ்பகதூர் எஸ். அப்பு சாஸ்திரியார் நேட்டிவ் ஹைஸ்கூலில் சேர்ந்தார் தாவூத்ஷா. தமிழ்ப் பேராசிரியரான திரு. ம. வீ. இராமானுஜாசாரியார் அவர்களிடம் தமிழ் பயின்றார். தமது இலக்கணப் புலமைக்கு இப்பெரியாரே காரணம் என்று தாவூத்ஷா அவர்கள் நன்றியோடு நவில்வதுண்டு. 1903-ல் மதுரைத் தமிழ்ச் சங்க 'மெட்ரிக்குலேஷன்' தேர்வில் மாநிலத்திலேயே இரண்டாமவராகத் தேறி ரூபாய் இருபத்தைந்து பரிசு பெற்றார். பின் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் சேர்ந்து காலஞ்சென்ற தமிழ் அறிஞர் வை. மு. சடகோப இராமானுஜாசாரியார் அவர்களிடம் தமிழ் பயின்றார். தமிழ்ச் சங்க எஃப். ஏ. பரீட்சையில் மாநிலத்தில் இம்முறையும் இரண்டாவதாகத் தேறிப் பரிசு பெற்றார். அவரின் பி. ஏ. படிப்பு சென்னை மாநிலக் கல்லூரியில் துவங்கியது. இங்கு தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களிடம், சங்க இலக்கியங்கள் கம்பராமாயணம் போன்ற நூல்களிலே பாடம் கேட்டார். மதுரைத் தமிழ்ச் சங்க பி. ஏ. தேர்வில் மாநிலத்தில் முதல்வராகத் தேறி தாவூத்ஷா அவர்கள் தங்கப் பதக்கம் பெற்றார்.

அரசாங்கப் பணி :

அக்கால இயல்பினை யொட்டியே தாவூத்ஷாவும் அரசாங்கப் பணிக்குத் தம்மைத் தயார்செய்து கொண்டார். பண்ணுருட்டி, திருக்கோவிலூர் போன்ற இடங்களில் ஏறத்தாழ ஆறுண்டுக் காலம் 'சப் மாஜிஸ்டிரேட்டா'கப் பணிபுரிந்த அவரை, சமுதாயப்பணி ஆர்வத்தோடு அழைத்தது.

மார்க்கப் பணி :

அன்னியர் ஆட்சியின்கீழ் இருந்த அரசாங்க வேலையை உதறிவிட்டு 1921-ல் இங்கிலாந்துக்கு அவர் பயணமானார். அங்கே "ஒக்கிங்" என்னுமிடத்திலே நடந்துவந்த இஸ்லாமிய மார்க்கப் பணி அவர் கவனத்தை ஈர்த்தது. ஐரோப்பிய மக்களிடையே இஸ்லாமிய நெறியின் கோட்பாடுகளை விளக்குவதற்காக லாஹூரைச் சேர்ந்த காஜா கமாலுத்தீன் அவர்கள் இஸ்லாமிய ஊழியர்களின் குழு ஒன்றை அங்கே நிறுவி யிருந்தார். தாவூத்ஷா அவர்கள் இக்குழுவிலே சேர்ந்து சுமார் இரண்டாண்டுகள் பணி புரிந்துவிட்டு, ஜெர்மனி, ஃபிரான்ஸ், இலங்கை முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தபின் தாயகம் திரும்பினார்.

கடல்கடந்த நாடுகளுக்குச் சென்று பொருள் திரட்டுவதும், தாயகம் திரும்பி ஐந்தாறு மாதங்கள் சோம்பேறி வாழ்க்கை நடத்துவதும், மீண்டும் திரைகடலோடுவதையுமே வழக்கமாகக் கொண்டிருந்த தமிழக முஸ்லிம்களுக்குத் தங்கள் கடமையினை உணர்த்துவதே தமது தலையாய கடன் என அவர் உறுதி கொண்டார். அந்த எண்ணமே "தாருல் இஸ்லாம்" என்ற பத்திரிகையாக உருவெடுத்தது. பத்திரிகை பிறந்ததன் பயனாகத் தமிழுக்கு —தமிழ் வளர்ச்சிக்கு நல்லதொரு தொண்டரும் கிடைத்தார்.

தமிழ் நடை :

தாவூத்ஷா அவர்களின் தமிழ் தூய்மையான இலக்கண நடை கொண்டது. தனிப்பட்டவர்களிடம் உரையாடும் போதும், அவர் இலக்கணத் தமிழையே கையாள்கிறார். ஒருகால் இளமையில் அவரிடம் படிந்துவிட்ட பழக்கம் இதற்குக் காரணமாக இருக்கலாம்! 1922-ல் முதன்முதலாகத் "தாருல் இஸ்லாம்" மாத - இதழாய் மலர்ந்தபோது, அதன் வாசகர்கள் இந்தப் 'பண்டிதத் தமிழ்' கண்டு மிரண்டதுண்டு. ஆனால் நாளடைவில் வாசகர்கள் பத்திரிகையின் இலக்கண நடைக்குத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொண்டார்களே யன்றி, தாவூத்ஷா அவர்கள் தம் எழுத்து நடையை—இன்று வரையிலுங்கூட மாற்றிக் கொள்ளவில்லை.

பழமையைச் சாடிய தாவூத்ஷா அவர்களின் எழுத்துக்குப் பெரும்பான்மை மக்களிடையே வரவேற்பு இருந்தபோதிலும், அவரது அதிதீவிரப் போக்கு வைதிக மனப்பான்மை படைத்தவர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பைத் தேடித் தந்தது. எனினும் அவரது எழுத்து பலருக்கு முன் மாதிரியாக அமைந்து பல புதிய எழுத்தாளர்களையும், பொதுநல ஊழியர்களையும் தமிழக முஸ்லிம்களிடையே தோற்றுவித்தது. இந்தக் காலத்தில் அவர் எழுதுவதோடுமட்டும் நின்றுவிடாமல் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று தமது நாவன்மை மூலம் தம் கருத்துகளுக்கு வலுவூட்டினார். எழுத்தைப் போலவே பேச்சிலும் வல்லவரான அவருடைய சொற்பொழிவுகளிலே, கம்பராமாயணப் பாடல்கள் இடையிடையே தலைகாட்டும். அவரது கம்பராமாயணப் புலமையை மெச்சி 'இராமாயண சாயபு' என்று அவர் அழைக்கப் பெற்றதும் உண்டு.

நூல்கள் :

சொந்தமாகவும், மொழிபெயர்ப்பாகவும் சுமார் ஐம்பது புத்தகங்கள் வரை தாவூத்ஷா அவர்கள் எழுதியுள்ளார்கள். வரலாற்று வரிசைகள், நவீனங்கள், இஸ்லாமிய மார்க்க சம்பந்தமான நூல்கள், அனைவர்க்கும் பொதுவான இயல்கள்— ஆகிய எல்லாத் துறையிலும் அவர் பேனா ஊடுருவியது. ஹாத்திம் தாயீ, ஜுபைதா, நூர்ஜஹான், மெஸ்மெரிஸா போன்றவை நவீனங்கள் என்ற தலைப்பிலும், நபிகள் நாயக மான்மியம், ஹஜ்ரத் அபூபக்கர், உமர், உதுமான், அலீ போன்ற நூல்கள் வரலாறு என்ற தலைப்பிலும், நாத்திகருக்கு நல்விருந்து, நமது பரதகண்டம், மறுகமலம், சுவாசமே உயிர், மணவாழ்க்கையின் மர்மங்கள், ஜீவவசிய பரம ரஹஸ்யம் போன்ற நூல்கள் பொதுவியல் என்ற தலைப்பிலும், குத்பாப் பிரசங்கம், இஸ்லாம், ஈமான், இஸ்லாமிய ஞானபோதம், போன்ற நூல்கள் 'இஸ்லாமிய மார்க்க சம்பந்தமான நூல்கள் என்ற வரிசையிலும் இடம் பெறும். அவரது மொழிபெயர்ப்புத் திறனுக்கு எடுத்துக்காட்டாக 'அல்புலைலா வலைலா' என்னும் அரபுக் கதைகளைச் சுட்டிக் காட்டலாம், நாயகத் திருமேனி

முஹம்மது நபி (ஸல்—அம்) அவர்களின் வாழ்க்கை வரலாறான 'நபிகள் நாயக மான்மியமும்,' நபிகள் நாயகத்தின் சொல்லையும் செயலையும் விளக்கும் ஹதீதுத் தொகுப்பான 'ஸஹீஹ் புகாரீ'யும் அவரது ஆழ்ந்த புலமைக்குச் சான்று கூறும் நூல்களாகும்.

இஸ்லாமியத் திருமறையான திருக்குரானின் சில பகுதிகளை 'ஜவாஹிருல் புர்கான் அம்மயத்' என்ற பெயரால் தாவூத்ஷா அவர்கள் மொழிபெயர்த்துள்ளார்கள். எனினும் அத்தெய்வத் திருமறை முழுவதுக்கும் விளக்கத்தோடு கூடிய தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்றை எழுதி வெளியிடுவதே தமது வாழ்நாளில் தாம் செய்யத்தக்க தொண்டுகளில் தலையானதாகும் என்று கருதுகிறார் தாவூத்ஷா. அவர் அவ்வாறு கருதுவதில் நியாயமுண்டு. ஏனெனில் இதுவரை முழு விளக்கத்தோடு கூடிய சரியான (அரபு மொழி கலவாத) தமிழ் மொழிபெயர்ப்பு திருக் குரானுக்கு வெளிவரவில்லை. ஜனப் தாவூத்ஷா மேற்கொண்ட இந்த மொழிபெயர்ப்பு வேலை முழுவதும் முடிந்துவிட்டது. முழு விளக்கத்தோடு கூடிய இம் மொழிபெயர்ப்பு ஆறு பகுதிகளாக வெளிவர இருக்கிறது. முதல் இரண்டு தொகுதிகள் ஏற்கனவே வெளிவந்து விட்டன. மற்றப் பகுதிகள் அச்சாகிக்கொண்டிருக்கின்றன.

நாட்டுப் பணி:

சமுதாயப் பணிக்குத் தம்மைப் பெருமளவுக்கு ஈடுபடுத்திக்கொண்ட தாவூத்ஷா அவர்கள், நாட்டுப் பணியை ஒருபோதும் மறந்து விடவில்லை. 'தாருல் இஸ்லாம்' மூலம் சமூகப் பணிபுரிந்த அதே காலத்தில்—நாட்டு விடுதலைப் போராட்டத்துக்கு ஆக்கந்தரும் முறையில் "தேச சேவகன்" என்ற அரசியல் தினசரியையும் 1936—1937-ல் நடத்திவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாட்களில் கதர்த் துணிகளைத் தோளிலே சுமந்து தெருத்தெருவாய் விற்கவும் அவர் தயங்கவில்லை.

இவ்வாறு சமுதாயத்துக்கும், நாட்டுக்கும், தமிழுக்கும் ஒருசேரப் பணிசெய்த இப்பெருமகனுருக்கு மரியாதை செலுத்துவதன் மூலம், தமிழ் எழுத்தாளர் சங்கம் தமிழுக்குத் தன் கடமையைச் செய்கிறது என்று மனநிறைவு கொள்வதில் தடை என்ன இருக்கிறது?

—[✲]—

Phone: 25021
Grams: "LEDGER"

For your requirements of PAPER & BOARDS

Contact:

PALANIAPPA & CO.,

45, BADRIAN STREET,
P. B. No 179,
MADRAS-1.

Sole Selling Agents for "RAINBOW" Printing Inks for Madras City.

SALES DEPOT:
2/53, Anderson Street, Madras-1.

Grams: "KADAPPACO"
Phone: 24896

✲

KADAPPA CHETTIAR & Co.,

66, MALAYAPERUMAL STREET,
MADRAS-1.

✲

DEALERS in PAPER & BOARDS

தமிழ்ப் பண்பாட்டின் பரப்பு

[மூலம்: டாக்டர் ஜீன் பீலியோசா தமிழாக்கம்: தாழம்பூ]

நீண்ட நெடுங்காலமாகவும், தொடர்ச்சியாகவும் வந்து இன்னும் நேர்த்தியாக நிலவி வரும் பேரிலக்கியங்கள் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வையும், உயிர்ச் சக்தியையும் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. எனவே தமிழ் எழுத்தாளர்கள் தங்களுக்குப் பின்னே ஓர் வலிமையான, இடையறவுபடாத மரபு இருப்பதை நினைத்துப் பெருமைப்படலாம். தமிழ் எழுத்தாளர்கள் கையாளும் மொழி உலகிலேயே மிகுதியும் நயமும், கவிதைத் தன்மையும் உடைய ஒன்றாகும். அவர்கள் மொழிக்கும், கவிதைக்குமாகப் பொருள் முதன்மை வாய்ந்த ஒரு பழைய இலக்கணம் உள்ளது. அதுவே தொல்காப்பியம் என்பது.

ஒரு பக்கம் தமிழினுடைய வளர்ச்சி இங்ஙனம் இருக்க, இன்னொரு பக்கம் தமிழ்ப் பண்பாட்டின் பரப்பு வியக்கத்தக்கதாகத் தோன்றுகிறது. இந்தியப் பண்பாடு என்று பொதுவாகப் பார்த்தால், அது தொன்மைக் காலத்திலேயே மத்திய ஆசியா, திபேத்து, சீனா, மங்கோலியா, ஜப்பான், இந்தோசீனா, இந்தோனேசியா முதலிய ஆசியாவின் சிறந்த பகுதிகள் முழுவதும் பரவியிருந்தது. ஆனால் அப்பரப்பு சமஸ்கிருத மொழியையே கருவியாகக் கொண்டு செயற்பட்டது. சமஸ்கிருதப் புத்தகங்கள் மேற்சொன்ன நாடுகளுக்கு நிறைய ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தோசீனாவிலும், இந்தோனேசியாவிலும் சமஸ்கிருதக் கல்வெட்டுகள் எண்ணிறந்து காணப்படுகின்றன. தமிழ்க் கல்வெட்டுகளும் அந்நாடுகளில் இருக்கின்றன. ஆனால் அவை மிகவும் சொற்பமாகும். இந்நிலையை மேல்வாரியாகப் பார்ப்பவர்களுக்கு இந்திய நாகரிகத்தை வெளி நாடுகளில் பரவச் செய்யத் தமிழ் மொழி போதுமான அளவு உதவி புரியவில்லையோ என்றே எண்ணத் தோன்றும்.

ஆனால் உண்மைகளைக் கூர்ந்து பரிசீலித்தால், நிலைமை வேறு விதமாக இருப்பதை நாம் உணர முடியும். வெளி நாடுகளில் இந்தியப் பண்பாடு பரவ சமஸ்கிருதம் பேரளவு பயன்பட்டிருந்தாலும், அச்சமஸ்கிருதம் தமிழ்ப் பண்பாட்டையே வடமொழிப் போர்வையில் அங்கெல்லாம் படரச் செய்திருக்கிறது. இதற்கு உதாரணமாக இந்தோசீனாவில் கிடைத்த ஒரு மிகப் பழைய சமஸ்கிருதக் கல்வெட்டைக் கூறலாம். இக்கல்வெட்டு 'ஒக்கஞ்சு' என்று அழைக்கப்படும் வியட்நாமியக் கடற்கரைப் பகுதியில் உள்ள ஒரு கற்றூணின்மீது செதுக்கப்பட்டிருக்கிறது. இது கி. பி. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கல்வெட்டின் வாசகம் சிதைந்திருந்தாலும், அது கிடைத்த பகுதியை ஆண்ட அரசன் ஒருவனின் பெயரைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. அப்பெயர் சமஸ்கிருதத்தில் 'ஸ்ரீமார' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சமஸ்கிருதத்தில் 'மார' என்கிற சொல் நிரம்பவும் அருகலாகவே வரும். அதுவும் அச்சொல்லுக்கு உள்ள பொருள் அமங்கலமானதாகும். 'மார' என்றால் இறப்பு என்று பொருள்படும். இச்சொல் தனித்தும் வழங்குவதில்லை. 'பரமார' என்று வேறொரு சொல்லோடு சேர்ந்து அரசர்களுக்குப் பட்டப் பெயராய் வரும். 'பரமார' என்றால் 'எதிரிகளுக்கு இறப்பை ஒத்தவன்' என்று உள்ளீடாகிறது. ஆனால் தமிழ் இலக்கியத்திலேயோ பாண்டிய மன்னர்களுக்கு 'மாறன்' என்கிற பெயர் மிகச் சாதாரணமாக வழங்குகிறது. இங்கு அரசனுக்கு 'மாரன்' என்ற பெயர் வருவது அவனுக்கு இருந்த தமிழ்ப் பட்டப் பெயரையே குறிக்கிறது என்ன வேண்டும். ஏனெனில் ஓர் அரசனை இறப்புக்கு அல்லது சாவுக்குரியவன் என்று அழைப்பது பொருத்தமாக இல்லை. சமஸ்கிருதத்தில் வல்லின றகர எழுத்து இல்லாமையாலேயே தமிழ் 'மாறனை' அவர்கள் சமஸ்கிருத 'மாரனாக' ஆக்கவேண்டியதாயிற்று.

கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு பரவியிருப்பதற்கு இன்னோர் உதா

ர்ணமும் பார்க்கலாம். கம்போடியாவில் உள்ள பல சமஸ்கிருதக் கல்வெட்டுகள் கி. பி. 802-ல் இரண்டாம் ஜயவர்மன் என்கிற அரசன் மகேந்திரபர்வதம் என்னும் மலையில் 'தேவராஜன்' என்கிற இலிங்கத்தை நிறுவியது குறித்துப் பேசுகின்றன. 'தேவராஜன்' என்கிற பதம் பொதுவாக சமஸ்கிருத இலக்கியத்தில் 'தேவர்களின் தலைவனை' இந்திரனைக் குறிக்குமே யொழிய சிவபிரானைக் குறிக்காது. ஆனால் தமிழ்ப் பக்திப் பனுவலான திருவாசகத்தில் சிவபிரான் தேவர்களுக்குத் தலைவன் என்று குறிக்கப்படுவதோடு அவன் மகேந்திர மலையில் வீற்றிருக்கிருன் என்றும் சொல்லப்படுகிறது.

..............சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்
(2, 8—10)

மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்து
உற்றஐம் முகங்க ளால்பணித் தருளியும்
(2, 19—20)

என்ற வரிகளும்,

வானவன் மா(ல்) அயன் மற்றுமுள்ள
தேவர்கட்கும்
கோனவனாய்..............
(13, 12)

என்ற வரிகளும் தமிழில் மகேந்திர மலைக்கும், சிவபிரானுக்கும் உள்ள உறவைத் துலக்கமாகக் காட்டுகின்றன. இறுதி மேற்கோள் சிவன் இந்திரனுக்கும், திருமாலுக்கும், பிரமனுக்கும் தலைவன் என்று கூறுகிறது. இக்கருத்துகள் தமிழ் தவிர்த்த மற்ற இந்திய இலக்கியங்களில் காணப்படாதவையாகும். தமிழில் கூட இவை திருவாசகத்தில் மட்டுமே வருவதாகத் தெரிகிறது. எனவே கம்போடியாவில் இருந்த மகேந்திர மலையில் இரண்டாம் ஜயவர்மன் என்னும் அரசன் இலிங்கம் ஒன்றை நிறுவக் காரணமா யிருந்த உணர்வு மாணிக்கவாசகரிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

சிலர் தொன்மைக் கம்போடியாவில் தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கு நேரடியாகத் தமிழின் மூலமாகக் காணப்படாமல் சமஸ்கிருதத்தின் மூலமாகக் காணப்படுவானேன் என்று கேட்கலாம். இதற்கு உள்ள பதில் மிகவும் தெளிவானது. அக்கால இந்தியாவில் சமஸ்கிருத மொழி தேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஒரு பொதுத் தொடர்பு மொழியாக இருந்தது. இன்று ஆங்கிலம் புரியும் பணியை அன்று சமஸ்கிருதம் புரிந்து வந்தது. இதனால் தமிழ் நாட்டிலேயே பல ஆட்சித்துறைக் கல்வெட்டுகள் சமஸ்கிருதத்தில் செதுக்கப்பட்டன. இந்தியாவோடு தொடர்பு கொண்ட எந்த அயல் நாட்டிலும் சமஸ்கிருதமே சர்வதேச மொழியாகவும் விளங்கியது. இதற்குக் காரணம் அன்று நிலவிய இந்து, பவுத்த வட்டாரங்களனைத்தும் சமஸ்கிருதத்தை ஒரு பொது மொழியாகக் கற்பித்து வந்ததுதான். எனவே அக்காலத்தில் சமஸ்கிருதம் படித்தவர்கள் உலகத்தின் பல பகுதிகளிலும் சில பேராகவாவது இருந்தார்கள்.

சமஸ்கிருதத்தின் மேற்சொன்ன நிலையால் தமிழ் அதற்கு முன்னே சுருங்கி விட்டது என்று யாரும் பொருள் கொள்ள வேண்டாம். தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சிக்குத் தமிழ் தான் வலிமையான அடித்தளமாக இருந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் தமிழர்கள் சமஸ்கிருத மொழியை மற்ற இந்திய நாடுகளோடும், அயல் நாடுகளோடும் கொள்ளும் புறத் தொடர்புகளுக்கு ஒரு மிகுதிப்படி கருவியாகப் பயன்படுத்தினர்.

வைணவ சமயகுரவரான இராமானுஜரின் வரலாறு இதற்கு ஓர் ஒளி மிக்க சான்ருகத் திகழ்கிறது. இராமானுஜர் தமிழ் நாட்டில் சீபெரும்புதூரில் பிறந்தார். ஆழ்வார்களின் பாடல்கள் அவர் உள்ளத்தைக் கவ்வி அவரை ஒரு வைணவ பக்தராக ஆக்கின. வைணவ சமய தத்துவத்தில் அவர் விற்பன்னரானார். அதோடு சமஸ்கிருதக் கல்வியிலும் அவர் மேதக்க தேர்ச்சி பெற்ருர். சமஸ்கிருதத்தை அவர் தம்முடைய எழுத்துகளில் தாராளமாகக் கையாண்டார். ஆனால் வடநாட்டைப் பின்பற்றி நடப்பதற்கு அவர் அதைச் செய்ய வில்லை; இந்தியா முழுவதும் திருவாய் மொழியில் ஏற்கனவே காணப்படும் நம்மாழ்வாரின் தமிழ்த் தத்துவத்தைப் பரப்பவே அவர் சமஸ்கிருதத்தை ஒரு கருவியாகக் கையாண்டார். தம் தமிழ்க்

கொள்கைக்கு இந்திய நிலப்பரப்பு முழுவதையும் திருப்ப அவர் தேசம் முழுவதிலும் சுற்றுப்பயணம் புரிந்து வெற்றிக் கொடி நாட்டினர். தமிழ் நாட்டு சீரங்கம் கோவிலில் அவர் நிகழ்த்திய வைணவ வழிபாட்டு முறையை ஒரிசா தேசத்துப் புரிஜகந்நாதத்திலும் நிகழ ஏற்பாடு செய்தார். அவருடைய சமயக் கொள்கைளும், சமுதாயக் கொள்கைகளும் வேதநெறியை ஒட்டி அமையாமல் வாய்மையான தமிழ் நெறியை ஒட்டியே அமைந்திருந்தன. சமுதாயத்தின் எந்தப் படித்தரத்தில் உள்ளவனையும் அவர் கடவுள் பக்தனுக ஏற்றுக்கொண்டார். தீண்டத்தகாதவர் என்று கருதப்பட்டவர்களைத் 'திருக்குலத்தார்' என்று அழைத்தார். இங்ஙனம் தம் சமஸ்கிருத ஞானத்தால் அவர் தமிழ்ப் பண்பாட்டைப் புறக்கணித்து விடாமல், தம் கருத்துகளை அனைத்திந்தியப் பண்பாட்டில் ஊடுருவவைக்க அதனைப் பயன்படுத்தினர்.

தமிழ்ச் சைவ சமயத் துறையிலும் இதே நிலைமையை நாம் காணமுடியும். சைவசித்தாந்த இலக்கியங்கள் பெரும்பாலும் தோன்றி வளர்ந்தது தமிழிலேயே யாகும். ஆனல் அது சமஸ்கிருதத்தின் மூலம் இந்தியா முழுவதும் படர்ந்ததோடு வேற்றுக் கோட்பாடுகளையும் வலிமையாகச் சந்தித்துத் தன் சிறப்பை நிலை நாட்டியது. தமிழகத்தில் ஒரு காலத்தில் வழங்கிய மணிப்பிரவாளநடை—அதாவது சமஸ்கிருதமும் தமிழும் கலந்த வசனம்—தமிழரல்லாத மற்ற மொழியினரிடையே தமிழ்ப் பண்பாட்டைப் பரவவைப்பதற்கு உதவிப்படா விட்டாலும், அக்காலத் தமிழ் - சமஸ்கிருதப் புலவர்கள் இருமொழிப் பண்பாடுகளையும் எங்ஙனம் கற்று ஒருவருக்கொருவர் பயன்பெற்றனர் என்பதைக் காட்டுகிறது.

எனவே பண்டைக் காலத் தமிழ்ச் சிந்தனையும், பண்பாடும் தாம் விரிவடைய இருமொழிப் புலமையைத் தாராளமாகக் கையாண்டன. ஆனல் தமிழின் முற்கால இலக்கியமும், தற்கால இலக்கியமும் காட்டுவதுபோல் தமிழ் தமிழகத்தில் தலை சிறந்து விளங்கக் கடமைப்பட்டது. இலக்கிய மேதைமை எப்போதும், எங்கும் ஒருவன் தாய்மொழியிலேயே பரிமளிக்க வல்லது. பழந்தமிழ் இலக்கியங்களின் தலை சிறந்த கவிதை எழுச்சி இன்றைய தமிழ் இலக்கியங்களிலும் புதிய வடிவங்களில் வெளிப்படுவது அவற்றின் ஒளி மிக்க எதிர் காலத்தைப் புலப்படுத்துகின்றது.

———

With the best compliments from :

Madura South India Corporation Private Ltd.

NO. 80, SEMBUDOSS STREET,

MADRAS—1.

*

"FULL CIRCLE RETREADERS"

(Under Famous Lodi Mould)

Telephone : Office : 23291, Factory : 27275

Telegrams : "MUSIC"

மகாராஷ்டிரத்தில் தமிழர்

['சோமலெ']

இந்தியாவின் முன்னணி மாநிலமாய், மேற்கத்தியருக்கு இந்தியாவின் வாயிலாக இருப்பது முன்னுள் பம்பாய் மாநிலத்தின் ஒரு பகுதியான மகாராஷ்டிரம். இங்கு தமிழர்கள் ஏறத்தாழ ஏழு இலட்சம் பேர் வாழ்கின்றனர். இவர்களில் சரி பாதித் தொகையினர் பம்பாய் நகரிலும், ஏனையோர் பூனு, நாகபுரி, நாசிக் முதலிய நகரங்களிலும் உள்ளனர்.

பாம்பாயின் ஒரு பகுதியான மாதுங்காவும், மற்ருெரு பகுதியான தாதரும் சின்னஞ்சிறு தமிழ் நாடு என்று சொல்லத் தக்க நிலையில் அமைந்து விட்டன. இங்கு இருக்கும் தமிழர்கள் அரசாங்க அதிகாரிகள், வணிக நிறுவனங்களிலும் செய்தித் தாள் நிலையங்களிலும் வேலை பார்க்கும் ஊழியர்கள், தொழிலாளர்கள், பூட்பாலிஷ் போடுவது போன்ற குற்றேவல்கள் செய்து வயிறு வளர்ப்பவர்கள்—இப்படிப் பல தன்மையினர். எனவே, தமிழ் நாட்டின் சரியான படிவமாகப் பம்பாய்த் தமிழ் நாடு காட்சிதருகிறது. தமிழ் நாட்டிலுள்ள எல்லாச் சமயத்தினரும் சாதியினரும் அரசியல் கருத்தினரும் இங்கு உள்ளனர். இவர்களுக்கிடையே பொதுவாக இருப்பது தமிழ் மொழி ஒன்று மட்டுமேயாகும். இப் பகுதிகளில், பம்பாய் மாநகராட்சிக்கும், மகாராஷ்டிர சட்டசபைக்கும் தமிழர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றனர்.

தமிழ் இதழான 'விந்தியா' இங்கிருந்து சில ஆண்டுகள் வெளிவந்தது. பம்பாயிலுள்ள பாரதீய வித்தியா பவனம், மதனகாமராஜன் கதைகள் முதலிய சில தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது. தமிழ் கற்றுக்கொள்ள, பம்பாய் நகரில் ஏழு உயர்நிலைப் பள்ளிகளும், ஏராளமான தொடக்கப் பள்ளிகளும் வாய்ப்பு நல்குகின்றன. பம்பாய்த் தமிழ்ச் சங்கம், மூன்று மாடிகளுடைய பெரிய தொரு கட்டிடத்தைக் கவினுறக் கட்டிக் கொண்டிருக்கிறது. பம்பாய்த் தமிழர்கள் கட்டியுள்ள சண்முகானந்த இசைக்கலைக் கழக மண்டபம் ஆசியாவிலேயே மிகப் பெரிய இசை மன்றம் ஆகும். பம்பாயில் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்றும் உளது. டிராம்பே அணுவாராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் தமிழர் சிலர், தமிழில் விஞ்ஞானக் கட்டுரைகள் வரைவதை அறிந்தும், அவர்களைச் சந்தித்தும் மகிழ்ந்தேன். தமிழர் மன்றம் போன்ற பல அமைப்புக்கள் பம்பாயின் சுற்றுப்புறமெங்கும் தமிழ் ஆர்வத்தை வளர்த்தும், தமிழ் நூல்நிலையங்கள் அமைத்தும் வருகின்றன. தமிழ் நாடகங்கள் சிறப்பாக நடத்தப்படுவதும், தமிழகம் ஏனைய எல்லா மொழியினரும் சமவுரிமைகள் பெறுவதற்கு மகாராஷ்டிர அரசாங்கம் உறுதுணையாக இருப்பதும் என் மனத்தைக் கவர்ந்தன.

பூனு (சரியான ஒலிப்பு 'பினே') விலும் பல்லாயிரம் தமிழர்கள் உள்ளனர். இவர்களைத் தவிரப் போர்ப் படைகளில் பணியாற்றும் தமிழ் வீரர்கள் பல்லாயிரம் பேரும் இந்நகரின் ஒரு பகுதியில் இருக்கின்றனர். பூனுவில் தமிழ்ச் சங்கம் பல்லாண்டுகளாகப் பணியாற்றி வருகிறது. 'நல்வழி' என்ற தமிழ்த் திங்கள் ஏடு, இந்நகரிலிருந்தே வெளிவருகிறது. இதனை அச்சிடும் ஓரியண்டல் வாச்மன் நிறுவனத்தார், உடல் நலம் பேணுதற்கு உதவும் பல நூல்களைத் தமிழில் இங்கிருந்து வெளியிட்டு வருகின்றனர். தமிழ் மொழியியல் பற்றிய ஆராய்ச்சி டெக்கான் கல்லூரியில் இராக்பெல்லர் அற நிறுவனத்தின் பொருளுதவியால் பத்து ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

நாகபுரியில், குறிப்பாக அஞ்சல் நிறுவனம், இரயில் போக்குவரத்து, தலைமைக் கணக்காளர் அலுவலகம் ஆகியவற்றில் பல்லாயிரம் தமிழர்கள் உள்ளனர். இங்கும் ஒரு தமிழ்ச் சங்கம் உண்டு; இது அடக்கமான முறையில் பணியாற்றி வருகிறது.

இந்திய அரசாங்கத்தின் பெரிய அச்சகங்களை உடையது, நாசிக்ரோடு இரயில் நிலையத்துக்கும் நாசிக் நகருக்கும் இடையேயுள்ள பகுதி. இங்கு பணி புரிவோரில் தமிழர்கள் குறிப்பிடத்தக்க அளவினராக உள்ளனர். இவர்களுக்குப் பொதுவான அமைப்பு ஒன்றும் ஏற்படவில்லை. இவர்கள் தமிழர் என்ற முறையில் சந்திக்கக்கூடிய வாய்ப்பு, நாசிக் - பஞ்சவடியிலுள்ள கார்த்திக் மந்திர் (முருகன் கோயில்) திருவிழாவின்போது மட்டுமே ஏற்படுகிறது.

மகாராஷ்டிரத் தமிழர்களும் தமிழ் நாட்டுத் தமிழர்களும் கலை, மொழித் துறைகளில் மேன்மேலும் இணைந்து செயற்பட வேண்டும் என்பது என் அவா.

இரண்டு தெலுங்கு நூல்கள்

கன்யா சுல்கம் ... ... ரூ. 5—00

குரஜாட அப்பாராவ்

ஆந்திர நாட்டில் விசாகபட்டினம் ஜில்லாவிலுள்ள இராயவரம் எனும் கிராமத்தில் குரஜாட அப்பாராவ் 1861-ம் ஆண்டு பிறந்தார். விஜயநகரம் காலேஜில் படித்து 1886-ல் B.A., பாஸானார். முதலில் ஆசிரியராக இருந்து, பின் டிப்டி கலெக்டர் ஆபீஸ் ஹெட் கிளார்க்காக வேலைபார்த்து, அதற்குப் பிறகு காலேஜில் விரிவுரையாளராக இருக்கும்போதுதான் 1896-ல் இந்த 'கன்யா சுல்கம்' நாடகத்தை இயற்றினார். உயரிய கவிதைகளும், சிறந்த நாடகமும் எழுதித் தெலுங்கர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த சமூக சீர்திருத்தவாதி, மக்கள் கவிஞர் குரஜாட அப்பாராவின் கொள்கைகளையும், அறிவாழத்தையும், கற்பனைத் திறனையும் 'கன்யா சுல்கம்' நாடகத்தில் தெளிவாகக் காண முடியும்.

ஆயிரம் தலை நாகம் ... ... ரூ. 1—25

விசுவநாத சத்தியநாராயண

கவிதை, நாவல், சிறுகதை, இலக்கிய விமரிசனம், பாடல், நாடகம் ஆகிய எல்லா வகை இலக்கியத் துறைகளிலும் தெலுங்கு மொழியில் சிறந்த படைப்புக்கள் அளித்தவர் திரு. சத்திய நாராயண அவர்கள். மக்களின் மனத்தைக் கொள்ளை கொள்ளும்படி எழுதும் இவரது வெற்றிக்குக் காரணமாக இரண்டு அம்சங்களைக் கருதலாம்: ஒன்று, இவர் எழுத எடுத்துக்கொள்ளும் பொருள்; மற்றது இவரது தெலுங்கு நடை. தெலுங்கு நடையின் பூரண அழகைக் காண இவரது எழுத்தோவியங்கள் உதவுகின்றன.

பாரி நிலையம்,

59, பிராட்வே, :: சென்னை - 1.

மிகச் சிறந்த சாதனை......

இலக்கியத்தில் ஈடுபாட்டை உண்டாக்கும் தென்மொழிப் புத்தக டிரஸ்ட் மிகச் சிறந்த சாதனையைப் புரிந்து வருகிறது. அண்மையில் டிரஸ்டின் பணிகளைப் பாராட்டும் முறையில், விஞ்ஞான ஆராய்ச்சி—கலைத்துறை அமைச்சர் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் இவ்வாறு கூறியுள்ளார்:

- தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்—நான்கு மொழிகளில் **396** புத்தகங்கள்;
- நான்கு மொழிகளிலும் ஒரு முத்திங்கள் இதழ்—'புத்தக நண்பன்';
- நான்கு மொழிகளிலும் 'எழுத்தாளர் யார்—எவர்?'
- புத்தக விற்பனையில் புதிய முயற்சிகள்;
- படிக்கும் பழக்கங்கள், படிக்கப்படும் பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சிகள், அளவீடுகள்;
- புத்தகத் தயாரிப்பு, வெளியீடு, பங்கீடு பற்றிய கருத்தரங்குகள்... முதலிய பல்வேறு பணிகள்.

தென்மொழிப் புத்தக டிரஸ்ட்,
சென்னை - 34.

With the best compliments from :

↓

Grams: "PUNANIRMAN"   Phones (Office: 28551 & 25170)
,, (Res.: 41351 & 31387)

PREMIER SUPPLIERS PRIVATE LIMITED,

NO. 9, STRINGERS STREET,

MADRAS-1.

க. மு. (கே. எம்.) பாலசுப்பிரணியம்

[வல்லை. பாலசுப்பிரமணியம்]

தமிழ் நாவலரும், பாவலரும், பேரறிஞருமான நண்பர் திரு. க. மு. பாலசுப்பிரமணியம் அவர்களைப் பற்றித் திறனாய்வு எழுத வாய்ப்பு நேர்ந்தமை குறித்து மகிழ்ச்சி உண்டாகிறது.

"அறிவானுந் தானே, அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின் றான் தானே"

என்னும் வரிகள் காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியிலுள்ள ஒரு வெண்பாவில் காணப்படுகின்றன. அதற்கிசையவே, ஈண்டு அறிவிக்கப்படுபவரும் அறிவிப்பவரும் பாலசுப்பிரமணியமாக இருப்பது விந்தையே!

திரு. க. மு. பா. அவர்கள் எஸ். முத்துசாமிப் பிள்ளை அவர்களின் திருமகனாகக் கோவை மாவட்டத்திலுள்ள தாராபுரத்தில் 1908-ஆம் ஆண்டு தோன்றினார்.

கரூர் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியிலும், பின்னர், திருச்சிராப்பள்ளி செயின்டு ஜோசப்பு கல்லூரியிலும், சென்னை சட்டக் கல்லூரியிலும் பயின்று பட்டங்கள் பெற்றார்.

இராவ்பகதூர் காப்டன் எஸ். குமாரசாமிப் பிள்ளை அவர்களின் திருமகளாகிய சவுந்திரவல்லி அம்மையை மணஞ்செய்து கொண்டார்.

1939—1945-ல் நடந்த இரண்டாவது உலகப் பெரும்போரில் இந்திய அரசின் போர் முயற்சிகளுக்கு அவர் உதவி செய்தார். மிகச் சிறந்த போர் ஊக்கப் பாடல் இயற்றியதற்காகச் சென்னை அரசினர் அவருக்குப் பொற்பதக்கம் பரிசளித்தார்கள். க. மு. பா. அவர்கள் 1950-ல் இலங்கை அரிசன மாநாட்டுக்குத் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றினார். 1951-52ல் மதுரையிலிருந்து வெளிவரும் "தமிழ் நாடு" என்னும் நாளிதழுக்கு ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் தென் மண்டலத்துக்கான ஐந்தாண்டுத் திட்டப் பிரசார அலுவலராக அரசினரால் நியமிக்கப்பட்டார்

திருவாசகமணி

1949-ல் தருமபுர ஆதீனத் தலைவர் வைதீசுவரன் கோயிலில் க. மு. பா. அவர்களுக்குத் "திருவாசகமணி" என்னும் பட்டம் வழங்கி, அப்பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கத்தையும் அளித்தார்.

டாக்டர் இராதாகிருஷ்ணனின் மதிப்புப் பெற்றவர்

1960ல் க. மு. பா. அவர்கள் சென்னை கபாலீச்சுரத்தில் 24 பெரியபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அவ்வமயம் சென்னைக்கு வந்திருந்த டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் தமது பல முக்கிய அலுவல்களுக்கிடையே கபாலீச்சுரத்துக்குப் போந்து, க. மு. பா. அவர்களைப் பாராட்டிப் பேசினார். இதனையொட்டி தில்லைத் தீட்சிதர்கள் க. மு. பா. அவர்களுக்குச் சிதம்பரம் கோயிலில் தனிச் சிறப்புச் செய்தார்கள்.

பூக்கடை சென்னமல்லீசுவரர் கோயிலில், தமிழ் நாட்டுக் கவர்னர் மேதக்க விஷ்ணுராம் மேதி அவர்கள் தலைமை வகிக்க, அப்போது கல்வி அமைச்சராயிருந்த திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் க. மு. பா.-வின் திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பினை வெளியிட்டார்.

க. மு. மா. அவர்கள் அலகாபாத்து, காசி பல்கலைக் கழகங்களில் நிகழ்த்திய சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகளை அண்ணமலைப் பல்கலைக்கழகத்தினர் 1959-ல் நூலாக வெளியிட்டார்கள்.

திருக்குறள்மணி

இவ்வாண்டுத் தொடக்கத்தில் பூக்கடை சென்னமல்லீசுவரர் கோயிலில் சென்னை உயர்நீதி மன்ற முதன்மை நடுவர் மேதக்க இராமச்சந்திர ஐயர் அவர்களின் தலைமையின் கீழ் க. மு. பா.-வின் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டது. அவ்வமயம் அவருக்குத் "திருக்குறள்மணி" என்னும் பட்டம் வழங்கப்பட்டுப் பொன்னாடையும் போர்த்தப்பட்டது.

திரைகடல் ஓடியும்...

இப்போது க. மு. பா. அவர்கள் தென்னாப்பிரிக்க நேட்டால் தமிழ் வேத சங்கத்தினரின் அழைப்புக் கிணங்கி அவர்களது பொன்விழாவினைத் தொடங்கி வைத்துப் பங்கு கொண்டு சொற்பொழிவுகளாற்றத் தென்னாப்பிரிக்கா சென்றுள்ளார். ஆறு திங்கள்கள் அங்குத் தங்கித் தமிழ்ப், பணியும் சமயத்தொண்டும் ஆற்றுவார்.

க. மு. பா. வின் நூல்கள்

ஆங்கிலம்

(1) தென்னிந்தியப் பிரமுகர்கள்— 2 தொகுப்புகள்.

(2) சைவசித்தாந்தம் — சிறு திறனாய்வு.

தமிழ்—ஆங்கில மொழிபெயர்ப்பு

(1) திருவாசகம்.

(2) திருக்குறள்.

(3) திருப்பாவை.

தமிழ்

(1) மாணிக்க வாசகர் மாலை (2) திருப்போரூர் சதகம் முதலாகப் பதினொரு நூல்கள்.

தமிழ் இசை நூல்கள்

(1) கீதத்தமிழ் (2) திருத்தொண்டர் கீதம். க. மு. பா. அவர்களின் தமிழ்க் கீர்த்தனைகளை இசைக் கலைஞர்களான மதுரை சோமசுந்தரம், சீர்காழி. கோவிந்தராஜன், எம். எல். வசந்தகுமாரி முதலியோர் இசையரங்குகளில் பாடுவதுண்டு.

மேற்கூறிய வற்றால், க மு. பா.வின் இருமொழிப் பெரும் புலமை தெள்ளிதிற் புலனாகும். சிறப்பாக, இவர் தம் மொழி பெயர்ப்பு நூல்களில் விரிவாக எழுதிச் சேர்க்கப்பட்டுள்ள ஆங்கிலக் குறிப்புகள் இவருடைய ஆழ்ந்தகன்ற கல்விப் பெருக்கைக் காட்டும்.

கடல் மடை திறந்தாலன்ன சொற்பொழி வாற்றக் கூடிய நாவீறு படைத்தவர் இவர். மணிக்கணக்கில் சலிப்பில்லாமல் பேசுவார். மக்களும் அலுப்புத் தட்டாமல் கேட்டுக்கொண்டிருப்பார்கள். பேச்சிடையே அனாயாசமாக நகைச் சுவைத் துணுக்குகளும், பிராசங்களும் வைர மணிக்கற்களைப்போல் துள்ளி விழும். சில சமயங்களில் பத்திச் சுவையின் உச்சிக்குப் போய்க் கண்ணீர் விடுவதுமுண்டு.

க. மு. பா. அவர்களை நாடு இன்னும் செவ்விதாகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

— ✳ —

அறுசுவை உண்டிக்குச் சிறந்த இடம்:

✳ ஹோட்டல் ஆதிபவன் ✳

காப்பி & சாப்பாடு

(அங்கு விலாஸ் கட்டிடம்)

கீழரத வீதி :: திண்டுக்கல்

✳ சுகாதார வசதி

✳ சுவை மிகுந்த உணவு

✳ சிறந்த உபசரிப்பு

உரிமையாளர் :—A. வீரராகவன்.

பாபநாசம் சிவன்

[சங்கீதபூஷணம் எஸ். இராமநாதன்]

''காணக்கண் கோடி வேண்டும்'',
''கற்பகமே கடைக்கண் பாராய்''

போன்ற பாடல்களைக் கேளாதவர்கள் தமிழ் நாட்டில் அருமை. நமது இன்னிசை அரங்குகளில் ''தமிழ் மணம் கமழ வேண்டும்'' என்று விரும்பியதோடல்லாமல் நூற்றுக் கணக்கான இசைப்பாக்களைத் தமிழில் இயற்றி அளித்தவர் பாபநாசம் சிவன் அவர்கள்.

தஞ்சை மாவட்டம் நன்னிலம் தாலுக்காவில் போலகம் என்ற ஊரில் 1890-ல் பிறந்த இவருக்கு இளமைப் பெயர் இராமையா என்பது. இவரது தந்தையார் இராமாமிருதம் ஐயர்; தாயார் யோகாம்பாள். இவரது ஆருவது பிராயத்தில் தந்தை இறந்தபின், தாய், தமையன் இராஜகோபாலையருடன் திருவனந்தபுரம் சென்று குடியேறினர். அங்கே ஊட்டுப் புரையில் உணவு கொண்டு சமஸ்கிருதக் கல்லூரியில் சேர்ந்து படிக்கலானுர்.

திருவனந்தபுரத்தில் நூரணி மகாதேவ பாகவதரிடம் இசைப் பயிற்சி தொடங்கினுர். சாம்ப பாகவதரிடம் சில வர்ணங்கள் கற்றுர். கோயிலம்மை என்ற மாது இவருக்குப் பல சுவாதித்திருநாளின் பாடல்களைக் கற்பித்தார். நீலகண்ட சிவன் என்ற பெரிய பாடலாசிரியர் திருவனந்தபுரத்தில் நடத்தி வந்த பஜனைக் கூட்டங்களில் நமது இராமையா அவர்களும் கலந்து கொண்டார். பிற்காலத்தில் தென்னுடு முழுவதும் நடக்கும் திருவிழாக்களிலெல்லாம் இவர் பஜனை நடத்துவதற்கு அதுவே தூண்டுகோலாய் அமைந்தது எனலாம்.

''சங்கீதத்துடன் பகவத் குணங்களைத் தமிழ் நாடெங்கும் கதறவேண்டும் என்ற பைத்தியம் முற்றியது'' என்று அவரே தம் வாழ்க்கைக் குறிப்பில் எழுதியுள்ளார்.

1910-ல் திருவனந்தபுரத்தை விட்டுக் கிளம்பிய இவர் தமிழ் நாடெங்கும் கால் நடையாகவே சுற்றி இறைவன் புகழைத் தெருவெல்லாம் முழங்கியுள்ளார். நாகப் பட்டினம் ஆடிப்பூரம் உற்சவத்தில் 1930 வரை இவர் பஜனை செய்து வந்தார். திருவையாற்று சப்தஸ்தான உற்சவத்தில் இவர் 1959 முடிய பஜனை நடத்தி வந்திருக்கிருர். சென்னை கபாலி பங்குனி உத்திரத் திருவிழாவிலும், மார்கழித் திங்கள் விடியற் கால பஜனையிலும் சிவன் அவர்கள் பாடக் கேட்டவர்கள் அரிய அனுபவம் பெற்றவர்களே.

1914-ல் இவரது தமையன் பாபநாசத்தில் தமிழாசிரியராகப் பணியாற்றிய போது, இவரும் அவருடன் கூட அங்கே வசித்தார். அதுமுதல் இவரை யாவரும் ''பாபநாசம் சிவன்'' என்றே அழைக்கலாஞர்கள். அப்பெயரே இன்றும் நிலைத்து விட்டது.

பஜனைகளில் பாடும்போது, இவர் தாமே சாகித்தியங்கள் இயற்றி அவற்றைப் பாடத் தொடங்கினுர். முதன் முதலில் அவர் இயற்றிய ''நிஜமுன்னை நம்பினேன்'', ''அரனே இன்னும் தயவு'' போன்ற பாடல்களை ''பரிதான மிச்சிதே'', ''ஹரிநேநெந்து'' என்ற கீர்த்தனங்களின் மெட்டுக்களிலேயே அமைத்தார். பின்னர் இவரே புதிய மெட்டுக்களில் பாடல்கள் இயற்றத் தொடங்கினுர். ''சிதம்பரம் என மனங் கனிந்திட'' ''பராமுகம் ஏன் ஐயா'', ''ஆண்டவனே'', ''காபாலி'', ''இகபர சுகம்'' முதலான பாடல்கள் தமிழ் நாடு முழுவதும் விரைவில் பரவத் தொடங்கின.

தமிழ் நாட்டின் தவப்பயனுய் அவதரித்த கோனேரி ராஜபுரம் வைத்தியநாத ஐயர் அவர்களுடைய பாட்டைக் கேட்டு அவரையே தம் குருவாகக் கொண்டு ஒழுகி வந்தார் நம் சிவன் அவர்கள். அவருடைய முத்திரையை இன்றும் சிவன் பாடும் தோடி, கரகரப்பிரியா, கல்யாணி போன்ற இராகங்களில் காணலாம்; இவருடைய

பாடல்களிலும் அம்முத்திரை விழுந்திருக்கிறது.

திரைப்படங்கள்—பாடல்கள் :

1930-க்குப் பின் சென்னை வந்து குடியேறினர். தமிழில் முதல் பேசும்படமாகிய ''சீதா கல்யாண''த்திற்கு சிவன் அவர்கள் பாடல்கள் இயற்றினர். 1949 முடிய ஏறக்குறைய 100 படங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார். ''சிந்தாமணி'', ''முசிறி துகாராம்'', ''மீரா''—ஆகிய படங்களின் பாடல்கள் நல்ல இசைவளம் பெற்றவை.

சிவன் அவர்கள் நான்கு திரைப்படங்களில் நடித்தும் இருக்கிறார். 'தியாக பூமி' என்ற படம் (அமரர் கல்கி அவர்களின் கதை) தமிழ் நாட்டில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியது என்றே கூறலாம். அதன்பின் 'பக்த குசேலா'வில் குசேலராக நடித்தார். அதில் அவர் பாடியுள்ள ''கண்ணன் மாளிகைக்குத் திரும்பியும் வந்தேனே, கண்கட்டி வித்தை இதுவோ'' என்ற அடாணா இராகப் பாடல் என்றும் நம் உள்ளத்தைவிட்டு அகலாது. ''குசேலருக்கு என்று எனக்குத் தனி வேடம் கட்ட வேண்டாம். இளமை முதலே நான் குசேலன்தான்'' என்று அவரே வேடிக்கையாகக் குறிப்பிடுகின்றார்.

சென்னை வந்தபின் கலாக்ஷேத்திரத்தில் பணி புரிந்தார். பின் ஜெமினியில் பாடலாசிரியராகப் பணி ஏற்று 1942-ல் அதை விட்டுக் கோயமுத்தூர் பக்ஷிராஜாவிலும் பணி புரிந்தார்.

1934-ல் எழும்பூர் ஜகந்நாத பக்த சபையார் ''கீர்த்தனமாலை'' என்ற பெயரில் சிவன் அவர்களுடைய பாடல்களைச் சுரதாளக் குறிப்புடன் வெளியிட்டு அவருக்கு ஒரு பணமுடிப்பும் அளித்தார்கள். அதன்பின் கலாக்ஷேத்திரத்தினர் இவரது பாடல்களை (சாகித்தியம் மட்டும்) அச்சியற்றி வெளியிட்டுள்ளனர். இப்போது ''கீர்த்தனமாலை'' இரண்டாவது பாகம் அச்சுக்குத் தயாராக இருப்பதாக அறிகின்றேன்.

தியாகராஜ கீர்த்தனங்களை சிவன் அவர்கள் பாடும்போது, அவை தனிச் சுவையுடன் விளங்குகின்றன. ''ஏலா நீ தயராது'' (அடாணா), ''நன்னு விடசி'', (ரீதிகௌளை), ''ஸுஜன ஜீவன'' (கமாஸ்) போன்ற பாடல்களின் சுவை அறிந்து அவர் பாடும்போது, மெய்சிலிர்க்கும். அவர் பாடுவது இதயத்திலிருந்து வருவது எளிதில் புலனாகும்.

''பெண்கள்தாம் பாடலாம்; ஆண்கள் பாடக்கூடாது. வேண்டுமானால் கற்பிக்கலாம்'' என்று அழுத்தமாகக் கருதிய காலஞ்சென்ற திரு. சத்தியமூர்த்தி அவர்களே ''எங்கள் சிவனைத் தவிர'' என்று இவருக்கு விதிவிலக்கு அளித்துள்ளார் என்றால், அதிகம் கூறவேண்டுவதில்லை அன்றோ?

தமிழிசை இயக்கம் என்று தோன்றுவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே நமது சிவன் அவர்கள் தீந்தமிழில் அருமையான பாடல்களை இயற்றி நம் இசையை வளப்படுத்தியுள்ளார். சாதாரணமாக ஒரு புலவன் அவன் காலத்திலேயே போற்றப்படுவது அரிதுதான். ஆயினும் சிவன் அவர்களின் பாடல்களைத் தலைசிறந்த இசைவாணர்கள், அரியக்குடி இராமாநுஜ ஐயங்கார், செம்மங்குடி சீனிவாச ஐயர், மதுரை மணி ஐயர், எம். எஸ். சுப்புலட்சுமி, டி. கே. பட்டம்மாள் போன்ற பலரும் பாடிவருவதனாலேயே அவற்றின் இசைச் சிறப்பு விளங்கும்.

''அவனே, இவனே என்று பாடாது, சிவனே, சிவனே'' என்று பாட விரும்பிய இவர் சிவன் என்ற சிறப்புப் பெயராலேயே அழைக்கப்பட்டது பொருத்தம்தான்.

தோடி, கல்யாணி போன்ற இராகங்களில் முன்னோர்களுடைய உருப்படிகள் 50, 60 உள்ளன. ஆகவே இவற்றில் புதிய வடிவங்கள் சமைப்பது மிகவும் அரிதான காரியம். ''கார்த்திகேய'', ''கடைக்கண் நோக்கி'', ''தாமசமேன்'' என்ற இவரது கீர்த்தனங்களைக் கேட்டவர்கள் அவற்றின் வடிவங்களைக் கண்டு வியக்காமலிருக்க முடியாது. புதிய வண்ண வடிவங்கள்; அழகு நிரம்பிய வடிவங்கள். நாகஸ்வராவளி, குந்தலவராளி போன்ற சிறிய இராகங்களிலும் இவர் புது வடிவங்களை யாத்துள்ளார்.

நமது கருநாடக இசையை வளர்த்த சிறந்த பாடலாசிரியர்களில் பாபநாசம்

சிவன் அவர்களுக்குச் சிறப்பானதோர் இடம் உண்டு. அவருடன் ஒரே காலத்தில் வாழும் இந்தத் தலைமுறையினர் அந்த எண்ணத்தில் இறும்பூது எய்தலாம்.

தமிழ் மொழியில் நூற்றுக் கணக்கான பாடல்களை இயற்றி இசைத்தமிழை வளமுறச் செய்த அவர் தமிழர் யாவராலும் போற்றிப் பாராட்டப்படத்தக்கவர். அவருக்கு இவ்வாண்டு தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் பாராட்டுச் செய்து கேடயம் வழங்குவது மிகவும் பொருத்தமான செயல்.

✳

நல்வாழ்வு நடத்த விரும்பும்
பெண்களுக்கு அரிய துணை

✳

குடும்பப் பெண்களுக்கு
ஆயிரம் குறிப்புகள்

✳

சரோஜினி சங்கர்
அளிக்கும் பயனுள்ள நூல்

விலை ரூ. 3—00.

✳

மல்லிகைப் பதிப்பகம்,
8, கோட்ஸ் ரோடு, தியாகராய நகர்,
சென்னை - 17.

LET YOUR SAVINGS GROW
THROUGH
IOB'S RECURRING DEPOSIT SCHEME

Deposits are accepted in multiples of Rs. 5/- upto a maximum of Rs. 500/-

	Monthly Deposits of				
	Rs. 5	**Rs.** 10	**Rs.** 50	**Rs.** 100	**Rs.** 500
In 12 months	Rs. 61 00	Rs. 122	Rs. 610	Rs. 1,220	Rs. 6,100
In 24 months	Rs. 124 50	Rs 249	Rs. 1,245	Rs. 2,490	Rs. 12,450
In 36 months	Rs. 192 00	Rs. 384	Rs. 1,920	Rs. 3,840	Rs. 19,200
In 48 months	Rs. 262 00	Rs. 524	Rs. 2,620	Rs. 5,240	Rs. 26,200

THE INDIAN OVERSEAS BANK LTD.,

Central Office :

151, MOUNT ROAD, MADRAS - 2.

Our City Branches : Aminjikarai, Adyar, Esplanade, Mount Road, Mylapore, Purasawalkam, Sowcarpet, Theagarayanagar and Triplicane.

Branches all over India and South East Asia
Correspondent Banks throughout the world.

M. CT. MUTHIAH,
Chairman.

S. R. V. ARASU,
General Manager.

கல்கி பற்றிய நினைவுகள்

["ராஜ்"]

அமரர் கல்கி அவர்கள் ஆரம்பித்து வைத்த ஸ்தாபனம் தமிழ் எழுத்தாளர் சங்கம். அதில் அங்கத்தினராக இருப்பதே அவருக்குத் தமிழராகிய நாம் செலுத்தக் கூடும் அஞ்சலி. இப்பொழுது மா நாட்டை ஒட்டி வரும் ''பாரதி'' சிறப்பிதழிற்கு ஒரு கட்டுரை எழுதத் தோன்றியது. நெஞ்சில் நிறைந்த அமரரைப் பற்றிப் பறை சாற்றும் அளவுக்கு நான் பெரியவனல்லா விட்டாலும், கல்கி அவர்களிடம் எனக்கு இருந்த தொடர்பு இதை எழுதத் தூண்டுகோலாகிறது.

1939-ஆம் வருடம், கலாசாலைக் கல்வி முடியும் தருணம். படிப்பு முடிந்து வெளியுலகத்தில் அடியெடுத்து வைத்து வருங் காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்கிற நிலை. வசதி குறைவான காலம். இரண்டணு கிடைத்தால், ஏதாவது வாங்கித் தின்னத் தோன்றும் பருவம். ஆனல் அந்த இரண்டணுவைக் கொண்டு 'ஆனந்த விகடன்' இதழ்களை வாங்கத் தோன்றியது. காரணம் அதில் வரும் 'கல்கி'யின் படைப்புகளைப் படிக்கும் ஆர்வந்தான். அந்தக் கல்கி யார்? எப்படி இருப்பார்? என்ற கற்பனை, நேருக்கு நேர் சந்திக்க முடியுமா என்ற ஏக்கம் அந்தக் கதைகளையும், கட்டுரைகளையும் காந்தம் போல் இழுத்தன. நாமும் எழுதினுல் என்ன என்ற ஆசை; ஆசையுடன் ஆர்வமும் சேர்ந்தது. ஒரு சிறு கதை, சின்னஞ் சிறு கதை 'ஆனந்த விகட'னுக்கு எழுதி யனுப்பியாயிற்று; அனுப்பியதும் மறந்து விட்டது. ஒரு நாள் திடீரென்று 'ஆனந்த விகடன்' இதழ் ஒன்று அஞ்சல் மூலம் வந்து சேர்ந்தது. என்ன ஆச்சரியம்! பிரித்துப் பார்த்ததில் அன்று அனுப்பிய சின்னஞ் சிறு கதை கண் விழித்துப் பார்த்தது. கேட்க வேண்டுமா? உற்சாகம், ஆனந்தம் கரைபுரண்டு ஓடின. உடனே தமிழ் எழுத்தாளன் என்ற பெருமை. சன்மானமும் செக்கில் மூன்று ரூபாய்களைச் சுமந்து வந்தது. கொஞ்சம் தைரியம். இளம் எழுத்தாளன் அந்த யோக்கியதையுடன் ஆசிரியரைத் தரிசிக்கலாமல்லவா?

கலாரசிகர்கள் குடும்பத்தில் தோன்றியவன் என்ற யோக்கியதை எனக்கு உண்டு. அப்பொழுது சென்னை, எழும்பூரில் 'ஜகன்னாத பக்த சபை' சங்கீத சேவை செய்து வந்தது. அதில் அங்கத்தினனகச் சேர்ந்த சில காலத்தில் சபா காரியதரிசி காலஞ் சென்ற ''முத்தண்ணு'' பொக்கிஷதார் வேலையைத் தலையில் கட்டினர். அங்கு ஸ்ரீஜயந்தியை முன்னிட்டு வருடா வருடம் சங்கீத விழா நடத்துவது வழக்கம். அப்பொழுது பிரபலமாகப் பிரகாசித்த வித்துவான்களும், விதூஷர்களும் 'நான்முந்தி நீமுந்தி' என்று மேடையைப் பிடித்துக் கொண்டு கச்சேரி செய்ய வருவார்கள். சன்மானம் அப்பொழுதெல்லாம் பெரும்பாலும் தேங்காய் மூடிதான். அப்பொழுது சங்கீதத்துக்காகவே சங்கீதம் பாடினுர்கள்; பணமும் புகழும் இரண்டாம் பட்சந்தான். ''கர்நாடகம்'' அந்த சங்கீத விழாவுக்கு வருவார் என்று தெரிய வந்தது. ஒரு நாள் ஓர் இளம் வித்வானின் கச்சேரி ஏற்பாடாயிருந்தது. அந்த இளம் வித்துவான் குன்றக்குடி வெங்கடராமையர் அவர்கள். பொக்கிஷதார் என்ற ஓதாவில் வாசலில் நின்று வருபவர்களை வரவேற்றுத் தகுந்த இடத்தில் இரசிகர்களை உட்கார வைக்கும் பொறுப்பை 'முத்தண்ணு' என் மீது சுமத்தி விடுவார்.

அன்று ஒரு கறுப்புக் கார் சபா வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு சிறிய உருவம், கதர் அரைச் சட்டை, அங்கவஸ்திரம், வேட்டி இவைகளுடன் கீழே இறங்கியதும், பக்கத்தில் இருந்த நண்பன் ''டேய்! 'கல்கி'டா'' என்று குரல் கொடுத்தான். உடல் சிலிர்த்தது. இவ்வளவு நாட்களும் காண வேண்டும் என்று தவங்கிடந்த மனிதர் தரிசனம்

கொடுக்க அன்று வந்தார். 'வாருங்கள்' என்று கைகூப்பி அழைத்துப்போய் ஒரு நாற்காலியில் உட்கார வைத்து விட்டுப் பின்னால் வருபவர்களைக் கவனிக்கத் தோன்றாமல் ஒரு ப்ரபரப்புடன் அவரையே நோக்கி நின்ற நிலை. அந்த முதல் சந்திப்பை நினைத்தாலும், இன்று தான் நடப்பது போல் இருக்கிறது. கண நேரந்தான்; ஒரு யோசனை. வீட்டை நோக்கி விரைந்தேன். 'விகடனில்' தொடர்ச்சியாக வந்த 'தியாக பூமி'யைச்சேர்த்துப் புத்தகமாக்கிக் கருப்புக் காலிகோ பைண்டு செய்து வைத்திருந்ததுகவனம் வந்தது. அதைத்தூக்கிக் கொண்டு ஓடி வந்தேன். தன்னை மறந்து கச்சேரி கேட்டுக் கொண்டிருந்த ஆசிரியரைத் தொந்தரவு செய்ய மனம் வரவில்லை. பாட்டு முடிந்தது. புத்தகத்தை நீட்டினேன். ''என்ன'' என்று கீச்சுக் குரல் ஒலித்தது. ''உங்கள் கையெழுத்து வேண்டும்''. ''பலே! தியாகபூமியா, அதற்குள் புத்தகமாக வெளியிட்டு விட்டீர்களே'' என்று கூறிக்கொண்டே அதில் அழகாக ''ரா. கிருஷ்ணமூர்த்தி'' என்று கையெழுத்திட்டுக் கொடுத்தார் அந்தப் பேனா மன்னர். இன்னும் என் புத்தக அலமாரியில் அந்த அரிய கலைப்பொக்கிஷம் தனித்து நின்று வருகிறது.

கச்சேரியும் முடிந்தது; கூட்டமும் கலைந்தது. வாசலில் கல்கி வந்து நின்றார். பக்கத்தில் பவ்வியமாக நின்று கொண்டு, ''காருக்குக் காத்திருக்கிறீர்களா?'' என்றேன். ''ஆமாம். ஆனால் அது வரும் என்று தோன்ற வில்லை. இராஜாஜி எடுத்துப் போயிருக்கிறார்கள்'' என்றார். அப்பொழுது யுத்த காலம். இருட்டடிப்பு. தெரு விளக்குகள் குல்லாய் போட்டுக் கொண்டிருக்கின்றன. ''சரி! என்னுடன் வந்தால் தியாகராய நகர் பஸ்ஸில் ஏற்றி விடுகிறேன்'' என்றதும், 'சரி' என்று கூட நடந்தார் அவர். அன்று எழும்பூர் பெரிய சாலையிலிருந்து ஸ்பர்டாங்கு ரோடுவரை நடந்தபோது பேசிய பேச்சுகளை எழுத முடியாது. 'விகடனில்' கதை பிரசுரமானதைச் சொன்னதும், ''பலே! கதை வேறு எழுதுவீர்களா!'' என்று கேட்டதும், என் உச்சி குளிர்ந்தது. பஸ் நிலையத்துக்கு வந்தால், வரும் ஒரு பஸ்ஸிலாவது இடம் கிடைக்க வில்லை. ''இது என்ன சார், இது. கையில் குடை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, சேம்பர்லின் குடைபோல. அது தான் பஸ்களைக் கோட்டை விடுகிறீர்களோ''என்று அந்தக் காலத்தை ஒட்டிக் கொஞ்சம் ஹாஸ்யமாகப் பேசியதும், அந்த ஹாஸ்ய மன்னன், ''பலே பலே, ஜோராராகச் சொல்கிறீர்களே'' என்று கூறிச் சிரித்ததை மறக்க முடியுமா? ஒரு யோசனை தோன்றியது. ஒரு பஸ் வந்ததும், முண்டியடித்து ஏறி விட்டேன். அதிர்ஷ்டவசமாக இடம் கிடைத்தது. ''சார், சார்''என்று அழைத்து அவரை இடத்தில் உட்கார வைத்து விட்டு நான் பஸ்ஸிலிருந்து குதித்தேன். வண்டியும் நகர்ந்தது. அந்த வாரம் 'விகடன்' ''ஆடல் பாடல்'' பகுதியில் ''சேம்பர்லின் குடை'' என்ற தலைப்பில் குன்றக்குடியாரின் கச்சேரியை 'கர்நாடகம்' விமரிசனம் செய்திருந்தார். அதில் தாம் வீட்டுக்குப் போக அன்று பஸ் ஏறிய படலத்தை வருணித்து விட்டு, ''குன்னக்குடி வெங்கட்ராமையர் என்னைப்போல் இல்லாமல், என் நண்பரைப் போல் முண்டியடித்துக் கொண்டு சங்கீத உலகில் முன்னுக்கு வர வேண்டும்'' என்று எழுதியிருந்ததாக ஞாபகம். அதைப் படித்ததும் ஒரு சிறு சம்பவத்தை வைத்துக் கொண்டு சுவாரஸ்யமாக ஒரு சங்கீத விமரிசனமே செய்தாரே, அது கல்கியால் தான் முடியும் என்ற எண்ணம் தோன்றியது.

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்,
மதுரை.

நல்வாழ்வுக்குச் சேமிப்பு இன்றியமையாப் பாதுகாப்பு
செலவு செய்வதற்குமுன் சேமிப்பதற்குச் சிந்தியுங்கள்

இன்றே எமது வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள்

- குறைந்த பட்சம் ரூ. 5/-லிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
- தினசரி இருப்பின் பேரில் ஆண்டு ஒன்றுக்கு வட்டி $3\frac{1}{2}\%$.
- வாரம் ஒன்றுக்குத் திரும்பப் பெறும் அதிக பட்சத் தொகை ரூ. 5,000/-

பிக்சட் (தவணை) டிபாசிட் — வட்டி ஆண்டு ஒன்றுக்கு 4% முதல் $5\frac{1}{2}\%$ வரை காலத்திற்கும், தொகைக்கும் ஏற்ப கொடுக்கப்படுகிறது. விவரங்களை உங்கள் அருகாமையிலுள்ள எந்தக் கிளையிலும் தெரிந்துகொள்ளலாம்.

எல்லாவித வங்கி அலுவல்களும் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
தென்னகத்தில் மக்கள் சேவையில் 37 கிளைகள்.

கருமுத்து தியாகராசன்,
—தலைவர்.

S. அழகுசுந்தரம்,
—ஆக்டிங் சீப் எக்சிகியூடிவ் ஆபீசர்.

தமிழ் எழுத்தாளர்களுக்கு எம் உளங் கனிந்த வாழ்த்துக்கள்

*

* சிவாஜி சர்விஸ் ஸ்டேஷன், *

183/184, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை - 14